குலசேகர பாண்டியன்.

பாண்டிய நாட்டின்

மத்தியகாலச் சரித்திரத்தைச் சார்ந்த

ஒரு கதை.

KULASEKARA PANDIAN.

A TAMIL NOVEL RELATING TO THE
MEDIEVAL DAYS OF THE

PANDIAN KINGDOM.

Printed by The Mercantile Press
29, Bishop Street, Penang.
1926.

குலசேகர பாண்டியன்.



பாண்டிய நாட்டின்

மத்தியகாலச் சரித்திரத்தைச் சார்ந்த

ஒரு கதை.

KULASEKARA PANDIAN.

A TAMIL NOVEL RELATING TO THE MEDIEVAL DAYS OF THE

PANDIAN KINGDOM.

Printed by The Mercantile Press
29, Bishop Street, Penang.
1926.

பயன்றூக்கா ராற்றிய உதவி.

உடற் பிணியாற்ற லென்ற உயர் வினை செய்வோனுள்ளின்
இடர்ப்பிணி யாற்றவல்ல இனிய விக்காதை நீபச்
சுடரெனப் பரவ நெய்யாஞ் சுவணத்தை வார்த்தானில்லார்
படர்ப்பிணி யாற்றுஞ் சீலன் பாண்டியச் சீநிவாசன்.

ஓர் குடியினிற் பிறந்தோம் ஒரு பள்ளியிற் பயின்றோம்
வேறிடம் விரும்பா தொன்றாய் வெகுதினம் வாழ்ந்தோம் [முன்னே
பாரிட மொழித்து மௌலி பரகதி சென்றிட்டாலும்
ஆருயிரன்பா உந்தன் அருமையை அங்குஞ் சொல்வான்.

பொருளடக்கம்.

குலசேகர பாண்டியன்.

1. கோட்டைவீடு

புண்ணிய நதியாகிய தாமிரபருணியின் தீரத்திலே, முற்காலத்தில், பொன்னூர் என்ற ஒரு சிற்றூர் இருந்தது. பண்டைநாளில் அவ்விடத்தில் பொன் விளைந்தது எனச் சொல்லிக்கொள்வாருமுண்டு. அதுஎவ்வாறாயினும், நீர்வளமும், நிலவளமும், சுகாதாரமான சுத்த ஆகாயமும் அமைந்த அவ்வூரைப்போன்ற கிராமங்கள் பொன்னினும் மிக அருமை என்பது உண்மையே. பசேரென்று தழைத்த பச்சைமரச் சோலைகளை இடையிடையே உடைய செந்நெல் வயல்கள் சூழ்ந்த அந்தக் கிராமம், மரகதப் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட பொற்சரிகை ஆடை உடுத்திய ஒரு யௌவன சுந்தரியைப்போல இலங்கிக்கொண்டிருந்தது,

இக்கதை ஆரம்பமாகிற காலத்தில், அதாவது, இற்றைக்குச்சுமார் அறுநூறு ஆண்டுகளுக்குமுன், பொன்னூரில் பல குடிகளான இருநூறு வீட்டார் உறைந்தனர். ஆராயுமிடத்து, அக்காலக் கிராம வாழ்க்கை மிக ரம்மியமாகவேயிருந்ததெனலாம். வீடுகளெல்லாம் மண்ணால் கட்டப்பட்டு, பனை ஓலைகளால், அல்லது புல்லால் கூரை வேயப்பட்டவைகளாயிருந்தன. தளத்திற்குச் சாணமிட்டு மெழுகுதல் அக்காலத்திலும் சாதாரண வழக்கமாகவேயிருந்தது. குடிகளில் பெரும்பாலார்க்கு விவசாயமே தொழிலாயிருந்தது. இதர தொழிலாளராகிய கம்மாளர், சாலியர், செக்கார், குயவர், வணிகர், வண்ணார், நாவிதர் முதலிய பல குடிகளில் சிலர் ஒவ்வொரு கிராமத்திலும் வாசம்செய்து கிருஷிகருக்கு உதவியாயிருந்தார்கள். இருபாலார்க்கும் போதுமான வேலையிருந்தது. ஸ்திரீகள் தங்கள் வீட்டு வேலையை முடித்தவுடனே ராட்டினத்தை எடுத்துவைத்துக்கொண்டு நூல் நூற்க ஆரம்பிப்பார்கள். வாழ்க்கைக்கு இன்றியமையாதனவான எல்லாப் பொருட்களும் சாதனங்

களும் உள்ளூரிலேயே கிடைக்கக்கூடியதாயிருந்தது. ஆகையால் கிராம வாசிகள் தங்கள் ஊரைவிட்டு வெளியே செல்லுதல் அபூர்வமே. பண்டமாற்றுச் செய்தலே சாதாரண வழக்கமாயிருந்தபடியால், பணம் அதிகமாய் உபயோகப்படவில்லை. குடிகளுக்குள் உண்டாகும் வழக்குகளை ஊர்ப் பஞ்சாயத்தார் தீர்த்துவிடுவார்கள். பகிரங்கமாக அயோக்கியராய் நடப்பவர்களுடைய சாக்ஷியத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அக்கிரமக்காரரைக் கடினமாய்த் தண்டிப்பார்கள். பரஸ்பர சகாயம், முதியோரை மதித்தல் என்ற இரண்டு பிரதான ஆதாரங்களின்மேல் ஸ்தாபிக்கப்பட்டதாயிருந்தது பூர்வீக கிராம வாழ்க்கை.

அரசரும், பிரபுக்களும் மாத்திரம் திறமான வீடுகளில் வசித்து, ஒருவாறு சுகபோகத்தை அநுபவித்தார்கள். பெரும்பாலரான குடிகளுக்குப் பணத்தைப் பெருக்கவேண்டுமென்ற ஆவல் இருந்ததில்லை. தொல்லையில்லாத இலகுவான ஜீவனார்த்தமே அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது. ஊராருடைய வாழ்வும் தாழ்வும் கிருஷியால் உண்டாகும் லாபநஷ்டங்களைப் பொறுத்திருந்தன. அவர்களுடைய வழக்க பழக்கங்கள் மேற்குறித்த அநுவிஷயங்களுக்குப் பொருந்தினவைகளாயிருந்தன.

பொன்னூருக்குமேலண்டையில், கோட்டைவீடு எனப்பட்ட ஒரு பழைய வீடு இருந்தது. முற்காலத்தில் அந்த வீட்டைச் சுற்றியிருந்த பெரிய கோட்டையின் மதில்கள் அழிந்துபோய், மண்மேடுகளாய்க் கிடந்தன. இரண்டுமுழக் கனதியுள்ள பலத்த சுவர்களும், உறுதியான மரத்தால் செய்யப்பட்ட தூண்களும், வாசல்களும், மேலே காரையால் மட்டமிடப்பட்ட கூரையும் உடையதாய்க் கட்டப்பட்டிருந்த அவ்வீடு, தகுந்த பராமரிப்பில்லாமையால் பலவிடங்களில் பழுதடைந்திருந்தது. மிகப் பழமையுற்றபடியால், அவ்வீட்டின் காரைச் சுவர்கள் கறுத்துப் பாறையைப்போல் காணப்பட்டன. பின்பக்கத்தில், ஆடுமாடுகளும், குதிரைகளும் தங்குவதற்கென்று முன்னாளில் கட்டப்பட்டிருந்த விஸ்தாரமான கொட்டில்கள் பெரும்பாலும் அழிந்துபோய்க்கிடந்தன. வீட்டைச் சுற்றிலும் அநேக சேவகர்கள் ஒரு

காலத்தில் குடியிருந்ததைக் குறிப்பிடும் இடிசுவர்களும் மிகுதியாகக் காணப்பட்டன. விசாலமான ஒரு சிங்கார வனமிருந்த இடம் புன்செய்நிலமாக மாறியிருந்தது, அதின் மத்தியிலுள்ள அழகிய தடாகத்தின் சுவர்கள் இடிந்துகிடந்தன. அத்தடாகத்தின் மேலண்டையிலிருந்த பாழான கற்கோவிலில், கிழக்குநோக்கி உட்கார்ந்திருந்த பிள்ளையார் சிலை, மிகுந்த ஞானத்தோடு, சென்றுபோன நாட்களையும், வரப்போகும் காலங்களையும் கணக்கிட்டுக்கொண்டிருந்தது போல காணப்பட்டது. அங்கங்கே நின்ற முதிய விருக்ஷங்கள் காற்றில் அசைந்து ஒலித்தது, அவ்வீட்டின் சரித்திரத்தைக்குறித்துப் பேசிக்கொள்ளுவதுபோல இருந்தது. இவ்வாறு, அவ்வழி செல்வோரெல்லாருக்கும், இம்மையின் வாழ்வையும், தாழ்வையும், பிரத்தியக்ஷமாய் வெளிப்படுத்தும் ஒரு பெரிய திருஷ்டாந்தமாக விளங்கிக்கொண்டிருந்தது அப்புராதன வில்லம்.

அந்த வீட்டில், அரசகுலத் தோன்றலான காரியார் என்னும் அறுபது வயதுள்ள ஒருபெரியவர் வசித்துவந்தார். அவருடைய மனைவியாகிய பார்வதியும், ஒரே புத்திரனும், பரம்பரையாக அவருடைய குடும்பத்தையடுத்துச் சேவித்துவந்த பணிவிடையாட்களில், அற்ற குளத்துப் பறவைகள்போலன்றி, நிலையாய் அவரைப் பற்றிக்கொண்டிருந்த இரண்டு குடி ஏவலர்களுமாக, காரியாருடைய குடும்பம் குறுகினதாகவேயிருந்தது.

ஐந்து முற்றங்களும், அவைகளைச்சூழ்ந்த அநேக அரங்குகளும், கூடங்களும் உடைய அந்தப் பெரிய வீட்டின் முற்பாகம் மாத்திரமே உபயோகத்திலிருந்தது. ஒரு அறை கோவிலாக வழங்கப்பட்டது. அதில் ஸ்தாபித்திருந்த மகேஸ்வரியின் சிலைக்கு பார்வதி அன்றாடக பூஜை செய்வாள். பெரியவர் சொரூப வணக்கத்தைவிட்டு, வெகுகாலமாக பிரணவதியான மௌனத்தையே அனுஷ்டித்துவந்தார். மற்றொரு அறையில் காரியாருடைய ஆயுதங்களும் பனை ஓலையில் எழுதப்பட்ட அநேக நூல்களும் ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தன. கொட்டில்களில் அவருடைய கிழக் குதிரையும், விவசாயத்திற்காக உபயோகிக்கப்பட்ட மூன்

ஹோர் மாடுகளும், இரண்டு பசுக்களும், சில கன்றுகளுமிருந் தன. வேலைக்காரர் பின்பக்கத்திலிருந்த இரண்டு சிறிய வீடுகளில் வசித்தார்கள்.

காரியாருடைய முன்னோர்கள் இருநூறு கிராமங் களின் ஆட்சியை உடைய சிற்றரசராயிருந்து வந்தார்கள். இவருக்கு ஐந்து தலைமுறைகளுக்குமுன், பாண்டியனோடு உண்டான ஒரு விவாதத்தினால், சிற்றரசப்பட்டம் நீங்கிப் போய்விட்டது. அதுமுதல் இந்தக் குடும்பத்தார் தாழ்வ டைந்தார்கள். கைப்பொருளும், தாவரச் சொத்துக்களும் குன்றிப்போய்விட்டபடியால், காரியார் காலத்தில் சொந்த மாயிருந்தவை இந்தப் பழைய வீடும், சில தோட்டங்களும் வயல் நிலங்களுமேயாம். இவைகளினின்று வந்த சொற்ப வருமானத்தையும், பொன்னூர்க் கிராமவாசிகள் மாமூலாக அரச வம்சத்தாருக்குக்கொடுத்துவந்த சில காணிக்கைகளை யும் கொண்டு இல்வாழ்க்கையை நடத்திவந்தார்.

இளவயதில் இவர் சில காலம் பாண்டியனுடைய குதி ரைப்படையில் சேர்ந்து போர்த்தொழில் செய்தார். ஆயுத வித்தையில் பாண்டித்தியமும், அசாதாரணமான பராக்கிர மும் படைத்தவராயிருந்தும், போர்த்தொழில் செய்தல் அவருடைய மனதிற்குப் பொருந்தவில்லை. ஆகையால் அதைவிட்டு, வேளாண்மையைக்கைக்கொண்டார். மிகுந்த உதாரகுணமுடையவராயிருந்தபடியால் அவருடைய சொ ற்ப வரும்படியின் பெரும்பாகம் ஈகையிலேயே செலவாகிக் கொண்டிருந்தது. வறுமை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேவந்தது.

இவர் தாழ்வடைந்து வந்ததைக்கண்ட பந்துக்கள், மறுபடியும் அரசாங்க உத்தியோகத்தில் பிரவேசிக்கும்படி அநேகதரம் தூண்டினும், இவர் சம்மதிக்கவில்லை. இரா ஜுவ உத்தியோகம் செய்து மேன்மையடைவதைக் காட்டி லும், வறுமையைச் சகிப்பதே நலம் எனத் தீர்மானித்து விட்டார். இவருடைய எளிமையையும், தங்கள் குலத்தா ரால் இழிவென்றெண்ணப்பட்ட வேளாண்மையை இவர் கைக்கொண்டதையும், தங்களுடைய ஆலோசனையை மதி

யாதனையும் கண்ட பந்துக்கள் நாளடைவில் இவருடைய உறவைத்தவிர்த்து, வரத்துப்போக்கையும் விட்டு விட்டார்கள். அவர்களுடைய உறவு நின்றுபோனதைக் குறித்துக் காரியாருக்கு விசாரமுண்டாகாவிட்டாலும், அது பார்வதிக்கு வெகு துக்கமாகவேயிருந்தது. தாய் வீட்டையும், இன ஜனத்தையும் மறப்பது அவளுக்குக் கூடாததாயிருந்தது. வீட்டின் பிற்கட்டில் பத்திரம் செய்யப்பட்டிருந்த பழைய தன்டிகையைப் பார்க்கும்போதெல்லாம் தன் இளம் பிராயத்தையும், தன் பந்துக்களையும் ஞாபகம் செய்து கண்ணீர் சிந்துவாள். அப்படியிருந்தும், காரியாருடைய உள்ளத்தில் கடுகளவு கவலை உண்டாகச் சகியாளாய், தன் மன விசாரத்தை அகத்தே அடக்கி மறைத்தாள்.

காரியார் அசாதாரணமான ஒரு ஆள் என்பது அவ்விடத்தாருடைய அபிப்பிராயம். அவருடைய முகம் நிர்ச்சலனமாயிருந்ததையும், பெரும்பாலும் அவர் மௌனமாயிருந்ததையும் கண்ட சாமான்ய ஜனங்கள், அவருடைய உண்மையான குணத்தை அறியாமல், அவரைப்பற்றி ஒரு வித பயத்தை அடைந்திருந்தாகள். அவரண்டை சென்று தாராளமாய் வார்த்தையாடக் கூடியவர்கள் வெகு சிலரே. அவர்களுடைய பயத்திற்கு இன்னொருகாரணமும் இருந்தது. காரியார் வாலிபராயிருந்த காலத்தில், ஒரு நாள் இராத்திரி பொன்னூருக்குள் இருபது பேரான ஒரு கூட்டம் கள்ளர் புகுந்து, ஒரு குடியானவனுடைய வீட்டைக் கொள்ளையிட எத்தனித்தார்கள். கள்ளருடைய ஆரவாரத்தைக் கேட்கவும், அவ்வூரார் எல்லாரும் கதவடைத்து ஒளித்துக்கொண்டார்கள். கூக்குரல் கேட்டெழுந்த காரியார், தனியே ஓடிச்சென்று, அக்கள்ளர் கூட்டத்தைத் தாக்கித் துவைத்து, அவர்களில் பலரைப் படுகாயப்படுத்தி, கால் நாழிகை நேரத்திற்குள்ளாக அவர்களெல்லாரையும் வெருட்டி விட்டார். இச்சரித்திரம் அத்திசையிலுள்ளோர் யாவருக்கும் தெரியுமாதலால், யானை தூங்கிற்றென்றெண்ணி அதனருகில் செல்லுதல் மதியீனம் என்ற முதுமொழியை அநுசரித்து, அவரைக்கண்டால் விலகிச் செல்லுவதே அவ்விடத்தாருடைய வழக்கமாயிருந்தது.

காரியார் தமது தொழிலை வெகு ஞானத்தோடு செய்து வந்தார். பருவங்களைத் திட்டமாய் நிதானிப்பதிலும் நிலங்களின் தன்மையைக் கண்டுபிடிப்பதிலும் விசேஷ அறிவுள்ளவராயிருந்தார். வேலை ஒழிந்த நேரத்தையெல்லாம் நூல் ஆராய்ச்சியிலேயே செலவிடுவார். பரந்த அறிவுடையவராயிருந்தும், தமது பாண்டித்தியத்தைப் பாராட்டிக் கொள்ளமாட்டார்.

இவ்வாறு காரியாரும் பார்வதியும் இல்லறம் நடத்தி வரும் காலத்தில், இவர்களுக்குக்கிடைத்த மூன்று குழந்தைகளில், இரண்டு இளமையிலேயே காலம் செல்ல, ஒரே புத்திரன் மாத்திரம் மீந்திருந்தான். வம்சத்தை விளக்க வந்தவன் என்ற கருத்தோடு, அவனுக்கு குலசேகரன் என்பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தார்கள். நம் கதாநாயகனாகிய இவனுக்கு அக்காலத்தில் வயது இருபத்தொன்று. மாநிறமும் பூரண வளர்த்தியும் கனமில்லாத பருப்பமும், அழகிய முகமும், விரிந்த மார்பும், திரண்ட தோள்களும், அப்பியாசத்தினால் முறுக்கேறிய உறுப்புக்களும், பயத்தை அறியாத பார்வையும், செருக்கான நடையும் அமைந்த அவனை, திருமாலின் அவதாரம் என்றேகூறுவர் அவ்வூரார். அப்பட்டியிலுள்ள வாலிபரெல்லாருக்கும் அவனிடத்து அத்தியந்த வாஞ்சை. அவர்களுக்கு அவன் அரசன்போல விளங்கினான். அத்திசையிலுள்ள அக்கிரமக்காரர் அவன் பேர் கேட்டமாத்திரத்தில் நடுங்குவார்கள். வறியோருக்கு அவனைக்கண்டால் மகிழ்ச்சி. அரசகட்டளைக்கு எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு மதிப்பு பொன்னூரில் குலசேகரனுடைய உத்தரவுக்கும் உண்டு. மிகுந்த நற்குணசாலியாயிருந்தும் அவன் வாலிபத்திமிரினால் வேளாவேளைகளில் துடுக்குத்தனமாக நடந்து சிலரைத் துன்பப்படச் செய்துவிடுவான். துஷ்டரைக் கடினமாய்த் தண்டிப்பான். எதிர்த்தவர்களைத் தப்பவிடான். தான் போகுமிடங்களில் தன் பிதாவைக்காண நேரிட்டால், தலைமறைவாய்ச் சென்றுவிடுவான். அவரிடத்தில் அவன் மிகுந்த அன்பும் மதிப்பும் உடையவனாய் இருந்தான்.

காரியார் தமது புத்திரனிடம் சாதாரணமாக வார்த்தையாடமாட்டார்.

2. ஊர்ப்பகை.

ஒரு நாள் பிற்பகலில், பொன்னூர்ப்பள்ளிக்கூடத்தின் ஆசிரியராகிய நல்லப்ப உபாத்தியாயர் காரியாரைத் தேடி வந்தார்.

ஏழு தலைமுறைகளுக்கு முன் நல்லப்பருடைய முன்னோரால் பொன்னூரில் ஏற்படுத்தப்பட்ட அந்தப் பள்ளிக்கூடம் அத்திசை யெங்கும் பேர்பெற்றதாயிருந்தது. அதில் கற்ற பலர், பிற்காலத்தில் கவிஞராயும், நூலாசிரியராயும் விளங்கினார்கள். ஐந்து கிராமங்களுக்கு அதுவே பொதுவான பாடசாலையாயிருந்தது.

நல்லப்பவாத்தியார் தேர்ந்த வித்துவான், கபடில்லாத வெண்ணெஞ்சர், நல்லொழுக்கம் தவறாதவர், ஆகையால் யாவராலும் நன்குமதிக்கப்பட்டவராயிருந்தார். காரியாரும் இவரும் ஒன்றாய்க் கல்விகற்று, இளம்பிராயமுதலே சிநேகிதராயிருந்தபடியால், எந்தக் காரியமானாலும் ஒருவரோடொருவர் தாராளமாய்ப் பேசுவது வழக்கமாயிருந்தது.

காரியார் தமது வீட்டெதிரில் இடிந்து கிடந்த கோட்டைவாயில் மண்டபத்திலுள்ள ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார். வாத்தியார் வந்து நமஸ்காரம் செய்து, சமீபத்தில் உட்கார்ந்து, தாம்பூலமருந்திக்கொண்டே பேச ஆரம்பித்தார். வித்துவானாயிருந்தும் நல்லப்பவாத்தியார் யாதொரு விஷயத்தையும் சுருக்கிச்சொல்ல ஏலாதவராயிருந்தார். "சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல்" எனும் சூத்திரத்தின் மேன்மையைக் குறித்து ஆயிரம் பாசுரங்கள்கொண்ட ஒரு வியாக்கியானம் எழுதி, அதற்குப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, முதலான உரைகளையும் செய்து வைத்திருந்தார். ஒரு காலத்தில் திருச்செந்தூரிலுள்ள தமிழ்ச் சபையில், இராமாயணப் பிரசங்கம் செய்யும்படி இவரைக் கேட்டுக்கொண்டபோது, "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" எனும் அடியை ஆரம்பித்து, அதில் "உலகம்" என்ற பதத்தின்மேல் பதினாறு நாள்

வரையும் பிரசங்கித்தும் முடிவுகாணாமலிருக்க, கடைசி
நாள் பிரசங்கம் கேட்க வந்திருந்த ஒரே ஒருவன் நல்லப்ப
ருடைய செவியில் ஏதோ சொல்ல, அச்சமயத்தில் ஆரிய
பட்டன் செய்த ஜோதிடசாஸ்திரத்தில் சொக்கியிருந்த அவ
ருடைய கவனமானது, பூலோகத்திற்குத் திரும்பிச் சபை
யை நோக்க, அங்கு ஒருவன் மாத்திரம் இருக்கக்கண்டு
கோபித்து, திருச்செந்தூராருடைய மௌட்டியத்தைக் கடி
த்து கொண்டு இனிமேல் அவ்விடத்தில் பிரசங்கம் செய்வ
தில்லையென்று சபதம் செய்துவிட்டு, பொன்னூருக்குப்
போய்விட்டார். செந்திலாரும் சனிவிட்டதென்று சந்
தோஷமாயிருந்தார்கள்.

நல்லப்பருடைய விவரண சக்தி இப்படியிருப்பதால்
அவருடைய சம்பாஷணை முழுவதையும் இங்கெடுத்துரைப்
பது சாத்தியமல்ல. மொத்தத்தில், காரியாருடைய செல்
வப்புதல்வனாகிய குலசேகரன், அநேக ஆக்ஷேபகரமான நட
வடிக்கைகளைச் செய்து வருவதாகவும், அவைகளினால் அவ்
விடத்திலுள்ள பலருக்கு நஷ்டம் உண்டாகியிருப்பதாகவும்,
அவைகளைக் குறித்துக் காரியாரிடம் தெரிவிக்கும்படி சிலர்
கேட்டுக்கொண்டதாகவும் சொன்னார். அவர் விவரித்த பன்
னிரண்டு அம்சங்களில் நாலு குறிப்புகளை மாத்திரம் இங்கு
எழுதுவோம்.

முதலாவது. முருகன் என்ற ஒருகுடியானவன் ஊரு
க்கு ஒரு நாழிகை வழிதூரத்திலுள்ள தன் நிலத்தை உழு
துகொண்டிருந்தான். சமீபத்திலிருந்த காட்டிலிருந்து இர
ண்டு கள்ளர் வந்து முருகனைப்பயமுறுத்தி ஏர்மாடுகளைக் கள
வாடிகொண்டுபோனார்கள். குடியானவனிட்ட கூக்குரல்
தூரத்தில் தன் தோழரோடு நின்ற குலசேகரன் செவியில்
பட்டது. உடனே அவன் தன் தோழரோடு கள்ளர் போன
திசையை நோக்கி ஓடி அரை நாழிகை நேரத்திற்குள்ளாகக்
கள்ளர் இருவரையும் மாடுகளோடு கண்டுபிடித்துக்கொண்டு
வந்தான். புலத்தண்டை வரவும், குலசேகரனுடைய கட்ட
ளையின்படி அக்கள்ளரை மாடுகளுக்குப் பதிலாக ஏரில்
பூட்டி ஓட்டினார்கள். எவ்வளவாகக் கெஞ்சிக் கேட்டா
லும் விடாமல் அப்புல முழுவதையும் உழுது தீருமட்டும்

அவர்களை அடித்து இம்சித்தார்கள். சாட்டையும் தாற்றுக்கோலும் முதுகிலும் பிட்டத்திலும் பாட்டுறைக்க, விரைவிலேயே வேலை முடிந்தது. அங்கு வந்து கூடிய ஜனங்களுக்கு இந்தக்காக்ஷி விந்தையாயிருந்தது. உழவு முடியவும், குலசேகரன் கள்ளரைக் கட்டவிழ்த்து விடச்சொல்லி அவர்களுக்கு நன்மதி கூறியனுப்பினான். அவர்கள் சென்று தாங்கள் பட்ட அவஸ்தையையும் அவமானத்தையும் தங்கள் குலத்தாரிடம் தெரிவித்தார்கள். அந்த நாட்டிலுள்ள கள்ளரெல்லாரும் கூட்டம் கூடி ஆலோசித்து, குலசேகரனை எவ்விதத்திலும் பிடித்துத் தண்டிக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள்

இரண்டாவது, பொன்னூருக்குக்காதவழி தூரத்திலிருந்த வேப்பங்குடி என்ற கிராமத்தில், ஐசுவரியவானான குடியானவன் ஒருவனிருந்தான். அவன் குடும்பத்தாரில் ஒருவருக்கும் குதிரை ஏறக்கூடிய தைரியம் இல்லாதிருந்தும், கௌரவத்திற்காக ஒரு குதிரை வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான். இதைக் கேள்விப்பட்ட ஒரு குதிரை வியாபாரி, குடியானவனுடைய தாராதரத்தை அறிந்துகொண்டு, தன்னிடம் விலைப்போகாமலிருந்த ஒருபெரிய சண்டிக்குதிரையை அவனுக்கு உயர்ந்த கிரயத்திற்கு விற்றான். அது வந்த நாள் தொடங்கி கொட்டிலில் கட்டப்படும் சிரமம் கூட இல்லாமல், மனம்போல நடந்து, பயிர் பச்சைகளை வயிறுறமேய்வதும், யாராவது சமீபத்தில் வந்தால் கடிப்பதும் உதைப்பதுமாகத் திரிந்து கொண்டிருந்தது. அதனால் கடியும் உதையும் பட்டவர்கள் அநேகர்; உதைபட்ட ஒருவன் மரித்தும் போனான். இந்தச்சண்டிக் குதிரையைக் கண்டவர்களெல்லாரும் புலியைக் கண்டதுபோல பயந்து ஓடிப்போவார்கள்.

இக் காண்டத்திற்குக்காண்டம் கிட்டியபடியால், ஒரு நாள் காரியாருடைய புலத்தில் பிரவேசித்து மேய ஆரம்பித்தது. அச்சமயத்தில் எங்கிருந்தோ குலசேகரன் காலகண்டன்போல வந்து அங்கு தோன்றினான். குதிரை பயிரை மேய்வதைக்காணவும், அங்குகிடந்த மண்கட்டிகளை எடுத்தெறிந்து அதை ஓட்ட முயன்றான். அம்மிருகம்

இவனை இனமறியாமல், தன் வழக்கம்போல பாய்ந்து சீறவும் உதைக்கவும் தலைப்பட்டது. "அப்படியா? நல்லது. உனக்கு மிகுந்த திமிர் உண்டாயிருப்பதாகத் தோன்றுகிறது. அதை இன்றைக்கே தீர்த்துவிடுகிறேன்" என்று சொல்லி, வேஷ்டியையும் கச்சையையும் இறுக்கிக் கட்டிக் கொண்டு குதிரையைச் சமீபித்து விளையாட ஆரம்பித்தான் குலசேகரன் குதிரையும் அவனும் சுற்றிச்சுற்றி வருகையில், சமயம்பார்த்திருந்து எவ்விதமாகவோ அதின்கேசத்தைக் கைப்பற்றித்தாவி, அதின் முதுகின்மேலேறிக்கொண்டான்.

வெகு காலமாகத் தன்மேல் எவரையும் சுமந்தறியாத அப்புரவி, கண்சிவக்கக்கோபித்து, "இந்த மானிட பூச்சியை இதோ நொடிநேரத்தில் உதறிப்போடுகிறேன்" என்றது போலக் கனைத்து முன்னங் கால்களைத் தூக்கி ஆடியும், பின்னங்கால்களை ஆகாசத்தில் தூக்கிக் குதித்தும், தலையைத் தரைமட்டும் தாழ்த்தி ஆட்டியும், பலவித நாட்டியங்களாடியும் பயன்படாதது கண்டு, திடீரென அம்புபோல் பாய்ந்து காட்டை நோக்கி ஓடிற்று. காதவழி தூரம் ஓடியும், தன் மேலிருந்தவன் கொஞ்சமும் அசையாமல் அட்டைபோல் பற்றிக்கொண்டிருப்பதைக்கண்டு சினந்து, "இவனை அதோ தெரிகிற பாறையோடு சேர்த்துத் தேய்ப்பதே சரி" என்றெண்ணி, எதிரேயிருந்த ஒரு கன்மலையண்டைக்குக்கொண்டுபோயிற்று. பாறையைக் கிட்டவும், அதின் கருத்தை யறிந்த குலசேகரன் திடீரென்று கேசத்தை பிடித்தபடியே மறுபக்கத்தில் குதித்து, வேகம் அமருமுன் அதின் சிரசை அக்கல்லோடு சேர்த்து மோதினான்.

இவ்வடிபட்டுச் சிறிது கலங்கிய கோக்கானது தெளிவடைந்து பார்க்க, அம்மனிதன் முன் போலவே தன் மேலிருக்கக்கண்டு, வெகு மூர்க்கமடைந்து, வேகமாய்ப்பறந்தோடி மணற்பாங்கான ஓர் இடத்தையடைந்தது. இனி இவ்வாசி மணலில் விழுந்து புரள எத்தனிக்கும் எனக் குலசேகரன் அறிந்து, ஓடும்போதே தன் அரையிலிருந்த கச்சையை ஒருகையால் உரிந்து, பல்லால் கடித்துக்கொண்டு, ஒரு கண்ணிசெய்தான். அவன் எதிர்பார்த்திருந்தபடியே குதிரையும் கீழே விழுந்து புரள ஆரம்பித்தது. அதற்குள்

ளாகக் குலசேகரன் கீழே குதித்து, கண்ணியை அதின்பின்னங்கால்களில் போட்டு இழுக்குந் தளைத்து விட்டான். இந்தச் சங்கடத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ளமாட்டாமல் குதிரையானது எழும்புவதும், விழுவதும் கூத்தாடுவதுமாயிருக்க, அவன் ஓடி, ஒரு புளியமரத்திலேறி நல்ல மிலாறுகளில் சிலவற்றைக்கொய்து பின்னிக்கொண்டுவந்து மதங்கொண்டு கர்வித்திருந்த அம்மானைத் தன்மனங்கொண்டவரைக்கும் புடைத்தான். அடிதாங்கமாட்டாமல் பரியானது, தன் பெருமையெல்லாமழிய, பெருமூச்சுவிட்டுக் கொண்டு கிடந்தது. அப்பால் குலசேகரன் தன் கச்சையை எடுத்துத் தரித்துக்கொண்டு, கிள்ளையை எழுப்பி அதின்மேல் ஏறி "இம்மட்டும் நீ உன்மனம்போல ஓடினாய், இனிச்சற்றுநேரம் என்மனம்போல உன்னை ஓட்டுவேன் பார்" என்று சொல்லி, குதிகால்களை அதின் அடிவயிற்றில் உதைத்து ஓட்டினான்.

மறுத்தொன்றும் செய்யத் தைரியமில்லாத அசுவமானது, அவன் நோக்கிய இடத்திற்கெல்லாம் சென்றது. ஓடும் வழியில் தன் களைப்பை ஆற்றிக்கொள்ள எண்ணி, வேகத்தைக் குறைத்து மெதுவாகச்செல்ல எத்தனிக்கும் போதெல்லாம், புளிய மிளாறுகள் பளார் பளார் என்று அதின் சரீரத்திலுறைக்க, முன்போலவே ஓடவேண்டியதாயிற்று. குதிரை களைப்புற்றுச் சோர்ந்து அநேகந்தரம் தரையில் விழுந்தாலும் அதை விட்டானில்லை. இவ்வாறு அன்று பொழுதடையும் நேரம் வரையும் ஓட்டி, பொன்னூருக்குத் திருப்பிக்கொண்டுவருகிற வழியில் குதிரை கீழேவிழ, அது போதும் என்றெண்ணி, குலசேகரன் அதை அவ்விடத்தில் விட்டு வீட்டிற்குச் சென்றான். விழுந்த குதிரை எழுந்திருக்காமலே செத்துப்போயிற்று.

நாடெங்கும் சென்று தன் மேன்மையைத் தெரிவித்துக்கொண்டிருந்த குதிரை செத்துப்போனதைக் கேள்விப்பட்ட அதின் எஜமான், தன் கீர்த்திக்குப்பங்கம் நேரிட்டதாக எண்ணி வெகுவாய்க் கோபங்கொண்டு, வாத்தியாயரிடம் சென்று முறையிட்டான்.

மூன்றாவது. சிலம்பவாத்தியாரொருவன் அடுத்தகிராமத்தில் இருந்தான். அவன் வெகு கர்வி. தன் பலத்தையும் சமர்த்தையும் குறித்து மட்டில்லாமல் புகழ்ந்து கொள்ளுவான். எவரையும் மதியான். அப்படியிருக்க ஒருநாள் குலசேகரன் அவனுடைய சிலம்பக்கூடத்தைப் பார்க்கப் போயிருந்தான். அங்கு நின்ற ஒருவன் குலசேகரன் இன்னானென்று வாத்தியாருக்குத் தெரிவிக்க, அவன் அலக்ஷியமாக "கோட்டைவிட்டு உழவர் மகனா?" என்றான்.

தந்தையை இழித்துக் கூறியது செவியில் பட்டவுடனே, குலசேகரனுக்கு ரௌத்ராகாரமான உக்கிரமுண்டாக, "என்ன சொன்னாய்?" என்று சொல்லிக்கொண்டு புலிபோல் பாய்ந்து, முஷ்டிகொண்டு அவ்வித்துவானுடைய மோவாய்க்கட்டையில் தாக்க, தன்னை அளவில்லாமல் மதித்திருந்த ஆசிரியன் அடியற்ற பனைபோல தரையில் சாய்ந்துவிட்டான். அவனுடைய முன்னாடிப் பற்கள் முழுவதும் போயின. விழுந்து பூமகளைத் தழுவின அப்பகடாசிரியன், உருண்டு புரண்டெழுந்து தன் பற்களை உமிழ்ந்து கொண்டே குலசேகரனை அணுக எத்தனிக்கும்போது இருப்புலக்கை கொண்டடித்ததுபோல, சரவேகமாகப் பல குத்துகள் அவனுடலில்பட, அவற்றைச் சகிக்கமாட்டாமல் பொறி கலங்கி மூர்ச்சையானான். குலசேகரன் அவ்விடம் விட்டகன்றான்.

ஆசிரியனைக் குலசேகரன் அடித்து வீழ்த்திய விசேஷம் அவ்வூரெங்கும் பரவ, அங்குள்ள வாலிபரெல்லாரும் தடிகளை எடுத்துக்கொண்டு அவனைத் தாக்கும்படி ஓடிவந்தார்கள். அநேக வாலிபர் தடியும் கையுமாய்த் தன்னைத் தொடர்ந்து வருவதைக்கண்டு குலசேகரன் மகிழ்ச்சியடைந்து, நின்று "பையன்களே! நீங்களென் வீணே அடி தின்னவேண்டும்? வந்தவழியே போய்விடுங்கள்" என்று கூறினான். அவர்கள் அவனை வைதுகொண்டு கிட்டநெருங்கவும், அவன் பாய்ந்து ஒருவன் கையிலிருந்த தடியைப்பறித்துக்கொண்டு அவர்களெல்லாரையும் அவ்வூர்த்தெருவின் வழியாகத் துரத்தி அடித்தான். திரள் கூட்டமாகவந்த அவ்வூர் வாலிபரெல்லாரும் காற்றுமுகத்திலகப்பட்ட பதர்

போலப்பறந்து போனார்கள். அதைப்பார்த்துக்கொண்டிருந்த ஸ்திரீகள் ஒப்பாரி சொல்ல ஆரம்பித்தார்கள். சில முதியோர்வந்து குலசேகரனுக்கு நல்வார்த்தை சொல்லி அவ்வூரை விட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள்.

மூர்ச்சை தெளிந்தெழுந்த சிலம்ப வித்துவான், அவ்வூரில் இனித்தங்க மனமின்றி, அன்றிரவிலேயே ஓடிப்போய் விட்டான். ஊரார் இதைக்குறித்து நல்லப்பவாத்தியாயரிடம் முறையிட்டார்கள்.

நாலாவது. பொன்னூரில் கருப்பன் என்ற ஒரு குடியானவன் இருந்தான். அவன் இரண்டு வருஷக்காலமாக முயற்சித்து ஒரு சிறிய வீட்டைக்கட்டி முடித்தான். வீட்டுத்தலைவாயிலானது முதிராத இளமரப் பலகைகளால் செய்யப்பட்டிருந்தபடியால், மழைகாலத்தில் அது விம்மி, அடைப்பதும் திறப்பதும் கஷ்டமாயிற்று.

இப்படியிருக்க, குலசேகரன் ஒருநாள் அத்தெருவழியாய் வரும்போது, மேற்சொன்ன வாசலைத்திறக்கக் கூடாமல் வீட்டுக்காரன் அவஸ்தைப் படுவதைக்கண்டு, தான் திறந்து கொடுப்பதாகச்சொல்லி, காலை ஓங்கி ஒரு உதை உதைக்க, கதவு உடைந்து சின்னபின்னமானதுமன்றி, நிலைகளும் பெயர்ந்து போய்விட்டன. இந்தத் துன்பத்தைக்கண்ட குடியானவன், தன் தலையில் அடித்துக்கொண்டு, ஐயையோ இந்த அநியாயத்தை எங்கே சொல்ல! அந்தப் படுபாவி முத்தன் செட்டியிடத்தில் இருபது பணம் கொடுத்து வாங்கின மரமாச்சே! இனி எங்கே போய்த்தேடுவேன்! என்று அழுதான். அவன் அழுவதைக்கண்டு மனமிரங்கிக் குலசேகரன், "பயப்படாதே. இன்று பொழுதுபடுமுன் உனக்கு வேறே வாசல் செய்வித்துத் தருகிறேன்" என்று கூறிவிட்டு, விரைவாக முத்தன்செட்டி வீட்டை நோக்கி நடந்தான்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த முத்தன் செட்டியைக் குலசேகரன் காணவும் "நீ கருப்பனை ஏமாற்றி, கவைக்குதவாத மரத்தை அவனுக்கு ஏன் விற்றாய்? அவன் வீட்டுக்

தலைவாயிற் கதவு என்கால் படவும் உடைந்து போய்விட்டதே. நீ கள்ளன். இந்த க்ஷணமே அதற்குப் பதிலாக நல்ல மரம் கொடுப்பதுமன்றி, தச்சுக்கூலியும் நீயே கொடுக்கவேண்டும்'' என்று கண்சிவக்க மொழிந்தான். முத்தன் செட்டியோ செத்தாலும் நஷ்டத்தை ஒப்புக்கொள்ளமாட்டான். குலசேகரன் சொன்னதற்கு எதிர் நியாயம் சொல்ல ஆரம்பித்தான். அதைக்கேட்கவும் நம் கதாநாயகன் "நிறுத்து, நான் சொன்னது சம்மதமா, இல்லையா? அதிகப்பேச்சுவேண்டாம். நீ மரம் கொடுக்காவிட்டால் உன் வீட்டுத் தலைவாயிலை இப்போதே பிடுங்கிக்கொண்டுபோய் அவனுக்குக் கொடுத்துவிடுவேன்'' என்றான். செட்டி அதற்குப் பிரதியுத்தரமாக "இது என் தலைவிதியா! மரத்திற்கு எங்கே போவேன். குடிக்கக்கஞ்சிக்கே வழியைக்காணோமே! எஜமான்! நான் ஏழை. என்னை வருத்தப்படுத்தாதேயும், உமக்குக்கோடி நமஸ்காரம்'' என்று சொல்லிக் கும்பிட்டான்.

அவன் சொன்னதைக் கொஞ்சமும் கவனிக்காமல் குலசேகரன் அவன் வீட்டுத் தலைவாயிலைக்கிட்டி, அதை உதைத்துத்தள்ளி, மதயானை இளமரத்தைப் பிடுங்குவதுபோல நிலைகளோடுங்கூட அதைப் பேர்த்தெடுத்து தெருவில் எறிந்தான்.

ஊராரெல்லாரும் வந்து கூடி இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டு நின்றார்களேயன்றி, ஒருவராகிலும் கிட்டநெருங்கவில்லை. செட்டியும் அவன் வீட்டாரும் பயந்து வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டார்கள். குலசேகரன் அங்கு நின்ற தன்தோழரில் சிலரை அழைத்து, கதவைக் கருப்பன் வீடு சேர்க்கவும், ஊர்க் கொத்தனையும் தச்சனையும் கொண்டு ஆகவேண்டிய வேலையை உடனே செய்து முடிக்கவும் கட்டளையிட்டான். அப்படியே அன்று பொழுது போகுமுன், முத்தன் செட்டி வீட்டுக்கதவு கருப்பன் வீட்டுத் தலைவாயிலயிற்று.

குலசேகரன் போனபின் ஊராரெல்லாருங்கூடி ஆலோசனை செய்தார்கள். "கோட்டை வீட்டு சின்ன எஜமான் இந்த ஊரில் இருந்தால் நாங்கள் வேறிடத்திற்குச் செல்ல

வேண்டியதுதான்" என்று பலர் சொன்னார்கள். கூட்டத்தி லிருந்த முதியோர் "அப்படியொன்றும் செய்யத்தேவையி ல்லை. அவருக்குச் சிறுவயதுதானே. அதினால் ஒன்றை யும் யோசிக்காமல் செய்துவிடுகிறார். நாம் வாத்தியாரிடத் தில் ஒரு வார்த்தை சொன்னால், அவர் எஜமானிடம் சொல் லுவார். எஜமான் கவனித்தால் எல்லாம் ஒழுங்காய்ப்போ ய்விடும்" என்றார்கள்.

அப்படியே அன்று நடந்த காரியத்தை நல்லப்பருக்கு அறிவித்தார்கள்.

இவைகளையெல்லாம் நல்லப்பர் சவிஸ்தாரமாகச் சொல் லக் கேட்டுக்கொண்டிருந்த காரியார், "வாத்தியாரே! பை யன் சாதுவாயிருக்கவேண்டும் என்று நான் விரும்பியும், அவனுடைய இயற்கை அதற்கு அநுகூலமாயில்லை. துணி கரமும், முரட்டுத்தனமும் எங்கள் குலத்தில் பிறந்த அநேக ருக்கு இயல்பாகவேயிருப்பதால், அதைக்குறித்து ஆச்சரி யப்படக் காரணமுமில்லை. நானும் வாலிபத்தில் சற்று விஷ மப்பிரியனாகவேயிருந்தது உமக்கு ஞாபகமிருக்கலாம். வயது முதிர முதிர இளமையின் கோஷ்டம் அடங்கிப்போய் விடும். தற்சமயத்தில், இவனுக்கு நீதி நூல்களைக் கற்பதைப் பார்க்கிலும் ஆயுதப்பயிர்ச்சியே அதிகவிருப்பமாயிருக்கிறது. நீர் சொன்னவைகளில் சிலவற்றை நான் கேள்விப்பட்டிருக் கிறேன். காரியத்தைத் திட்டமாய் அறியுமுன் அவனைக் கண்டிப்பது சரியல்ல என்றெண்ணியிருந்தேன். ஊரா ருடைய விரோதம் உண்டாகும்படி நாம் இடங்கொடுக்கலா காது. இன்று அவனைக் கண்டுபேசுவேன். அடுத்த அறு ப்பு முடிந்தவுடனே, அவனால் நஷ்டமடைந்தவர்களுக்கு நம்மாலான ஈடு செய்யலாம். அவனைப்பற்றிய முறைப்பா டுகள் அடங்கும் வரைக்கும் அவன் அமைதலாயிருப்பது அவசரமென்று எண்ணுகிறேன். என்றாலும் கட்டாயமாக அவனை வீட்டில் இருக்கச்சொல்ல எனக்கு மனதில்லை. அப் படிச்செய்தால் நாம் எதிர்பார்க்கும் நன்மைக்குப் பதிலாகத் தீமை விளைந்தாலும் விளையலாம். அவன் சிறுவனல்லன். ஆகையால் அவனைத்திருத்துவதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

அதற்கு நல்லப்பர், "சின்னவர் மிகுந்த புத்திக்கூர்மை யுள்ளவர். என்னிடத்தில் கற்ற மாணாக்கரில் அவரைப் போல் ஒரு காரியத்தை இலகுவில் கிரகித்துக் கொள்ளக் கூடியவர்களை நான் கண்டதில்லை. முரட்டுத்தனமாக யா தொன்றைச் செய்தாலும்கூட அதுவும் ஒரு நியாயத்தோடு தான் நடக்கிறது. இப்போது கல்யாணம் ஆகவேண்டிய வயதும் வந்து விட்டது. விவாகம் செய்துவிட்டால், வாலி பத்தின் கோளாறுகள் வெகு சீக்கிரத்திலேயே நேராகிவிடும். ஆகையால் ஒரு பெண்ணை நிச்சயித்து, கலியாணத்திற்கு ஆகவேண்டிய முயற்சியைச் செய்வது நலம் என்றென்னு கிறேன்" என்றார்.

காரியார் சற்றுநேரம் ஆலோசித்துவிட்டு, "வாத்தி யாரே! பையன் கிணற்றுத்தவளைபோல இந்தப்பட்டியிலே யே இருக்கிறான். அவனுக்கு உலகத்தின் அநுபவம் கொ ஞ்சமும் இல்லை. இந்த நிலைமையில் கல்யாணம் செய்து விட்டால் உள்ள அறிவும் மழுங்கிப்போய்விடும். ஆகையால், கொஞ்சக்காலமாவது வெளியூர்களுக்குப்போய், மனுஷ இயற்கை, நாட்டுவழக்கம் முதலியவற்றைத் தானகவே கண்டு, கொஞ்சம் கஷ்டநஷ்டங்களும் பட்டுத் திரும்பிவந் தால், அதற்கப்புறம் விவாக காரியத்தை ஆலோசிக்கலாம்" என்றார்.

வாத்தியாரும் அதை ஆமோதித்தார். பஞ்சாங்கம் பார்த்துப் பிரயாணத்திற்கு அநுகூலமான நாள் நாழிகை களை நிச்சயித்தபின் நல்லப்பர் போய்விட்டார்.

---

3. நாட்டு நிலைமை.

நம் கதையை விசதமாக்கும் பொருட்டு, அக்காலத்தில் பாண்டிய இராஜ்யம் இருந்த நிலைமையைச் சுருக்கமாய் விளக்குதல் நன்றாம்.

சந்திரவம்சத்துதித்த துருவசு பரம்பரையில் வந்த பாண்டியர்கள், பரதகண்டத்தின் தென்கோடியைக் கைப்பற்றி ஆள ஆரம்பித்தது, இராமாவதார காலத்திற்கு முன்னேயாம். அதுமுதல் இந்த வமிசத்தார் தொடர்பாய்ப் பல்லாயிரம் வருடங்களாக ஆண்டுவந்தார்கள். காலாகாலங்களில் அவர்களுடைய சம்பந்திகளான சேர சோழர்களாலும், வேற்றரசராலும் உண்டான படையெழுச்சிகளால் பல இன்னல்கள் நேரிட்டபோதிலும், இராஜ்யபாரம் இந்த வமிசத்தைவிட்டு அகலாதிருந்ததற்கு, அவர்களுடைய தர்ம அரசாட்சியே காரணமெனலாம்.

பாண்டியரில் பெரும்பாலார் அறிவிலும், நல்லொழுக்கத்திலும், அரச நீதியிலும் சிறந்து விளங்கினர்கள். ஆதலால் பாண்டிய நாட்டிற்கு "அறிவன் தேயம்" என்ற சிறப்புப்பேர் உண்டாயிற்று. அவர்கள் ஏற்படுத்திய சட்டதிட்டங்கள் நாட்டின் நிலைமைக்கும் தேவைகளுக்கும் பொருத்தமானவைகளாயிருந்தன. விளைவில் ஆறிலொன்று அரசகடமை என்ற பூர்வ விதியையே பெரும்பாலும் அநுசரித்து வந்தார்கள். உஷ்ணப்பிரதேசத்தில் இன்றியமையாதவையான நீர் நிலைகளை இலவசமாய் உண்டாக்கிக்கொடுத்துப் பயிர்க்குடிகளைக் காப்பாற்றினர்கள். வித்வ சங்கங்களை ஸ்தாபித்து, பண்டிதர்களைப் போஷித்து, கல்வியை வளர்த்து வந்தார்கள். அயலார் நாட்டைக் கைப்பற்றவேண்டுமென்ற ஆசையை நீக்கி, புறநாட்டாரோடு பெரும்பாலும் சமாதானமாயிருந்தபடியால், பெரிய சேனைகளைத் திரட்டிவைத்துப் பராமரிக்கத் தேவையில்லாதிருந்தது. பின்னுள்ளோர் பார்த்து மெச்சவேண்டுமெனக் கருதி அநேக அரசர் செய்து வந்ததுபோல, அவர்கள் பிரமாண்டமான ஆலயங்களையும் மாளிகைகளையும் கட்டிவைக்கவில்லை. தற்

காலத்தில் பாண்டிநாட்டில் காணப்படும் பெரிய கல்மண்டபங்களும், கோபுரங்களும், அரண்மனைகளும், பிற்காலத்தில் வந்த நாயக்கக் கர்த்தாக்கள் நாளில்தான் கட்டப்பட்டவை. பூர்வ பாண்டியர் பெரும்பாலும் இடம்பத்தை விரும்பாதவர்களாகவே இருந்தார்கள். குடிகளை ஒடுக்காமலும், வீண் ஆடம்பரமில்லாமலும் நீதிவழுவாமல் ஆண்டுவந்தார்கள்.

இவ்வாறு இவர்கள் செங்கோல் செலுத்தி வருங்காலத்தில், கி. பி. 1000-ம் ஆண்டளவில், வடதிசையிலுள்ள சோழர்கள், நம் அயலாருடைய பூமியைக் கவரவேண்டுமென்ற துராசைகொண்டு, பெரிய சேனைகளைச் சேகரித்து, படையெடுத்து, பக்கத்திலுள்ள நாடுகளெல்லாவற்றையும் கீழடக்கினார்கள். கப்பற்படையோடு சென்று ஈழம், யாவகம், கடாரம் முதலான தூரதேசங்களையும் ஜெயித்து ஒடுக்கினார்கள். பாண்டிய நாடும் சோழருக்குக் கீழ்ப்படியும்படியாயிற்று.

இச்சிறுமையை நிவிர்த்திக்கும்படி பாண்டியர்கள் நீண்ட காலமாய் முயன்று, கடைசியில் வெற்றிகொண்டதோடு அமையாமல், குலசேகர பாண்டியன் காலத்தில், திரளான சேனைகளைச் சேகரித்து, சேர சோழநாடுகளை ஜெயித்துக் கீழ்ப்படுத்தினார்கள்.

குலசேகர பாண்டியர் பெரிய தளகர்த்தராயிருந்தார். அவருக்குப் பலமாறு நாமங்கள் வழங்கும். அவர்காலத்தில் பாண்டிய நாட்டின் நிலைமை வெகுவாய் மாறுதலடைந்தது. அவர் தொடுத்த யுத்தங்களில் உபயோகமாகும்பொருட்டு ஏராளமான குதிரைகளைப் பாரசீகத்திலும் அரபிதேசத்திலுமிருந்து வருவிக்கும்படியாயிற்று. முன்னே சொற்பமாயிருந்த குதிரை வர்த்தகம் அவர்காலத்தில் மிகப் பிரபல்லியமடைந்தபடியால், பாரசீகரும் அரபியருமான பலர் பாண்டிய நாட்டில் நிலையாய்க் குடியேற நேரிட்டது. கிரேக்கு, இத்தாலி, எகிப்து, பெனிக்கே முதலான மேல்நாடுகளோடும், யாவகம், சீனம், ஜப்பான் முதலான கீழ்நாடுகளோடும் அதிபூர்வ காலமுதல் நடந்துவந்த கப்பல் வர்த்தகம் அவர்காலத்தில் அதிகரித்தது.

அதிகமான வியாபாரவிருத்தியினால், தேசத்திற்கு ஜீவாதாரமாயிருந்த விவசாயத்தொழில் தாழ்வடைய ஆரம்பித்தது. பட்டணங்களில் பொன்னும், பட்டும், அயல் நாட்டு விசித்திரப்பண்டங்களும் நாடோடிய உபயோகத்திற்கு வந்துவிட்டன. சீமைச்சாராய வகைகளும், தின்பண்டங்களும், விநோதப் பொருட்களும், அளவில்லாமல் இறக்குமதியானதோடு அயல் நாட்டு வழக்க பழக்கங்களும் வந்து நுழைந்தன. பொன்னாசை என்ற பேய் ஜனத்தைப் பிடித்தாட்ட ஆரம்பித்தபடியால், அநேகர் கிராமவாழ்க்கையைத் தவிர்த்து, வியாபாரத்திற்கு அநுகூலமான பட்டணங்களுக்குப் போய்விட்டார்கள். தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவந்த நல்லொழுக்கம் கெட்டு, சிற்றின்பமும் உல்லாசமும் தலையெடுத்தன. வெளித்தோற்றத்தில் நாடானது வெகு வாழ்வடைந்ததாகக் காணப்பட்டாலும், மக்களுடைய வாழ்க்கையில் துரிதமாய் உண்டாகிக்கொண்டிருந்த இம்மாறுதல்களால் தேசத்தின் ஸ்திதி சீர்குலைந்துவந்தது. வியாபாரமும் அரசசேவகமும் மேன்மை பெற்றும், விவசாயமும் கைத்தொழிலும் தாழ்வடைந்தும் வந்தன.

நாற்பது வருடக்காலமாக வெகு பிரதாபத்தோடு நாடாண்டுவந்த குலசேகரபாண்டியருக்கு, பட்டமஹிஷியிடம் ஐந்து குமாரரும், போகஸ்திரீயிடம் ஒரு குமாரனும் உண்டானார்கள். அவர்களுள், போகஸ்திரீ புத்திரனாகிய வீரபாண்டியன்மேல் பிதாவுக்கு அத்தியந்த பிரியமுண்டானபடியால், அவனை தமக்குப்பின் பட்டம் ஆளவேண்டியவனென்று தீர்மானித்தார். இந்தத்தீர்மானம் வெளியானவுடனே, அரச குடும்பத்தில் பெரிய குழப்பம் உண்டாயிற்று. மந்திரிமாரும், பிரபுக்களும் தடுத்துச்சொன்ன போதிலும் அரசர் தமது தீர்மானத்தைமாற்ற இசையவில்லை. வீரபாண்டியனிடத்துள்ள மட்டில்லாத பாசத்தாலோ, அவன் தாயின் சூழ்ச்சியாலோ, பட்ட ஸ்திரீயின் பிள்ளைகளிடத்துத் தமக்குண்டான வெறுப்பின் மிகுதியாலோ தூண்டப்பட்டவராய், அரசர் ஒரே பிடிவாதமாகத் தம் சொல்லில் உறுதியாயிருந்தார்.

இந்தக்காரணத்தினால், பட்டத்திற்கு உரியவனாகிய சுந்தரபாண்டியனும் அவன் தம்பிமாரும் கூடி ஆலோசனை செய்து, தந்தையைப்பிடித்துச் சிறையாக்கிவிட்டு, இராஜ்ய த்தைப் பங்கிட்டு ஆண்டுவருவதென்றும், மூத்தவனாகிய சுந்தரபாண்டியன் மதுரையில் ஆளுவதென்றும், மற்ற நால்வரும் அவனுக்கு உட்பட்டு இதர பட்டணங்களில் ஆளுவதென்றும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்தப் படியே, அவர்களால் ஏவப்பட்ட சேவகர்கள், ஓர் இரவில், வயோதிபரான அரசரைப்பிடிக்க எத்தனிக்கும்போது, அவர் கூக்குரலிட்டதால் பயந்து, அவரைக்கொன்று போட்டார்கள். இவ்வாறு சுத்தவீரராகிய குலசேகரபாண்டியர் தமது முறுமையில் கொலையுண்கையால் மாளும்படி நேர்ந்தது. இவரும் தங்கள் ஒப்பந்தத்தின்படியே நாட்டைப் பகிர்ந்துகொண்டார்கள்.

பொங்குபுகழ் பெற்ற பாண்டிய சிம்மாசனமேறிய சுந்தரபாண்டியன், கல்வி கேள்விகளில் மிகுந்தவனும், பராக்கிரமசாலியுமாயிருந்தும், மட்டில்லாத சுகபோகப் பிரியனாய் விளங்கினன். ஆயிரம் மறுமனையாட்டிகளைச் சம்பாதித்தான். ஆடம்பரத்திலும், வீண்வேடிக்கைகளிலும் அளவில்லாத திரவியத்தைச் செலவிட்டான். முந்திய பாண்டியர்கள் வைத்துப்போன முத்துக்கள் ஆபரணங்கள் முதலான அபூர்வ வஸ்துக்களை, பின்னை பட்டத்திற்கு வருபவர்கள் உபயோகிக்கக்கூடாது என்ற மாமூலைமீறி, சுகுணபாண்டியன் காலமுதலாக ஆண்டிருந்த தன் முன்னோர் சேகரித்துவைத்திருந்த விலைமதியாத பொருட்களை யெல்லாம் அயல் நாட்டு வியாபாரிகளுக்கு விற்று, அநேககோடி பொன் வாங்கிச் செலவிட்டான்.

அரசன் தன் காலத்தை யெல்லாம் அந்தப்புரத்திலேயே போக்கினபடியால், அரசாங்க அதிகாரம் நிலைகுலைய ஆரம்பித்தது. பிரதான உத்தியோகஸ்தரில் பலர் அயோக்கியராய் நடந்தார்கள். முன்னை அடங்கியிருந்த குறும்பர் தலையெடுத்து, தங்கள் கொள்ளைத்தொழிலைச் செய்யத் துவக்கினார்கள். படைத்தலைவர் தங்கள் கடமைகளைச் சரிவரப் நிறைவேற்றாதபடியால், சேனைகளின் ஒழுக்கம் வெகு

வாய்க் கெட்டுப்போயிற்று, படைவீரருக்குச் செல்லாக வேண்டிய சம்பளம் கிரமமாகக் கொடுக்கப்படவில்லை. சிற்றரசர் தத்தம் மனம்போல நடந்தார்கள்.

இவைகளைக் குறித்துச்சான்றோர் பலர் பாண்டியனிடம் பலதடவை அறிவித்தும், அவன் கவனிக்காதபடியால் அவர்கள் வெறுப்புற்று அவனை விட்டகன்றார்கள். மூடரும் மூர்க்கருமே அரசனுக்குத் துணைவரானார்கள். பாண்டியவம்ச அரசாட்சிக்கு முடிவுகாலம் சமீபித்ததெனக் கண்டு அறிவுள்ளோர் யாவரும் விசாரமுற்றனர்.

நம் கதை ஆரம்பிக்கும் காலத்தில் தேசத்தின் நிலைமை இவ்வாறிருந்தது.

4. பதி நீங்குதல்

வாத்தியார் செல்லவும், காரியார் தம்பத்தினியை அழைத்து, தாம் கேள்விப்பட்ட விஷயங்களைத் தெரிவித்து கொஞ்சக்காலம் குலசேகரன் தேசயாத்திரைசெய்து திரும்புதல் நலமெனத் தாம் அபிப்பிராயப்படுவதாகவும், அவனுடைய விருப்பம் என்ன என அறிய விரும்புவதாகவும் சொன்னார். சொற்றிறம்பாமையே கற்பெனக்கொண்ட பார்வதி, அவருடைய நோக்கத்திற்கு விரோதமான தொன்றையும் சொல்லியறியாளாகையால், "அது நல்ல யோசனை "என்றாள். அப்படிச் சொல்லும்போதே, தன் ஒரே மகன் கண்ணுக்கெட்டாத தூரத்திற்குச் செல்லவேண்டி வந்ததைச் சகிக்கமாட்டாமல், கண்ணீர் விட்டாள். அவள் விசனமுறுவதைக் காரியார்பார்த்து, "பார்வதி! நீ வருந்துதல் இயல்பே, என்றாலும் பையனுடைய நன்மையை நாம் முக்கியமாகக்கருதவேண்டும். ஊராரில் சிலர் அவன் பேரில் மனத்தாங்கல் அடைந்திருக்கிறார்கள் என்ற காரணத்தைமாத்திரம்கொண்டு நான் அவனை வெளியே அனுப்ப யோசிக்கவில்லை. நம் நாட்டின் வழக்க பழக்கங்கள் அதிவிரைவில் மாறுதலடைந்து வருகின்றன. தேசத்தில்

நடக்கும் காரியங்களைக் கவனிக்காமல் இவ்விடத்திலேயே இருப்பவர்களுடைய அறிவு விசாலமடையமாட்டாது. அறிவில்லாதவர்களை அறிவுடையோர் ஆளுவது எக்காலத்திலும் இயல்பல்லவா? ஆகையால் பையனுடைய நலத்தை உத்தேசித்துத்தான் நான் இப்படித் தீர்மானித்திருக்கிறேன். அதுவுமன்றி, நம்முடைய வீட்டின் நிலைமை உனக்குத் தெரிந்ததே. பையனுக்கு உழவு தொழிலில் விருப்பமிருப்பதாகத் தோன்றவில்லை. என் விருப்பத்திற்காக வேளாவேளைகளில் வேலைக்குச்செல்லுகிறானேயன்றி, தானாக விவசாயத்தின்மேல் பிரியம்கொண்டு வேலைசெய்கிறவனாகக் காணப்படவில்லை. தானும் பணியாளரோடுசேர்ந்துபாடுபடாமல், மேன்மையாகக் குடித்தனம் செய்யவேண்டுமானால், அதற்குப்போதுமான ஆஸ்தியிருக்கவேண்டும். நம்முடைய நிலைமை அதற்கு இடம்தரவில்லை. அப்படியானால் நம்முடைய காலத்திற்குப்பின் அவன் எந்த வழியில் காலக்ஷேபம் செய்வான்? அவன் போகுமிடங்களில் யாதாகிலும் ஒரு நல்ல தொழிலைத் தேடிக்கொண்டால் நமது கவலை நீங்கிவிடுமல்லவா? இங்கேயே இருந்துவிட்டால் துர்ச்சன சகவாசத்தால் அவகீர்த்திக்கான மார்க்கத்தில் திரும்பிவிடுவதும் கூடியதன்றோ? அரசவம்சத்தில் பிறந்தவன் எக்காலத்திலும் ஆபத்தை எதிர்நோக்கினவனாகவேயிருக்கவேண்டும். நன்மையும் தீமையும் கடவுளுடைய அநுமதியின்றி வருவனவல்ல. ஆகையால் நீ சஞ்சலப்படவேண்டாம். கொஞ்சக்காலம் அவன் போய்வரட்டும்” எனப் பலபடியான சமாதானங்களைச் சொல்லி அவளை ஆறுதல் படுத்தினார்.

குலசேகரன் வீட்டுக்கு வந்தவுடனே, நடந்த விஷயங்களைப் பார்வதி சொல்லக்கேட்டு தான் தேசயாத்திரை செல்லுவதைப்பற்றி ஆனந்தமடைந்தான். அன்று சாயங்காலத்தில் காரியார் அவனைத்தனியே அழைத்து, தாம் கேள்விப்பட்ட முறைப்பாடுகளைக்குறித்து அவனை வெகுவாய்க் கடிந்துகொண்டார். தந்தையை எதிர்த்துப் பேசும் வழக்கமில்லாதபடியால், குலசேகரன் தலைகுனிந்து மௌனமாகவே நின்றான். தான் செய்தவற்றைக் குறித்துத் துக்கப்

பட்டான். ஆலோசிக்காமல் யாதொன்றைச் செய்தல் மூடத்தனம் என்றும், கோபத்துக்கு இடம் கொடுத்தல் மூர்க்க லக்ஷணம் என்றும் அறிந்தான். நியாயம் விசாரிக்கும் உத்தியோகத்தைத் தான் எடுத்துக்கொண்டது முறையல்ல என்று அவனுக்கு விளங்கிற்று.

பிரயாணத்திற்கென்று நியமித்திருந்த நாள் சமீபிக்கவும், காரியாருடைய மனதில் ஆயாசம் உண்டாயிற்று. தமது குமாரன் தனியே பயணம் செய்யவேண்டி வந்ததைப்பற்றி வருத்தமுற்றார். அவ்விதம் வருத்தமடைதல் பேதமை என்று சொல்லித் தம்மைத் தேற்றிக்கொள்ள முயன்றார். எவ்வளவுதூரம் முயன்றும் அந்த எண்ணம் நீங்காதபடியால், வீட்டைவிட்டு வெளியேபோய், பின்னேயிருந்த பொய்கையண்டையில் உலாவிக்கொண்டு, அங்கு புஷ்பித்திருந்த பூக்களைப்பார்த்து, கடவுளுடைய கருணையையும் ஞானத்தையும் சிந்தனை செய்தவராக வெகுநேரம் போக்கினார்.

அச்சமையத்தில், அவருடைய ஏவலாட்களில் ஒருவனாகிய வெள்ளையன் அங்குவந்து, ஏதோ பேசவிரும்பியவன் போல நின்றான்.

காரியார்:—என்ன காரியமாய் வந்தாய் வெள்ளையா?

வெள்ளையன்:—சின்ன எஜமான் நாளைக்குப் பயணமாய்ப் போகிறதாக நாச்சியார் சொன்னார் அதைக்கேட்டவுடனே நீலனும் கூடப்போகவேண்டும் என்கிறான். எஜமான் சித்தம் எப்படியோ?

காரியார்:—வெள்ளையா? பையனோடுகூட ஒரு ஆள் போவது எனக்குச் சந்தோஷமே. ஆனால் உன்மகனை சும்மா அனுப்ப எனக்கு மனமில்லை. சம்பளம் கொடுக்கவும் தத்துவமில்லை. ஆகையால், வேண்டாம். குலசேகரன் தனியேதான் போகட்டும்.

வெள்ளையன்:—நம்முடைய நீலன், வாழ்ந்தாலும் கெட்டாலும், சின்ன எசமானை விட்டுபிரிவதில்லை என்று ஒரே

பிடியாய்ச்சொல்லுகிறன். சம்பளத்தைப்பற்றி எஜமான் யோசிக்கவேண்டாம். அவன் பிரியத்தைக்கெடுப்பானேன். உத்தரவாகவேண்டும்.

காரியார்:—வெள்ளையா! என் நிலைமையை எண்ணித்தான் இப்படிச் சொல்லுகிறய். என்முன்னேர் காலத்தில், பொன்னூர்ப்பாண்டியன் அரண்மனை என்றபேரோடு இந்த வீடு எவ்வளவு மேன்மை பெற்றிருந்தது என்பது உனக்குத்தெரியும். இப்போது என் நிலைமை என்ன? இடிந்த மதிலில் தங்கியிருக்கும் ஒரு ஆந்தையைப்போல் இந்தப் பாழான வீட்டில் ஒதுங்கியிருக்கிறேன். குடியிருக்கும் கூரையை ஒழுக்கில்லாமல் காப்பாற்றக்கூட முடியாதிருக்கிறது. ஒரு காலத்தில் இந்த வீட்டைச் சூழக்குடியிருந்த நூறு எவலாட்களின் குடும்பத்தார் எங்கே? நீயும் வாலனும் மாத்திரம் பழைய விசுவாசத்தைக்கொண்டு எங்களைக் கைவிடாமலிருக்கிறீர்கள். நீங்கள் செய்துவரும் உபகாரத்திற்குக் கடவுள்தான் பிரதிபலன் அளிக்கவேண்டும். என்காலம் கடந்துவிட்டது. பையன் காலம் எப்படியிருக்குமோ தெரியவில்லை. உன் மகனை அனுப்புவது மெத்தப் பெரிய உபகாரமே. அவர்கள் திரும்பிவந்தபின் நீலனுக்கு ஏதாவது ஒருவழியில் கொஞ்சம் பணம் ஆகப்பண்ணிக்கொடுப்பேன்.

வெள்ளையன்:—எஜமானுடைய வாயினின்று ஒருநாளும் பிறக்காத சொல் இன்று வெளிவந்ததைக் கேட்க என் மனம் புண்ணுகிறது. நாங்கள் ஏதோ உபகாரம் செய்து விட்டதாக எஜமான் சொல்லுவது என்னை அழச்செய்கிறது. எஜமானுடைய பூமியைப் பயிரிட்டுச் சாப்பிடுகிறோம். எங்கள் பெண்டுபிள்ளைகள் அரமனையில் அற்பசொற்ப வேலைசெய்கிறதற்காக, மாமூல்படி எங்களுக்குக் கிடைக்கும் வரும்படி குறையாமலே கிடைத்துவருகிறது. ஐந்நூறு வருடங்களுக்கு மேலாக அரமனை உப்புத்தின்ற நாங்கள் இதைவிட்டு எங்கே போகப்போகிறோம். எஜமான் ஒன்றிற்கும் ஆயாசப்படவேண்டாம். சின்ன எஜமானைப் பார்க்கிற சாஸ்திரக்காரர் எல்லாரும், அவர்காலத்தில் பழைய பட்டம் திரு.

ம்பவாப்போகிறது என்று சொல்லுகிறார்கள். எது எப்படியானாலும் சரிதான். இந்தக் கட்டை இருக்கும் வரைக்கும் வெள்ளையன் மாத்திரம் எசமானுடைய பாதபடிவிட்டு அகலமாட்டான், என்று சொல்லிப்போய் விட்டான்.

காரியாரும் கடவுளுடைய கருணையைப் போற்றிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தார். "எத்தனை நூல்களைக் கற்றுவிட்டாலும், பெற்றவனுக்குப் புத்திரவாஞ்சை இல்லாதொழிவதில்லை. பையன் கொஞ்ச நாள் நமது பார்வைக்கு எட்டாத இடத்திற்குப் போகிறான் என்றவுடனே, மனமானது எவ்வளவு சஞ்சலமடைகிறது! என் வறுமையைக் குறித்து ஒருவரிடத்திலும் முறையிடாத நான் இன்று வெள்ளையனிடம் வருத்தத்தோடு பேசும்படி செய்ததும் புத்திரவாஞ்சைதானே! இதுவும் பகவானுடைய லீலையாகவே தோன்றுகிறது" என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார்.

நீலனைக்குறித்து ஒரு வார்த்தை சொல்லவேண்டும். குலசேகரனும் இவனும் சுமார் ஏக பிராயத்தவர். இருவரும் இளமை முதலே பரஸ்பர சிநேகம் கொண்டவர்களாயிருந்தார்கள். எக்காலமும் சின்ன எஜமானேடு திரிந்து கொண்டிருப்பதே நீலனுக்கு விருப்பம். சில சமயங்களில் குலசேகரன்கையால் அடியும் படுவான். பட்டாலும், அதினிமித்தமாகக் கோபித்துக்கொள்ளமாட்டான். தன் எஜமானைவிடச்சற்று குட்டையாயும் பருமனுயுமிருப்பான். மிகுந்த தேகவலிமையுடையவன்.

அன்றிரவில் காரியார் மகனைக்கூப்பிட்டு, வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். தமது குடும்பத்தின் பூர்வோத்திரத்தையும், தமது தற்கால நிலைமையையும் விவரமாய்த் தெரிவித்தார். முடிவில், பின்வரும் ஆலோசனைகளை அவன் முக்கியமாகக்கவனித்து நடக்கவேண்டும் என்று சொன்னார்:—

"கடவுளைமறவாதே: அவன் நமக்கு உள்ளும் புறம்பும் இருக்கும் உண்மையை அடிக்கடி ஞாபகம் செய். பேச்

சிலும் செய்கையிலும் சுத்தவானுயிருக்கமுயல், அரசரையும் பெரியோரையும் கனம்பண்ணு. சேவகவாழ்க்கை விரும்பப்படத்தக்கதன்று. ஆதலால் பாண்டியன் கட்டளையிட்டாலன்றி உத்தியோகத்தில் பிரவேசிக்காதே. பரிச்சேதம் வேறொருவரிடத்திலும் சேவகம் செய்யாதே. முதியோரையும், ஸ்திரீகளையும், சிறுவலரயும், அங்கவீனரையும் பக்ஷமாய் நடத்து. அயலாருடைய சண்டை சச்சரவுகளில் தலையிடாதே. மானிட இயற்கையையும், பல்வேறுன சமுகத்தாரின் வழக்க பழக்கங்களையும் கூர்ந்து கவனி. அறிவை விருத்திபண்ணக் கூடிய சமயங்களை இழந்துவிடாதே. ஒருவனும் உன்னை வஞ்சித்துவிடாதபடி ஜாக்கிரதையாயிரு. உன்மனதிற்குப் பொருத்தமான ஏதாவதொரு தொழில் கிடைக்கக்கூடுமோ என்று ஆராய்ந்துபார்.

இன்னுென்றுண்டு. என் பந்துக்களில் பலர் நீபோகுமிடங்களில் இருப்பார்கள். நீ யார் என்பதை அவர்கள் அறிந்தால், ஒருகால் உன்செவிகேட்க என்னைத்தூஷிப்பார்கள். அதினுல் நீங்குவிளையும். ஆகையால், உன்னைப் பகிரங்கப்படுத்திக்கொள்ளவேண்டாம்" என்றுர்.

அப்புறம் ஆயுதசாலைக்குள் போய், ஒருபெரிய வேலாயுதத்தை எடுத்துக்கொண்டுவந்து மகன்கையில் கொடுத்து, "இது ஒரு அபூர்வமான ஆயுதம். ஆதியில் முனிவரொருவரால், கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி பாண்டியனுக்குக்கொடுக்கப்பட்டது. பாண்டியன் இதைத்தன் இரண்டாவது குமாரனுகிய மாறவழுதிக்குக்கொடுத்தான். அந்த மாறவழுதிதான் "பொன்னூர்ப்பாண்டியன்" என்றபட்டத்தோடு முதல் முதலாக இந்தநாட்டை ஆண்டவன். அவனுடைய பரம்பரையார் தாம் நாம். இதில் நமது பட்டப்பேர். பதிந்திருக்கிறது. ஒருகாலத்திலும் இதில் துருப்பிடிக்கமாட்டாது. இதைப்பத்திரமாக வைத்துக்கொள். எனக்குத்தெரிந்த ஆயுதவித்தையை உனக்குக் கற்பித்திருக்கிறேன். நீ அறிவுடையவன் உனக்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை. உன் வம்சத்தின்பேருக்கு அவமானம் வராதபடி காப்பது உன்கடமை" என்றுசொல்லி, மகன் சிரசில்கைவைத்து, சிறிதுநேரம் நின்றுவிட்டுப் படுக்கைக்குப்போய்விட்டார்.

குலசேகரன் தன் தாயாரிடம் சென்றான். மிகுந்த விசாரத்தோடு உட்கார்ந்திருந்த பார்வதி, மகனை அண்டையில் இருத்திக்கொண்டு, முகத்தையும் முதுகையும் தடவி கொஞ்சநேரம் அழுதுவிட்டு, பின்வருமாறு புகன்றாள்:—

“அப்பா! நீ ஒருவனே எங்களுக்கு உள்ளவன். உனக்கு ஏதாகிலும் ஆபத்து நேரிட்டதென்று கேள்விப்பட்டால் உன் தந்தை சகிக்கமாட்டார்; என் உயிரும் தரிக்காது. ஆகையால் மோசங்களுக்கு விலகிநடசுகத்தைப்பேணிக்கொள். நீலனிடம் சிலமருந்துகள்கொடுத்திருக்கிறேன். அவசரம் கவனித்து அவைகளை உபயோகித்துக்கொள். வழிச் செலவுக்காக ஏழு பொன்னும் அவனிடம் கொடுத்திருக்கிறேன். வீட்டில் வேறே பணம் இல்லை. அது செலவாகிவிட்டால் உன் அரையிலிருக்கும் பழைய தங்க அரைஞாணை விற்றுச் செலவுசெய்துகொள். அது உன் பாட்டனுருடையது. பணத்தைக் கவனமாகச் செலவிடு. இத்திசைக்குவரக்கூடிய ஆட்கள் மூலமாக அடிக்கடி கடிதம் அனுப்பு. பட்டணங்களிலே வேசிகள் மிகுத்துப்போனதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அவர்களுடைய வலையில் சிக்கிக்கொள்ளாதே. உன்னைப்பார்த்து அநேகர் உனக்குப் பெண் கொடுக்க விரும்புவார்கள்; அதற்கு இணங்காதே. உன் தந்தையாருக்கும் நம் பந்துக்களுக்கும் நெடுநாளாக மனஸ்தாபம் இருந்தாலும், உன் விவாகம் நம்முடைய பழைய உறவின் முறையிலேயே நடக்கவேண்டுமென்பது என் விருப்பம். என் தமையனார் வீட்டில் ஒரு பெண்ணுண்டு. அவள் குணத்திலும் அழகிலும் சிறந்தவள் என்று சொல்லக்கேட்டிருக்கிறேன். உன் தந்தையார் சம்மதித்தால் அந்தப்பெண்ணை உனக்குக்கொள்வது நன்றாயிருக்கும். நீ இல்லாத வீடு எங்களிருவருக்கும் எப்படியிருக்கும் என்பதை நீயே உணர்ந்துகொள். நாட்களை வீணே போக்காமல், விசேஷமான இடங்களைப் பார்த்தவுடனே திரும்பி வந்துவிடு. மகேஸ்வரி உன்னைக்காப்பாற்றுவாள்,” என்று சொலவி, படுக்கைக்குப்போக அனுப்பினாள்.

குலசேகரனுக்கு வெகுநேரம் வரைக்கும் நித்திரைவரவில்லை. தன் வீட்டின் நிலைமை அப்போதான் அவனுக்

குத் தெளிவாய்த் தெரிந்தது. வயோதிபரான பெற்றோரு க்குத் தான் செய்யவேண்டிய கடமையைச் சரியாய் நிறை வேற்றாதே போனதைக்குறித்து மனம் வருந்தினான். அவர் களை விட்டுப் பிரிவதும் வருத்தமாகவே கண்டது. அவர் கள் தெரிவித்த ஆலோசனைகளைத் திட்டவட்டமாய்க் கா த்து நடப்பதாகவும், அவர்களுடைய மனம் சந்தோஷ மடைவதற்கு வேண்டியதை எவ்வளவு சிரமப்பட்டும் செ ய்வதாகவும் நிர்மாணித்துக்கொண்டான்.

அருணோதயத்தில் குலசேகரன் எழுந்து, ஸ்நானம் முதலியவற்றை முடித்து, தயிரும் பழஞ்சாதமும் அருந் தியவுடனே, பெற்றோரை வணங்கி, நீலன்பின் தொடர, வீட்டைவிட்டுப் புறப்பட்டான். தலையில் உருமாலும் தோளில் சோமனும் அரையில் முரட்டு வேஷ்டியும், இடுப் பில் கச்சையும் தரித்து, பக்கத்தில் ஈட்டியும் கையில் வே லாயுதமும்தாங்கி, பாதங்களிலிட்ட கனத்த செருப்புகள் கிச்கிட, இளஞ்சிங்கம்போல நடந்து முன்சென்றான் குல சேகரன். பனைநாரினால் முடையப்பட்ட ஒரு பெட்டியின் சில வஸ்திரங்களும், கம்பளமும், சமையல் பாத்திரங்களும் வைத்துக்கட்டித் தலைமேல் சுமந்துகொண்டும், இடுப்பில் ஒரு சூரியும் கையில் ஒரு பலமான தடியும் வைத்துக்கொ ண்டும் உல்லாசமாகப் பின்னே சென்றான் நீலன். ஊரிலு ள்ள வாலிபர் இவர்கள் போவதறிந்து வந்து வெகு தூரம் கூடச்சென்று வழிவிட்டார்கள்.

பெரியவரும் பார்வதியும் மகன் போனவழியைப் பார் த்துக்கொண்டு நின்றார்கள். அழுத கண்ணும் சிந்திய மூக் குமாய் நின்ற பார்வதி வாய்விட்டுப் புலம்பி, "வியாபாரி களும், உழவர்களும் முதலாய்க் குதிரையேறிச்செல்லும் இக்காலில், என் ஒரே மகன் கால் நடையாய்ப்போக நேரி ட்ட என் தலைவிதியை என்ன சொல்லுவேன்" என்று அங் கலாய்த்தாள். காரியார் அவளைப்பார்த்து "பார்வதி! உலகத்தின் தன்மையை உணராவதள்போல பேசுகிறாயே. வாழ்வையும் தாழ்வையும் சமதிருஷ்டியோடு பார்க்கக்கூடிய ஞானம் உனக்கு எப்போ வருமோ. கால் நடையாய்ச் செல் லுவதிலும் குதிரையேறிப்போவதில் அதிகமேன்மையில்லை.

உடல் இருக்கும் வரைக்கும் உழைக்கத் தகுந்த பெலனைக் கடவுள் கொடுத்தால் அதுவே பெரிய பாக்கியம். குதிரைகள் அவசரப் பிரயாணத்திற்கும் பெலவீனரைச் சுமப்பதற்கும் மாத்திரம் பிரயோஜனமானவை. கவலையை ஒழி. கால் நடையாய்ப்போகும் உன் மகன் யானைமேல் ஏறிவருவான் என்று என் உள்ளத்தில் ஒரு சத்தம் ஒலிக்கிறது. பகவானுடைய சித்தப்படி ஆகும்'' என்று சொன்னார்.

அச்சமையத்தில் வாலன் ஓடிவந்து, சகுனம் நன்றாயிருப்பதாகச் சொல்லி அவர்களைச் சந்தோஷப்படுத்தினான்.

5. யாத்திரை.

பிரயாணிகள் இருவரும் தெற்கே சென்று தாமிரபருணியைத்தாண்டி, மூன்று நாழிகை வழிதூரத்திலுள்ள கருங்குளத்தண்டையில்போகும் பெரும் பாதையை அடைந்தார்கள். அவ்வழியாகக் கிழக்கு நோக்கி நடந்து, பாண்டிய ராஜ்யஸ்தாபகத்திற்கு முன்னே ஆண்டழிந்த யக்கருடைய பதியாகிய ஆதிச்சநல்லூரைக்கண்டு, அங்கிருந்து நம்மாழ்வார் கோயிலிருக்கும் குருகூருக்குப்போய், அப்பால் பழைய பாண்டிய ராஜதானியாகிய கொற்கைக்குச் சென்றார்கள். கொற்கையின் பூர்வீகமகிமை குன்றிப்போய், அப்பட்டணம் வெகுதூரம் பாழடைந்து கிடந்தது. பூமியானது வரவர உயர்ந்து போய்விட்டபடியால், முன்னே கொற்கையருகிலிருந்த கடற்கரை வெகுதூரம் பின்வாங்கி அக்காலத்தில் காயலருகில் இருந்தது.

கொற்கையைவிட்டு, கிழக்கே சென்று, பெரியாறு கடலோடு கலக்குமிடத்திலிருந்த காயலுக்குப் போனார்கள். காயல் அக்காலத்தில் பெரிய பட்டணமாயும் பேர்பெற்ற துறைமுகமாயுமிருந்தது. அதிபூர்வகாலமுதல் காயலருகில் எடுக்கப்பட்டுவந்த முத்துக்கள் உலகெங்கும் மதிக்கப்பட்டனவாயிருந்தன. வடக்கே இமாசலம் வரையுமுள்ள ஐம்பத்

நாறு தேசங்களுக்கும் இங்கிருந்து முத்தும் சங்கும் தரை வழியாகக் கொண்டுபோகப்படும். அப்படியே ஐரோப்பாவுக்கும் சீனத்திற்கும் கப்பல் வழியாய் ஏற்றுமதியாகும் பலசரக்குகளோடு முத்துக்களும் ஏராளமாய் அனுப்பப்படும்.

வடதேசங்களிலிருந்துவரும் வியாபாரிகள் கூட்டம் கூட்டமாய் காயலில் தங்கியிருப்பார்கள். நானுதேசத்துக் கப்பல்கள் அத்துறைமுகத்தில் நிற்கும். ஏற்றுமதியும் இறக்குமதியும் ஓய்வில்லாமல் நடந்துகொண்டிருக்கும்.

சலாபத்தில் அகப்படும் முத்துக்களில் பத்திலொன்று பாண்டியனைச்சேரும். இதுவன்றி, விசேஷமான பெரிய முத்துக்களையும் சங்குகளையும் பாண்டியன் எடுத்துக்கொண்டு தகுந்த கிரயம் கொடுப்பான். முத்துவிளைவினுல் அரசனுக்கு மிகுந்த ஆதாயம் கிடைத்தபடியால், குடிகளிடத்தில் அதிக வரிவாங்க அவசரமில்லாதிருந்தது.

கிராமவாழ்க்கை ஒன்றே தெரிந்திருந்த குலசேகரனுக்கு, பட்டணவாசிகளுடைய வழக்க பழக்கங்கள் புதுமையாகவே காணப்பட்டன. அவர்களுடைய உடை நடையாவனைகளும், பேச்சும், மிக வித்தியாசமாய்க் காணப்பட்டன. கடைகளின் ஏராளமும், விதவித சரக்குகளின் மிகுதியும், பல நாட்டு உடைகளும், பல பாஷைகளும், வீடுவாசல்களின் மேன்மையும், கப்பல்களின் அமைப்பும், சலாபம் குளிப்போருடைய சாமர்த்தியமும், உப்பு விளையும் அளங்களின் அழகும், பார்க்கப்பார்க்க விநோதமாகவேயிருந்தன.

பத்து பன்னிரண்டு வயதுள்ள பாலியர் முதலாய் வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். அதைக் கவனித்த சீலன் தானும் கொஞ்சம்வியாபாரம் செய்யலாம் என்று எண்ணினுன். எஜமான் ஊர் சுற்றப்போகும் நேரத்தில் சீலன் கொண்டுவிற்கப்போவான். அதிசீக்கிரத்திலதானே வியாபாரத்தின் சூக்ஷத்தை ஒருவாறு தெரிந்துகொண்டான். அவர்கள் காயலில் தங்கியிருந்த பத்துநாட்களுக்

குள்ளாகவே பன்னிரண்டு பொன்சம்பாதித்து விட்டான். தான் செய்ததை எஜமானுக்கு அறிவிக்கவில்லை.

நீலனுடைய முகத்தில் காணப்பட்ட குறிப்புகளினால் அவன் தனக்குத் தெரிவிக்காமல் ஏதோ ஒரு காரியத்தைச் செய்துகொண்டிருப்பதாகச் சந்தேகித்த குலசேகரன் அவன் மேல் கண்வைத்தான். ஒருநாள் குலசேகரன் கடைவீதிகளின்வழியாக நடந்து வரும்போது, நீலன் வடதேசத்து வியாபாரி ஒருவனிடம் வார்த்தையாடுவதைத் தூரத்திலிருந்து கவனித்தான். நீலன் தன்காரியத்தை முடித்துப்போனவுடனே, குலசேகரன் அந்த வியாபாரியண்டைபணுகி, சற்று முன் உம்முடனே பேசிக்கொண்டிருந்தவர்யார்? என்று கேட்டான். வியாபாரி குலசேகரனை மேலும் கீழும் பார்த்துவிட்டு, ஒருவாறு மனதைத்தேற்றிக்கொண்டு, "உம்மிடத்தில் சொல்லுவதற்கு ஆக்ஷேபனையில்லை; அவர் பெயர் நீலகண்டன் செட்டியார்; நேற்று சீனத்துக்கப்பலில் வந்த சரக்குகளை மொத்தமாக வாங்கியிருக்கிறாராம்; அவற்றில் சில சரக்குகளுக்கு மாதிரிகொண்டுவந்து காண்பித்துவிட்டு விலை விசாரித்துக்கொண்டு போகிறார். சரக்குகள் நல்லவைகளே. ஆனால் விலை அதிகமாய்ச் சொல்லுகிறார். கொஞ்சம் பட்டு மாத்திரம் எடுத்துக்கொள்ளுவதாகச் சொன்னேன்" என்றான். நீலனுடைய இரகசியத்தை அறிந்துகொண்டவுடனே, குலசேகரன் அவ்விடம்விட்டுப் போய்விட்டான்.

அன்று சாயந்தரம் பேட்டைக்குவரவும், குலசேகரன் நீலனைப்பார்த்து "இவ்விடத்தில் நாம் பார்க்கவேண்டியதைப் பார்த்தாயிற்று. நாளைக் காலையில் தெற்கே பயணப்படுவோம். அதற்காக வேண்டியதைக் கவனித்துக்கொள்" என்றான். நீலனுடைய முகம் வாட்டமடைந்தது; என்றாலும் ஒன்றும் மறுத்துச்சொல்ல ஏலாதவனாய், பிரயாணத்திற்கு வேண்டியவற்றை ஆயத்தம் செய்யும்படி சென்றான்.

காயல்விட்டு நீங்கி, தேரிவழியாகத் திருச்செந்திலுக்குச் சென்றார்கள். அங்குள்ள பழைய முருகன் கோவிலைக் கண்டு, சிலநாள் அவ்விடத்தில் தங்கினார்கள். அப்புறம்

கடற்கரைவழியாக, குலசேகரபட்டணத்திற்கும் உவரிக்கும் போனார்கள். உவரியும் பூர்வத்தில் ஒருபெரிய துறைமுகமாயிருந்து, கடல் பின் வாங்கிப்போனபடியால் க்ஷீணித்துப் போய்விட்டது. அவ்விடம் விட்டு விஜயாபதிக்கும், குமரிக்கும் சென்றார்கள்.

குமரியிலுள்ள பல கோவில்களையும் தரிசித்தார்கள். பரதபூமியின் தென்கோடி முனையிலிருந்த சிறிய மண்டபத்தில் நின்று சமுத்திரத்தையும் கரையையும் பார்ப்பது குலசேகரனுக்கு இன்பமாயிருந்தது. கடலுக்குள் வெகு தூரத்திலிருந்த ஒரு குன்றின்மேல் இடிந்து கிடந்த ஒரு கோவில் காணப்பட்டது. அதற்குத்தெற்கில் வேறொரு கோவில் இருப்பதாகவும், நீர்வற்றுக்காலங்களில் அது காணப்படுவதாகவும் அவ்விடத்தார் தெரிவித்தார்கள். சுளகினால் கொழித்துச் சேர்க்கப்பட்ட அரிசியை நிகர்த்ததான சிறிய வெண் பருக்கைக் கற்கள் குவியல் குவியலாய் அக்கடற்கரையில் கிடந்தன. பலநிற மணல்கள் வகைவகையாய் அங்கு பரப்பப்பட்டுக்கிடந்தது கண்ணுக்கு இனிமையைக் கொடுத்தது. அக்காலத்தில் குமரியை அடுத்த பூமி மரங்கள் அடர்ந்த பெரிய காடாக இருந்தது.

குமரியை விட்டுப் புறப்பட்டு, வடகிழக்காய்ப் பிரயாணம்பண்ணி, நாஞ்சி நாட்டுச் சிற்றரசன் இருந்த கோட்டாற்றுக்கு வந்தார்கள். வருகிற வழியில், அநுமாரால் எறியப்பட்டதாகச் சொல்லப்படும் மருந்துவாழ் மலையையும், பழையாற்றின் தீரத்திலுள்ள சுசீந்திரம் எனும் பதியையும் கண்டார்கள். கோட்டாற்றைவிட்டு, பணகுடிக்கும், வள்ளியூருக்கும், நாங்குநேரிக்கும், நெல்லைக்கும், கயிற்றாற்றிற்கும், முன்னே சமணர் வாழ்ந்த கழுகுமலைக்கும் சென்றார்கள்.

தென்திசையிலுள்ள ஊர்களிலிருந்து மதுரைக்கும், வடதேசங்களுக்கும் போய்வரும் வழிப்போக்கரும் வியாபாரிகளும், கூட்டங் கூட்டமாக அப்பெரும்பாதையில் சென்று கொண்டிருந்தார்கள். சுமார் காதவழி தூரத்திற்கு ஓர் இடத்தில் பிரயாணிகள் தங்கக்கூடிய பெரிய பேட்டை

கள் இருந்தன. குளங்களும், கிணறுகளும், பாதை ஓரத்தில் அங்கங்கே உண்டு. நிழலுக்காக வைக்கப்பட்ட மரங்களும், சுமையை இலகுவாக்கக்கூடிய சுமைதாங்கிகளும், சாலை ஓரத்தில் அமைக்கப்பட்டிருந்த சிலைகளும், கோவில்களும், மண்டபங்களும், அம்மார்க்கத்தைச் சிறப்பித்தன. கணக்கில்லாத மனுஷரும், மிருகங்களும், வண்டில்களும் ஓயாது நடந்து கொண்டிருந்ததால் வேனிற் காலத்திலுண்டான புழுதியும், மழைகாலத்தில் உண்டான சேறும் அந்த ராஜபாட்டையை அலங்கோலமாக்கின. ஆறுகளுக்கு வாராவதிகளில்லாமையால் மாரிகாலத்தில் அவசரப் பிரயாணம் செய்தல் வெகு கஷ்டமாகவே யிருந்தது. மானாட்டிலிருந்து வரும் பொதிமாடுகளும், காயலிலிருந்துவரும் குதிரைகளும் நாஞ்சிலிலிருந்துவரும் வண்டில்களும், பிரபுக்கள் ஏறிப் போகும் தண்டிகைகளும், அரச சேவகர் ஊர்ந்து செல்லும் அஸ்வங்களும், அலங்காரத்திற்காகக் கொண்டுபோகப் படும் யானைகளும், ஒட்டகங்களும், இவைகளோடுகூட மூட்டை முடிச்சுக்களைச் சுமந்துகொண்டு பாதசாரிகளாய்ப் போகும் வியாபாரிகளும், பிரயாணிகளும், புண்ணிய ஸ்தலங்களுக்கேகும் பக்தர்களும், வைராகிகளும், யாசகர்களுமாகக் கூடிக்கலந்து நடக்கும் அக்காக்ஷி மனோகரமாகவேயிருக்கும். மத்தியான நேரத்தில், நிழலும் தண்ணீரும் உள்ள இடங்களில் தாமதித்து, சக்கிமுக்கி தட்டித் தீமூட்டிச் சமையல்செய்து, ஆலிலைகளால் செய்த அழகிய தொன்னைகளில் சாப்பிட்டு இளைப்பாறுவார்கள். இரவில் தங்கும் பேட்டைகளில் பாடல்களும் வேடிக்கைகளும் விசேஷமாயிருக்கும் அந்தக் கூட்டங்களில் முடிச்சுமாறிகளுக்கும் குறைவில்லை.

அவர்கள் கழுகுமலையில் தங்கியிருக்கையில், கொல்லத்திலிருந்து காசிக்குப் பிரயாணம்செய்து கொண்டிருந்த ஒரு வர்த்தகன் தன் பரிவாரத்தோடு அங்கு வந்து சேர்ந்தான். அவன் அநேக தேசங்களுக்குப் போய்வந்தவன். பல பாஷைகளைப் பேச அறிந்தவன். அவன் குலசேகரனிடம் பாண்டிய நாட்டின் விசேஷங்களைக்குறித்துச் சம்பாஷித்தான். கப்பல் வழியாக அவன் ரோமாபுரிவரையும் போ

ய்வந்ததையும், மேலைத்தேயங்களி லுள்ளவர்களுடைய நாகரிக உயர்வையும், அங்கு கட்டப்பட்டிருந்தகட்டடங்களின் மாட்சிமையையும் குறித்து அவன் வெகுவாய்ப் புகழ்ந்தான். குலசேகரன் அவனிடம் பலகாரியங்களைக் கேட்டுத் தெளிந்தான். இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துவருமிடையில், அவ்வியாபாரி பாண்டிய நாட்டின் ராஜபாதைகளைக்குறித்தும், கட்டடங்களைக்குறித்தும், ஜனங்களின் வழக்க பழக்கங்களைக் குறித்தும் இழித்துக்கூறியதைக் கேட்க குலசேகரனுக்கு விசனமுண்டாயிற்று. என்றாலும் கோபத்தை அடக்கிக்கொண்டு, அவ்வியாபாரியை நோக்கி, "நீர் போய்வந்த சீமைகளும் இந்த நாடும் பல விஷயங்களில் வேறுபட்டிருக்கின்றன. அரசாங்க ஏற்பாடுகளும், குடிகளின் வழக்க பழக்கங்களும் அந்தந்த நாட்டின் வளப்பத்தையும் சீதோஷ்ண ஸ்திதியையும் பொறுத்தவை. இது ஒரு சிறிய தேசம். இத்தேசத்தின் குடிகளுக்கும் அரசருக்கும் பூமியிலிருந்து வரும் விளைவுதான் ஆதாரம். அயல்நாடுகளோடு நடந்துவரும் வியாபாரம் ஆராயுமிடத்து இந்த நாட்டிற்கு நன்மை பயக்கவில்லை. ஆகையால் விவசாயக்குடிகளின் ஸ்திதியை அநுசரித்தே இத்தேசத்தில் எந்த ஏற்பாடும் உண்டாக்கப்படுகிறது. கற்பாவப்பட்ட ராஜபாதைகள் முக்கியமாக அயல்நாட்டு வியாபாரிகளுக்கே அநுகூலமாகும். உள்நாட்டு வியாபாரத்திற்கு இப்போதுள்ள பாதைகளே போதுமானவை. கற்பதித்த ஒரு பாதையை உண்டாக்குவது பெரிதல்ல; அது பழுதாகாதபடி காப்பதே கஷ்டம். அவ்விதம் அப்பாதையைக் காவாமற்போனால் வெகு சீக்கிரத்திலேயே அது கெட்டுப்போய்விடும்; அதற்காகச்செலவிட்ட பணமும் வீணாகும்; அது இருந்த இடத்தில் மனுஷராவது மிருகங்களாவது நடப்பதும் கூடாததாகிவிடும். விவசாயத்தால் கிடைக்கும் வரும்படி எக்காலத்திலும் ஒரே அளவாயிருக்கமாட்டாது. ஆகையால் ராஜபாட்டைகளைச் செவ்வைபண்ணுவதற்காக ஒவ்வொரு ஆண்டிலும் பெருந்தொகையான பணத்தைச்செலவிடுவது கூடியதன்று. இராஜபாதைகளுக்காக உழவுக் குடிகளிடம் விசேஷ வரிவாங்குவதும் சரியன்று. பாதைகளில் சுங்கம்வாங்குவதும் ஆலோசித்துப் பார்க்குமளவில் குடிகள் மேல்தான் பொறுக்கும்.

ஆதலால் அப்படிச்செய்தலும் தகாது. மேலும், இந்நாட்டில் வருஷத்தில் மூன்றுமாதங்கள் தவிர மற்றக்காலமெல்லாம் வெயில் காய்வதால், பிரயாணம் செய்தல் வருத்தமன்று. நாட்டிலுள்ளோர், மாரிகாலத்தில் தங்கள் பூமியைக்காக்க வேண்டியிருப்பதால், அக்காலத்தில் பெரும்பாலும் பிரயாணம் செய்யார்கள். அல்லாமலும், சாதாரணமாய் வெற்றுக்காலால் நடக்கும் இத்தேசத்தாருக்கு கல்பாவப்பட்ட பாதைகளைக்காட்டிலும் வெறும் தரையே சுகம்.

இவ்வாறான பல காரணங்களைச்சீர்தூக்கியறிந்தே, இத்தேசத்தரசர் இலவசமாகப் பிரயாணிகளுக்குத் தண்ணீரும் நிழலும் உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். பிரயாணம் தாமதமாவதினால் நாட்டுக்கு உண்டாகும் தீமையைப்பார்க்கிலும், குடிகளிடம் வாங்கும் தீர்வையை அதிகரிப்பதினால் உண்டாக்கூடிய தீமை மிகுந்ததாயிருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

அப்படியே கட்டடங்களும் நாட்டுவழக்க பழக்கங்களும் அந்தந்த நாட்டின் நிலைமையை அநுசரித்தவைகளாயிருக்கும். மதுரையில் பாண்டியனுடைய அரண்மனை முதலான பல விசித்திரமான கட்டடங்கள் இருக்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். சாதாரணமாக எமது நாட்டாரின் குடியிருப்பும், உணவும், உடையும் மிகவும் சொற்பச் செலவிலேயே முடியக் கூடியவை. அயல்நாட்டாருடைய வரத்துப்போக்கு அதிகரிப்பதினால் இந்த நிலைமைமாறிக் கொண்டிருக்கிறது. பிற்காலத்தில் நாட்டின்வாழ்வு எவ்வாறாகும் என்று தோன்றவில்லை.'' என்றான்.

அவன் சொன்னவற்றைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த வியாபாரி "நீர் தெரிவித்தவை ஒருவாறு நியாயமாகவே தோன்றுகின்றன. ஆனால் ஒரு நாட்டின் வாழ்வுக்கு அயல்நாட்டாருடைய கூட்டுறவு இன்றியமையாதது என்பது எனது அபிப்பிராயம்'' என்றான்.

அதற்குக் குலசேகரன், "உலகத்தாரெல்லாருடைய கூட்டுறவும் நமக்கு வேண்டியதே. அதை நான் மறுக்க

வில்லை. உள்நாட்டுக்குடிகளுக்குக் கேடுண்டாகாதவண்ணம் கூட்டுறவு செய்வது எங்ஙனம் என்பதுதான் கேள்வி" என்றான்.

கழுகுமலையை விட்டு வடக்கேசென்று, ஊரிலிருந்துப் புறப்பட்ட நாற்றிருபதாம் நாளில் வைப்பாற்றங் கரையிலுள்ள சாத்தூரை அடைந்தார்கள். அன்று மத்தியானத்தில் அங்கு தங்கியிருந்த ஏராளமான ஜனங்களோடு இளைப்பாறிக் கொண்டிருக்கையில், நீலன் எஜமானன்டையில் வருவதும், நிற்பதும், தலையைச் சொறிந்துகொண்டு திரும்பிப் போவதுமா யிருந்தான். இதைக் கண்டும் காணாதவன்போல உட்கார்ந்திருந்தான் குலசேகரன். பலவிதமாக நடித்தும் அவன் ஒன்றும் சொல்லாதிருந்தபடியால், நீலன் மனம் துணிந்து, "எஜமான்! ஒரு காரியம் சொல்லவேண்டும்" என்றான். "அதென்னடா? உன் முகம் ஒருமாதிரியாயிருக்கிறது. எவனாகிலும் உனக்குத் துன்பம் செய்தானா? சொல். உடனே அவனைப்பார்க்கிறேன்" என்றான் குலசேகரன். "அந்தப்பாக்கியம் எனக்குக் கிடைக்கப்போகிறது! எஜமானைப் பார்க்கிறவன் பத்து முழம் விலகிப்போகிறான். என்னைக்கண்டால் எல்லாரும் ஐந்து முழமாவது விலகியே நடக்கிறார்கள். அதல்ல........" என்று சொல்லி மேலே பேச ஆரம்பிக்கும்போது குலசேகரன், "அடே நீலா! நீ என்னோடு வருவதாயிருந்தால், வார்த்தைகளைச் சுருக்கிக்கொள்ளவேண்டும். என்று ஊரிலிருக்கும்போதே உனக்குச் சொல்லவில்லையா? அந்தப்படி இது பரியந்தமும் நடந்துவந்த நீ, இன்று வழக்கம் பிசகி அதிகம் பேசுவதென்ன? சொல்லவேண்டியது உண்டானால் நாலு வார்த்தையில் சொல்" என்று உறுத்திச் சொல்ல, நீலன் "அப்படியே, எஜமான்! பணம் இல்லை" என்றான்.

குலசேகரன்:—ஏனடா பணமில்லை? நாம் தங்கின ஊர்களைச் சொல்லிக்கொண்டு வருகிறேன். நீ அங்கங்கே செலவான பணத்தைக் கணக்குச்சொல். கழுங்குளத்தில் எவ்வளவு செலவு?

நீலன்.—அரைப் பணம்.

குலசேகரன்.—ஆதிச்சநல்லூரில்?

நீலன்.—முக்காலே அரைக்கால் பணம்.

குலசேகரன்.—குருகூரில்?

நீலன்.—காலேமாகாணிப் பொன்.

குலசேகரன்.—கொற்கையில்?

நீலன்.—ஒன்றே காலே அரைக்கால் பொன்.

என இவ்வாறு துரிதமாக விவரம் சொல்லிக்கொண்டு வர, நல்லப்ப வாத்தியார் படித்துக் கொடுத்திருந்த கணித சாஸ்திரத்தை, பள்ளிக்கூட வாசலிலேயே மறந்துவிடவேண்டும் என்ற அருமையான தீர்மானத்தைச் செய்தவர்களில் நீலன் ஒருவனாதலால், மொத்தம் எவ்வளவாகும் என்பதை அறியாமல், சுமார் பன்னிரண்டு பொன்னுக்குக் கணக்குக் கொடுத்தான். அந்தக் கணக்கைக் கேட்டுக் குலசேகரன் சிரித்துவிட்டு, "அடே! பொய் சொல்லு முன்னமே பொருந்தச் சொல்லப் பழகிக்கொள்ள வேண்டும். பத்து நாள் தானே நீ காயலில் நீலகண்டன் செட்டி என்ற திரு நாமத்தோ டிருந்தாய், அதற்குள்ளாக செட்டிகளுடைய வித்தை யெல்லாம் வந்துவிடுமா? உள்ளதைச் சொல்லிவிடு. வீட்டிலிருந்து கொண்டுவந்தது எழு பொன். அதற்குமேல் நீ சம்பாதித்தது எவ்வளவு? இன்றையவரைக்கும் சென்ற செலவு என்ன?" என்று கேட்க, நீலன், இனி மறைப்பதில் பிரயோஜனமில்லை யென்று கண்டு, தான் காயலில் பல சாமான்களைவாங்கி வடநாட்டு வியாபாரிகளுக்கு விற்றதையும், அதின் மூலமாய் பன்னிரண்டு பொன் லாபம் சம்பாதித்ததையும், இன்னமும் கொஞ்சக் காலம் காயலில் இருந்தால் வெகு பணம் சம்பாதித்து விடலாம் என்று எண்ணியிருந்ததையும், எஜமானுக்குப் பிரிய மிருக்காது என்றெண்ணி யாதொன்றும் சொல்லாதிருந்து விட்டதையும், அன்றைய வரையிலும் பதினேழரைப் பொன் செலவாகி யிருந்ததையும் தெரிவித்தான். குலசேகரன் அதைக் கேட்டுவிட்டு, "நீலா! நீ காயலில் செய்த வியாபார விஷயம் எனக்கு அவ்விடத்திலேயே தெரி

ந்து விட்டதால்தான், துரிதப்படுத்தி உன்னை அங்கிருந்து புறப்படச் செய்தேன். உன் மனம் பணத்தில் லயித்திருந்ததைத் தெளிவாய்க் கண்டேன். அப்படியே இன்னும் சிலநாள் அங்கிருந்து விட்டால் கபடில்லாத உன் சுபாவம் கெட்டுப் போய்விடும். எனக்குப் பணம் அவசியமே. ஆனால் காயலில் நடக்கும் வியாபார முறையைக் கவனித்த பின், அவ்வழியில் பணம் சம்பாதிக்க நான் விரும்பவில்லை. நியாயமான ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்வது வியாபாரமாகுமேயன்றி, ஒரு பொன் முதலைக்கொண்டு பத்து நாளில் பன்னிரண்டு பொன் சம்பாதிக்கக்கூடிய வியாபாரம் வியாபாரமன்று; அது கொள்ளை. பாண்டியன் இதைக் கவனிக்காததால், கிராமங்களிலுள்ள சமுசாரிகளில் அநேகர், விரைவில் தனவந்தராகிவிடலாம் என்ற ஆசைகொண்டு, பட்டணங்களுக்குப் போய்விடுகிறார்கள். முழுமேனி விளையக் கூடிய நிலங்கள் கூட உழவாடாமல் கிடக்கின்றன. வியாபாரம் ஏனைய தொழில்களைப் போலவே நிதானமான லாபத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தால், ஜனங்கள் பொருளாசையின் வாய்ப்பட்டுக் கெடமாட்டார்கள். நமது நாட்டிற்குப் பிரயோஜனமாகாத அநேக பகட்டான பொருட்கள் காயல் துறையில் வந்திறங்கிக் கொண்டிருக்கின்றன. இவைகளை வாங்கி விற்பவர்கள் வெகு லாபம் அடைகிறார்கள். இந்த வியாபாரம் நமக்கு வேண்டாம். என் அரையில் இருக்கிற பொற் சங்கிலி நூறு பொன் பெறும். அது என் பாட்டனாருடையது. பழைய பொருளை விற்பது எனக்கு வருத்தமே. என்றாலும் மதுரைக்குப் போனவுடனே வேறு வழியில்லாவிட்டால் அதை விற்கத்தான் வேண்டும். இம்மட்டும் கவனித்ததில் நான் பிரியத்தோடு செய்யக்கூடிய ஒரு தொழிலும் எனக்குத் தென்படவில்லை. நீ வியாபாரம் செய்தது எனக்குச் சம்மதமில்லாவிட்டாலும், என் மேல் உனக்கிருக்கும் அன்பை நான் பாராட்டுகிறேன். மதுரைக்குப் போனவுடன், நீ சம்பாதித்த பன்னிரண்டு பொன்னையும் உனக்கே தந்துவிடுவேன். உன் வாயாலேயே காரியம் வெளியாகட்டும் என்று இம்மட்டும் காத்திருந்தேன். மற்ற விஷயங்களை பின்னால் யோசித்துக் கொள்ளலாம்" என்றான்.

நீலன்.—எஜமான்! பழைய பொருளை விற்பானேன்? ஏதாவது உத்தியோகம் கிடைக்குமாவென்று விசாரித்துப் பார்க்கலாமே.

குலசேகரன்.—(நீலனைப் பரிக்ஷிக்கக் கருதி) நீ ஒன்றிற்கும் ஆயாசப்படவேண்டாம். மதுரையில் ஜனங்களை ஏமாற்றிப் பணம் பறிக்கிற அநேக திருடர் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களைப் பிடித்துக் கசக்கி வேண்டிய பணத்தை வாங்கிக்கொள்ளலாம். கொள்ளைக்காரருடைய பொருளைக் கொள்ளையிடுவதில் தோஷமில்லை.

நீலன்.—எஜமான் கோபிக்கவேண்டாம். மதுரையும் நம்முடைய ஊரும் ஒன்றல்ல. ஒருவன் வீட்டுக் கதவைப் பிடுங்கி மற்றொருவனுக்குக் கொடுக்கக்கூடிய இடமல்ல அது. அவ்விடத்தில் வழக்குக் கேட்பது நியாயாதிபதிகள் பொறுப்பு என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். வீட்டை விட்டுப் புறப்படும்போது நாச்சியார் என்னை அழைத்து "உன் சின்ன எஜமான் துடுக்காய் எதையும் செய்துவிடாதபடி பார்த்துக்கொள்" என்றுசொன்னார். பொன்னூரில் நடந்ததுபோல மதுரையிலும் நடக்கப் பார்த்து, ஏதாவதொரு சங்கடத்தில் மாட்டிக்கொண்டால் பெரிய எஜமானும் நாச்சியாரும் என்ன கதி அடைவார்களோ! ஆகையால், எஜமான் சொல்லுகிற வழி நலமாகத் தோன்றவில்லை.

குலசேகரன்.—(சிரித்துக் கொண்டு) நீலா! அதையெல்லாம் பக்குவமாய்ப் பார்த்துக் கொள்ளலாம். உன் பேரில் இன்று எனக்கு அதிகச் சந்தோஷமாயிருக்கிறது. எனக்கு அரச பட்டம் கிடைத்துவிட்டால், தப்பாமல் உன்னை என் அரண்மனை உக்கிராணக்காரனாக்கிவிடுவேன். அது கிடைப்பதுதான் முயற்கொம்பாயிருக்கிறது.

நீலன்.—எஜமான்! நான்......, என்று சொல்லி மேலே ஏதோ பேச ஆரம்பிக்க,

குலசேகரன்.—அலப்பாதே, நிறுத்து, எனவும், சம்பாஷணை முடிந்தது.

அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, விருதுநகரத்தில் தங்கி மூன்றும் நாள் பொழுதுபோகும் வேளையில் திருமங்கலத் திற்கு மூன்று நாழிகை வழிதூரத்தில் போய்ச் சேர்ந்தார் கள்.

6. கல்யாணி.

பகல் போய் இரவு வந்தது. சந்திரோதயமாகி, நிலவொளி பால் போல் பரவிற்று. மரங்களுக்கு மத்தியில் சென்ற அப்பெருவழி, வனத்திடை பாயும் ஒரு ஆற்றைப் போல் துலங்கிற்று. அங்கங்கே காணப்பட்ட புதர்கள், பாற் கடலில் மிதக்கும் படவுகளைப் போலவும், அசைந்தாடிய அவற்றின் கிளைகள் அப்படவுகளிலேறி உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விஞ்சையரைப் போலவும் விளங்கின. தூரத்திலிருந்த செங்கற் பறம்புகள் அவ்வெண்ணொளியால் பிரகாசித்தது மேருகிரியின் மேலுற்ற சுவர்ண மாளிகைகளின் சிறப்பை ஒத்திருந்தது. வெய்யோன் கதிர்களால் வெந்து கரிந்த உலகத்தின்மேல் கருணையுற்றவன்போல், திங்கள் தோன்றி, திசையெங்கும் தன் சீத கிரணங்களைப் பரவச்செய்து, சர்வ ஜீவராசிகளையும் மகிழ்வித்தான். கலை வல்லோர் பாடி மகிழும் அக்கலாநிதி குலசேகரனுடைய மனதைக் கவர்ந்து அதைக் கலப்பில்லாத களிப்பால் நிரப்பினான். உடல் பூரிக்க, அவனுடைய உள்ளமானது உல்லாசமான விஷயங்களில் சென்று சஞ்சரித்தது. நீலனும் சந்தோஷமாகவே தெம்மாங்கு பாடிக்கொண்டு நடந்தான். அம்புலி வெகு அழகாய்க் காய்ந்தபடியால், பகலெல்லாம் நடந்த களைப்பை மறந்து அவர்கள் கடந்து வந்த பேட்டையில் தாமதிக்காமல், திருமங்கலம் சென்று ராத்தங்கலாம் என்றெண்ணி வழிநடந்தார்கள்.

சற்றுநேரத்தில் இவர்களுக்குப் பின்னிருந்து இரண்டு சிவிகைகள் வேகமாய் வந்து கடந்து முன்னே சென்றன. மூடப்பட்டிருந்தபடியால் அவைகளில் ஸ்திரீகள் இருந்ததாக

அநுமானிக்கக் கூடியதாயிருந்தது. சிவிகையார் முறைப் படி மாறி மாறிப் பாடிக்கொண்டே தீவிரமாய் ஓடினார்கள். முந்திச் சென்ற சிவிகைக்கும் பிந்திய சிவிகைக்குமிடையில் சுமார் இருநூறு முழ தூரமிருந்தது. அக்காலத்தில் கள்ளர் பயமுண்டாயிருந்தபடியால், பிரயாணிகள் பொழுதடைந்தபின் பயணம் செய்வதை பெரும்பாலும் விட்டு விட்டார்கள். ஆகையால் இச்சிவிகைகள் தனித்தே சென்றன.

கொஞ்ச நேரத்தில், சிவிகைகள் சென்ற திசையிலிருந்து ஐயோ! கள்ளர், என்ற கூக்குரல் உண்டாயிற்று. அதைக் கேட்கவும், பல்லக்குகளைக் கள்ளர் தாக்குவதாகக் கிரகித்துக்கொண்டு குலசேகரன் விரைந்தோடினான். நீலனும், தலையிலிருந்த சுமையைப் போட்டுவிட்டு, பின்னே ஆட்கள் வருவதாய்ப் பாவனைசெய்து "ஏ சாத்தா!, ஏ சங்கரா!, ஏ நந்தா!, கள்ளர், கள்ளர், ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்" எனக்கூவிக்கொண்டே தொடர்ந்தோடி வந்தான்.

இவர்கள் வந்து சேர்வதற்குள்ளாக நடந்ததென்னவென்றால்: சிவிகைகள் வருவதையும், சிவிகை சுமப்பவர்களின் உண்மையான தன்மையையும், வேவுகாரர் மூலமாய் அறிந்துகொண்ட ஆறு கள்ளர், வழியோரத்திலுள்ள ஒரு பள்ளத்திலே காத்திருந்தார்கள். பல்லக்குகள் சமீபிக்கவும் அவர்கள் மும்மூன்று பேராகப் பிரிந்து, இரண்டு பல்லக்குகளையும் ஏக காலத்தில் தாக்கினார்கள். அவர்கள் எதிர்பார்த்திருந்தபடியே சிவிகையார் பல்லக்குகளைப் போட்டுவிட்டு ஓடிப்போனார்கள். ஓடிப்போனவர்களை மிரட்டும்படி கள்ளரில் நாலுபேர் அவர்களைத் துரத்திக்கொண்டோடினார்கள். இருவர் பல்லக்குகளைக் கொள்ளையிட நின்றார்கள்.

முன்னே சென்ற பல்லக்கில் முப்பத்தைந்து வயதுள்ள விதவையான ஒரு பணிப்பெண்ணிருந்தாள். அவளோடு சமையற் சாமான்களும் கம்பளங்களுமிருந்தன. சிவிகையார் ஓடிப்போகவும் பணிப்பெண்ணானவள் மூர்ச்சித்தது போலப் பாசாங்குசெய்து படுத்துக்கொண்டாள்.

கள்ளன் அவளை ஒருபுறம் உருட்டித் தள்ளிவிட்டு, ஏதாகிலும் விலைபெற்ற பொருளுண்டோ என்றறியும்படி சாமான்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பின்னே வந்த பல்லக்கில், வயது முதிர்ந்த ஒரு விதவையும், சுமார் பதினெட்டுப் பிராயமுள்ள ஒரு பெண்ணும் இருந்தார்கள். கள்ளர் வந்ததையும், சிவிகையார் ஓடிப்போனதையும் கண்ட முதியவள் "ஐயோ! கள்ளர், கள்ளர்" எனக் கூவிக்கொண்டு, சிவிகையின் கதவைத் திறக்க எத்தனித்த கள்ளனுக்கெதிரில் சாடி, உள்ளேயிருந்த பெண்ணை மறைக்கப்பார்த்தாள். சாடின அவசரத்தில் அவள் சிரசானது எதிரேயிருந்த வாசல் நிலையில் மோதுண்ண, உடனே விழுந்து மூர்ச்சையானாள். கள்ளன் குனிந்து, சிவிகைக்குள் தலையை நுழைத்து, கையைநீட்டி, மிகுதியான ஆபரணங்கள் அணிந்து கொண்டிருந்த அவ்விளம் பெண்ணின் கரத்தைப் பற்ற முயன்றான். அவள் ஒரு மூலைக்கு ஒதுங்கிச்சென்று, "அடே! தொடாதே. நகை வேண்டுமானால் கழற்றி எறிகிறேன். சாமான்களையும் எடுத்துப் போடுகிறேன். வெளியே நில்" என்று சொல்லியும் கேளாமல், "அதெல்லாம் எனக்குத் தெரியுமடி" என்று சொல்லிக்கொண்டே கள்ளன் தன் கைக்கெட்டிய அவளுடைய புடவையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்தான். இழுக்கவும், அச் சுந்தரி, சீ! எனச் சர்ப்பம் போல் சீறி அரசகுலக் கன்னியரின் வழக்கத்தின்படி, தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த ஒரு சிறிய கட்டியை உருவி, அவனை நோக்கி ஓங்கி குத்தினாள். அவள் குத்திய குத்தானது கள்ளனுடைய கன்னத்தில் பட்டு, நாவைத்துளைத்து, தொண்டையில் பாய்ந்தது. இந்த வெகுமதியைப் பெற்ற கள்ளன், பொறிகலங்கி 'கா கா" வென்று கதறிக்கொண்டு தன் வாயைப் பிடித்த வண்ணம் சுழன்று சுழன்று கூத்தாடித் தரையில் சாய்ந்துவிட்டான்.

சிவிகையாரைப் பயமுறுத்தும்படி கொஞ்சதூரம் தொடர்ந்து போயிருந்த நாலு கள்வரும் திரும்பி வந்து தங்கள் தோழனுக்கு நேரிட்ட ஆபத்தைக்கண்டு ஆச்சரியப்

பட்டார்கள். இவர்கள் வரவும், சிவிகைக்குள்ளிருந்த பெண்ணானவள் பயமடைந்து மறுபக்கத்து வாயிலைத் திறந்துகொண்டு தப்பி ஓடினாள். கள்வரில் மூவர் அவளைப் பின்தொடர்ந்துபோக ஒருவன் விழுந்துகிடந்த தன் தோழனண்டையில் நின்றான்.

அவ்விளம் பெண் கொஞ்ச தூரம் வெகுவேகமாகவே ஓடினாள். நாய்களால் துரத்துண்ட ஒரு மான்போல அவள் பறந்தோடும்போது, கட்டியிருந்த சேலை கால்களில் சிக்கிக்கொள்ள தடுமாறி, இனிச் செல்லும் மார்க்கம் காணாமல் "ஈஸ்வரி! நீயே அடைக்கலம்" என உறத்துக் கூவித் தரையில் விழுந்தாள்.

பின்னேயிருந்து சரவேகமாய்ப் பாய்ந்து வந்துகொண்டிருந்த நம் கதாநாயகன், பகல் போன்ற நிலவொளியில் முழங்கால் வரையும் நீண்ட அழகிய கேசம் அவிழ்ந்து பறக்க, மின்னல் கொடியென விரைந்தோடிய அப்பூங்கொடியையும், யமகிங்கரர் போல அவளைத் தொடர்ந்து சென்ற கள்வர் மூவரையும் தெளிவாகக்கண்டு, அவர்கள் போனதிசையை நோக்கி ஓடினான். கள்ளரைக் கிட்டவும் அவன் ஒன்றும் பேசாமல், வேலாயுதத்தை இடதுகையில் பிடித்துக்கொண்டு, வலக்கரத்தின் முஷ்டியாலேயே ஒவ்வொருவனுக்கும் இரண்டு மூன்று குத்துகள் கொடுத்து, அம் மூவரையும் அரை நிமிஷ நேரத்தில் தரையில் கிடத்திவிட்டான். அப்பால், சாவகாசமாக உட்கார்ந்து அவர்களுடைய வஸ்திரங்களைக் கொண்டே அவர்களுடைய கைகால்களைப் பிணைத்தான். கள்வரிடத்தில் கத்திகளும் தடிகளும் இருந்தும், அவற்றை உபயோகிக்க அவர்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

இதற்குள்ளாக அப்பெண்ணானவள் தரையினின்றெழுந்து, சிறிது தூரத்தில் போய் நின்று, மகா ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள். "யாரோ இவர்! முரடர்களான இம் மூவரையும் ஒருகையால் வென்ற இவருடைய பராக்கிரமம் தானென்ன! இவருடைய ரூப லக்ஷ

ணங்கள் சாதாரண மனுஷ பாவனையாகக் காணப்படவில்லை. நாம் வேண்டிக்கொண்டபடி மகேஸ்வரியே மனமிரங்கி, பிரளயகால ருத்திரனையே அனுப்பினாளோ! அல்லவென்றால் இவையெல்லாம் ஒரு சொப்பனந்தானோ" என என்ணமிட்டுக் கொண்டிருக்கையில், குலசேகரன் எழுந்து தன்னை நோக்கிப் பார்க்கவும், இருகரங்களையும் குவித்துத் தலைவணங்கி அவனை நமஸ்கரித்தாள். கள்ளர்களைக் கட்டி முடித்து எழும்பி நின்று திரும்பிப்பார்த்த குலசேகரன், மகா பிரகாசமாய்த் துலங்கிய சந்திர வெளிச்சத்தில், அச்சந்திரனே வதனமாகவும், அதைச் சூழ்ந்த கரியமேகங்களே கேசமாகவும், அதின் கிரணங்களே அவயவங்களாகவும், அதின் மறுவே ஆடையாகவும், உருவாகித் திரண்டதுபோல் அத்தனை அழகாய் விளங்கிய ஒரு அமர சுந்தரி நின்று தன்னை வணங்குவதைக்கண்டு விஸ்மயமடைந்தான். இவன் ஒன்றும் பேசாமல் தன்னைப் பார்த்தபடியே நிற்பதைக்கண்ட அவ்வணங்கு அச்சங்கொண்டு ஐயோ! என் பாட்டி என்ன ஆனாளோ? என்று சொல்லிக்கொண்டு, சிவிகையை நோக்கி ஓடினாள் அவள் ஓடவும், வசியக் கட்டினின்று விடுதலையடைந்த புயங்கம்போல, குலசேகரன் தானும் அவளைப் பின் சென்றோடினான்.

இவர்கள் வருமுன்னதாகவே நீலன் அங்கு சேர்ந்து சிவிகையைக் கொள்ளையிட்டுக் கொண்டிருந்த கள்வனைத் தடியால் அடித்துத் தரையில் தள்ளிப்போட்டு, தன்னறிவின்றி மயங்கிக்கிடந்த கிழவியின் முகத்தில் சிவிகையிலிருந்த தண்ணீரைத் தெளித்து மயக்கம் போக்கிக் கொண்டிருந்தான். குலசேகரனும் பெண்ணுமாக வந்து சேர்ந்த நேரத்தில், கிழவி கண்திறந்து, "கல்யாணி எங்கே! ஐயோ! என் பேர்த்தி எங்கே" என்று புலம்பினாள். "பாட்டி! நான் இங்கே தானிருக்கிறேன். உன் தலைநோகிறதோ?" என்று சொல்லிக்கொண்டு அப் பெண்ணானவள் அவளைத் தழுவினாள். இருவரும் கொஞ்சநேரம் கண்ணீர் விட்டழுதபின், கல்யாணி நடந்தவற்றைத் தெரிவித்தாள்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், முன் பல்லக்கை கொள்ளையிட்ட திருடன், அதில் அகப்பட்ட சில பாத்திரங்களையும் கம்பளங்களையும் கட்டித் தலையின்மேல் வைத்துக்கொண்டு தன் தோழரைத்தேடி வந்தான். சிவிகையண்டை நெருங்கவும், உண்மையைக் கிரகித்துக்கொண்டு "ஆகா! மோசம் போனேம்" என்று எண்ணி, தலையிலிருந்த மூட்டையை எறிந்துவிட்டு எடுத்தான் ஓட்டம். அவன் ஓடியதைக் கண்ட நீலன் பாய்ந்து அவனைப் பற்றிக் கீழே தள்ளிப் பிடிக்க எத்தனிக்கையில், கள்ளன் உருண்டெழுந்து மறுபடியும் ஓடினான். சிவிகையண்டை நின்று இதைப் பார்த்துக்கொண்டிருந்த குலசேகரன் "கள்ளனைக் கொண்டுவந்தாலன்றி இங்கே வராதே" என்று கூவிச் சொன்னதை நீலன் கேட்டு, ஆவேசங்கொண்டு தொடர்ந்து, மறுபடியும் அக்கள்ளனைப் பிடித்துப் புடைத்துக் கட்டிக்கொண்டு வந்து சேர்த்தான்.

முன் சிவிகையில் மூர்ச்சித்தவள்போல் கிடந்த பணிப்பெண்ணாகிய வள்ளி, கள்ளன் போய்விட்டதறிந்து, மெதுவாய்த் தலையைத் தூக்கி, அங்குமிங்கும் பார்த்து, எழுந்து வெளியேறி, சாலை மரங்களண்டையில் ஒளித்தொளித்து நடந்து, பின் பல்லக்கை நோக்கிவந்தாள். சமீபத்தில் வரவும் தன் எஜமாட்டிகளின் சத்தம் கேட்டு, அவர்களுக்கு மோசம் நேரிடவில்லை யென்று தெரிந்து கொண்டு, ஓடிவந்து முகத்திலும் மார்பிலும் அறைந்துகொண்டழுதாள்.

அப்புறம் கள்ளரனைவரையும் ஓரிடத்தில் சேர்த்து, அவர்களுக்குச் செய்யவேண்டிய சிக்ஷை என்னவென்று குலசேகரனும் நீலனும், ஆலோசித்ததில், அவர்களை நன்றாய்ப் புடைத்து, கைகால்களைக்கட்டி, சாலை மரங்களில் தலைகீழாய்த் தொங்க விடுவதே தகுதியான தண்டனை என்று தீர்மானித்தார்கள். அப்படியே கள்ளர்களிடமிருந்த ஆயுதங்களையும், அவர்கள் தலைமயிரிலும் ஆடையிலும் ஒளித்து வைத்திருந்த கொள்ளைப் பொருட்களையும் எடுத்துக்கொண்டு அவர்களை அடித்துக்கட்டி மரங்களில் தலைகீழாகத் தொங்க விட்டார்கள்.

இப்படி நடந்து கொண்டிருக்கும்போது, ஓடிப்போன சிவிகையார் மெல்ல மெல்ல வந்து சேர்ந்தார்கள். குலசேகரன் அவர்களுடைய கோழைத்தனத்திற்காக அவர்களை அதிகமாய்க் கோபித்தான். மேலும் அநேக அபூர்வமான செந்தமிழ்ப் பதங்களைப் பிரயோகித்து அவர்களை வாழ்த்தினான். அப்பதங்கள் அகராதிகளில் அகப்படவொரு அரிதாகையால், வாசிப்பவர்களுடைய சௌகரியத்தைக் கருதி அவற்றை எழுதாது விட்டோம். சிவிகையாருக்குத் தலைவனாயிருந்தவன் குலசேகரனைப் பார்த்து "எஜமான் கோபிப்பது நியாயமே. நடுக்காட்டில் எங்கள் எஜமாட்டிகளை விட்டு நாங்கள் ஓடிப்போனது குற்றம்தான். என்றாலும் எஜமானுக்கு ஒரு காரியம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அதாவது, நாங்கள் எல்லாரும் குடும்பஸ்தர் எங்களுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால் எங்கள் குடும்பங்களை யார் காப்பாற்றுவார்? மதுரையிலிருக்கும் எங்கள் எஜமான் பெரிய ஐசுவரியவான்தான். ஆனால் அவரிடத்தில் இரக்கம் கிடையாது. நாங்கள் நோய்ப்பட்டால் எங்களைத் தள்ளி விட்டு வேறு ஆட்களை நியமித்து விடுவார். எங்கள் குடும்பத்தில் நேரிடும் கஷ்ட நஷ்டங்களை அவர் ஒரு காலத்திலும் கவனிப்பவரல்லர் ஆகையால் எவலாட்களில் ஒருவராகிலும் அவரிடம் வெகுநாள் தங்குவதில்லை. நாங்களெல்லாரும் கொஞ்சக் காலமாகத்தான் அவரிடம் வேலை செய்து வருகிறோம். நாங்கள் எப்படி அவரை நம்பி எங்கள் உயிரைக் கொடுக்கக் கூடும்? எஜமான் இதைக் கவனிக்க வேண்டும்" என்றான். அந்தப் பணியாள் சொன்னதில் கொஞ்சம் நியாயம் இருப்பதாகக் குலசேகரன் அறிந்தும், அதை வெளியே காட்டாமல், திரும்பவும் கோபித்துப் பயமுறுத்தி, அவர்கள் தன் வேலையாட்களாயிருந்திருந்தால், அவர்கள் செய்த நம்பிக்கை மோசத்திற்காக வெகு கொடூரமாய்ச் சிக்ஷித்திருப்பதாகச் சொன்னான்.

அப்புறம் சாமான்களைச் சரிபார்த்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள். முதியவள் கேட்டுக்கொண்டபடி குலசேகரன் சிவிகையின் பக்கத்திலேயே காவலாக நடந்து சென்றான். கிழவி வழிநெடுக அவனோடு பேசிக்

கொண்டே போனுள். அவள் சொன்னவற்றினின்று, அவளுடைய ஏகபுத்திரனுகிய கீர்த்திவர்மர் என்பவர், பாண்டியனுடைய பிரதம மந்திரியின் கீழ் பகுதிக் கணக்காராய் உத்தியோகம் செய்து வருவதாகவும், அவளருகிலிருந்த பெண் அவருடைய புத்திரி என்றும், அப்பெண்ணுக்கு இன்னம் விவாகம் ஆகவில்லை யென்றும், அவர்களுக்குப் பூர்விகம் தென் பாண்டியிலுள்ள ஒரு கிராமம் என்றும், அவ்விடத்தில் சிலகாலமும், மதுரையில் சில காலமுமாக அவர்கள் வசித்துவருவதாகவும், வெகுகாலமாக இராஜபாட்டைகளில் கள்ளர் பயம் இல்லாதிருந்ததால், சேவகரைத் துணைகொண்டு வரவில்லை யென்றும், அன்று மத்தியானம் தாமதித்த இடத்தில் சிவிகையார் அதிக நேரம் தூங்கிவிட்டபடியால், புறப்படும் நேரம் பிந்திப்போயிற்றென்றும், நேரிட்ட ஆபத்திற்கு அதுவே காரணமென்றும், அவன் தெரிந்து கொண்டான்.

குலசேகரனைப்பற்றிய விவரம் அறிய வேண்டுமென்று கிழவி கேட்டபோது, அவன், “நானும் அரசகுலத்தவன் தான். மற்ற விவரங்களைத் தெரிவிக்க எனக்கு விருப்பமில்லை” என்முன்.

மதுரை போய்ச்சேருமளவும் அவன் தங்களோடு வரவேண்டுமென்றும், தவருமல் மதுரையில் தன் வீட்டிற்கு வந்து சில நாளாவது தங்கவேண்டும் என்றும் பெரியவள் விரும்பினுள். அதற்குக் குலசேகரன் “பிரயாணத்தில் கூட்வர ஆக்ஷேபனையில்லை. ஆனுல் உங்கள் வீட்டிற்கு வருவது கூடியதாயில்லை” என்முன்.

சிவிகையிலிருந்த இளம் பெண்ணே யாதொரு வார்த்தையும் பேசவில்லை. அவள் தன்னைக் கவனிக்கிருளா என்று அறிய விரும்பி குலசேகரன் பலதடவை அவளைப் பார்த்தும், அவளுடைய பார்வையை நிதானிக்கக்கூடவில்லை எனினும் குலசேகரனுடைய ஒவ்வொரு செய்கையும் அவளுக்குத் திட்டமாய்த் தெரிந்தேயிருந்தது. எண்டிசைகளையும் ஏககாலத்தில் பார்க்கக்கூடிய ஒரு அற்புத சக்தியைக்

கடவுள் கன்னியரின் சிரசில் அமைத்திருக்கும் இரகசியம் நம் கதாநாயகனுக்குத் தெரியாது.

கள்ளரிடமிருந்து பறித்த பொருள் சுமார் நூறுபொன் விலைமதிப்புள்ளதாயிருந்தது. அதைக்கொண்டு இரண்டு மூன்று மாதம் கவலையில்லாமல் கடத்தலாம் என்றறிந்து நீலன் திருப்தியடைந்தான். குலசேகரன் அவனைப்பார்த்து "நீலா! ஒரு துன்பம் ஒழிந்தது. இப்படியாக மாசம் ஒன்றிற்கு ஒரு கூட்டம் கள்ளர் அகப்பட்டால் நமக்குப் போதும். இனி மதுரையிலுள்ள துஷ்டரைக்குறித்துக் கவனிக்காதிருந்து விடுவோம். இந்தப் பணம் செலவாகு முன்னைக்கு ஏதாகிலும் ஒரு தகுதியான வழி தென்படாவிட்டால் ஊருக்கே திரும்பி விடலாம்" என்றான்.

மரங்களில் தொங்கவிடப்பட்டிருந்த கள்ளர், மறுநாள் உதயம் வரையும் அப்படியே தபசில் இருந்தார்கள். காலையில் அவ்வழி சென்ற பிரயாணிகளால் விடுவிக்கப்பட்டபோது, தாங்கள் வழிப்போக்கரென்றும், முந்திய நாளிரவில் சில கள்ளர் தங்களைப்பிடித்து இம்சித்துத் தங்கள் பொருட்களைக் கொள்ளையிட்டதுமன்றி, மரங்களில் கட்டித் தொங்கவிட்டும் சென்றார்கள் என்றும், கல்லும் கரையும்படி கண்ணீரோடு சொன்னார்கள். அவர்களுடைய சரித்திரத்தை நம்பிய பிரயாணிகள் அவர்களுக்குத் தங்களாலான உதவி செய்து வழிவிட்டார்கள். கள்ளரும், கிடைத்தது லாபம் என்றெண்ணிக் காட்டுக்குச் சென்றார்கள்.

7. நெஞ்சொடு கிளத்தல்.

அன்றிரவு திருமங்கலத்தில் தங்கினார்கள். குலசேகரனுக்கு நித்திரை வாராதபடியால், வழியிலே நடந்த சம்பவங்களைக் குறித்துச் சிந்தனை செய்தவனாகப் படுத்திருந்தான். மனதில் பற்பல எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

"வனப்பு மிகுந்த அநேக பெண்களை நான் கண்டிருந்தும் அவர்களில் ஒருவரும் என் மனதைக் கவராதிருக்க இவளை நான் பார்த்த மாத்திரத்தில் விரும்பும்படி நேரிட்ட காரணமென்ன? அவர்களுடைய முகத்தில் காணாத எதை நான் இவளிடத்தில் கண்டேன்? எத்தனைபோர் ஆயுதபாணிகளாய் எதிர்த்து வந்த காலத்திலும் உற்சாகமடைவதேயன்றி, கலக்கம் என்பதைச் சற்றேனும் உணராத என் நெஞ்சம், இவளுடைய பார்வையால் சஞ்சலமடைந்த காரணமென்ன? இவளுடைய அபூர்வமான அழகுதான் என்னை இங்ஙனம் நலியச் செய்ததோ; அல்லது நான் காணக்கூடாததும், என் மனதிற் கெட்டாததுமான ஒரு ஆகர்ஷண சக்தி, இவளுள்ளிருந்து வெளிப்பட்டு என் சித்தத்தைக் கிரகித்ததோ, தெரியவில்லை. இவள் கன்னிகை என்னுள் கிழவி ஏக குலத்தவளாயிருந்தும், ஸ்திதியில் என்னினும் உயர்ந்தவளாகக் காணப்படுகிறாள். வழியெல்லாம் நான் அவள் பக்கத்திலேயே நடந்துவந்தும், என்னை அவள் ஒருதடவையாகிலும் ஏறிட்டுப்பார்க்கவில்லை. என்னுடன் ஒருவார்த்தை பேசவுமில்லை. ஆதலால் இவளுடைய விருப்பமானது வேறொருவனை நாடி நிற்பதாகவே அநுமானிக்க வேண்டியதாயிருக்கிறது. அப்படியாகில், இவளை நிமிஷமும் கருதுதல் தகாது. மாதா பிதாக்கள் சம்மதித்து, ஒரு பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுத்த காலத்திலும் அவ்வளின் விருப்பத்திற்கு விரோதமாய் அவளை அடைய முயற்சிப்பவன் மிருகத்திற் கொப்பானவனே என நான் எண்ணுகிறேன். அந்தஸ்திலுள்ள பேதத்தைக் கவனிக்குமிடத்து, இவளுடைய பிதா இவளை எனக்குக் கொடுக்க இசையார்கள் என்பது திண்ணம். பெண்ணும் அவள் பெற்றோரும் சம்மதிக்காதிருக்க அவளைக் கருதுதல் இராக்கத ஒழுக்கம் என்றார் முன்னோர். அது மனுஷ வர்க்கத்திற்கு அடாது. காந்தர்வமணம் என்பதும் தவறென என் பிதா சொல்லக்கேட்டிருக்கிறேன். காந்தர்வம் கிரமமே எனக்கொண்டபோதிலும், இருவரும் மனமொத்தல்லது அது நிகழ்வ தெங்ஙனம்? ஒருகால் இவளும் இவள் பிதாவும் உடன் பட்டாலும், என் தந்தையும் தாயும் சம்மதித்தாலன்றி இவளைக்கொள்ளுதல் ஒருபோதும் கூடாது. என்

விவாகத்தைக் குறித்து என் அன்னை தெளிவாய்ச் சொல்லியிருந்தும், வழியிலே கண்ட ஒரு பெண்ணை நான் என் மனைவியாக நிச்சயித்துக்கொண்டு, அதன் பின் பெற்றோரின் அனுமதியைத் தேடுவதென்றால், அது கிரமமாகாது. அதனால் இந்த நினைவை ஒழிக்கவே தகுதி" என்றெண்ணினான்.

என்ன எண்ணினும் அதனாலென்ன? நிமிஷம் தவறாமல் அவளைக் குறித்த நினைவுகள் மீண்டும் மீண்டும் வந்து உபத்திரவிப்பதைத் தவிர்க்க மார்க்கம் காணவில்லை. வெகு நேரம் வரையும் உருண்டு புரண்டு கிடந்து, விடியற் சாமத்தில் அயர்ந்து தூங்கினான். தூங்கினுமென்ன? "சர்வம் சக்திமயம் ஜகத்" என்றவாறு, சொப்பனமெல்லாம் அவளைக் குறித்தே நிகழ்வதாயிற்று. பொன்னூரிலிருப்பது போலவும், தன் தாயார் இந்தப் பெண்ணைக் கையால் பிடித்துக்கொண்டுவந்து தன்னிடம் ஒப்புவித்து, "இவள் மனம் நோகாதபடி காப்பாற்று" என்று சொன்னதுபோலவும், ஒரு முனிவர் வந்து தன்னையும் அவளையும் சேர்த்து ஆசிர்வதித்தது போலவுமாக, இவைபோன்ற பல கனவுகளைக் கண்டான்.

அதிகாலையில் எழுந்து, முன்னிரவில் நடந்தவற்றையெல்லாம் நினைத்து, தனக்குள் தானே நகைத்துக்கொண்டு "என் புத்தியானது ஒரு பெண்ணைக் கண்டவுடனே சபலமடையக்கூடும் என்றெண்ண, எனக்கே வெட்கமாயிருக்கிறது. இதை யாராகிலும் கேள்விப்பட்டால் என்னை பரிகசிப்பார்கள். இதெல்லாம் அந்தச் சந்திர ஒளியின் மாயமாகவே தோன்றுகிறது. நான் எண்ணியபடி அப்பெண் அவ்வளவு அபூர்வ சுந்தரவதியாயிருப்பது கூடியதல்ல. அவள் ஊர்வசியைப் போலிருந்தாலும் கூட இனி அவளை நினைப்பதுமில்லை, எட்டிப் பார்ப்பது மில்லை" என உறுதியாய்த் தீர்மானித்தான்.

குலசேகரன் இங்ஙனமிருக்க, அங்கு கல்யாணி எப்படியிருந்தாள் என விசாரிப்பது அவசியம் தானே? கள்ளரா

ளுண்டான கலவரம் நீங்கி சிவிகையில் உட்கார்ந்த கல்யாணியின் உள்ளம் பெருங்காற்றில் அகப்பட்ட தோணி போல தத்தளித்தது.

“கால் நாழிகை நேரத்திற்கு முன் சிவிகை விட்டு ஓடிய கல்யாணிதானா நான்? பேராபத்திலிருந்து தப்பிய இந்த நேரத்தில், என் மனம் அவ்வாபத்தின்மேல் செல்லாமல் வேறே ஒரு வழியில் நடப்பது என்ன விபரீதம்? கள்ளர் வந்து செய்த வற்றையும், நான் செய்ததையும் சிவிகையாரின் மோசத்தையும் எண்ணாமல், என் சிந்தனை சுற்றிச்சுற்றி அவருடைய உருவத்தின் மேலேயே சென்று லயிப்பதின் காரணமென்ன? அவர் செய்த நன்மையை நினைத்தலாகிய நன்றியறிவன்று இது. நான் இம்மட்டும் அறியாத ஒரு புதிய உணர்வு என்னில் உற்பவித்திருக்கிறது. யாதொரு புருஷனைக் கண்டும் உண்டாகாத ஒருவித குதுகலம் இவரைக் கண்டவுடனே என்மனதில் ஜெனித்து விட்டது. அவர் என்னைப் பார்க்கவேண்டுமென்றும், என்னருகிலிருக்க வேண்டுமென்றும் வாஞ்சையுண்டாகிறது. அவருடைய பிரசன்னம் என்னைப் பரவசப்படுத்துகிறது. அவரைப் பற்றிய பயமும், அவரிடத்துண்டாகும் அன்பும் ஒன்று சேர்ந்து என் இருதயத்தில் கூத்தாடுகின்றன. இவ்வுணர்ச்சி கற்புக்கு விரோதமென்றே காணப்படினும் இது தானாகவே உண்டாகி என் சித்தத்தைக் கீழடக்குவதாயிருப்பதால் இதை எவ்விதம் தொலைக்கலாமென்று தெரியவில்லை. தந்தையின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும் நான் சுயேச்சையாக ஒரு புருஷனை அடையக் கூடிய ஸ்திதியிலில்லை. என் தாய் இறக்கு முன், என் பிதாவின் சகோதரி புத்திரருக்கு என்னை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி மரித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். என் தகப்பனருக்கு அந்தச் சம்பந்தம் அத்தனை விருப்பமில்லையென்றும் அறிவேன். வேறே யாருக்கு என்னைக் கொடுக்க அவர் கருதியிருக்கிறாரோ தெரியவில்லை. என் அத்தையாருடைய புத்திரர் மகா துஷ்டர் என்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். என் தாயின் விருப்பப்படி என்னை அவ

ருக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால், என் வாழ்நாள் எப்படியிருக்குமோ என வருந்திக்கொண்டிருந்தேன். இப்படியிருக்க, இப்போது இவரைக்காணும்படி நேர்ந்துவிட்டது. இவரைக் கண்டபின் வேறொரு புருஷனை எண்ணுவது சாத்தியமாகத் தெரியவில்லை. இவருடைய ரூபலக்ஷணங்கள் வருணிக்கக் கூடாதவையாயிருக்கின்றன. பராக்கிரமமோ, புராணேதிகாசங்களில் சொல்லப்பட்டிருப்பதை ஒத்திருக்கின்றதேயன்றி, கேவலம் தற்கால உலகில் காணப்படுவதைப்போ லிருக்கவில்லை. அவற்றோடு, பெருந்தகைமையும் கூடிப் பிரகாசிக்கின்றது. முகத்தில் தோன்றும் இடைவிடாத ஆனந்தத்தையும், தன் உயிரைத் திரணமாகப் பாவிக்கும் தைரியத்தையும் கவனிக்கும்போது இவருக்கு இன்னமும் விவாகம் ஆகவில்லையென்றும், இவருடைய நாட்டம் ஒரு ஸ்திரீயைப்பற்றி நிற்கவில்லையென்றும் எண்ணக்கூடியதாயிருக்கிறது. என்னைப் பார்க்குந்தோறும் இவரது முகத்திலும் கண்களிலும் உண்டாகிற மாறுதல்களை நோக்கில், இவர் என்பால் அத்தியந்த காதலுடையவரென்று விளங்குகிறது. இச்சமயத்தில் இவர் செய்த பேருபகாரம் ஒன்றைக்காரணமாகக் கொண்டே நான் இவரை மணத்தற்கு நியாயம் இருக்கிறது. பூர்வத்தில் என் குலப்பெண்கள் சுயம்வர முறைமையாகப் புருஷனைத் தெரிந்துகொண்டதாகப் படித்திருக்கிறேன். ஆனால் அதுவோ முற்காலம், அவ்வித வழக்கம் இக்காலத்தில் இல்லை. நானாக என்மனதின் எண்ணங்களைக் குறித்து வெளியே சொல்லுவதும் ஒழுக்கமல்ல. இவர் தம்மைப்பற்றிய விவரங்களைச் சொல்ல மறுப்பதில் ஏதாவது ஒரு இரகசியம் இருக்கவேண்டும். அந்த இரகசியத்தின் காரணமாக, இவர் என்னை மணக்கச் சம்மதிப்பாரென்பதும் சந்தேகமே. இவரை அடைவதற்கு என்ன வழி செய்யலாம்? இவரை அடையாவிடில் என் வாழ்க்கை என்னாகும்? இவரைக் கண்டதும் இவ்வித ஆசை கொண்டதும் தெய்வச் செயலோ, சோதனைதானோ அறிகிலேன். மகேஸ்வரி! அன்னையை இழந்த எனக்கு நீயே தாய். உன்னிடமன்றி வேறுயாரிடம் சென்று என் முறைப்பாட்டைச் சொல்லுவேன்? என்னை வருந்தவிடாதே" என்று சிந்தனை செய்தாள்.

அன்றிரவில் நித்திரை கிட்டாததாயிற்று. காதலாலடைந்த துன்பத்தாலும், மனதிலுண்டான மாறுதல்களினாலும் அவளுடைய உடல் வெப்பமுற்றபடியால் ஜ்வரமடைந்தவளைப்போல நடுங்கினாள். கிழவியும் பணிப்பெண்ணும் பல பக்குவங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். இவ்வாறு அவ்விரவு இன்பமும் துன்பமும் கலந்ததாகக் கழிந்தது.

முற்றும் துறந்த முனிவனைப்போல, இனி அப்பெண்ணை நினைப்பதேயில்லையென்று நிர்மானித்திருந்த குலசேகரனிடம் கிழவி வந்து, இரவில் தன் பேர்த்தி காய்ச்சலால் வருந்தியதைத் தெரிவித்தாள். நோய்ப்பட்டாள் என்றதைக்கேட்டவும், சற்று முன் செய்திருந்த கொடிய நிர்மானம் தடுமாற ஆரம்பித்தது. பிரேமையின் மேலீட்டால் வருந்தி, அவளுக்குற்ற நோயின் காரணம், தன்மை, தற்சமயமிருக்கும் ஸ்திதி, செய்யப்பட்ட பக்குவங்கள் முதலியவற்றைக் கருத்தோடு வினவினான். "பாவம்! வழியிலே வியாதிப்பட்டு விட்டாள். மதுரைக்குப்போனபின் நாம் அவளைக் காண்பது துர்லபம். ஆகையால் ஒருமுறை எட்டிப்பார்ப்பதில் தோஷமில்லை" என்றெண்ணி, சிவிகைகள் புறப்பட்டவுடனே சமீபித்து உள்ளே சாய்ந்துபடுத்திருந்த கல்யாணியைக்கண்டான். சிவந்தமேனியும், சித்திரம் போன்ற உருவமும் அளவுபிசகாத அழகிய உறுப்புக்களும், சுவாசனை கமழும் மெல்லிய உடலும் அவன்கண்முன் தோன்றியவுடனே, சற்று முன் செய்திருந்த நிர்மானம் போன வழி தெரியாமல் பறந்து விட்டது. முந்திய நாள் இரவில் தான் கண்டு மயங்கிய அவ்வஞ்சி பகலிலும் அவ்வாறே துலங்கக் கண்டு பிரமித்தான். அவனைப் பார்த்து எழுந்துட்கார்ந்த அவளுடைய பரபரப்பு, அவளது அங்கங்களுக்கு ஓர் விசேஷ அழகு செய்தது. இரவிலுண்டான நோயால் வெளுத்திருந்த முகமானது அவனுடைய தரிசனத்தால் மலர்ந்து சிவந்தது. காளையரின் மனதை ஊடுருத்துப் பாயும் கடைக்கண் பார்வையால் அவனுடைய உள்ளத்தை உருவக் குத்தினாள். புருஷருடைய புத்தியை அழிபச்செய்யும் புன்சிரிப்பால் அவன் சித்தத்தைத் தாக்கினாள். எளி

னும் வாய்திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. குலசேகரன் சில உபசார வசனங்களை மொழிந்துவிட்டுச் சிவிகையின் பக்கத்திலேயே நடந்து சென்றான். பலவித எண்ணங்களால் அவன் மனம் அலைகழிப்பட்டுக் கொண்டிருந்தது. அவனுடைய உள்ளத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த நினைவுகளைக் கிரகிக்கும்படி முயன்று கொண்டிருந்தாள் பேசாமடந்தைபோல் தோன்றிய அப்பெண்ணாள்.

அன்று மத்தியானத்தில், திருப்பரங்குன்றம் சேர்ந்து தாமதித்தார்கள். குலசேகரன் மறுபடியும் தான் நடந்துகொண்ட விதத்தைக் குறித்து வருந்த ஆரம்பித்தான். "இவளருகில் நின்றால் நாம் கெடுவது தவறாது" என்று எண்ணி, கல்யாணியின் நினைவை மாற்றும் பொருட்டு அவ்விடம் விட்டு நீங்கி, குன்றத்தின் மேலேறி, அதின் சிகரத்தை யடைந்தான். உன்னதமான அச்சிகரத்தின் மேல் நின்று வடதிசையை நோக்கி, தான் அநேக நாளாய்ப் பார்க்க ஆவல் கொண்டிருந்த திரு ஆலவாயைக் கண்டான். அக்காட்சியானது அவனுடைய எண்ணங்களைப் பூர்வகாலத்திற்குக் கொண்டு சென்றது. சாற்றுதற்கரிய திருவிளையாடல்கள் நடந்ததும், போற்றுதற்கரிய சங்கப்புலவர்களிருந்து தமிழாராய்ந்ததும், குலசேகர பாண்டியன் முதலாக வந்த அநேக பாண்டியர் மேன்மையாய் அரசாண்டதுமான பழைய மகிமைகளைச் சிந்தித்தான். சூரிய ஒளியில் பொன்மயமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்த மாடகூட கோபுரங்களையும், விஸ்தாரமான தெண்ணீர்த் தடாகங்களையும், கண்ணையும் மனதையும் குளிரச் செய்யும் நந்தவனங்களையும், இருண்ட மேகங்களுக்கு மத்தியில் தோன்றும் மின்னற்கொடிபோல, இருமருங்கிலும் அடர்ந்து செழித்த வனங்களுக்கூடாகச் சென்று பிரகாசித்த வைகையையும், உயர்ந்த கோட்டைமதில்களையும், தாழ்ந்து விரிந்த அகழிகளையும், ஆகாசத்தில் பறக்கும் கொடிகளையும், மற்றுமுள்ள விநோதங்களையும் கண்டு ஆச்சரிய பரவசனானான். வெகு நேரமாக இவைகளைப்பார்த்து நின்று பகவானைத் துதிசெய்து திரும்புகையில், மறுபடியும் கல்யாணியின் நினைவு மனதில் தோன்ற, அதை மறுத்து, "ஆகா! பெ

வ்ளுரைசை மகா பொல்லாதது. அதை வென்றவனே வல்லவன். நேற்றை யிரவிலிருந்து நான் வெகு மதியீனனாய் நடந்து விட்டேன். மதுரை சமீபித்து விட்டது. ஆகையால் தப்பினேன். இனி இவளை நினைப்பதேயில்லை'' என மறுபடியும் உறுதி செய்து கொண்டு இறங்கி வந்தான்.

இவன் குன்றிற்கு சென்ற வேளையில் கல்யாணி தன் பணிப்பெண்ணை அழைத்து, நீலன் மூலமாகக் குலசேகரனைப்பற்றிய விவரங்களை அறிந்து வரும்படி சொன்னாள். தன்னைப்பற்றிய விவரங்களை ஒருவருக்கும் தெரிவிக்கக் கூடாதென குலசேகரன் கட்டளையிட்டிருந்தபடியால், நீலன் விஜாரிப்போரெல்லாருக்கும், தன் மனம் போலவும் சமையம் போலவும் பதில் சொல்லுவான். வள்ளிவந்து மெள்ள மெள்ள இவனிடத்தில் ஊர்விசேஷம் கேட்க ஆரம்பித்தவுடனே அவளுடைய நோக்கத்தை அறிந்து கொண்டு, தன் எஜமானர் வேணாட்டு அரசருடைய புத்திரர் என்றும், தான் அத்தேசத்துச் சேனபதியுடைய புத்திரனென்றும், இருவரும் மறைவாக தேசயாத்திரை செய்வதாகவும், வெகுவகைதொகையோடு ஒரு கதையைச்சொல்லி, தான் சொன்னதை ஒருவருக்கும் வெளியிடாமல் மெத்த இரகசியமாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்தான். அவன் சொன்னவற்றை நிஜமென்று நம்பிய அப்பணிப்பெண், உடனே சென்று தன் எஜமாட்டியிடம் அதைத் தெரிவித்தாள். இந்தக்கதையை கேட்டுக் கல்யாணி சிரித்து, "வள்ளி! உன்னைப்போல் புத்திசாலி எங்குமே கிடையாது! வேணாட்டார் பேசுவது மாளுட்டுத் தமிழோ? தளகர்த்தர் புத்திரர் தலையில் கொள்ளுவது சமையல் பாத்திரம்தானே? உன் தலையிலுள்ள மூளை ஒரு பக்கம் வரண்டுபோனது போலிருக்கிறது'' என்றாள். வள்ளி வெட்கப்பட்டு, நீலனைக்கண்டு வைதாள். நீலன் நகைத்தானேயன்றி உண்மையைத் தெரிவிக்கவில்லை.

அன்று சாயங்காலத்தில், மேலைக் கோட்டைவாயில் வழியாக மதுரை மாநகரத்தில் பிரவேசித்தார்கள். பெரியவள் எவ்வளவு வருந்திக் கேட்டும் குலசேகரன் அவளுடைய

வீட்டுக்குப் போகச் சம்மதிக்காமல், சிலநாட் சென்றபின் வந்து காண்பதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான். போகையில் கல்யாணியின் கண்ணுக்கு அகப்படாத வண்ணம் மறுபக்கம் திரும்பிக்கொண்டே வார்த்தையாடிச் சென்றான். தடுத்தொன்றும் சொல்ல ஏலாத கல்யாணி, இனி இவரைக் காண்பதெப்போதோ என்ற சிந்தனை மேற்கொண்டவளாக வீடு சேர்ந்தாள்.

வழியில் நடந்தவற்றைக் கேள்விப்பட்ட கீர்த்திவர்மர், குலசேகரனைக் கண்டு பிடிக்கக்கருதி, ஏவலாளரைப் பட்டணமெங்கும் அனுப்பித்தேடியும், அந்த மகா நகரத்தில் அவனைக் காண்பது கூடாததாயிற்று. அவன் மதுரை வழியாக வேறெங்காவது போயிருக்கலாம் என்றெண்ணி அப்புறம் தேடாமல் இருந்து விட்டார்கள். கல்யாணியோ, வருவேனென்று சொல்லிப்போனவர் என்று வருவாரோ என ஒவ்வொரு நாளும் காத்துக் காத்து, பார்த்துப் பார்த்திருந்தாள். அவனுடைய உருவம் அவள் நெஞ்சை விட்டு நிமிஷமேனும் அகலாதிருந்தது. நாட்செல்லச் செல்ல அவளுடைய முகத்தில் ஒருவித துக்கம் குடிகொள்ள ஆரம்பித்தது. உடலும் மெலிவுற்றது. காரணத்தை அறியாமல் பாட்டியார் பல மருந்துகளைச் செய்து கொடுத்தாள். தன் வைத்தியத்தில் குணம் காணாதபடியால், பட்டணத்துச் சாக்கடை நாற்றம் குழந்தைக்குப் பிடிக்கவில்லை என்று தீர்த்தாள்.

இவர்களை விட்டுச்சென்ற பொன்னாரார் இருவரும் பலவிடத்திலும் சுற்றித் திரிந்துவிட்டு, தெற்குக்கோட்டை வாயிலுக்குச் சமீபத்திலிருந்த ஒரு பேட்டையை அடைந்து. அவ்விடத்தில் தங்குவதற்கு ஒழுங்கு செய்தார்கள். பேட்டையில் சாப்பாட்டுக்கடை வைத்திருந்த நந்தி என்பவன், அவர்களைக்காணவும், யாரோ தென்தேசத்துத் தனவந்தர் வந்திருப்பதாக எண்ணிக்கொண்டு, ஒரு அறையைச் சித்தம் செய்து கொடுத்து, அவர்களுக்கு ஆகவேண்டிய எல்லாவற்றையும் தானே செய்வதாக ஒப்புக்கொண்டான். தூர இடங்களிலிருந்து வரும் பிரயாணிகளிடம்

இச்சகம் பேசி ஏமாற்றிப் பணம் பறிப்பது இவனுடைய வழக்கம். அப்படியே இவர்களையும் ஏமாற்றலாம் என்று எண்ணி வெகு ஆசாரமாய் நடித்தான். நந்தியுடைய ரூப விசேஷம் மிக அபூர்வமானது. மூன்று முழ உயரமும் ஆறுமுழச் சுற்றளவுமுள்ளவனாயிருப்பான். நிறமோ, முற்றிய கருவேலமரத்தின் ஒளியோடுகூடிப் பிரகாசிக்கும். கால்களிரண்டும் வில்லாகிருதியாய் வளைந்து அவனுடைய நடைக்கு அழகு செய்யும். வராக மூர்த்தியின் லக்ஷணம் திகழும் முகத்திலும், கறுக்கற் செக்கை நிகர்த்த உடலிலும், பட்டை பட்டையாய் விபூதியணிந்திருப்பான். பஞ்சாக்ஷரம் எப்போதும் அவன் வாயிலிருக்கும். இப்புண்ணியமூர்த்தியின் சம்ரக்ஷணைக்குள் அடைக்கலம் புகுந்தனர் பொன்னாராரிருவரும்.

கல்யாணியை விட்டுப் பிரிந்தது குலசேகரனுக்கு ஒரு புறம் சந்தோஷமாகவும் ஒரு புறம் வருத்தமாகவுமிருந்தது. அவளுடைய நினைவைமாற்றவோ கூடவில்லை. அவளுடைய ரூபலாவண்யங்களையும், கள்ளர் வந்த காலத்தில் அவள் காண்பித்த தைரியத்தையும் அடிக்கடி நினைந்து வியப்படைந்தான். "இவள் அபூர்வமான பெண். இவளை அடைபவன் பாக்கியசாலியே. நான் இவளை விரும்புவதற்கு அநுகூலமான நிலைமையில் இல்லை. இவளருகில் சென்றால், மதியை இழந்து ஒருகால் மூடத்தனமான செய்கையைச் செய்தாலும் செய்துவிடுவேன். ஆகையால் இவளைக் காணாதிருந்து விடுவதே சரி. மதுரையை விட்டுப்போகிற தினத்தில் அவர்கள் வீட்டுக்குப்போய், கிழவியை எட்டிப் பார்த்துவிட்டுப் போய்விட்டால் நம்முடைய சொல்லும் நிறைவேறிவிடும், ஒரு கண்டம் தப்பினேனும். வேறு யாராகிலும் ஒருத்தியைக் கண்டு இப்படி மயங்கிவிடாதபடி இனி அதிக விழிப்பாயிருந்து கொள்ளவேண்டும்" என்று சொல்லிக் கொண்டான்.

---

8. மதுரை.

மதுரை மாநகரமானது மகா விஸ்தாரமாய், கோட்டைக்கு வெளியில் வெகு தூரம் பரவி, அநேக நாழிகை வழிச் சுற்றளவுள்ளதாயிருந்தது. விசாலமான அரண்மனைகளும் வகை வகையான சேனுவீரர் வசிக்கும் வீடுகளும், படைவீரர் யுத்தம் பயிலும் சாலைகளும், குதிரைகளையும் யானைகளையும் பழக்குமிடங்களும், கல்வி ஸ்தாபனங்களும், தர்மசாலைகளும், பெரிய கோவில்களும், ஆயிரக்கணக்கான கடைகளும், அநேக பேட்டைகளும், சங்கங்களும் உள்ளதாய், எண்ணிறந்த ஜன சமூகத்தார் நிறைந்து ததும்பிய அப்பட்டணத்திற்கு இணையான பழம்பதிகள் அக்கால உலகில் வெகு சிலவேயிருந்தன. கறுப்புச் சிவப்பு மஞ்சள் வெள்ளை என்ற பிரதான நிறங்களுக்குட்பட்ட பலவித வர்ணங்களைக் கொண்ட நானுதேசத்தவரையும் அங்கு காணலாம். இத்தனை பாஷைகள்தான் அவ்விடத்தில் பேசப்பட்டன என்று நிச்சயம் சொல்ல யாருக்கும் கூடியதன்று. சர்வலோகத்தின் வியாபாரப் பொருட்களையும் மதுரைக் கடை வீதிகளில் காணலாம்.

பட்டணத்தின் பல விசேஷங்களையும் பார்ப்பதில் அத்தியந்த பிரியமுள்ளவனுயிருந்த குலசேகரனுக்கு, நாட்கள் வெகு ஆனந்தமாகவே கழிந்தன. யுத்த அப்பியாசம் செய்யும் சாலைகளுக்கு அடிக்கடி சென்று கவனிப்பான். ஆயுதவித்தை பயிலும் கூடங்களுக்குப் போய்வருவது அவனுக்கு வெகு குதூகலமாயிருக்கும். பண்டிதர் உட்கார்ந்து நூலாராய்ச்சி செய்யும் பட்டிமண்டபங்களுக்குச் சென்று சிலகாலம் போக்குவான். யாதொருவரிடமும் வீண்வார்த்தைபாடாமலும், தானே கிரகித்துக் கொள்ளக் கூடிய விஷயங்களைக் குறித்து மற்றவர்களிடம் வினவாமலும், வாதிடாமலும், சச்சரவுகட்குட் பிரவேசிக்காமலும் வெகு விவேகமாகக் காலத்தைப் போக்கிவந்தான். அவன் மதுரையிலிருந்த மூன்று மாதங்களுக்குள்ளாக அவனுடைய அறிவு வெகுவாய் விருத்தியடைந்தது. யாதொரு

தொழிலையும் அவன் தெரிந்துகொள்ளவில்லை. ஆயுதவித்தையிலேயே அவன் விருப்பம் சென்றது. வாள்ப்பயிர்ச்சியில் தனக்குத் தகுந்த பாண்டித்தியமில்லையென்றறிந்து ஒரு கீர்த்திபெற்ற வித்துவானிடம் அதைக் கற்றுக்கொண்டுவந்தான். வியாபார முறைகளையும், பல தொழில்களையும் கவனித்தான். சுகானுபவத்தைப் பெறுதலொன்றையேயாளுளின் நோக்கமாகக்கொண்டு அதை அடைவதற்கு இன்றியமையாத சாதனமாகிய பணத்தைச் சேகரிப்பதிலேயே பட்டணவாசிகளில் பெரும்பாலோர் தம் கருத்தை ஊன்றி நின்றதைக் கண்டான். தந்திரமும் இச்சகவசனிப்பும் சாதாரணமாயிருக்கக் கண்டான். வேதாதி நூல்களை உணர்ந்த பண்டிதர் முதலாய் மாயை வலைப்பட்டுப் பண ஆசையில் சிக்கிக்கிடப்பதைக் கண்டான். தங்கள் முன்னோர் சேகரித்துவைத்த ஆஸ்தியை அழிப்பதற்குப் பட்டணவாசமே அநுகூலமான இடம் என அறிந்த சிலர், கிராமவாழ்க்கையை விடுத்து, மதுரையில் பெரிய மாளிகைகளைக் கட்டிக் கொண்டு வசித்து, சுகபோகத்தை அநுபவித்து வருவதையும் கண்டான். சன்மார்க்கமும், நல்லொழுக்கமும், பரஸ்பர அன்பும் அவ்விடத்தில் கிடைப்பது அருமை என்று அறிந்தான். மனுஷவர்க்கத்தைக் கவனிப்பதே எல்லாவற்றிலும் மேலான கல்வி என்று தெரிந்துகொண்டான்.

நாள் செல்லச் செல்ல மதுரை தேக ஆரோக்கியத்திற்கு அநுகூலமான இடமல்ல என்று அவனுக்குப் புலப்பட்டது. பணம் சம்பாதிப்பதற்கும், அறிவை விருத்தி செய்வதற்குமே பட்டணவாசம் பிரயோஜனமானது என்று முடிவுக்கு வந்தான். பொன்னூரையும், அதின் பரிசுத்தமான ஆகாயத்தையும், அதின் அருகிலோடிய பொருநையாற்றின் தெளிந்த தண்ணீரையும், அதின் கரையிலுள்ள மாசற்ற மணலையும், கனிதரும் தருக்கள் நிரம்பிய சோலைகளையும், கபடற்ற மனத்தினராகிய அக்கிராமவாசிகளின் சிநேகத்தையும், அவ்விடத்தார் அநுபவித்த சுயாதீனத்தையும் அவன் மனம் நாட ஆரம்பித்தது.

இவனைக்கவனித்த பலர் இவனோடு சக்கியம் செய்யக் கருதியும் அவர்களுடைய விருப்பம் நிறைவேறவில்லை, சிலர் அறிமுகமானாலும் அவர்களோடு நெருங்கிய சிநேகம் செய்ய அவன் விரும்பவில்லை.

பலவிதச் சிறப்பு வாய்ந்த மதுராபுரியானது கணிகையருடைய தொகையிலும் சிறப்புற்று விளங்கிற்று. மரத்திலேயே உறைந்து, அதின் இலைகளையும் பூக்களையும் தின்று நாசம் செய்யும் பொன் வண்டுகளைப்போல, சிங்காரமான அப்பழம்பதியைக் கெடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட பல்லாயிரம் பாத்தையர் அங்கு வசித்தனர். கோவில்களிலும், தெருக்களிலும் அவர்கள் காணப்படாத இடமில்லை. அவர்களிலநேகர் பெரிய மாளிகைகளில் குடியிருந்து அளவில்லாத சுகபோகத்தை அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். இந்த விஷப்பூச்சிகளால் தீண்டப்படாத புருஷர் மிக அபூர்வமே.

மதுரை மாநகரைச் சிறப்பித் தழித்துக்கொண்டிருந்த வேசிகளுள், லீலாம்பாள் என்பவளை இங்கு விசேஷித்துக் கூறநேரிட்டது அவளுடைய தவப்பயன்தானோ மற்றெதோ அறியோம். பட்டணத்திலுள்ள பல தாசிகளின் கண்ணடிப்புக்கும், புன்னகைக்கும் தப்பிய குலசேகரன், லீலாம்பாளுடைய கிருபா நோக்கத்திற்கிலக்கானதற்குக் காரணம் சொல்ல யாராலாகும்? இச்சாசவதிக்கு வயது பதினெட்டிருக்கலாம். பன்னிரண்டாம் பிராயத்திலேயே தன் தொழிலை ஆரம்பித்த இப்புண்ணியவதி, ஆறு வருடங்களுக்குள்ளாகவே இந்த பிரபல வியாபாரிகளுடைய தலைகளைத் தடவி, மூளையைச் சாப்பிட்டுவிட்டு, வெறும் ஓட்டோடு மதுரையை விட்டோட்டியவள். அது பற்றாதென்றுகண்டு, வேறநேகருடைய இரத்தத்தைக் குடித்துத் தாகசாந்தி செய்திருந்தாள். இவ்வாறு ஆறு வருஷம் விடாமுயற்சியாய்ச் செய்தவேலையை விட்டு, சிலகாலமாக இளைப்பாறிக் கொண்டிருந்தாள். பெரிய மாளிகையும், பல ஏவலாட்களும், வேண்டிய பணமும் உடைய இவளுக்குக் குறையாயிருந்தது தன் பொருளையும், தனக்குண்டா

யிருந்த ரோகங்களையும் கூட இருந்து அனுபவிக்கக்கூடிய கண்ணுக்கினிய ஒரு கண்ணாளனே.

இங்ஙனம் இப்பிடாரி ஒரு பலியைத்தேடித் தெருவில் போவோர் வருவோரெல்லாரையும் கவனித்துப் பார்த்துக் கொண்டுவரும் காலத்தில், நம் கதாநாயகன் அத்தெருவழி போவதைக்கண்டாள். காணவும் அவனைக் கூவி அழைத்தாள். அவன் கவனிக்காமல் கடந்து செல்வதைப்பார்த்து, "இவன் இவ்விடத்தானல்லன். இந்தப்பட்டணத்தில் நான் இனமறியாத புருஷன் எங்கேயிருக்கிறான்? என் வீட்டண்டை வரவும் என் முகத்தைத்தேடாத ஆண்பிள்ளை மதுரையில் இல்லவேயில்லை. இவன் அயலூரானாயிருப்பதால் இவ்வழி திரும்பாமலே போய்விடக்கூடும். உடனே இவனருகில் சென்று, தூரத்தில் நாம் கண்டு அங்கீகரித்த ரூப விசேடங்கள் உண்மையாக இவனிடம் அமைந்துள்ளனவா என அறியவேண்டியதவசரம்" என்று எண்ணி அவன் போனதிசையைப் பின்பற்றிச் சென்றாள்.

முன்னே போன குலசேகரன், மீனாக்ஷி சுந்தரேசர் ஆலயத்திற்கெதிரில் வந்து, அங்குள்ள சிலைகளின் விசேஷங்களைக் கவனித்து, பின்வருமாறு எண்ணமிட்டான்:—இது தேவாலயம். கன்மவசப்பட்ட நரஜென்மங்கள், சிறிது நேரம் பிரபஞ்சத்தை மறந்து, மனமொழி மெய்கள் ஒருமுகப்பட நின்று, கடவுளைத் தியானிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இடம். அப்படியிருக்க, சிற்றின்ப அனுபவங்களை அறியாத பாலியரும்கூட, கண்டு கெடும்படியான வழியைப் பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கும் சிலைகளால் இக்கோபுரங்கள் நிரம்பியிருப்பதும், அவ்வித அனுபவங்களுக்கு வழிகாட்டிகளாக இதோ நாங்கள் நிற்கிறோம் என்பது போல் வேசிகள் ஒவ்வொரு வாயிலிலும் குழுமி நிற்பதும், என்ன விபரீதம்! காமக்குரோதாதிகளைக் களைந்தவர்களுக்கல்லவே கோயில். லௌகீகத்திலிருந்தும் கடவுளை மெய்ப்பக்தியோடு வழிபட விரும்புவோருக்கல்லவோ ஆலயம் வேண்டியது. இது கலிகாலத்தின் கோரணிதானோ; எக்காலத்திலும் தளிகள் இப்படித்தானிருந்தனவோ தெரிய

வில்லை, எனச் சிந்தனை செய்து, ஆலயத்திற்குட் செல்ல, விருப்பமின்றி, கடந்து வடக்கே சென்றான்.

இதற்குள்ளாக லீலாம்பாள் சமீபித்துவந்து, அவனுடைய லக்ஷணங்களை ஆராய்ந்து பார்த்துத் திருப்தியடைந்தாள். பொழுதும் போயிற்றாகையால் அவள் நெருங்கித்தன் மோகன வித்தைகளைக்காண்பிக்க வசதியாயிற்று. குலசேகரன் வைகையை அடைந்து, ஆற்றுமணல் வழியாக மெதுவாய் நடந்து போய்க்கொண்டிருந்தான். அவன் தனிமையாகப்போவதைக்கண்டு தாசி சந்தோஷித்து, அவனைக் கூவி அழைத்தாள். தன் ரூபலாவண்யங்களில் மயங்காத புருஷப்பிறவி இவ்வுலக முழுவதிலும் இல்லை என்று கர்வித்திருந்தாளாதலால், அவளுக்கு இவனை வயப்படுத்துவது ஒரு பெரிய காரியமாகத் தோன்றவில்லை.

ஸ்திரீகளை அன்பாய் நடத்தவேண்டும் என்ற தன் தந்தையின் வார்த்தையை நினைவு கூர்ந்தவனாய், குலசேகரன் இவள் கூப்பிட்டதைக் கேட்டு நின்று, என்ன வேண்டுமென வினவினான். அவள் சொன்னவை அவனுக்கு வெறுப்பாயிருந்தபடியால், அவளைப் பார்த்து "பெண்ணே! நீ ஒருயுவதி, ஒருவாலிபனோடு இந்த நேரத்தில் தனித்து வார்த்தையாடுவது கிரமமல்ல; உன் பேச்சு நல்லொழுக்கத்திற்கு விரோதமாயிருக்கிறது. போய்விடு" என்றான். அவன் சொன்னது விளையாட்டென்றெண்ணிய லீலாம்பாள், நகைத்து, அவனைத் தழுவிச் சரச மொழிகள் புகல ஆரம்பித்தாள். அதினால் மிக அருவருப்படைந்து, குலசேகரன், அவளை விலக்கிக்கொண்டு "இவள் கொஞ்சமும் நாணமில்லாதவளாயிருக்கிறாள். பூர்வத்தில் இளைய பெருமாள் சூர்ப்பநகையின் சில முக்கிய அவயவங்களை அறுத்துவிட்டதுபோல, இவளுக்கும் செய்வது நியாயமாகும். ஆனால், இது அதற்குத் தகுந்த இடமன்று. பொன்னூராயிருந்தால் இவளுக்குச் சில ரசமான மரியாதைகளை நடத்தலாம். இப்போ செய்யக்கூடியதென்ன?" என ஆலோசிக்கும்போது, சமீபத்தில், பட்டணத்துச் சாக்கடை நீர் வந்து வழியும் ஒரு குண்டம் இருப்பதைக்கண்டு,

“ இதுவே இவளுடைய ரோகத்திற்கு எற்றமருந்து. வெகு சீதளமாகவும் மகா வாசனையாகவும்மிருக்கும். இதில் ஒரு தரம் முழுகி எழுந்தவுடனே, இவளுடைய சிரசில் ஏறி நிற்கும் பித்தம் இறங்கி விடும்” என்று சந்தோஷித்து, லீலாம்பாளுடைய இருகரங்களையும் பற்றி, அவளை ஆகா சத்தில் ஒருமுறை சுற்றி, அக்குண்டத்தின் நடுவில் விழு ம்படி எறிந்தான். அதில் விழுந்து எழுந்த தாசி வெகு கஷ்டத்தோடு கரையேறி ஒரு எத்தனித்தாள். குலசேக ரன் அவளைப் பிடித்து மறுபடியும் அம்மலக் குண்டத்தில் தள்ளி, நன்றாய் ஊறும்படி. செய்தபின் இழுத்துக் கரை யில் போட்டு, சில நற்போதனைகளைச் சொல்லிவிட்டுப் போ னான்.

லீலாம்பாள் நடுராத்திரி வரையும் அவ்விடத்திலே யே கிடந்தாள். ஒருவாறு சிரமம் நீங்கினவுடனே அவள் எழுந்து மகா வெட்கமும் கோபமும் கொண்டு, “அந்த மூர்க்கனுக்கு நான் நல்ல புத்தி படிப்பிக்கிறேன்” என்று சொல்லிக்கொண்டு, தலைமறைவாய் வீட்டிற்குச் சென் றாள். காரியத்தை மறைக்க அவள் எவ்வளவாக முயன் றும், அவள் பட்ட அவஸ்தை மறுநாள் உதயத்திலேயே மதுரை முழுவதும் பரவிவிட்டது. ஆகையால் தெருவில் நடக்க வெட்கப்பட்டு, வீட்டிற்குள்ளேயே இருந்து துக் கப்பட்டாள்.

இவைகள் நடந்த சிலநாட்களுக்குப்பின், குலசேகரன் மறுபடியும் தன் வீட்டெதிரில் செல்லுவதைத் தாசி கண் டாள். காணவும் மட்டில்லாத சந்தோஷமடைந்து, ஓடிப் போய் அத்தெருவின் தலையாரியிடம் சென்று, குலசேகர னைக் காண்பித்து முறையிட்டாள். வெகுகாலமாகத் தான் கும்பிட்டுக் கூத்தாடிப் பார்த்தும், வெகுபணம் செலவு செய்தும், கிட்டுதற்கரிதாயிருந்த லீலாம்பாளின் தயவை அடைவதற்கு ஒரு சமையம் வாய்த்ததென்று கண்ட தலை யாரி, அவளைத் தன்னருகில் உட்காரச் செய்து, பல மரி யாதைகள் நடத்தி, சேவகன் ஒருவனை விளித்து, குலசேக ரனை அழைத்து வரும்படி ஆஞ்ஞாபித்தான்.

தலையாரி கூப்பிட்டானெனக் கேட்ட குலசேகரன் அரச அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்தவனாய், உடனே வந்து சேர்ந்தான். லீலாம்பாள் தன் பக்கத்திலிருக்கும் பாக்கியத்தைப் பெற்றது, இந்திர பதவியை அடைவதினும் மேலானது என மதித்துக் களித்திருந்த தலையாரி, குலசேகரனிடம் தன் அதிகாரத்தைக் காண்பிக்க விரும்பி, மரியாதையில்லாமல் வார்த்தையாடினான். தலையாரியின் மனப்பான்மையைக் கிரகித்துக் கொண்ட குலசேகரன், "இவன் நம்மைச் சிறைச் சாலைக்குக் கொண்டு போவது திண்ணம். ஆகலால் இங்கிருந்து தப்பிப்போகும் வழியைப் பார்க்க வேண்டும்" என்று தீர்மானித்து, திடீரெனப் பாய்ந்து எதிரே உட்கார்ந்திருந்த இருவரையும் ஒருவர்மேலொருவர் விழக் கீழே தள்ளி, தாசியின் சேலையைக் கொண்டே பிணைத்துக் கட்டி அப்படியே தூக்கிக்கொண்டோடி, திரளான ஜனங்கள் போய்க் கொண்டிருந்த தெருவில் எறிந்து விட்டு, கூட்டத்தில் மறைந்து போனான். இவ்வளவும் அரை நிமிஷத்திற்குள் முடிந்து போய்விட்டபடியால், வாசல் காத்து நின்ற சேவகன் முதலாய் நடந்த காரியத்தை அறிந்து கொள்ளவில்லை. தெருவில் சென்று கொண்டிருந்த ஜனங்கள் நின்று, தாசியும் தலையாரியும் நடுவீதியில் கட்டிக்கொண்டு புரளும் வேடிக்கையைப் பார்த்து நகைத்தார்கள். சேவகர் ஓடி வந்து விடுவிக்கவும், தலையாரி மகா வெட்கப்பட்டவனாய், நடந்தகாரியத்தை ஒருவருக்கும் சொல்லா திருந்துவிட்டான். லீலாம்பாளோ, வீடு விட்டு வெளிப்படாமலே யிருந்து, குலசேகரனைக் கண்டு பிடிக்கும் வழி வகைகளை ஆலோசித்துக் கொண்டிருந்தாள். குலசேகரனும், தான் மதுரையை விட்டுப் புறப்பட நாள் கிட்டிற்றென்று சொல்லிக்கொண்டு தந்தையிடம் போய்ச் சேர்ந்தான்.

அன்றைய விசேஷம் அதனோடு முடியவில்லை. நம் கதாநாயகன் பேட்டையருகில் வரவும் அங்கு நீலனுக்கும் நந்திக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்ததைக் கேட்டு, நீலனை விளித்து, "என்ன சச்சரவு?" என்று கேட்டான். அதற்கு நீலன் "எஜமான்! இந்தச் சோற்றுக் கடைக்கா

ரன் நம்முடைய சாப்பாட்டிற்காக நாளொன்றிற்கு அரைப் பொன் வரையும், பல கள்ளக் கணக்குகளைச் சொல்லி, வாங்கிக் கொண்டு வந்தான். நானும், மதுரையில் சாமான்களின் விலை கிராக்கியாயிருப்பதை அறிந்து, அவன் சொன்னபடியே கொடுத்து வந்தேன். நான் அக்கம் பக்கத்துக் கடைகளில் விஜாரித்ததில், எவ்வளவு உயர்வான சாப்பாடு போட்டாலும் கால் பொன்னுக்குமேல் வாங்கக்கூடாது என்று தெரிந்தது. ஆகையால் சில நாளாக நான் பணம் கொடுக்கவில்லை. அதற்காக இப்போது என்னோடு வாதாடுகிறுன்" என்ருன். குலசேகரன் நந்தியைப்பார்த்து "நீ என்ன சொல்லுகிருய்?" என்று கேட்க, நந்தி "நீ எனக்கு மேலதிகாரியா நியாயம் கேட்க, உடனே பணத்தைக் கீழே வைக்கிருயா இல்லையா?" என்று பெருங் கூச்சலிட்டான்.

இவ்வார்த்தை நாராசம்போல் செவியில் ஏறவும், குலசேகரன் நந்தியின் குடுமியை இடது கையால் பற்றி மேலே தூக்கிக் குலுக்கி "நீ திருடன். நீலன் பணம் கொடுக்கும் வரைக்கும் நீ கேட்கக் கூடாது. அவன் நியாயமான தொகை தருவான். நீ ஒப்புக்கொண்ட கடமையில் தவறக் கூடாது. சம்மதமா?" எனவும், நந்தி "ஐயோ! எஜமான், பணம் வேண்டாம். எஜமான் உத்தரவுப்படியே நடக்கிறேன்" என்று ஒப்புக்கொண்டான். குலசேகரன் அவனைக் கீழே விடவும், நந்தி நிற்க ஏலாமல் தடுமாறித் தரையில் விழுந்தான்; ஒருவாரமளவும் தலையசைக்க ஏலாமல் படுக்கையிலேயே கிடந்தான். அதிகாரிகளிடம் போய்த் தெரிவித்தால், தன் கள்ள நடவடிக்கைகளெல்லாம் வெளிப்பட்டுவிடும் என்று அஞ்சி, தான் பட்ட அவஸ்தையை ஒருவருக்கும் தெரிவிக்காமல், குலசேகரனுக்கு எந்த விதத்தில் தீங்கிழைக்கலாம் என்று காத்திருந்தான்.

குலசேகரனும், இனி மதுரையில் தங்குவது மோசத்துக்கிடமாகும்; வாள் வித்தையில் இன்னமும் பாக்கியாயிருக்கும் இரண்டு முறைகளையும் கற்றவுடனே ஊருக்குத் திரும்பிவிடவேண்டியதே எனத் தீர்மானித்தான்.

பட்டணத்து மாப்பிள்ளை.

பாண்டியனுடைய மெய்காவலரான இரண்டாயிரம் சேவகர் இருந்தார்கள். அவர்கள் யாவரும் தெரிந்தெடுக்கப்பட்ட வீரர், யாதொன்றிற்கும் அஞ்சாதவர்கள். பாண்டியன் மரிக்கும்காலத்தில் தாங்களும்கூட மரணமடைவதாக ஆணையிட்டுக் கொடுத்தவர்கள். அவர்களுடைய தலைவனாகிய இரணவீரன் என்பவன் மிகுந்த மூர்க்கனும் அளவில்லாத கர்வமுடையவனுமாயிருந்தான். அவனுடைய சரீரம் கறுத்துப் பருத்துப் பர்வதாகாரமாயிருக்கும். அசாதாரணமான உயரமும், உயரத்திற்கு ஒத்த பருமனும், உடலுக்குத் தகுந்த பலமும், சிவந்த கண்களும், அடர்ந்து பயங்கரமாய்த் தோன்றும் மீசைகளும், வாச்சிகள் போன்ற பெரிய பற்களும், மயிரடர்ந்த சரீரமும், கர்த்தபநாதத்தை ஒத்த சத்தமுமுடையவனாயிருந்த இரணவீரனை ஒரு ராக்ஷதனென்றே சொல்லவேண்டும். பலத்திலும் துணிகரத்திலும் ரணவீரனுக்கு இணையான ஒருவரும் பாண்டியராஜ்யத்திலில்லை. நாடெங்கும் அவன் அதிகாரம் சென்றது. அவன் செய்திருந்த அக்கிரமங்களுக்கு அளவில்லை.

இந்த மகாத்மனுக்கு, சுந்தரவர்மன் எனும் பேர் கொண்ட ஒரு புத்திரசிகாமணி இருந்தான். அவனுடைய குண ரூபங்கள் கொஞ்சம் குறைய பிதாவின் அமைப்பை ஒத்தனவாகவே இருக்கும். துஷ்டத்தனமே அவனுடைய பொழுது போக்காயிருந்தது.

ஒருநாள் இவன் கீர்த்திவர்மருடைய வீட்டிற்கு எதிராகச் செல்லும்போது, மாடியிலுள்ள புஷ்பச்செடிகளுக்கு நீர்வார்த்துக்கொண்டு நின்ற கல்யாணியைக் கண்டு மோகித்தான். அதுமுதல் ஒரே நோக்கமாக அவளை எவ்விதம் அடையலாம் என்ற விசாரம் மேலிட்டவனாய், பித்தன் போல திரிந்துகொண்டிருந்தான். அவளுடைய முகத்தைக்காண ஆவல்கொண்டு, நாழிகைக் கொருதடவை அத்தெருவழியாய்ப் போய்க்கொண்டிருந்தான். இப்படி

மூன்று நாள் பரியங்கம் அவ்வீட்டண்டை பாராக்கொடுத்துக்கொண்டிருந்தும், அப்பெண்ணினுடைய சேலையின் ஓரத்தைக்கூட காணும்படியான பாக்கியத்தைப் பெறுதபடியால், மனமுடைந்து "இந்தப் பெண்ணானவள், நான் எவ்வளவு காலம் காத்திருந்தும் வெளியேவரமாட்டாள்போல் காண்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?" எனச் சிந்தனையிலாழ்ந்தான்.

இவ்வாறு சுந்தரவர்மன் தெருமுனையில் நின்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், இவனுக்கு அறிமுகமான ஒரு மந்திரவாதி தேவாதீனமாய் அவ்வழியே வந்தான். அவனைக் காணவும், இது நமது அதிர்ஷ்டம்தான் எனச் சுந்தரவர்மன் சந்தோஷித்து, மந்திரவாதியை ஒரு சந்திற்கு அழைத்துச் சென்று, தன் உள்ளத்தின் இரகசியத்தையெல்லாம் அவனிடம் தெரிவித்தான். அப்பக்கில் குடியிருந்த எல்லாருடைய வீட்டின் வளப்பமும் அறிந்த மந்திரவாதி, கொஞ்சநேரம் கண்ணைமூடி வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு "கிழக்கே பார்த்த மாடிவீடு, முன்னும் பின்னும் தெருக்கள், சிங்காரத்தோட்டம், அரச உத்தியோகம், வேண்டிய திரவியம், எட்டுப்பேர் வேலைக்காரர், பணிப்பெண்கள் நால்வர், ஒரே மகள், நாளைக்குப் பொழுது புலர்ந்து ஜாமநேரத்திற்குள் வெளியே வரப்போகிறாள் நங்கை ஒருத்தி, அவள் மூலமாக உம்முடைய காரியம் ஜெயமடையப்போகுது. ஒருசக்கரம் ஒன்று மாத்திரம் தேவை. அதற்குப் பத்துப்பொன் செலவாகும். அதற்குமேல் நான் சொல்லவேண்டியதில்லை" என்றான். வீட்டின் அடையாளங்களை அவன் வெகு தெளிவாய்ச் சொன்னபடியால் சுந்தரவர்மனுக்கு வெகு நம்பிக்கை உண்டாகி விட்டது. பத்துப்பொன் எடுத்து மந்திரவாதியின் கையில் கொடுத்து, காரியம் ஜெயித்த பின் வேறே சன்மானம் செய்வதாகச் சொன்னான். மந்திரவாதியும் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அன்றிரவில் அவ்விடத்தில் வந்து காத்திருக்கும்படி சொல்லிச் சென்றான்.

மந்திரவாதி சொல்லியிருந்தபடியே அன்று சாயந்தரம் சுந்தரவர்மன் குறித்த இடத்திற்குச் சென்றான். மாய

வித்தைக்காரனும் அங்குவந்து, "உமக்காக இன்றெல்லாம் பெரு வேலை செய்தேன். உருச் செபித்ததில் மூச்சடங்கி கபாலம் வெடிக்கும் போலாகிவிட்டது. பலிக்கும் அர்ச்சனைக்குமாகவே நீர் கொடுத்த பொன்னெல்லாம் செலவாகிப் போயிற்று. எதோ எஜமான் பிரியம்போல கொடுக்கவேண்டும். ஜெயிக்கவில்லையானால் நீர் செய்யும் ஆக்கினைக்கு உட்படுகிறேன்" என்று சொல்லி ஐந்து பொன் பெற்றுக் கொண்டபின், ஒரு சிறிய செப்புத் தகட்டை மடியிலிருந்து எடுத்துக்கொடுத்து "நாளைக்காலையில் ஒரு பணிப்பெண் அவ்வீட்டிலிருந்து வெளியே வருவாள். அவள் கையில் இதைக் கொடுத்து நீர் நாடிய பெண்ணிடம் சேர்த்து விடும்படி சொல்லும். சக்கரத்தைக் கண்டவுடனே அப்பெண் உம்மைத் தேடிக்கொண்டு வராவிட்டால், நான் படித்தது வித்தையல்ல என்று வைத்துக்கொள்ளும்" என்று கூறிச் சென்றான். வள்ளி அன்றாடகம் காலை நேரத்தில் கடைக்குச் செல்வது மந்திரவாதிக்குத் தெரிந்தே இவ்வாறு சொன்னான். தகட்டைக் கையில் வாங்கினவுடனே காரியம் முக்கால்வாசி நிறைவேறியதாக எண்ணிச் சந்தோஷித்தான் பட்டணத்து மாப்பிள்ளை.

மறுநாள் அதிகாலையில் சுந்தரவர்மன் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு தெருவில்வந்து காத்திருந்தான். அன்றாடகம் கடைக்குச் செல்லும் வழக்கப்படி வள்ளியும் வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்தாள். அவள் வீட்டை விட்டுக் கடந்து கொஞ்சதூரம் போகவும், சுந்தரவர்மன் அவளைக்கிட்டி அவளை எவ்விடத்திலோ கண்ட ஞாபகமாயிருப்பதாகச் சொல்லி, சம்பாஷணையை ஆரம்பித்தான். பேசும் போதே ஜாடையாக ஐந்து பொன்னைத்தரையில் சிதறவிட்டான். "ஐயோ! பொன் கீழே விழுகிறது." என்று வள்ளி சொல்லவும், அவன் "அது என்ன பெரியகாரியம். நீயே எடுத்துக்கொள்" என்று அலக்ஷியமாகச்சொல்ல, வள்ளி ஆச்சரியத்தோடு பொன்னை எடுத்து முந்தியில் முடிந்தாள். அப்புறம் சுந்தரவர்மன் அவளைப்பார்த்து, "நீ மெத்த நல்லவளாகத் தெரிகிறது. உன்னால் எனக்கு ஒரு சிறிய காரியம் ஆகவேண்டியதிருக்கிறது. அதைச் செய்வாயாகில்

இன்னமும் இதோ இருக்கிற ஐந்து பொன்னையும் தருவேன் என்ருன். பொன் என்ற வார்த்தையைக் கேட்கவும் வள்ளி மகிழ்ந்து, தன்னாலாக வேண்டியதென்ன என்று கேட்டாள். சுந்தரவர்மன் காரியத்தைச் சொல்லவும், வள்ளி யாதொரு தடையும் சொல்லாமல், தகட்டை உடனே கல்யாணியிடம் சேர்த்துவிடுவதாக ஒப்புக்கொண்டு, இன்னமும் ஐந்து பொன்னும் பெற்றுக் கொண்டாள். அவ்வளவு ஏராளமான பொன்னைக்காணவும், வள்ளியுடைய மனதில் சுந்தரவர்மன் தன் எஜமானிக்குத் தகுந்த மாப்பிள்ளையே என்ற நிச்சயமுண்டாகிவிட்டது. இவ்வளவு தாராளமாகச் செலவு செய்யக்கூடிய வள்ளல், ஒரு பெரிய பிரபுவாகத் தானிருக்கவேண்டும் என்றும் தன் மூலமாக இவர் கல்யாணிக்கு மாப்பிள்ளையாகி விட்டால் தனக்கு வேண்டிய சுகமுண்டாகும் என்றும் எண்ணி ஆனந்தமடைந்தாள்.

தகட்டை வாங்கி வந்த வள்ளி, வீட்டிற்கு வரவும் சற்று கலக்கமடைந்து, நேராக அதைத்தன் எஜமானியிடம் கொடுக்கத் தைரியமில்லாதவளாய், கல்யாணிதானே அதைப்பார்க்கக் கூடிய இடத்தில் வைத்துவிட்டுச் சும்மா இருந்தாள். அச்சமையத்தில் தற்செயலாக அவ்விடத்திற்கு வந்த முதியவள் தகட்டைக் கண்டு விட்டாள். பில்லி சூனியம், வசியம், முதலான போலிவித்தைகளைப்பற்றி வெகுவாய்க் கேள்விப்பட்டிருந்த கிழவி, தகட்டைக் கண்டவுடனே அச்சமடைந்து, வள்ளியைக் கூப்பிட்டுப் பயமுறுத்தி விஜாரிக்க, நடந்த காரியமெல்லாம் வெளியாகிவிட்டது. தகட்டைக் கொடுத்தவனைக் காண்பிப்பதாகவும் ஒப்புக்கொண்டாள் வள்ளி.

செப்புச் சக்கரத்தின் மகிமையைத் தெரிந்துகொள்ள அவசரப்பட்டவனாய், அத்தெருவிலேயே உலாவிக்கொண்டிருந்த சுந்தரவர்மனை வள்ளி காணவும், ஓடி வந்து கிழவிக்கு அறிவித்தாள். கிழவி தகட்டைக் கையிலெடுத்துக் கொண்டு தெருவாயிலுக்குப் போய் நின்று, அவனை அழைத்து, அவன் யார் என இனம் விசாரித்துக்கொண்டு, தகட்டையும், வள்ளிக்கு அவன் கொடுத்த பத்துப் பொன்னை

யும் அவன் கையில் கொடுத்து, நற்குடியில் பிறந்தவர்களுக்கு அவ்விதச் செய்கை தகாதெனக்கூறி, இனி அப்படி மதியீனமாய் நடக்கவேண்டாம் என்று சொல்லி அனுப்பி விட்டான்.

தான் செய்த பிரயத்தனம் விருதாவானதைக் கண்டு சந்திரவர்மன் மிக மனம் வருந்தினான். கல்யாணியின்மேல் வைத்த மோகம் மனசில் நின்றபடியால், அவளை விவாக மூலமாகவாவது அடையவேண்டும் என்று தீர்மானித்தான். அங்ஙனமே, வீட்டிற்குச் சென்றவுடனே, தன் உத்தேசத்தைத் தன் தந்தைக்கு அறிவித்தான். ரணவீரவர்மன் தன்னுடைய புத்திரன் சொன்னதைக் கேட்டுச் சந்தோஷித்து, அன்றே தான் போய் விவாகத்தை ஒழுங்கு செய்து விடுவதாகச் சொல்லி மகனை மகிழ்வித்தான்.

தகட்டைக் குறித்த விஷயத்தைக் கேள்விப்பட்ட கீர்த்திவர்மர் அன்று சாயங்காலத்தில் தம்முடைய வீட்டில் மனவருத்தத்தோடு உட்கார்ந்திருக்கும்போது, ரணவீரன் வந்து நுழைந்தான். அவனைக்கண்டு அருவருப்படைந்த கீர்த்திவர்மர், அவசரமாய் எழுந்து, முகமன்கூறி, ஆசனமளித்து உபசரித்தார். ரணவீரன் உட்கார்ந்து, தாம்பூலம் தரித்துக்கொண்டு, குதிரை கனைப்பதுபோல ஒருகனைப்பு கனைத்துவிட்டுத் தான்வந்த காரியத்தை ஆரம்பித்தான்.

ரணவீரன்.—கீர்த்திவர்மரே! உம்முடைய வீட்டிற்கு நல்லதிர்ஷ்டம் பிறந்திருக்கிறது.

கீர்த்திவர்மர்.—மகா சந்தோஷம். அதென்ன?

ரணவீரன்.—உம்முடைய புத்திரி ஒருத்தி இருக்கிறதாகக் கேள்விப்படுகிறேன். அந்தப் பெண்ணை நம்முடைய மகன் சந்திரவர்மனுக்குக் கொள்ளலாம் என்ற விருப்பம் இருக்கிறது.

“இதென்ன துன்பம்! இந்த மிருகத்திற்கா என் பிள்ளையைக் கொடுக்கவேண்டும்” என்று மனதில் எண்ணியும், அதை உள்ளடக்கிக்கொண்டு,

கீர்த்திவர்மர்.—நீர் கேட்டது மெத்தத் திருப்திதான் ஆனால், பெண்ணை என் சகோதரிமகனுக்குக் கொடுப்பதாக முன்னமே தீர்மானமாகிவிட்டதே.

ரணவீரன்.—அது ஒரு ஆக்ஷேபனையா? நம்முடைய சுந்தரவர்மனுக்கு இணையான மாப்பிள்ளை நீர் இந்த ஜன்மம் முழுவதும் தேடினாலும் கிடைப்பானா? அவனைப்பார்த்திருக்கிறீர் அல்லவா? அவனுடைய அழகுக்கும் குணத்திற்கும் ஈடு சொல்ல முடியுமா? சிறுவனாயிருக்கிறான் என்று எண்ணாதேயும். இதுவரையிலும் இருபத்து மூன்று வைப்பாட்டிகளை வைத்துக் கழித்தவனுக்கும் அவன். என்ன காரணத்தாலோ உம்முடைய மகள் பேரில் ஒரே சிந்தனையாயிருக்கிறான். நம்மிடத்தில் வேண்டிய பொருள் இருக்கிறது. உம்முடைய சகோதரிமகன் கொடுக்கும் பரிசத்தைவிட இரட்டிப்பான பரிசம் கொடுக்கலாம். அதற்குமேல் உமக்கு என்னவேண்டும்?

கீர்த்திவர்மர்.—நீர் சொன்னதெல்லாம் எனக்குத் தெரிந்த விஷயமே. ஆனால் இந்தப்பெண் எனக்கு ஒரே பிள்ளை. இவளுடைய தாய் சாகிறபோது, என்தங்கை மகனுக்கே இவளைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இறந்தாள். நானும் சம்மதித்தேன். ஆகையால் அவ்விஷயத்தைத் திரும்ப ஆலோசிப்பதில் பிரயோஜனமில்லை. வேறு காரியமுண்டானால் சொல்லும்.

இவ்வளவில் வந்து விட்டது ஆவேசம் ரணவீரவர்மருக்கு. கண்களில் கோபப்பொறி பறக்க, மீசைகள் துடிக்க, "ஓய்! நீ ஒருமனுஷன் என்று மதித்து, நான் வந்து பெண்கேட்கிறதாவது, நீ மாட்டேனென்கிறதாவது! நாளைச் சாயங்காலத்திற்குள் நீ வழிக்கு வந்தால் சரி, அல்லாவிடில் பார்த்துக்கொள் ரணவீரனுடைய சமர்த்தை"— என்று கூறிவிட்டு, மீசையை முறுக்கி ஒரு கனைப்புக்கனைத்துக்கொண்டு எழுந்துபோய் விட்டான்.

நடந்த சம்பாஷணை முழுவதையும் கிழவியும் கல்யாணியும் அடுத்த அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்

தார்கள். ரணவீரன் போய்விட்டவுடனே கிழவி வந்து மகனை ஆற்றினாள். இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், கிழவி "அப்பா! உன் தங்கை மகனுக்குக் கல்யாணியைக் கொடுப்பதாகச் சொன்னாயே அது உறுதிதானா?" என்று கேட்டாள்

கீர்த்திவர்மன்.—அம்மா! பார்வதியும் உன் மருமகளும் இளமையிலேயே சிநேகிதிகளாயிருக்கும் காலத்தில், பெண் கொண்டு கொடுப்பதைக் குறித்து ஏதோ தீர்மானித்துக் கொண்டார்களாம். அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு உன் மருமகள் சாகும்போது சொன்னது உனக்கும் தெரியும். ஆனால் அந்தச் சம்பந்தம் எனக்கு விருப்பமில்லை. பார்வதி வீட்டு நிலைமை மெத்தத் தாழ்வாயிருக்கிறது. அவள் மகனுக்குப் பெண்ணைக்கொடுத்தால் பார்க்கிறவர்களெல்லாரும் நம்மை இகழ்வார்கள். ரணவீரனுக்குப் பதில் சொல்ல வேறு வழியில்லாததால் தான் இதைச் சொன்னேன்.

கிழவி.—அப்பா! எனக்கு எழுபத்தெட்டு வயதாகிவிட்டது. இன்னமும் இருக்கப்போகிற நாள் கொஞ்சமே. நான் போகுமுன் என் பேர்த்தியுடைய கல்யாணத்தைக் கண்ணால் பார்க்கவேண்டும் என்ற ஆசையிருக்கிறது. அதுவுமல்லாமல், நான் பார்வதியைக்கண்டு முப்பது வருஷமாகிறது. உன் விருப்பத்திற்கிணங்கி அவளுடைய வீட்டிற்குப் போவதை நிறுத்தினேன். நான் சாகுமுன் நீயும் உன் தங்கையும் முன்போல ஐக்கியமாய் இருக்கப் பார்க்கவேண்டும் என்று மெத்த ஆவலாயிருக்கிறேன். பெண்ணை நீ வேறு யாருக்காகிலும் கொடுப்பதைவிட, பார்வதி மகனுக்கே கொடுப்பது எனக்கு விருப்பம். பார்வதிவீடு தாழ்ந்து போனதினால் பெண்ணைக் கொடுக்கக்கூடாது என்ற நியாயம் உன் விஷயத்தில் செல்லாது. உன் பணமெல்லாம் கல்யாணியைத்தானே சேரும். ஆகையால் மாப்பிள்ளை வீட்டார் செல்வவான்களாயிருக்கவேண்டுமென்ற அவசரமில்லையே. பணக்காரன் வீட்டிற்குப் பிள்ளையைக் கொடுத்தால் அவளை

அருமையாய்ப் பார்க்கமாட்டார்கள். வறுமையடைந்தாலும் பார்வதி புருஷன் மதிப்போடுதான் வாழ்ந்து வருகிறார். வேண்டிய பணத்தைச் சம்பாதித்திருக்கும் நீயாகிலும் உன் தங்கையின் எளிமையைப் பார்த்து உதவி செய்தாயா? பழைய கிளை அற்றுப்போகக்கூடாது, சாவாக்கையும் தள்ளக்கூடாது.

கீர்த்திவர்மர்.—என்னிடம் ஆஸ்தியிருக்கிறது. அது முழுவதும் கல்யாணிக்குத்தான். அவளுடைய புருஷன் செல்வவானாயிருக்கவேண்டும் என்ற அவசரமில்லை என்று நீ சொல்லுவது சரிதான். நாட் செல்லச் செல்ல எனக்கும் பணத்தின்மேல் வாஞ்சை குறைந்தே வருகிறது. இவ்விடத்து நிலைமையும் திருப்தியில்லாததாயிருக்கிறது. குலசேகரபாண்டியரும் சத்தியசேன மந்திரியாரும் போனபின், உத்தியோகம் கெட்டுவிட்டது. இன்று நடந்த காரியத்தைப் பார்த்தால், இனி நாம் மதுரையில் மரியாதையோடு காலக்ஷேபம் செய்வது கூடியதல்ல என்று தெரிகிறது. ஆகையால் காரியாதிகளை ஒழுங்கு செய்து கொண்டு ஊருக்குப் போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். தெற்கே போனபின் குழந்தையுடைய கலியாணத்தைப்பற்றி யோசித்துக்கொள்ளலாம்.

கிழவி.—அப்பா! பெண்ணுக்குப் பிராயம் கடந்து போகிறது இக்காலத்தில் அநேகர் பத்துவயதாகுமுன்னமே கல்யாணம் செய்துவிடுகிறார்கள். கல்யாணி பருவமடைந்து நாலுவருஷத்திற்கு மேலாகிவிட்டது. இனிக் காலதாமதம் செய்வது சரியல்ல. வேறு யோஜனை செய்யாமல் பார்வதிமகனுக்குத்தானே ஒரே பேச்சாய் நிச்சயித்துவிடு. நானும் ஆறுதலாயிருப்பேன்.

கீர்த்திவர்மர்—அம்மா! நீ இவ்விஷயத்தில் பிடிவாதமாயிருப்பது இயல்புதான். பார்வதி மகனைப்பற்றி வேறொரு முக்கிய ஆக்ஷேபனை இருக்கிறது. அவன் மகா துஷ்டனாயிருக்கிறான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அது தெரிந்திருந்தும் அவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதே

ப்படி? நாலைந்து நல்ல இடங்களில் பெண் கேட்கிறார்கள். நான் ஒன்றும் நிச்சயிக்கவில்லை. நம்முடைய ஊருக்குச் சமீபத்திலுள்ள புத்தனேரிப் பாண்டியர் தமது மகனுக்குப் பெண் தரவேண்டும் என்று கேட்டார். அது நல்ல சம்பந்தமாகத் தெரிகிறது. அதற்கும் நான் திட்டமான பதில் சொல்லவில்லை.

கிழவி.—அப்பா! புத்தனேரிப் பாண்டியன் வெளியே தான் மினுக்காயிருக்கிறான். உள்ளே ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுமில்லை. அவ்விடத்துக் குடிகளை அவன் படுத்துகிற அவஸ்தை அதிகம். அவன் பெண்டாட்டி மகா கொடியவள். அவளிடம் நமது பிள்ளை நாலு நாள் கூட வாழமுடியாது. அவன் மகன் வெகு மூடன். எழுதவாசிக்க முதலாய்த் தெரியாதாம். அந்தச் சம்பந்தம் உதவாது.

கீர்த்திவர்மர்.—அப்படியானால் ஒரு துஷ்டனுக்கு உன் பேர்த்தியைக் கொடுப்பது உனக்குப் பிரியமோ?

கிழவி.—அப்பா! பார்வதி வயிற்றில் பிறந்த பிள்ளை போக்கிரியாயிருக்கிறான் என்று சொல்லுவதை நான் நம்பவில்லை. நம்முடைய குலத்தில் அநேகர் வாலிபத்தில் சற்று விஷமம் கொண்டவர்களாகவே இருப்பார்கள். உன் தந்தையும் அப்படித்தானிருந்தார். நீ ஒருவன் எப்படியோ தப்பிப் பிறந்தவனாயிருக்கிறாய். உன்னைப் போல பணத்தில் பற்றுள்ளவர்கள் நம் குலத்தில் அபூர்வம். பணத்தின் மேலுள்ள பற்றினால்தான் உன் மனதில் தைரியமில்லாதிருக்கிறது. சாதாரணமாக நமது வமிசத்தார் பெருஞ் செலவாளிகளாயும், மிக்கத்துணிகரமுள்ளவர்களாயுமே இருப்பது இயல்பு. இளமையில் ஒருவன் நடக்கும் நடத்தையைக் குறித்துத் திட்டமாய் விசாரிக்காமல் முடிவு கட்டக்கூடாது. எவ்வளவு கஷ்டம் வந்தகாலத்திலும் உன் மைத்துனர் பார்வதியை அருமையாகவே நடத்திவந்திருக்கிறார். அவர் மகனும் அவரைப்போல தான் இருப்பான். ஆகையால் வேறு யோசனை செய்யாதே.

கீர்த்திவர்மர்.—எல்லாக் காரியத்தையும் நாம் நேற்கே போனபின் பார்த்துக்கொள்ளலாம்.

அடுத்த அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த கல்யாணிக்கு, இவர்கள் பேசியதெல்லாம் ஊறைப்புண்ணில் ஊசிகொண்டு குத்தியதுபோலவே இருந்தது. தோன்றி மறையும் கனப்போல மறைந்துபோன குலசேகரனை நினைந்து வருந்தினாள். தன்னை அவன் காதலித்ததாகத் தான் அனுமானித்துக் கொண்டது தவறாகவே இருக்கவேண்டும் என்று எண்ணினாள். பெண்ணாகத்தான் பிறந்த ஜென்மத்தை நிந்தித்தாள். தன் விவாகத்தைப் பற்றிய விஷயத்தில் தான் ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்ததைப்பற்றித் துக்கித்தாள். வருவேனென்று சொல்லிப்போன அந்த மாயக்கள்ளர் என்னை வெறுத்து எங்கோ சென்றுவிட்டார். இவர் என்னெதிர்ப் படாதிருந்தால் நான் இப்போது இவ்வாறு வேதனையடையாதிருக்கலாமே. என்ன செய்வேன்! விதித்தது தவறாது. விவாகம் என்பது கடவுளுடைய விதியால் ஆகிறது என்று பெரியோர் சொல்லுவார்கள். அப்படியானால் நான் என்ன விரும்பியும், என்ன செய்தும், அதற்குமாறாக ஒன்றும் நடக்கப் போவதில்லை என்று விசனப்பட்டாள்.

---

10. கேட்டுத் தெளிதல்.

கீர்த்திவர்மருக்கு மதுரைக்கு மேற்கே அரைநாழிகை வழிதூரத்தில் ஒரு பெரிய தோட்டமிருந்தது. அது நாற்புறமும் வேலியடைக்கப்பட்டு வெகு ஜாக்கிரதையாய்ப் பராமரிக்கப்பட்டு வந்தது. அதில் பலஜாதியான விருக்ஷங்களும் செடி கொடிகளும் தழைத்து வளர்ந்து வெகு ரம்மியமாய் விளங்கிக் கொண்டிருந்தன. கீர்த்திவர்மருடைய குடும்பத்தார் வேளா வேளைகளில் அங்கு சென்று பொழுது போக்குவார்கள்.

இரணவீரன் வந்து போனதற்கு மறுநாள் பொழுது சாயும் வேளையில், கல்யாணி தன்பணிப்பெண்ணோடு அத்தோட்டத்திற்குச் சென்றாள்.

அதேநாளில் குலசேகரன் மதுரைக்கு மேற்கே வெகுதூரம் சென்றுவிட்டு, அந்தி நேரத்தில் களைப்போடு திரும்புகையில் அத்திசையிலிருந்த தோட்டங்களுக்கூடாக நடந்து வந்தான். மரங்களின் குளிர்ந்த நிழலும், அங்கு வீசிய சுகமான காற்றும் அவனுடைய சிரமத்தை ஆற்றி மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. அநேக தோப்புகளுக்கு மத்தியில் வெகு அழகாய் விளங்கிக்கொண்டிருந்த கீர்த்திவர்மருடைய தோட்டத்தண்டை வரவும், அதனுள் பெரிய குலைகளைத் தாங்கிக்கொண்டு சிங்காரமாய் நின்ற தென்னை மரங்களைக்கண்டு கவனித்தான். அழகிய செவ்விளநீர்க் காய்களைக் கண்டவுடனே அவனுக்கு வாயூறிற்று. பொன்னூருக்கருகில், தாமிரபருணியின் ஓரத்தில் உள்ள மனோகரமான தோப்புகளில் தானும் தன் தோழரும் உல்லாசமாய்ப் பொழுது போக்கின ஞாபகம் உண்டாயிற்று. தோட்டத்திற்குள் வேலை செய்துகொண்டு நின்ற ஒரு வேலைக்காரனைக் கூவி அழைத்து "ஒரு இளநீர் தருவாயா?" என்று கேட்டான்.

தோட்டக்காரன்.—கொடுக்க உத்தரவில்லை.

குலசேகரன்.—இந்த இடத்தில் உபசாரம் என்பதே கிடையாது போலிருக்கிறது. எங்கள் நாட்டில், யாராகிலும் பருகுவதற்காக ஒரு இளநீர் கேட்டால், தோட்டக்காரர் மறுக்கமாட்டார்கள்.

தோட்டக்காரன்.—ஐய! பட்டணம் வேறு பட்டி வேறு. இவ்விடத்தில் எல்லாம் வாய் உபசாரமேயன்றி செய்கையில் உபசாரம் காண்பது அரிது. உமக்கு வேண்டுமானால் அதோ பின்னே நிற்கிற என் நாச்சியாரைக் கேளும்.

எனவும், குலசேகரன் இந்த அழகான தோட்டத்தைச் சுற்றிப்பார்க்க இதுவேசமையம் என்றெண்ணி, வேலியைத்

தாண்டி உள்ளே பிரவேசித்தான். தோட்டத்திற்கு உடையவள் ஒரு கிழவியாகவே இருக்கக்கூடும் என்பது அவனுடைய அபிப்பிராயம்.

தூரத்திலிருந்தே இவன் சத்தத்தைக் கேட்ட கல்யாணி, "இதென்ன! கனவோ, உண்மைதானே! மறுபடியும் அக்குரலைக் கேட்கும்படி எனக்கு லபித்த பாக்கியமென்ன! விசாரத்தோடு இங்குற்ற யான், மகிழ்ச்சியோடு வீட்டுக்குத் திரும்பவேண்டுமென்பது கடவுள் சித்தமோ!" என எண்ணமிட்டபடியே விரைந்து நடந்து திடீரெனக் குலசேகரன் கண்முன் தோன்றினாள். அவனைக் காணவும் அவள் உள்ளம் பட்ட பாட்டை யாரே விவரிக்கவல்லார்! சந்தோஷமும் விசனமும் அவளுடைய முகத்தில் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

தான் சிறிதும் எதிர்பார்த்திராத இக்காட்சி தோன்றவும், குலசேகரன் ஸ்தம்பித்து விட்டான். சென்றுபோன மனநிகழ்ச்சிகளெல்லாம் திரும்பவும் ஓடிவந்தன. உள்ளே மறைந்து கிடந்த காதல் முகத்தில் ஏறிக் கண்கள் வழியாய்ப் பிரகாசிக்க, தன்னெதிரில் வந்து கொண்டிருந்த அவ்வணங்கைப் பார்த்தபடியே ஒரு நிமிஷமளவும் அசையாமல் நின்றான். மறு நிமிஷத்தில் தான் முன்னே செய்த தீர்மானம் மனதிற்கு வர, வெட்கப்பட்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டு, யாதுசெய்வதென அறியாமல் நாலா பக்கமும் விழித்தான்.

வந்தவள் தோட்டக்காரனைக் கூப்பிட்டு "இவர் என் தந்தைக்கு மிக்க வேண்டியவர். உடனே நல்ல இளநீர்க்காய்களில் சிலவற்றைப் பறித்துச் சீவிக்கொண்டுவா" என்று அனுப்பிவிட்டு நம் கதாநாயகனை நோக்கித் திரும்பினாள். அவன் தன்னை உபேக்ஷித்து அதுகாறும் தன்னைப் பாராதிருந்துகொண்டதை நினைத்துச் சினமடைந்து, காய்ந்த குரலோடு பேச ஆரம்பித்தாள். அவன் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு நின்றதால்,

கல்யாணி.—என்னைப்பார்க்க பயமோ?

குலசேகரன்.—பயமன்று.

கல்யாணி.—முகத்தை அப்பக்கம் திருப்பிக்கொள்வானேன், பயமில்லாவிடில் நேரே பார்க்கலாமே.

குலசேகரன்.—பயப்பட்டுத் திரும்பவில்லை.

கல்யாணி.—என் பேரில் வெறுப்போ?

குலசேகரன்.—அதுவுமன்று.

கல்யாணி.—அலக்ஷியமோ?

குலசேகரன்.—அன்று.

கல்யாணி.—ஏன் பொய் சொல்லுகிறீர்?

குலசேகரன்.—நான் பொய் சொல்லவில்லையே.

கல்யாணி.—நீர் மகா நிஜஸ்தர்! எங்கள் வீட்டிற்கு வருவதாகச் சொல்லிப்போய் மூன்று மாதமாகியும் வரவில்லை. இப்போது என்னைக் காணவும் முகத்தைத் திருப்பிக் கொண்டீர், இதற்குக் காரணமென்ன? என்னைப்பற்றிய பயமாயிருக்கவேண்டும். அல்லது என்னை நீர் வெறுக்கிறதாயிருக்கவேண்டும். அல்லாவிடில் அலக்ஷியமாயிருக்கவேண்டும். அதுவுமன்று, இதுவுமன்று, ஒன்றுமன்று என்கிறீர். அப்படியானால் நீர் சொன்னவற்றில் ஏதாவதொன்று பொய்யாய்த்தானே இருக்கவேண்டும்? பயத்தினால் தானே மனுஷர் பெரும்பாலும் பொய் சொல்லுகிறார்கள்."

இந்தப் பெண்ணானவள் குறுக்கு மறுக்காய்க் கேள்விகளைக்கேட்டு நம்மைச் சிக்கச் செய்யப்பார்க்கிறாள். இவளிடம் அதிகப் பேச்சுக்கொடுத்தால் தீங்குவிளையும்போல் காண்கிறது. ஆகையால் ஒரே வார்த்தையில் உண்மையைத் தெரிவித்துவிட்டுப் போவதே உத்தமம், என்றெண்ணி,

குலசேகரன்.—நான் பொய் சொல்லவில்லை. என் தாயார் சொன்ன ஒரு வார்த்தையி னிமித்தமாகத்தான் நான்

உங்கள் வீட்டிற்கு வரவுமில்லை, உன்னைப்பார்க்கவுமில்லை. இப்போ தெரிந்ததா ?

கல்யாணி.—என்ன தெரிந்தது ? உமது பேரில் குற்றம் விழாதபடி, இப்போ இங்கே இல்லாத உமது தாயார் பேரில் பழிபோடுகிறீர் என்றுதான் தெரிந்தது. உமது தாயாருக்கும் எங்களுக்கும் என்ன விரோதமோ ? கீர்த்திவர்மருடைய வீட்டிற்குப் போகவேண்டாம்; அவருடைய மகள் முகத்தில் விழிக்கவேண்டாம் என்று உமதுஅன்னையார் சொல்ல வேண்டிய காரணமென்ன?

இதென்னடா தர்ம சங்கடமாய் வந்து சேர்ந்தது. இந்தப்பெண் மகா மௌனி என்றல்லவோ நினைத்திருந்தோம். வெகு வாயாடியாயிருக்கிறாளே. இவளை விட்டுப் போய் விடலாம் என்றால் கால் எறவில்லை. இவளிடம் கடிந்து மொழியவும் வாய் வரவில்லை. நமது வீட்டுக் காரியாதிகளை இவளிடம் தெரிவிப்பது நன்றாயில்லை. என்ன செய்யலாம், என்று மனதில் எண்ணி,

குலசேகரன்.—எனக்கு யௌவன ஸ்திரீகளிடம் பேசும் வாடிக்கையில்லை. ஆகையால் நீ பல கேள்விகளைக் கேட்க நேரிடுகிறது. இன்னமும் விவரமாய்ச் சொல்லவேடுமோ ?

கல்யாணி.—ஆகா! இப்போது தெரிந்துகொண்டேன். உம்முடைய எண்ணம் துலாம்பரமாய் விளங்கிவிட்டது. நான் ஒரு ஸ்திரீயாயிருப்பதால் தப்பினேன்; ஒரு ஆண் மகனாயிருந்தால் இதற்குள்ளாக உம்முடைய கை என் கன்னத்தில் பட்டு, ஐந்தாறு பற்களும் போயிருக்கும் என்பதுதானே உம்முடைய கருத்து ? போதுமையா, உமது அருகில் நிற்கக்கூட மனம் கூசுகிறது. என்று சொல்லிக் கொண்டு கடந்து போவதுபோல ஜாடை செய்தாள் கல்யாணி.

குலசேகரன்.—(சிரித்துக்கொண்டு) " போகாதே. எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன். என் பெற்றோருக்கு

நான் ஒரே பிள்ளை. என்பேரில் அவர்கள் சொல்ல முடியாத அன்புள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக ஏதாகிலும் ஒன்றைச் செய்ய அஞ்சுகிறேன். நான் வீட்டை விட்டுப் புறப்பட்டு வரும்போது என் தாயார் என்னை யழைத்து, 'நீ போகுமிடங்களில் எந்தப் பெண்ணின் மேலும் கவனம் செலுத்த வேண்டாம். என் தமயனார் மகளை நீ மணக்கவேண்டும் என்பது என் விருப்பம்' என்று தெரிவித்தாள். அப்படியே நான் ஜாக்கிரதையாக நடந்து கொண்டு வருகிறேன். நீயோ வெகு ரூபவதியாயிருக்கிறாய். உன்னை அடிக்கடி பார்க்க நேரிட்டால், என் தாயாருடைய விருப்பத்திற்குப் பங்கம் நேரிடக்கூடும் என்று எண்ணித்தான் உங்கள் வீட்டிற்கு வராதிருந்துவிட்டேன். இதுவேயன்றி வேறு காரணமில்லை.

இதை கேட்கவும் கல்யாணிக்குக் கலக்கம் உண்டாயிற்று. என்றாலும் அதைக் காண்பித்துக் கொள்ளவில்லை.

கல்யாணி.—நல்ல காரணம் சொன்னீர்! எங்கள் வீட்டிற்கு வந்தால் நான் உம்மைப் பிடித்துக்கொள்வேனென்று வராதிருந்தீர்? உலகிலுள்ள யுவதிகளெல்லாரும் உம்மைப் பார்த்தவுடனே உம்முடைய அழகில் சொக்கிப்போய்விடுவார்கள் என்று எண்ணினீரோ? நானும் சம்மதித்தால்தானே உம்முடைய தாயாருடைய விருப்பத்திற்கு ஒருகால் பங்கம் நேரிடக்கூடும். ஆகா! எனக்கு இந்த வையகத்தில் மாப்பிள்ளை எங்கே கிடைக்கப்போகிறான்! நன்றாய்ச் சொன்னீர்! மதுரைக்கு வரும் வழியில் நீர் எங்களுக்குச் செய்த சகாயத்தை நினைத்து என்பிதா உம்மைப் பார்க்கவிரும்புகிறார். என் பாட்டியாரும் உம்மை நினைத்துக் கொண்டேயிருக்கிறாள். என்னை நீர் ஏன் கவனிக்கவேண்டும்? அச்சமின்றி வாரும். எங்கள் வீடு மேலக்கோட்டை வாயிலண்டையிலிருக்கிறது.

குலசேகரன்.—(வெட்கப்பட்டு) நல்லது. இரண்டொரு தினங்களில் வருகிறேன்.

குலசேகரன் சொன்னவற்றினின்று அவனுடைய மனப்பான்மையை அறிந்துகொண்ட பெண்ணானவள், உள்ளத்தில் மிகுந்த விசாரத்தையடைந்து, "ஐயோ! நான் நாடிய புருஷன் வேறொருத்தியை மணக்கப் போகிறார் என்பதைக் கேட்க என்மனம் பதைக்கிறது. இவருடைய மனதை மாற்ற என்ன செய்யலாம்? இப்போது அவள் பேரில் இவருக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டாகும்படி செய்து விட்டால், பின்னால் இவர் நமது வீட்டுக்கு வந்து போயிருக்கும்போது, இவரை எப்படியும் பிடித்துக் கொள்ளலாம். இவர் விரும்பிக் கேட்கும் பக்ஷத்தில் என் பிதாவும் என்னை இவருக்குக் கொடுக்க மறுக்கமாட்டார். இவருடைய பெற்றோரின் சம்மதத்தை என் தந்தையின் மூலமாக அடைந்து கொள்ளலாம்" எனச் சிந்தித்தாள்.

கல்யாணி.—உம்முடைய மாமன் பெண்ணை மணக்கப் போவதாய்ச் சொன்னீரே அவளைப் பார்த்திருக்கிறீரா?

"இவள் இன்னமும் என்னைத் துளைக்கிறாள். இவளைக் கோபிக்கவும் எனக்குச் சக்தியில்லை. விட்டுப் போகவும் மனம் வரவில்லை. ஊருக்குச் சென்றவனும் இன்னமும் வரக்காணோம். எதையாகிலும் சொல்லித் தொலைப்போம்." என்று நினைத்து,

குலசேகரன்.—எங்கள் குடும்பத்திலுண்டான ஒரு மனஸ்தாபத்தினால், எங்கள் பந்துக்கள் வரத்துப் போக்கை நிறுத்தி வெகு காலமாகிறது. ஆகையால் பெண்ணை நாங்கள் கண்டதில்லை. பார்த்தவர்கள் சொல்லக் கேள்வி தான்.

கல்யாணி.—ஆகா! நீங்கள் வெகு புத்திசாலிகள்! அந்தப் பெண்ணுக்கு ஏதாகிலும் அங்கவீனம், அல்லது வேறு யாதாமொரு குறை இருந்தால் எப்படி? ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்லுகிறவர்கள் சாதாரணமாக அவளுடைய குறைகளை மறைத்துக் கூறுவதுதானே நமது நாட்டு வழக்கம்.

குலசேகரன்.—எல்லாவற்றையும் கலியாணத்திற்குமுன் பார்த்துக் கொள்ளலாம்.

கல்யாணி.—நீர் இப்போது சொன்னது மகா விசேஷமான யோஜனை! மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்க்க வரும் அப்பொழுது, தங்கையைக் காட்டி, தமக்கையைக் கட்டிக் கொடுப்பவர்களைப் பற்றி நீர் கேள்விப்படவில்லையா? குறையுள்ள பெண்களை வெளியிலே பார்க்க முடியுமா? சாதாரணமாக எல்லாரும் செல்லும் நமது குலப் பெண்களைக்கூட விவாகத்திற்கு முன் வீட்டில் பூட்டிவைப்பதும், விவாக நேரத்தில் கேசாதிபாதம் மூடிக்கொண்டு போவதும் வழக்கமல்லவா?

குலசேகரன்.—வாஸ்தவம்தான். ஆனால் அந்தப் பெண் மெத்த அழகுள்ளவளாம்; நல்ல குணசாலியாம் பழைய கிளை விட்டுப்போகக் கூடாதென்பது என் தாயாரின் விருப்பம். கடவுள் விதித்தபடி ஆகட்டும்.

"இவ்வளவு தூரம் கலக்கியும் இவரது மனம் கொஞ்சமும் பேதலிக்கக்காணோம். இன்னமும் சற்று அசைத்துப் பார்ப்போம்" என ஆலோசித்து,

கல்யாணி.—நான் உமது மாமன் பிள்ளையைப்பற்றி குறை கூறினேன் என்று நீர் விசனமடைய வேண்டாம். நீர் செய்த பெரிய உபகாரத்தை நினைத்து, உமக்கு வரப்போகிற மனையாட்டி உமக்கு எல்லா விதத்திலும் பொருத்தினவளாயிருக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புவது இயல்புதானே. ஆகையால்தான் அவ்வளவு தூரம் சொன்னேன். உம்முடைய மாமனாருடைய ஊர், பேர், முதலியவற்றைத் தெரிவித்தால் ஒருவேளை அந்தப்பெண் எனக்குத் தெரியலாம். நாங்களும் தென்னாட்டில் உள்ளவர்கள் தானே.

குலசேகரன்.—என் மாமனாருக்குப் பூர்விகம் முத்தூர். அவர் அரசாங்க உத்தியோகத்தில் எங்கோ இருக்கிறாராம். அவர் பேர் சிர்யாறர் என்பார்கள். மாமியார்

இறந்துபோய் விட்டாராம். என் பாட்டியார் இருக்கிருளாம். மற்ற விபரங்கள் தெளிவாய்த் தெரியாது.

எனவும், கல்யாணியுடையமனம் சஞ்சலமடைந்தது. உடல் நடுக்கம் கொண்டது. நிற்கச் சக்தியில்லை. பேசவும் நாவெழவில்லை. கீழே குனிந்து எதையோ தேடுவதுபோல் பாவனை செய்துகொண்டு முகத்தை மறைக்கப் பார்த்தாள்.

அச் சமையத்தில், வனதேவதை அவளுக்கு உதவியாக வந்து, தோட்டக்காரனை அவ்விடம் கொண்டுவந்து சேர்த்தாள். இளநீர்க் காய்களைச் சீவி யெடுத்துக்கொண்டுவந்த தோட்டக்காரன் வரும் அரவம் கேட்டு, குலசேகரன் அவன் பக்கம் திரும்பியதால், கல்யாணியைக் கவனிக்கவில்லை. கல்யாணி பின்னே திரும்பிக்கொண்டு "இதோ இளநீர் வந்துவிட்டது. சாப்பிடலாம். நான் பணிப் பெண்ணை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்லுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு ஓடிப்போய் விட்டாள். சற்று தூரம் சென்று ஒரு செடியின் மறைவில் உட்கார்ந்து, வெள்ளம்போல் கண்ணீர் சிந்தி அழுதாள். தான் இத்தனை நாளாக நாடிக் கொண்டிருந்த புருஷன் தன் அத்தையாருடைய மகனே என்று திடீரெனக் கண்டறிந்தது அவளுக்குத் தாங்க ஒண்ணாத மகிழ்ச்சியைத் தந்தது. ஆனந்தம் அதிகரித்தால் அழத்தானே வேண்டும்.

இவ்வாறு சில நிமிஷங்கள் கழியவும், அவள் எழுந்து ஒரு தொட்டியண்டைபோய், முகத்தை ஜலத்தில் அமிழ்த்தி வைத்துக் கொண்டிருந்து அப்புறம் துடைத்துவிட்டு, தூரத்தில் பூக்கொய்துக் கொண்டிருந்த வள்ளியைக் கூப்பிட்டாள். வள்ளி வரவும், இளநீர் அருந்திக் கொண்டிருந்த குலசேகரனை அவளுக்குக் காண்பித்து, "நீ தனித்து நின்று, அவருக்குத் தெரியாமல் மறைவாக அவர் போகுமிடத்திற்குச் சென்று, அவர் எவ்விடத்தில் தங்கியிருக்கிறார் என்பதை அறிந்துவா. புத்தியை உபயோகித்து எவ்விதத்திலும் அவ்விடத்தைக் கண்டு பிடித்துவிடு. நீ கண்டு பிடித்துத் தெரிவித்தால் இரண்டு பொன் தரு

வேன்.” என்று சொல்லிவிட்டு, வேகமாய் நடந்து வீட்டிற்குச் சென்றாள்.

குலசேகரன் சந்தோஷத்தோடு இளநீர் அருந்திய பின் எழுந்து பேட்டையை நோக்கிப் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்து சென்ற வள்ளி, பேட்டையண்டை வரவும், நிலவு எதிர்ப்பட்டதைக் கண்டு, அவனை மறுபடியும் வைது விட்டு, திரும்பி வீட்டுக்குச் சென்றாள். தான் போய் வந்த விவரத்தை வள்ளி தெரிவிக்கவும், கல்யாணி சந்தோஷமடைந்து, தான் சொல்லியிருந்தபடி அவளுக்கு இரண்டு பொன் கொடுத்து, அவளைத்தழுவி ஒரு முத்தமுமிட்டாள். ஒருநாளும் கிடைக்காத இந்த உபசாரத்தைப் பெற்ற வள்ளி தலை கால் தெரியாமல் களித்திருந்தாள். பொன்னாசார் தங்கியிருந்த இடம் கீர்த்திவர்மர் வீட்டுக்கு வெகு சமீபத்திலேயே இருந்தது.

அன்றிரவில் படுக்கைக்குச் சென்ற குலசேகரனுக்கு நித்திரை வரவில்லை. தோட்டத்தில் நடந்த காரியங்களே மனதில் தோன்றிக் கொண்டிருந்தன. கீர்த்திவர்மர் வீட்டிற்கு ஒருதடவையாகிலும் போய்வர வேண்டியது கடமையே எனத் தீர்மானித்தான். அந்தப் பெண் தன் அண்டையில் இருந்தபோது தானடைந்த குதுகலத்தை நினைந்து ஆச்சரியமடைந்தான்.

இப்படிச் சிறிதுநேரம் சென்றபின், மனம் அறவறதர்மத்தின்மேல் சென்றது. “இவ்வளவு வனப்போடிருக்கும் இந்தப் பெண், யாதாகிலும் ஒரு அசுத்தமான ரோகத்தை அடைந்துவிட்டால், இவளுடைய தரிசனம் என்னை இவ்வாறு மயங்கச் செய்யுமோ? அங்ஙனமாகாவிடினும், இன்னமும் முப்பது, நாற்பது ஆண்டுகள் கழிந்தபின் இவள் எப்படி இருப்பாள்? இன்று இளமையின் அழகோடு ஒளிரும் இவளுடைய உடல் வரண்டு, தோல் சுரித்து, கண்மங்கி, உரோமம் நரைத்துக் கழிந்து, பற்கள் போய், நடையும் தளர்ந்து, பார்ப்போர் அருவருக்கும்படியான நிலைமையை அடைவாளன்றோ, நாளைக்கு இவள் மரித்து

விட்டால், நாலு ஜாமத்திற்குள் நாறிப்போகும் இவளு டைய உடலை யாராகிலும் தீண்டமுடியுமா ? இவ்வித அற்ப மகிமையுடையதுதானே மானிட சரீரத்தின் அழகு. இவளை நான் கருதலாகாது" என்பன போன்ற நினைவு கள் உண்டாயின. மெய்க்காதலின் மேன்மை சரீரத்தள வில் நிற்காமல், பிரதானமாய் ஆத்துமாவை ஆசிரயித்து நிற்கும் எனும் உண்மை அவனுக்கு இன்னமும் புலனாக வில்லை.

---

11. இரணவீரன் சமர்த்து.

கீர்த்திவர்மருடைய வீட்டைவிட்டுத் திரும்பிய ரண வீரன், தன் கிருகத்தையடைந்தவுடனே, தலையாரி ஒரு வனை அழைத்து "நாளைச் சாயங்காலம் நீயும் உன்னுடன் எட்டுச் சேவகரும் ஆயத்தமாயிருக்கவேண்டும். ஒரு சிவி கையும் சித்தமாயிருக்கவேண்டும்" என்று கட்டளை கொ டுத்தான்.

இரணவீரனுடைய சுபாவத்தை நன்கறியாராதலால், கீர்த்திவர்மர் அவனுடைய பயமுறுத்தலைக் கொஞ்சமும் பாராட்டாமல், மறுநாளிரவில் சுகமே படுக்கைக்குப் போய் விட்டார். பதிலை எதிர் பார்த்திருந்த ரணவீரன் அது வாராதது கண்டு, சினந்து, தலையாரியை அழைத்து, "நீயும் உன் ஆட்களும், அர்த்தராவில் புறப்பட்டு மேல வாயிலுக் குச் சமீபத்திலிருக்கும் கீர்த்திவர்மருடைய வீட்டில் பிர வேசித்து, அவரையும் ஏவலாட்களையும் பிடித்துக் கட்டி விட்டு, அவருடைய மகளைப் பத்திரமாகச் சிவிகையிலேற் றிக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். வீட்டுப் பொருட் களில் ஒன்றையும் தொடக்கூடாது. சமஸ்தமும் சந்தடி யில்லாமல் நடக்கவேண்டும்" எனக் கட்டளை கொடுத்த னுப்பினான்.

அப்படியே, ஊரடங்கி எங்கணும் நிசப்தமாயிருக்கும் மூன்றும் ஜாமத்தில், அவர்கள் கீர்த்திவர்மருடைய வீட்

டை அணுகினார்கள். பின் வாயிலைக் காக்க ஒருவனை அனு
ப்பிவிட்டு, மற்றவர்கள் முன் வாயிலைக் கிட்டி, வாயிற்காப்
போனை எழுப்ப அவன் அரைத்தூக்கத்தோடு எழுந்து
யார் என்று கேட்டுக்கொண்டே கதவைத்திறந்தான். உட
னே இருவர் அவனைப் பிடித்து. வாயில் துணியைச் செரு
கி அடைத்து. கைகால்களைக் கட்டி, தரையில் கிடத்தி
னார்கள். மற்றவர்கள் உள்ளே சென்று, வீட்டின் நானு
இடங்களில் படுத்திருந்த ஏவலாளர் எல்லாரையும் பிடித்
துக் கட்டினார்கள். முன்முற்றத்தருகிலுள்ள ஒரு அறை
யில் நித்திரை செய்து கொண்டிருந்த கீர்த்திவர்மர், அர
வம் கேட்டெழுந்து ஓடிவந்தார். ஓடி வந்தவர், வழியில்
கட்டப்பட்டுக் கிடந்த ஒரு வேலைக்காரன் மேல் இடறி விழு
ந்தார். அவர் எழும்புமுன் அவரையும் பிடித்துக் கட்டி
விட்டார்கள். கிழவி படுத்திருந்த அறையின் கதவை வெ
ளிப்புறத்தில் தாளிட்டார்கள். வீட்டு வேலைக்காரர் கொஞ்ச
மும் தைரியம் காண்பிக்கவில்லை.

அன்று தோட்டத்தில் நடந்தவற்றையே சிந்தித்துக்
கொண்டு நித்திரையில்லாதிருந்த கல்யாணி, சத்தம் கேட்டு
எழுந்து, மாடியின் பலகணி வழியாய் முன் முற்றத்தை
நோக்க, அங்கு ஒருவன் பந்தம் பிடித்துக்கொண்டு நிற்க
வும். இருவர் தன் தந்தையைப் பிடித்துக் கட்டிக் கொண்டி
ருக்கவும் கண்டு அவர்கள் ரணவீரனுடைய ஆட்களதா
யென்றும், தன்னைக் கவர்ந்து கொண்டு போகவே வந்த
வர்கள் என்றும் கிரகித்துக் கொண்டு, “இங்கு ஒருவினாடி
யும் தாமதிக்கலாகாது. தப்பித்துக்கொள்ளும் வழியைத்
தேடவேண்டும்” என்று ஆலோசித்து, அறையின் கத
வை உட்புறத்தில் பூட்டினாள். தன் சேலைகளில் ஒன்றை
எடுத்து, பின்னேயுள்ள தோட்டத்திற் கெதிரேயிருந்த
சாளரத்தின் நிலையில் கட்டினாள். அப்புறம், உயிரற்ற
பிணம்போல் தூங்கிக்கிடந்த வள்ளியை அடித்தெழுப்பி,
முதலாவது அவளை வெளியே இறக்கிவிட்டு, பின் தானும்
அப்புடவை வழியாய் இறங்கினாள். தோட்டத்தில் அடர்ந்
திருந்த செடிகளின் மறைவில் குனிந்து நடந்து, மெது
வாகப் புறவாயிலை அணுகினார்கள். அங்கொருவன் நிற்ப
தறிந்து திகைக்கும்போது, சிறிது தூரத்தில் தோட்டச்

சுவருக்குக் கீழாக ஓடிய சாலக வழியாய் நுழைந்து கப்ப லாம் என்று அறிந்து, அப்படியே பதுங்கி நுழைந்து வெகு தூரம் சென்று, வீதியில் ஏறி, ஒரு வீட்டின் வெளித் திண்ணையை அடைந்தார்கள்.

அங்கு சேரவும், கல்யாணி தன் பிராணவையும், பாட்டி யையும் நினைந்து வியாகுலமடைந்தாள். மறு நிமிஷத்தில் ஒரு யோசனை தோன்ற, அவள் வள்ளியைப்பார்த்து, “நீ ஓடி, இன்று பார்த்து வந்த பேட்டைக்குப்போய், நமது வீட்டில் நேரிட்ட ஆபத்தை நீலனுடைய எஜமானுக்கு அறிவி” என்று அனுப்பினாள்.

ஒட்டம்பிடிப்பதாகிய ஒரு விஷயத்தில் தேர்ந்தவளா யிருந்த வள்ளி, ஒரு நிமிஷத்தில் பேட்டையைக் கிட்டி, வெ ளித்திண்ணையில் படுத்திருந்த நீலனை இனமறிந்து, அவன் மூக்கைப்பிடித்தாட்டினாள். “இதென்னடா, அர்த்த ராத் திரியில் ஒருபூதம் வந்து நம்மை அலக்கழிக்கிறது” என்று சொல்லிக்கொண்டு எழுந்து உட்கார்ந்த நீலனிடம், வள்ளி நடந்த காரியத்தைத் தெரிவித்தாள். இவர்கள் பேசுவ தைக் கேட்டுக்கொண்டிருந்த குலசேகரன், உடனே படுக் கை விட்டெழுந்து, வேலாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியே ஓடினான். நீலனும் பணிப் பெண்ணும் பின் தொடர்ந்தார்கள். ஓடும்போதே வீட்டின் அடையா ளம் தெரிந்துகொண்டு, நீலன் புறவாசல் வழியாகவும் குல சேகரன் முன் வாசல் வழியாகவும் பிரவேசிக்க வேண்டுமெ ன்று நிர்மானித்துக்கொண்டு ஓடினார்கள். பணிப்பெண் கல்யாணியிடம் போய்ச் சேர்ந்தாள்.

தங்களை எதிர்க்க ஒருவருமில்லை என்று எண்ணியிருந்த சேவகர்கள், சாவகாசமாகவே தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். கல்யாணி எவ்விடத்திலோ மறை ந்து கொண்டதாக எண்ணி, வீடெங்கும் தேடி, மூலை முட க்குகளையும், பானைகளையும், நெல் வைத்திருந்த குதிர்களை யும் பெட்டி பேழைகளையும் துளாவிப் பார்த்துக்கொண்டி ருந்தார்கள். குலசேகரன் வீட்டிற் பிரவேசித்ததை அவர் கள் கவனிக்கவில்லை.

குலசேகரன் முன்வாயிலையடைந்தான். அங்கு காவலாக நின்ற ஒருவனை முஷ்டிகொண்டு குத்தித் தரையில் விழ்த்தினான். மாடிக்குப்போகும் படிக்கட்டருகில் ஒரு பெட்டியைத் தடவிப் பார்த்துக்கொண்டு நின்ற ஒருவன் பிடரியில் வேற்கலையால் அடித்து உருட்டினான். எதிர்த்த அறையில் பந்தம் பிடித்துக்கொண்டு நின்ற ஒருவனுக்கும் அப்படியே ஒன்று கொடுத்துச் சாய்த்தான். இவ்வளவும் வெகு அமைதலாகவே நடந்தது. அப்புறம் நின்று செவிகொடுத்துக் கேட்டான். பிற் கட்டில் ஒருவனும், மாடியில் பலரும் நிற்பதாக அறிந்தான். வேலைக்காரரைக் கட்டவிழ்த்தால் தன் பேர் வெளியாகிவிடும் என்றறிந்து, அப்படிச் செய்யாமல் பிற்கட்டிற்குச்செல்லும் வாயில்களைத் தாளிட்டு விட்டு, மாடிக்குச் சென்றவர்கள் இறங்குமளவும் மறைந்து நிற்கக்கருதி ஒரு மூலையில் ஒளித்திருந்தான். அடிபட்டவர்கள் பொறிகலங்கிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு கிடந்தார்கள். அப்படியே கீர்த்திவர்மரும் உருண்டு புரண்டு பெருமூச்செறிந்தார். ஏவலாளர் யாதொரு சத்தமும் செய்யவில்லை.

குலசேகரன் காத்துக்கொண்டிருக்கையில் மேலே போயிருந்த நால்வரும் இறங்க ஆரம்பித்தார்கள். பந்தம் பிடித்துக்கொண்டு முதலில் வந்தவன் தலையில் வேற்கலையால் ஒரு அடி விழ, அவன் தரையில் உருண்டான். பின்னே வந்தவர்கள் குலசேகரனைக்கண்டு, திகைத்து அவன் சமீபத்தில் அணுகக்கூடாதிருந்தபடியால் ஈட்டிகளை அவன் மேல் எறிந்தார்கள். சுழன்று கொண்டிருந்த வேலாயுதத்தில் அவைகள் பட்டுப் பிரயோஜனமில்லாதாயின. அப்புறம் மூவரும் பட்டயங்களை முன்னே பிடித்துக்கொண்டு கீழே சாடமுயன்றார்கள். குலசேகரன் தூரத்தில் நின்றபடியே வேலாயுதத்தைக் கொண்டு தீவிரமாகக் குத்தவும், ஒருவன் ஆயுதமிழந்தான், மற்ற இருவரும் பயந்து உயர ஓடிப்போனார்கள். ஆயுதத்தை இழந்தவனும் அவர்களைத் தொடர்ந்து உயரச் சென்றான். அவர்கள் மாடியில் நின்றுகொண்டு தங்கள் கூட்டாளிகளை அழைக்க, பிற்கட்டில் நின்ற ஒருவனே பதில் கொடுத்ததைக்கேட்டு, மோசம் வந்ததென்றறிந்து, தப்பும் வழியை ஆலோசித்தார்கள். பிற்பக்கத்துச்

சாளரவாயில் திறந்திருக்கக்கண்டு, அதை நோக்கி ஓடவும், அங்கு கட்டியிருந்த புடவையின் துணையால் கீழே இறங்கிப்போவது சுலபமாயிற்று. இதற்குள்ளாக சாக்ஷாத் சுப்பிரமணியனை உருக்கொண்டு வந்ததுபோல, வேலுங் கையுமாய்க் குலசேகரன் மெத்தைக்கு வந்து சேரவும், அவனைக் கண்டுபயந்து அவசரமாய் இறங்க முயற்சிக்கையில் ஒருவன் தவறி விழுந்துவிட்டான். மற்றொருவன் வேலாயுதத்தால் புஜத்தில் குத்துண்டு விழுந்தான். ஒருவன் மாத்திரம் தப்பி அடுத்த வீட்டின் கூரை வழியாய்ச் சென்று தப்பினான். உயரமான மாடியிலிருந்து விழுந்த இருவரும் அடிபட்டு எழும்ப ஏலாமல் கிடந்தார்கள். அப்புறம் குலசேகரன் பிற்கட்டுக்குச் சென்று அங்கு பயத்தோடு பதுங்கியிருந்த ஒருவனை ஒன்றும் செய்யாமலே பிடித்து, கைகால்களைக்கட்டி உருட்டிவிட்டு, எழுந்து "நீலா" என்று கூப்பிட்டான்.

பின் சந்தின் வழியாகப் போன நீலன், தூரத்தில் வரும்போதே, புறவாயிலண்டை ஒருவன் ஆயுதபாணியாய் நிற்பது கண்டு, தன்கையில் ஆயுதமில்லாதபடியால், இவனைத் தந்திரத்தால்தான் மேற்கொள்ளவேண்டும் எனத் தீர்மானித்தான். அப்படியே, வெறிகொண்டவன்போல நடந்து, தில்லானாப் பாடல்களில் சிலவற்றைப் பாடிக்கொண்டு சமீபத்தில் வரவும் 'அண்ணே! அண்ணே!" எனக் கூவிச் சேவகனுடைய பாதத்தைப் பிடிப்பதுபோலப் பாவித்து, அகஸ்மாத்தாய் அவனுடைய இருகால்களையும் பற்றி இழுத்து மடாரெனத் தரையில் சாய்த்து, குதித்தெழுந்து அவனுடைய ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு, அவனைப் பயமுறுத்தி, கைகால்களைக் கட்டித் தூக்கிச் சமீபத்திலிருந்த ஒரு சாலகத்தில் போட்டான். சேவகனும் உயிருக்கு அஞ்சி யாதொன்றும் பேசாமல் கிடந்தான். நீலன் இந்த வேலையை முடித்து விட்டு எழுந்து உள்ளே செல்லும் வழியைத் தேடினான். பின்மதில் அதிக உயரமாயிருந்தபடியாலும், புறவாயில் உள்ளே தாளிடப்பட்டிருந்தபடியாலும், பிரவேசிக்கும் மார்க்கம் தெரியாமல் திகைக்கும்போது, உள்ளேயிருந்து தன் எஜமான் கூப்பிட்டதைக் கேட்டு, "வா

சல் பூட்டியிருக்கிறது, வேறு வழியும் காணோம்" என்றான். அதைக் கேட்டுக் குலசேகரன் "அடே மடையா! மரக்கட்டை போன்ற உன் தோள் எதற்காக இருக்கிறது? நான் சொல்லிக் கொடுத்த படிப்பு எங்கே போயிற்று? சீக்கிரம்" என்றான். எனவும், நீலன் பத்துமுழம் பின்னே சென்று, திரும்பி ஓடித் தன் புயங்கொண்டு கதவைத் தாக்க, தாழ்ப்பாளுடைந்து கதவு திறந்து விட்டது.

அப்புறம் இருவரும் வெளியேறிச் சென்றார்கள். வெளியே வரவும், குலசேகரன் நீலனைப்பார்த்து "அந்தப் பலிப்பெண் சமீபத்தில் எவ்விடத்திலாகிலும் மறைந்து கொண்டிருப்பாள். நீ அவளைக் கண்டுபிடித்து, நடந்தவற்றை அறிவித்து, தன் நாச்சியாரை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போகச்சொல். நாம் இன்னார் என்பதை ஒருவருக்கும் தெரிவிக்கவேண்டாம் என்று கண்டிப்பாய்ச் சொல். விஷயம் வெளியானால் அந்தத் துஷ்டருடைய கூட்டாளிகள் நமக்குச் சதிசெய்வார்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டுப் பேட்டைக்குச் சென்றான்.

நீலன் போய்த் தெரிவித்தவுடனே, ஸ்திரீகள் இருவரும் வீட்டிற்கு ஓடினார்கள். இவர்கள் போய்ச் சேருமுன்னதாக தன் கட்டுகளை அவிழ்த்துக் கொண்ட ஒரு வேலைக்காரன், மற்றவர்களையெல்லாம் விடுவித்து விட்டான். குலசேகரனால் அடிபட்டு விழுந்தவர்கள் எழும்ப ஏலாமலே கிடந்தார்கள். கீர்த்தி வர்மர் தமது புத்திரியைக் காணாததால் மிகுந்த கலக்கமடைந்தார். உடனே நடந்தவற்றை அத்தெருவின் தலையாரிக்குத் தெரிவித்தார். தலையாரி தன் சேவகரோடு வந்து பார்த்து, பிற்கட்டில் கட்டப்பட்டிருந்த சேவகனையும் மற்றவர்களையும் விசாரிக்க, ரணவீரனுடைய ஏவுதலினாலேயே இந்த அக்கிரமம் நடந்ததென்று தெளிவாயிற்று. தலையாரி எல்லாவற்றையும் விஜாரித்தறிந்து கொண்டு, அன்றிரவிலேயே தன் மேலதிகாரிக்கு அறிவித்தான். விழுந்துகிடந்த சேவகர் எட்டுப் பேரையும் தூக்கி, சிறைச்சாலைக்குக் கொண்டுபோகும்படி தன் சேவகருக்குக் கட்டளையிட்டான். இதற்குள்ளாகக் கல்யாணியும் வள்ளியும் வந்துசேர்ந்தபடியால் கீர்த்திவர்மருக்கு ஆயாசம் தீர்ந்தது.

தலையாரி எவ்வளவாக விசாரித்தும், அவ்விரவில் கீர்த்திவர்மர் வீட்டிற்கு உதவியாக வந்தவர்கள் யார் என்றாகிலும், எத்தனைபேர் என்றாகிலும் தெரிந்து கொள்ளக்கூடவில்லை. அநேகர் வந்ததாகச் சிலர் சொன்னார்கள். கட்டப்பட்டிருந்த சேவகன், ஒரே ஒருவன்தான் வந்ததாகவும், அவனைக்காணவே தனக்குக் கைகால்கள் நடுங்கிற்றென்றும் சொன்னான். கடைசியில், ரணவீரனுக்கு விரோதிகளான யாரோ சிலர், தற்செயலாக வந்து கீர்த்திவர்மருக்கு உதவி செய்திருக்கவேண்டும் என அபிப்பிராயப் பட்டார்கள். கல்யாணியும் வள்ளியும் தாங்கள் தப்பியோடின விவரத்தைத் தெரிவித்தார்களேயன்றி, அதற்குப் பின் நடந்தவற்றைச் சொல்லவில்லை.

தப்பித் தோடிப்போன சேவகன் இரணவீரனிடம் சென்று, தாங்கள் சென்றவிடத்தில் கீர்த்திவர்மருடைய ஆட்கள் பலமாய் எதிர்த்துப் போராடினதாகவும், வெளியேயிருந்து அநேகர் வந்து தங்களைத் தாக்கினதாகவும், அதினால் காரியம் ஜெயமாகவில்லையென்றும் தெரிவித்தான். ரணவீரன் தலை குனிந்தான். மேனோக்கி முறுக்கி விடப்பட்டிருந்த அவனுடைய மீசைகள் தளர்ந்து கீழே சாய்ந்தன. கொஞ்சநேரம் சிந்தனையிலிருந்து விட்டு, "இருக்கட்டும். இன்னமும் ஒருகை பார்க்கிறேன்" என்று சொல்லிக் கனைத்துக்கொண்டு, மீசைகளை முறுக்கினான்.

பொழுது விடியவும் இச்செய்தி மதுரை முழுவதும் பரவிற்று. அதிகாரிகள் பாண்டியனுக்குத் தெரியப்படுத்தினார்கள். அவன் இரணவீரனை அழைத்துக் கடிந்துகொண்டு, அவனுக்கு ஒரு லக்ஷம் பொன் தண்டம் விதித்து, அதில் ஐம்பதினாயிரம் பொன் கீர்த்திவர்மருக்கு நஷ்டஈடாகக் கொடுக்கப்படவேண்டும் என்று தீர்த்தான். அன்று ரணவீரனால் கீர்த்திவர்மருடைய வீட்டிற்கு அனுப்பப்பட்ட ஒன்பது சேவகருக்கும் கசையடி கொடுத்து, வேலையை விட்டு நீக்கும்படி உத்தரவு செய்தான். இந்தத் தீர்ப்பைக் கேட்கவும் ரணவீரன் மிகுந்த ஆயாசமடைந்தான்.

நீலன் பேட்டைக்கு வந்து சேரவும், குலசேகரன் "நீலா! இனி நாம் மதுரையிலிருப்பது கூடாது. நாம் விரும்பாமலிருக்க சில தொல்லைகளில் பிரவேசிக்கும்படி நேரிட்டு விட்டது. விரோதிகளும் உண்டாகி விட்டார்கள். ஆகையால் நாளைக்கு நமது காரியாதிகளை முடித்துக்கொண்டு, நாளை நின்று ஊருக்குப் புறப்பட்டு விடவேண்டும். நான் பயணம் சொல்ல வேண்டியவர்களிடத்திலெல்லாம் நாளைக்குப் போய்ச் சொல்லிக்கொண்டு வந்துவிடுகிறேன். நம்முடைய கணக்கைநாம் போகிற நேரத்தில் தீர்த்துக்கொள்ளலாம்" என்றுசொல்லிவிட்டு நித்திரைக்குச் சென்றான்.

தாங்கள் கீர்த்திவர்மருடைய வீட்டிற்கு வந்ததாக ஒருவருக்கும் பிரஸ்தாபிக்க வேண்டாம் என, குலசேகரன் நீலன் மூலமாகச் சொல்லியனுப்பினதைக் கேட்ட வள்ளியானவள், ஸ்திரீகளுக்கு உரிய சாதாரண வழக்கத்தின்படியே, அதை யாராவது ஒருவரிடம் தெரிவிப்பது கடமை என்று தீர்மானித்தாள். "இன்றிரவிலேயே இந்த இரகசியத்தை நான் சொல்லிவிடாதிருந்தால், பொழுதுதிக்க என் தலை வெடித்துவிடும்" என்று பயந்தவள்போல, விடியற்காலத்தில் எழுந்து ஒரு வேலைக்காரனிடம் சகல விபரங்களையும் தெரிவித்து, வேறொருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கண்டிப்பாய்க் கூறினாள். அச்செய்தி அங்கிருந்து, ராய்ட்டர் தந்தி பரம்புவதிலும் அதிக வேகமாய்ப் பரம்பி, அன்று பகல் மூன்று நாழிகைக்குள்ளாக அவ்வீட்டிலுள்ள யாவருக்குமே தெரிந்துவிட்டது.

கீர்த்திவர்மருடைய செவிக்கு அது எட்டினவுடனே, முன்னதாகவே குலசேகரனைக்கண்டு, அவன் தமது குடும்பத்திற்குச் செய்த பேருபகாரத்திற்காக நன்றிகூறவேண்டுமென்று ஆவலோடு காத்திருந்த அவர், அவனிருப்பிடமறியக் கருதி, பரபரப்புடனெழுந்து, வள்ளியை அழைப்பித்தார். அவர் முன் வந்து, பயத்துடனே குறவிழி விழித்துக்கொண்டு நின்ற வள்ளியை அவர் விவரம் கேட்கும்போது, அவள் தடுமாற்றமடைந்து எதையோ ஒளிப்பதாக அறிந்து, கோபித்துப் பயமுறுத்தினார். வள்ளி தான்செய்த தப்பிதத்தை நினைத்து நடுக்கமுற்று, பேசவேண்டிய

வகை அறியாமல், ''எல்லாம் சின்ன நாச்சியாருக்குந் தெரியும்'' என்ருள்.

இவ்வார்த்தை கேட்டதும், கீர்த்திவர்மருடைய மனதில் பலவாறுன ஐயங்கள் எழுந்தன. ஆகையால் வள்ளியைப் போகஅனுப்பிவிட்டு, தமது தாயாரிடம் சென்று, தாம் கேள்விப்பட்டதைச் சொல்லி, "அம்மா! நமக்குத் தெரியாமல் கல்யாணி இந்தச் சிறுவனேடு ஏதோ உறவு கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இரவில் நடந்த காரியம் எல்லாம் அறிந்திருந்தும் இந்தப் பிள்ளை நம்மிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாதிருந்து கொண்டாளே! இவள் தானே வள்ளியை அனுப்பி அவனை வரவழைத்ததாக நான் அனுமானிக்கவேண்டியதாயிருக்கிறது. இது எவ்வளவு அவமானத்திற்கிடமான காரியம்'' என்று சொல்லி வருத்தப்பட்டார். முதியவள் அவரைப்பார்த்து "அப்பா! வருத்தப்படாதே. விஷயத்தைத் தீர விஜாரிக்குமுன் முடிவு கட்டாதே. குழந்தை மெத்த நல்லவள். நீ அவளைக் கூப்பிட்டு விஜாரித்தாயா? இல்லையே. அவசரப்பட்டு ஏன் அவள் பேரில் சந்தேகம் கொள்ளுகிறுய்? இப்போதே அவளைக் கூப்பிட்டுக் கேட்போமே'' என்ருள்.

அந்தப்படியே தோட்டத்தில் நின்ற கல்யாணியை அழைத்தனுப்பினுர்கள். அவள் வரவும் கீர்த்திவர்மர் கடுகடுத்த முகத்துடனே வள்ளி சொல்லியவற்றைத் தெரிவித்து, அவற்றைத்தனக்கு அறிவிக்காததின்காரணமென்ன என்று வினவினுர். வேலைக்காரியின் மதியீனத்தால் விஷயம் வெளியானதைக் கல்யாணி கண்டு, இனி ஒன்றையும் ஒளிப்பதில் பயனில்லை என அறிந்தவளாய், முந்திய நாளில குலசேகரனைத் தோட்டத்தில் கண்டதையும், வள்ளி மூலமாக அவன் தங்கிய இடத்தை அறிந்துகொண்டதையும், இரவில் தானுகவே வள்ளியை அனுப்பி அவனை வரவழைத்ததையும் விவரமாய்ச் சொன்னுள். குலசேகரனைக் குறித்துப்பேசும் போது அவளுடைய முகம் சிவந்து கண்கள் பிரகாசமடைந்ததைக் கீர்த்திவர்மர் கவனித்தார். அவர் மனதிலுண்டாயிருந்த சந்தேகம் உறுதிப்பட்டது. ஆகையால் அவர் அவளை நோக்கி "கல்யாணி! நீ எனக்கு ஒரே பிள்ளை-

நான் விரும்பாத இடத்தில் உன்னை விவாகம் செய்து கொடுக்க நான் சம்மதிக்கமாட்டேன். உன்னை என் தங்கை மகனுக் கொடுப்பதாக உன் தாய்க்கு வாக்குச் சொன்னேன். உன் பாட்டியாருக்கும் அதுவே விருப்பமாயிருக்கிறது. நானும் ஆலோசித்துப் பார்த்ததில் அதுவே நலம் என்று தீர்மானித்திருக்கிறேன். ஆதலால் நீ வேறொரு புருஷன் மேல் உன் பிரியத்தை வைக்கலாகாது. இந்த இளைஞன் நமது குடும்பத்திற்கு அதிக உபகாரம் செய்திருக்கிறான். அதற்குப் பிரதியாக நான் அவனுக்குத் தகுந்த மரியாதை செய்யப்போகிறேன். ஆனால் உன்னை அவனுக்குக் கொடுக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டேன். நீ பேசிய விதத்திலிருந்து, நீ அவன்பேரில் வெகு காதல் உள்ளவள்போல புலப்படுகிறது. அது உண்மைதானா?" என்று கேட்டார். கல்யாணி சங்கோசப்பட்டு, கீழே நோக்கி, கால் விரலால் தரையைக் கீறிக்கொண்டு நின்று "ஐயா! உமது விருப்பத்திற்கு விரோதமாக நான் ஒன்றையும் செய்யேன். அவரைக் கண்டவுடனே அவர்மேல் விருப்பம் கொண்டது உண்மையே. அவ்விருப்பத்தை மாற்றுவதற்கு முயன்று கொண்டிருக்கும்போது, நேற்று அவர் எனக்குத் தெரிவித்த விபரங்களிலிருந்து, நான் அவர்மேல் அன்புவைப்பது நம் நாட்டு வழக்கத்திற்கு விரோதமாகாது. என்று அறிந்தேன். அவர் நமக்கு உதவிசெய்யக் கடமைப்பட்டவராயிருப்பதால்தான் நேற்றிரவில் வள்ளியை அனுப்பி அவரை அழைப்பித்தேன். அவர்தான் உம்முடைய சகோதரியின் புத்திரர். நாம் அவருக்குப் பந்துக்கள் என்பது இன்னமும் அவருக்குத்தெரியாது" என்றாள்.

இதைக் கேட்டவுடனே கீர்த்திவர்மர் ஆச்சரியமடைந்தார். அவருடைய முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. "பார்வதி மகனா? என் மருமகனா? எங்கேயிருக்கிறான்?" என்று மகா ஆத்திரத்தோடு கேட்டார். பலவித வருத்தங்களால் குன்றிப் போயிருந்த அவருடைய உடல் பூரித்துப் பிரகாசித்தது. எழுந்து, குலசேகரன் தங்கியிருந்த பேட்டையை விசாரித்துக்கொண்டு, வேகமாய் வெளியே சென்றார்.

அவர் போன சமயத்தில், குலசேகரனும் நீலனும் அங் கில்லாதபடியால், மறுபடியும் வந்து பார்ப்பதாகச் சொல்லி விட்டு, வருத்தத்தோடு திரும்பினுர். அன்று மூன்று தடவை ஆள் அனுப்பிப் பார்த்தும் குலசேகரனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பாட்டி.யாரடைந்த மகிழ்ச்சி அளவில் அடங்காததாயிருந்தது. தன் பேர்த்தியைக் கட்டித் தழுவிப் பல தடவை முத்தமிட்டாள். தன் மகள் பார்வதியை மறுபடியும் பார்க்கலாம் என்ற மகிழ்ச்சியால் பூரிப்படைந்தாள். பழைய கிளை அற்றுப்போகாமல் மறுபடியும் ஒன்று சேரப்போவதைக்கண்டு வெகு திருப்தியடைந்தாள்.

---

12. பத்தினி.

நம் காதலருடைய கதையைத் தொடருமுன் வேறொன்றை இடையிற் கூறவேண்டியது அவசரமாயிருக்கிறது. குலசேகரன் மதுரைக்கு வருவதற்குச் சில மாதங்களுக்கு முன், நல்லோர் யாவரும் கேட்டு நலியும்படியான ஒரு சம்பவம் அங்கு நடந்தது. அந்தச் சம்பவமே பூர்வ பாண்டிய வம்சத்தின் அழிவுக்குக் காரணமாயிற்று. அதின் விவரம் பின்வருமாறு:—

சுகபோக உளையில் விழுந்து, கரைகாணுமல் தத்தளித்துக்கொண்டிருந்த சுந்தரபாண்டியன், ஒருநாள், வீணரான தன் தோழர் சிலரோடு, உல்லாசமாய் வார்த்தையாடிக் கொண்டிருக்கச்சே, வீரபாண்டியனைப் பற்றிய பிரஸ்தாபனை வந்தது. (மூன்றும் அத்தியாயம் காண்க). அப்பொழுது அங்கிருந்த சகுனி ஒருவன் "மகாராஜாவுக்கு எல்லா ஐஸ்வரியமும் இருந்தும், ஒரு விஷயத்தில் வீரபாண்டியர் இவருக்கு மேம்பட்டே இருக்கிறுர்" என்முன். கூட இருந்த அனைவரும் "அதென்ன விஷயம்?" என்று கேட்டார்கள். அதற்கு அச்சகுனி, மகாராஜாவுக்கு ஆயி

மக்கொரு மனைவியர் இருந்தும், வீரபாண்டியருடைய பத்தினியாகிய யமுனாதேவிக்கு இணையான சௌந்தரியவதி நம்முடைய அரசரிடத்திலுமில்லை, வேறு எந்த அரசரிடத்திலுமில்லை" என்றான். அக்கூட்டத்திலுள்ளவர்களில் வீரபாண்டியன் மனைவியைக் கண்டிருந்தவர்களெல்லாரும் அவன் சொன்னதை அநுமோதித்தார்கள்.

இந்தக் காவாலிகள் போனவுடனே, பாண்டியன் மோகாந்தகாரத்தில் அகப்பட்டு, ஞானசூனியனாகி, எவ்விதத்திலும் அப்பெண்ணைக் கைப்பற்றவேண்டும் என்ற வாஞ்சைகொண்டு, தன் தாசனாகிய குண்டகையனுக்கு ஆள் அனுப்பி அழைத்தான்.

ஸ்ரீலஸ்ரீ குண்டகையரவர்களைப் போன்ற மகான்களை இக்காலத்தார் "மாமன்மார்" என்றழைப்பார்கள். காரணம் யாதெனில், ஸ்திரீவர்க்கம் அடங்கலும் இவர்களுக்கு மக்கள் முறையாகவும், புருஷவர்க்கமெல்லாம் மருமக்கள் முறையாகவும் அமைந்துள்ளமையாலேயாமென்க. இப்புண்ணியோத்தமர் தம்மைப் பிராமணன் என்று சொல்லிக் கொள்ளுவார். இவருடைய உயர்வான உற்பத்தியை விளக்கும் இவரது திருநாமமும், நடன ஸ்திரீ ஒருத்தியால் வளர்க்கப்பட்டவர் என்ற ஒரு உண்மையும் தவிர, இவரைக்குறித்த பூர்வோத்திராதி விஷயங்கள் வேறொன்றும் உலகோருக்கு வெளிப்படுத்தப்படவில்லை. பாண்டியனுக்கு இவர் அத்தியாவசியமான ஒரு உத்தியோகஸ்தர். அரசனுடைய அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளில் சுமார் ஐஞ்ஞூறுபேர் இவருடைய தாகின் மூலமாகவே வந்தவர்களாதலால், இவர் ஐஞ்ஞூறு விதத்தில் பாண்டியனுக்கு மாமனாயிருந்தார் என்பது வெளிப்படை.

இவ்வித கீர்த்திகொண்ட குண்டகையர், தம் தொந்தியைத் தூக்கி நடந்துவந்து, மருமகன் சிந்தாக்கிராந்தனாய் உட்கார்ந்திருக்கக்கண்டு மனமிளகி, "என்ன மாப்பிள்ளை! முகம் கறுத்துக்காணுதே. உடம்புக்கென்ன?" என்று வெகு தளுக்காய் வினவினார்.

பாண்டியன்:—ஏ குண்டகா! வீரபாண்டியன் மனைவி என் ஸ்திரீகள் எல்லாரையும் பார்க்க அதிகச் சௌந்தரியவதி என்று சிலர் சொல்லுகிறார்களே. நீ ஏன் அதை எனக்குத் தெரியப்படுத்தவில்லை?

குண்டகன்.—மருமகனே! அவசரப்படாதே. யமுனாதேவியின் அழகைப்பற்றி நான் அறியாமலில்லை. உன் குணத்தை யோசித்துத்தான் அவளைக் குறித்து உன்னிடம் சொல்லவில்லை. அவள் உன் தந்தையாருடைய சகோதரியின் புத்திரி என்பதையும், அவள் தமையன் பழனியில் பிரபலமாய் ஆண்டுவரும் சிற்றரசன் என்பதையும் நீ அறிவாய். அவள் மகா பதிவிரதை. அவளைக் குறித்து உன்னைப் போன்றவனெதிரில் பேசுவதுகூடப் பாவம். நாம் செய்து வருவதோ அக்கிரமமான காரியம் என்று உனக்கே தெரியும். இதில் மதியை இழந்துவிட்டால் உடனே அநர்த்தம் வந்து விளையும். நான் இதுவரையும் உனக்குக் கொண்டுவந்து கொடுத்த பெண்களில் அரச வம்சத்தைச் சேர்ந்தவள் ஆராகிலும் உண்டா? குடிகள் வீட்டில் நீ எத்தனை அக்கிரமத்தைச் செய்து விட்டாலும் மோசம் வந்துவிடாது. உன் வம்சத்தார் குடும்பத்தில் பலாத்காரமாக ஒரு அக்கிரமத்தைச் செய்வாயேயாகில், உன் கிரீடத்திற்கு ஹானிவிளைவது தவறாது. இதெல்லாவற்றையும் கருதித்தானப்பா நான் அவளைப்பற்றி உன்னிடம் ஒன்றும் உரைக்காமல் இருந்தேன். ஏன் கோபப்படுகிறாய்? வேறு எதுவாகிலும் சொல்லு. முடித்துத் தருகிறேன்.

பாண்டியன்.—அடே குண்டகா! இன்று நீ வெறித்திருக்கிறாய்போல் தோன்றுகிறது. வேறு வார்த்தை வேண்டாம். அவளை நீ கொண்டுவந்து சேர்த்தாலாச்சுது; அல்லாவிடில் உன்னை ஊரார்கையில் ஒப்புவித்து விடுவேன். எட்டுநாள் தவணை. ஓடிப்போ.

எனவும், அவ்விடம் விட்டு நீங்கிய குண்டகையன், தலையிலடித்துக்கொண்டு விசனப்பட்டு, "என் ஜென்மம் தானென்ன! இந்த நாசகாலனுக்காக எத்தனைபேர் குடி

யைக்கெடுத்து, எத்தனை பாவத்தைக் கட்டிக்கொண்டேன்! இந்த இழவில் தலையிடவோ பயமாயிருக்கிறது. இதை முடிக்காவிட்டால் அந்தப் பாதகன் ஊரார் கையில் நம்மை ஒப்புவித்துவிடுவதில் தடையில்லை. விஷயம் வெளியானால் என் உயிரை ஒருவன் அரைக்காசுக்கு முதலாய் வாங்கமாட்டான். இந்த நாடெங்கும் என் பேர் கேட்டவுடனே காறித்துப்பாதவரில்லை. இருந்தாலும் செத்தாலும் இவன் இழவோடுதான் கட்டிக்கொண்டு ஆகவேண்டும். எட்டு நாள் தவணை என்றான். அதற்குள்ளாக இதை எப்படி முடிக்கலாம்" என்று ஆலோசித்த வண்ணமாய் வீட்டிற்குப்போனான்.

நவராத்திரிப் பண்டிகை வந்தது. அது நல்லோருக்கும் தீயோருக்கும் ஒன்று போலவே வந்தது. பண்டிகையின் மூன்றும் நாள் அந்திநேரத்தில் யமுனாதேவி தன் கணவனைப்பார்த்து "நான் அம்மன் சந்நிதிக்குப் போய்வருகிறேன்" என்று வணங்கினாள். "பெண்ணே! இன்று அதிக ஜனக் கூட்டமாயிருக்குமே. நானும் ஒரு காரியமாய் வெளியே போகவேண்டியதாயிருக்கிறது. இன்றைக்குப் பொறுத்து நாளைக்குப் போனாலென்ன?" என வீரபாண்டியன் கேட்டான். அதற்கு அவள் "நான் சிறுவயது முதல் இந்த நாளில் அம்மன் தரிசனம் செய்வது வழக்கம். அதற்காக இன்று விரதமும் இருந்து விட்டேன். என்றாலும் உமக்கு விருப்பமில்லாவிடில் நாளைக்கே போகிறேன்" என்று சொல்லித் திரும்பிய யமுனாதேவியைப் பார்த்து வீரபாண்டியன் "அப்படியானால் இன்றே போய்வா. தாதிகளில் இருவரைத் துணைகொண்டு போ" என்று சொன்னான்.

அந்தப் பிரகாரமே, யமுனாதேவி தாதியரோடுங்கூடப் புறப்பட்டு, வெளியே வந்தாள். அரண்மனை முற்றத்திற்கு வரவும், ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டவள் போல திரும்பி, உள்ளே ஓடி, தான் போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற வீரபாண்டியனைத் தழுவி, முத்தமிட்டுப் பெருமூச்செறிந்து, "நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு விரைவாக வெளியே சென்றாள்.

ஒரு நாளும் இல்லாத விதமாய் அன்று அவள் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்த வீரபாண்டியன், விசாரமடைந்து, "பாவம்! யமுனையுடைய மனதில் ஏதோ சஞ்சலமுண்டாகியிருக்கிறது. அது என்னவென்று தெரியவில்லை. நான் பட்டத்திற்குரியவன் என்றெண்ணி, இவளுடைய பெற்றோர், என்பிறப்பிலுண்டாகிய குறைவையும்பாராட்டாமல், இவளை எனக்கு விவாகம் செய்து கொடுத்தார்கள். அந்தோ! ஒரு சக்கிரவர்த்திக்குப் பட்டஸ்திரீயாயிருக்க வேண்டியவளாகிய நீ, இந்த நீசனுக்கு வாழ்க்கைப்பட்டு அல்லற்பட நேரிட்டது. உனக்கோ அரசவாழ்க்கை வேண்டுமென்ற ஆசையே இல்லை. நீ என்னைத் தடுக்காதிருந்தால், இதற்குள்ளாக என் தந்தையைக் கொன்ற பாதகரை நிர்மூலம் செய்து, பாண்டிய சிம்மாசனமேறியிருப்பேன். கடுங்கோடையில் வீசும் குளிர்ந்த காற்றைப்போல, உன் அன்பான வார்த்தைகள் என் கொதிப்பை ஆற்றி ஆறச் செய்கின்றன. கடவுள் உன்னை எனக்குத் தாராதிருந்தால், எத்தனை பழிபாவங்களைச் செய்திருப்பேன்! உன் கண் கலங்கப்பார்த்து என் மனம் வருந்துகிறது. நிமித்தங்களும் நன்றாயில்லை; ஏதாயினும் ஆபத்து வரப்போகிறதோ?" என்று சிந்தனை செய்துகொண்டு வெளியே போய்விட்டான்.

யமுனாதேவி வழக்கமாக நவராத்திரியில் அம்மன் தரிசனைக்குப் போவதை அறிந்த குண்டகையன், அவள் அரண்மனைவிட்டுப் புறப்படுவதைப் பார்த்து அறிவிக்கும்படி உளவர்களை நியமித்துவிட்டு, ஆலயத்திலேயே சுற்றிக்கொண்டிருந்தான். அன்று அவன் அள்ளிப் பூசிய விபூதிக்கும், ஜெபித்த மந்திரங்களுக்கும், செய்த வந்தனைவழிபாடுகளுக்கும் அளவேயில்லை. இங்ஙனம் குண்டகையன் பக்திபண்ணுவதைக் கண்டோரெல்லாரும், யார் குடிக்கு அனர்த்தம் விளையப்போகிறதோ எனக் கலக்கமுற்றார்கள்.

யமுனாதேவி கோவிலுக்கு வந்து, வழக்கப்படி செய்ய வேண்டிய கர்மங்களை நிறைவேற்றிவிட்டு, தன் பர்த்தாவைக் காக்கவேண்டுமென ஏகமனதாய் அம்மனையும் சுவாமியையும் வேண்டிக்கொண்டபின், வீட்டிற்குப் போகத்திரு

டிபினாள். அப்போது கேசாதிபாதம் விபூதியும், கழுத்தில் ருத்திராக்ஷமும், கையில் ஜெபமாலையும் கொண்டு, சாக்ஷாத் நீலகண்டனே உருவெடுத்து வந்தது போல, குண்டகப் பாதகன் அவளெதிரில் தோன்றி “வீரபாண்டியன் பத்தினியே! இந்தப் பெருங் கூட்டத்தில் நீ வீட்டிற்குப் போவதெப்படி? நாலு வாசல்களிலும் ஜனங்கள் நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே. ஆகிலும் என் பின்னே வா. ஒரு வழி காட்டுகிறேன்” என்று சொல்லிக்கொண்டு முன்னடந்தான். இவ் வஞ்சகனை இனமறியாத யமுனாதேவி, “இவர் யாரோ பெரியவர். நம்மை அறிந்தவராகக் காண்கிறது. இவர் இச்சமயத்தில் வந்தது அம்மனுடைய கிருபைதான்” என்று எண்ணிக்கொண்டு, தாதிகளோடு அவன் பின்னே நடந்தாள். சுவாமி சந்நிதிக்குச் சற்று தூரத்திற்கப்பால் செல்லவும், அங்கு தரையில் காணப்பட்ட படிகளைக் காண்பித்து, “இவ்வழியாகப் போனால், முன் மண்டபத்திற்கெதிரிலிருக்கும் தெப்பக்குளத்தின் மேல்கரையில் போய்ச் சேரலாம். இது குருக்கள் ஸ்நானத்திற்குப் போகும் வழி. அங்கிருந்து உன் மாளிகை சமீபமே. உள்ளே வெளிச்சமிருக்கும். போய்வா” என்று சொல்லிச் சென்றான் சண்டாளனாகிய குண்டகன்.

ஸ்திரீகள் மூவரும் அப்பாதகனை வணங்கிவிட்டு, படிகளில் இறங்கி நடந்தார்கள். கொஞ்ச தூரம் செல்லவும், யாரோ அவர்களுக்குப் பின்னிருந்த ஒரு கதவை அடைத்தது கேட்டு, கலக்கமடைந்து நின்றார்கள். மறு நிமிஷத்தில், ராக்ஷத லக்ஷணம் பொருந்திய சில காப்பிரிப் பெண்கள் வந்து அம்மூவரையும் பிடித்து, குழந்தைகளைத் தூக்குவதுபோல, தூக்கிச் சென்றார்கள். அவ்வழி பூமிக்குள்ளாகச் சென்று, வைகையின் வட கரையிலுள்ள ஒரு அரண்மனையில் போய்ச் சேர்ந்தது.

அந்த அரண்மனை, அரசர்கள் வேனிற் காலத்தில் தங்குவதற்காக வேண்டிய வசதிகளுடையதாய்க் கட்டப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் விஸ்தாரமான ஒரு சிங்காரவனமிருந்தது. யமுனாதேவியைக் கொண்டுபோனவர்கள், அவளை அந்த மாளிகையின் ஐந்தாவது மெத்தையிலுள்ள

ஒரு அலங்காரமான அறையில் சேர்த்து, அங்கு இருக்கும்படி செய்துவிட்டு, அறையின் கதவை வெளிப்புறத்தில் தாளிட்டுச் சென்றார்கள். தாதிகள் இருவரையும் வேறிடம் கொண்டுபோனார்கள்.

இடத்தைப்பார்த்தவுடனே, இந்த அக்கிரமஞ்செய்தது பாண்டியனாகத்தானிருக்கவேண்டும் என்று கிரகித்துக்கொண்ட யமுனாதேவி, விதியை நொந்துகொண்டு, தன் பதியை நினைந்து கண்ணீர் சிந்தி விசனப்பட்டாள். நெடுநேரம் சென்றபின், எழுந்து சாளரத்தண்டைபோய், கீழே பார்த்து தான் நின்ற இடம் தரைக்குச் சுமார் அறுபது முழ உயரத்திலிருந்ததாக அநுமானித்துக்கொண்டாள். அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த விசித்திரமான சாமான்களையும், பொற்றும்பாளங்களில் இருந்த தின்பண்டங்களையும், அங்கு விரித்திருந்த விலையுயர்ந்த கம்பளங்களையும், போட்டிருந்த தந்தக் கட்டிலையும், ஆசனங்களையும், மற்ற விநோதங்களையும் கவனிக்கவேயில்லை. துக்கமென்பதே ஒரு சிலையாக உருக்கொண்டதுபோல அசையாமல் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய மனோபாவத்தை வருணிக்க யாரே வல்லார்!

பொழுதுபட்டிருளவும், பாண்டியன் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, குண்டகன் பின் தொடர, மகா ஆனந்தத்தோடு அவ்வரண்மனையை அடைந்தான். மேன்மாடிக்குச் சென்று, யமுனாதேவியிருந்த அறையின் எதிரிலுள்ள நடைசாலையில் நின்று, பலகணிச் சந்தின்வழியாய் உள்ளே நோக்கி அச்சுந்தரவதியைக் கண்டான். தான் கண்ட காக்ஷியால் பிரமித்து நின்று, “ஆகா!” என் அத்தையார் பெண் இத்தனை ரூபவதியாயிருக்க, இவளை நான் மணக்காமல் வீணே பொழுதுபோக்கிவிட்டேனே. வீரபாண்டியன் பாக்கியசாலி என்பதில் சந்தேகமில்லை. இவள் மகா பத்தினி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனாலுமென்ன? என் விருப்பத்திற்கு இணங்காத பெண்ணை நான் இதுவரையும் காணவில்லை. இவள் என் அத்தை மகளாயிருப்பதால் இவளோடு சாதாரணமாய் வார்த்தைபாடுவதற்கு எனக்குப் பாத்தியதை இருக்கவேயிருக்கிறது. மைத்

துனன் என்னும் ரீதியில் விளையாட்டை ஆரம்பிப்போம். என் பிரிடம் போனாலும் இவளை நான்விடப்போகிறதில்லை" என்று எண்ணமிட்டவனாய், வாசலைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான்.

தன்னைப் பார்த்தவுடனே சினந்து எதாகிலும் பேசுவாள், தர்ம நீதிகளைக் கூறுவாள், என்று எதிர் பார்த்திருந்த பாண்டியன், அவள் மௌனமாய் நின்றதைக்கண்டு ஆச்சரியமடைந்தான். அவளுடைய கண்கள் தூரத்தில் எதையோ பார்ப்பதாகத் தோன்றினதன்றி, எதிரில் நின்ற தன்னைக் கண்டதாகத் தோன்றவில்லை. சற்று நேரம் செல்ல, பாண்டியன், சும்மா நிற்பதில் பிரயோஜனமில்லை என்றுணர்ந்து, வார்த்தையாட ஆரம்பித்தான். அவளைப், போற்றியும், தூற்றியும், நயந்தும், பயமுறுத்தியும் விநோதவேடிக்கையாகப் பேசியும், பலவிதமாக நடித்தும் அவள்மேல் புஷ்பங்களை எடுத்தெறிந்தும், ஆடியும், பாடியும் தானறிந்த தந்திரங்களையெல்லாம் செய்து பார்த்தும், அவளுடைய முகம் எவ்வித மாறுதலும் அடையாமல் கல் போலவிருக்கக்கண்டு பிரமித்தான். அதனால் கோபம் கொண்டு வீரபாண்டியனைச் சித்திரவதை செய்வதாகப் பயமுறுத்தினான். அதற்கும் அவள் அசையாதிருந்தபடியால், அவன் சமீபித்து அவளுடைய கரங்களைப்பற்றி இழுத்து ஒரு ஆசனத்திலிருத்த முயன்றான்.

அவளுடைய பரிசத்தை உணர்ந்த யமுனாதேவி, அப்போதே பிரஞ்ஞையடைந்தவள் போலத் துடித்து, அவன் கரங்களை உதறிவிட்டு அப்பால் சென்று, கண்கள் தளதளவென ஜொலிக்க, உடல் நடுங்க ஆவேசங் கொண்டவள் போல் உறத்துக்கூவி,

"ஏ மூடா! நீயோ பாண்டியன்! நீயோ மகேஸ்வரன் சந்ததி! ஆயிரம் பாண்டியர் வீற்றிருந்தாண்ட சிம்மாசனத்தில் இந்தக் கூத்தனோ ஏறவேண்டும்! சீ! நீயும் உன் குலமும் நாசமடைய நாள் கிட்டி விட்டது. உன் வமிசத்தார் பிரஷ்டராகப் போகிறார்கள். நீசர் உன் பேரைத்தரித்து உன் நாட்டைப்பங்கிட்டு ஆளப்போகிறார்கள்.

ஏ அதமாதமா! ஏ பாதகா! பித்ருகாதகா! வம்சத்துரோகி! பாண்டிய குலத்திற்குக் கோடாலிபோல் வாய்த்தாய்! நமது வம்சத்தில் என்றைக்காவது இப்படிநேரிட்டதுண்டா? நான் பத்தினி என்பது உண்மையானால் என் சொல் தவறாது. என்னை விடும்படி நான் கேட்கவில்லை. போகும்படி நீ வழிவிட்டாலும் நான் போகேன். இராவணன் கைக்குத் தப்பிய சீதை இராமன் கையில் அவஸ்தைப்பட்டதுபோல நான் என் பர்த்தாவினிடம் சென்று துன்பப்படேன். நீ செய்திருக்கும் கணக்கில்லாத பழிகளோடு என்பழியையும் ஒப்புக்கொள்." என்று சொல்லி, அம்புபோல் பாய்ந்து, சாளரவழியாய் வெளியேசாடி, கற்பதித்த அரண்மனை முற்றத்தில் விழுந்துயிர்துறந்தாள்.

அவள் புகன்ற கொடிய வசனங்களைக் கேட்டுக்கொண்டு விறைப்புற்று நின்ற பாண்டியன், அவள் திடீரென வெளியே சாடினதைத் தடுக்கக் கூடவில்லை. அவள் சாளரத்தைத் தாண்டினவுடனே அவன் ஓடிவந்து கீழேநோக்க, அப்போதே தரையில் மோதுண்டு நைந்த அவளுடைய சுந்தரவுடலைக் கண்டு, சித்தசுயாதீன மற்றவனைப்போல அதைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான்.

நடைசாலையில் நின்று ஒற்றுக்கேட்டுக்கொண்டிருந்த குண்டகன், நடந்த விஷயத்தைக் கிரகித்துக்கொண்டு, உள்ளே பிரவேசித்து, "மகாராஜா! முடிந்துபோன காரியத்திற்காக இனி வருத்தப்பட்டு ஆவதொன்றுமில்லை, கீழே போகலாம்" என்றான். பாண்டியன் அவனை நோக்கி குண்டகா! நீ இனிமேல் என் கண்முன் வரவேண்டாம். நாளை விடியுமுன்னதாக மதுரையை விட்டுப்போய் எங்கேயாவது மறைந்துகொள். போகிறவழியில் மந்திரியை வரச்சொல்லிப்போ" என்றான்.

கொஞ்சநேரத்தில் மந்திரி வந்து, சாளரத்தண்டையிலேயே கீழே பார்த்தவண்ணமாய் நின்றுகொண்டிருந்த அரசனை வணங்கினான்.

அரசன் —குண்டகன் தெரிவித்தானா?

மந்திரி (பெருமூச்சோடு).—ஆம்.

அரசன்.—இனி ஆகவேண்டியதென்ன ?

மந்திரி.—இன்றிரவிலேயே இந்தக் காரியம் வீரபாண்டியரு க்குத் தெரிந்துவிடும். யமுனாதேவியின் தமயனுராகிய பெருமாளும் தற்சமயம் இவ்விடத்திலேயே இருப்பதால் அவருடைய செவிக்கும் இது உடனே எட்டிவிடும். இதைக் கேள்விப்படவும் இருவரும் மதுரையை விட்டுப் போய் நமக்கு ஆபத்தினைக்ப் பார்ப்பார்கள் அரசவழி சந்தாரில் பலர் அவர்கள் பக்ஷம் சேர்ந்து விடுவார்கள். ஆகையால் அவர்கள் இருவரையும் உடனே பிடித்துச் சிரச்சேதம் செய்துவிடவேண்டியதே முதற்காரியம். தேவியாரின் பிரேதத்தை எடுத்துத் தகனம் செய்ய உத் தரவாகவேண்டும்.

அரசன்.—உன் ஆலோசனையைக் கேட்டு இதுவரையும் நான் சிரசாக்கினை செய்த ஆட்களுக்குக் கணக்கேயில்லை. போதும். அவ்விருவரையும் பிடித்துக் காராக்கிரகம் சே ர்த்துவிடு. யமுனையின் உடலை எடுத்து சமஸ்த மரியா தையோடும் தகனிக்க ஒழுங்குசெய், என்று சொல்லி, முத்திரை மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்து, மறுநாள் உதயத்தில் வந்து விவரம் தெரிவிக்கும்படி கட்டளையிட் டனுப்பினுன்.

பாண்டியன் அவ்விடம் விட்டகன்று, வைகையைக் கடந்து, பட்டணத்தில் பிரவேசித்துத் தன் அரண்மனையை அடைந்தான். அடையவும், போஜனசாலைக்குச் செல்லா மலும், யாருடனும் வார்த்தையாடாமலும் நேரே சயனமா ளிகைக்கேகினுன். அங்கு வழக்கப் பிரகாரம் வந்து காத் திருந்த நடனப் பெண்களையும், மதுபானம, சிற் றுண்டி, தாம்பூலம் முதலியவற்றைக் கொண்டுவந்த கன்னி கைகளையும், வெளியே போகச் சொல்லிவிட்டு, சித்திரமஞ் சத்தை வெறுத்து,வெறும் பளிங்குக் கற்றரையில் தலை யணைமுதலாயில்லாமல் படுத்தான். யமுனாதேவி மொழி ந்த வசனங்கள் அவன் மனதில் ஊடுருண்டு பதிந்திருந்தன.

தான் அதுகாறும் நடந்துகொண்ட விதத்தை எண்ணித் தன்னையே வெறுத்தான். இனி ஸ்திரீகளின் முகத்தைப் பார்ப்பதேயில்லை என்றும், உத்தியோகம் செய்யும் பொழுது தவிர மற்றக் காலமெல்லாம் துறவிபோலவே இருப்பதாகவும், உறுதியாய் நிர்ணயம் செய்தான்.

பாண்டியன் இங்ஙனமிருக்க, யமுனாதேவி விழுந்து மரித்ததைக் கண்ட அரண்மனைச் சேவகரில் ஒருவன், "ஆகா! என்ன அநர்த்தம் இது! நாம் உடனே இவ்விஷயத்தை வீரபாண்டியருக்கு அறிவிக்கவேண்டும்" என்று சொல்லி, ஒரே ஓட்டமாய் ஓடி வீரபாண்டியனுடைய அரமனையைக் கிட்டி, துவார பாலகர் மூலமாக நடந்த காரியத்தைத் தெரிவித்தான்.

அவ்வேளையில் வெளியேயிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்த வீரபாண்டியன், கோவிலுக்குச் சென்ற தன் பத்தினி நெடுநேரமாகியும் வாராததுகண்டு, அவளைத் தேடும்படி சேவகரை அனுப்பிவிட்டு, தானும் புறப்பட்டு வெளியே வந்துகொண்டிருந்தான், சேவகன் கொண்டுவந்த செய்தி செவியில் பட்டவுடனே, "ஆ! என் பத்தினிபோய்விட்டாளா!" என்று கதறிக் கீழே விழுந்து, கண்ணீர் ஆறாகப் பெருக, கடகடவென்று உருண்டான். அவன் தாயாராகிய சந்திரவல்லி ஓடிவந்து, மகனை வாரி எடுத்து "ஐயோ! மகனே! இந்தத் துன்பமெல்லாம் நீ பட்டம் ஆளவேண்டும் என்று நான் கொண்ட ஆசையாலல்லவோ வந்தன. நான் இனி இருந்து ஆவதென்ன?" எனப்பலவாறு புலம்பினள்.

வீரபாண்டியன் தெளிவடையும், ஒரு சேவகனை விளித்து, உடனே போய்த் தன் மைத்துனனாகிய பெருமானுக்குக் காரியத்தைச் சொல்லும்படி உத்தரவிட்டான்.

சமாச்சாரத்தைக் கேட்ட பெருமான், "இத்துன்பம் இதனோடு நில்லாது. மதுரையில் வசிப்பது உசிதமல்ல என்று நான் பலதடவைசொல்லியும் வீரன்கேட்டானில்லை. இங்கிருந்தால் பாண்டியன் எங்களிருவரையும் கொல்லுவது தப்பாது. ஆதலால் சிறிதுநேரம் தாமதிக்காமல் வெ

ளியேறிவிடவேண்டும்" எனத் தீர்மானித்து, இரண்டு குதிரைகளைச் சித்தப்படுத்தி வீரபாண்டின் மாளிகைக்குக் கொண்டுவரும்படி சேவகருக்குச் சொல்லிவிட்டு, ஓட்டமாய்ச் சென்று, மைத்துனனைக் கண்டழுதான். சிறிது நேரம் துக்கித்துவிட்டு, பெருமாள் வீரனைப் பார்த்து "இவ்விடத்தில் இனி நாம் அரை நிமிஷமும் தங்கலாகாது. அந்தக் கொலைகாரன் நம்மை இன்றிரவிலேயே தேடுவான். உடனே எழுந்து உன்னிடமிருக்கும் அபூர்வமான முத்துக்களை எடுத்துக்கொண்டு என்னோடு வா. குதிரைகள் தயாராயிருக்கின்றன. பின்னால் ஆகவேண்டிய காரியங்களை பழனிக்குப்போனபின் ஆலோசித்துக் கொள்ளலாம்" என்று சொல்லித் துரிதப்படுத்தினான். வீரனும் அதற்கிணங்க, இருவரும் புறப்பட்டு, குதிரையேறி வேகமாய்ச் சென்று மேல்திசையை நோக்கி ஓடினார்கள்.

இவர்கள் வெளியேறினதற்குக் கால் நாழிகைக்குப் பின், பாண்டியனுடைய ஆஸ்தான மண்டபத்திற்கெதிரிலுள்ள கோபுரத்தில் கட்டியிருந்த பெரிய மணி அடிக்கத் துவக்கிற்று. கோட்டைவாயில்களைக் காப்போர், மணிச்சத்தம் கேட்டு, "ஏதோ இன்று வாயிலடைக்க உத்தரவாகிறதே" என ஆச்சரியப்பட்டவர்களாய், கதவுகளைத் தூக்கிப் பூட்டினார்கள். மதில்களின் மேலுள்ள சாமக்காரர் சத்தம் செய்தார்கள். கொத்தளங்களிலிருந்து பேரிகைகள் தொனித்தன.

தப்பியோடினவர்கள் சோழவந்தானுக்குப் போய் இளைப்பாறி, மறுபடியும் ஓடி, மறுநாளில் பழனி சேர்ந்தார்கள். அங்கு தாமதித்து ஆலோசனை செய்தார்கள். வீரபாண்டியன் சில குதிரை வீரரைத் துணைகொண்டு, டில்லிக்குப்போய், சுல்தான் அல்லாவுதீனிடம் சகாயம் தேடி, பாண்டிய சிம்மாசனத்தைக் கைப்பற்ற முயலவேண்டுமென்றும், பெருமாள் நாட்டிலேயே மறைந்திருந்து, சிற்றரசரையும் சேனாபதிகளையும் வசப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். அப்படியே, வீரபாண்டியன் சில அபூர்வமான முத்துக்களையும் மணிகளையும் சுல்தானுக்குக் காணிக்கையாக எடுத்துக்கொண்டு டில்லிக்குப் பயணமா

தான் அதுகாறும் நடந்துகொண்ட விதத்தை எண்ணித் தன்னையே வெறுத்தான். இனி ஸ்திரீகளின் முகத்தைப் பார்ப்பதேயில்லை என்றும், உத்தியோகம் செய்யும் பொழுது தவிர மற்றக் காலமெல்லாம் துறவிபோலவே இருப்பதாகவும், உறுதியாய் நிர்ணயம் செய்தான்.

பாண்டியன் இங்ஙனமிருக்க, யமுனாதேவி விழுந்து மரித்ததைக் கண்ட அரண்மனைச் சேவகரில் ஒருவன், "ஆகா! என்ன அநர்த்தம் இது! நாம் உடனே இவ்விஷயத்தை வீரபாண்டியருக்கு அறிவிக்கவேண்டும்" என்று சொல்லி, ஓரே ஓட்டமாய் ஓடி வீரபாண்டியனுடைய அரமனையைக் கிட்டி, துவார பாலகர் மூலமாக நடந்த காரியத்தைத் தெரிவித்தான்.

அவ்வேளையில் வெளியேயிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்த வீரபாண்டியன், கோவிலுக்குச் சென்ற தன் பத்தினி நெடுநேரமாகியும் வாராததுகண்டு, அவளைத் தேடும்படி சேவகரை அனுப்பிவிட்டு, தானும் புறப்பட்டு வெளியே வந்துகொண்டிருந்தான். சேவகன் கொண்டுவந்த செய்தி செவியில் பட்டவுடனே, "ஆ! என் பத்தினிபோய்விட்டாளா!" என்று கதறிக் கீழே விழுந்து, கண்ணீர் ஆறாகப் பெருக, கடகடவென்று உருண்டான். அவன் தாயாராகிய சந்திரவல்லி ஓடிவந்து, மகனை வாரி எடுத்து "ஐயோ! மகனே! இந்தத் துன்பமெல்லாம் நீ பட்டம் ஆளவேண்டும் என்று நான் கொண்ட ஆசையாலல்லவோ வந்தன. நான் இனி இருந்து ஆவதென்ன?" எனப்பலவாறு புலம்பினாள்.

வீரபாண்டியன் தெளிவடையும், ஒரு சேவகனை விளித்து, உடனே போய்த் தன் மைத்துனனாகிய பெருமானுக்குக் காரியத்தைச் சொல்லும்படி உத்திரவிட்டான்.

சமாச்சாரத்தைக் கேட்ட பெருமான், "இத்துன்பம் இதனோடு நில்லாது. மதுரையில் வசிப்பது உசிதமல்ல என்று நான் பலதடவைசொல்லியும் வீரன்கேட்டானில்லை. இங்கிருந்தால் பாண்டியன் எங்களிருவரையும் கொல்லுவது தப்பாது. ஆகையால் நிமிஷமும் தாமதிக்காமல் வெ

வெளியேறிவிடவேண்டும்" எனத் தீர்மானித்து, இரண்டு குதிரைகளைச் சித்தப்படுத்தி வீரபாண்டின் மாளிகைக்குக் கொண்டுவரும்படி சேவகருக்குச் சொல்லிவிட்டு, ஓட்டமாய்ச் சென்று, மைத்துனனைக் கண்டழுதான். சிறிது நேரம் துக்கித்துவிட்டு, பெருமாள் வீரனைப் பார்த்து "இவ்விடத்தில் இனி நாம் அரை நிமிஷமும் தங்கலாகாது. அந்தக் கொலைகாரன் நம்மை இன்றிரவிலேயே தேடுவான். உடனே எழுந்து உன்னிடமிருக்கும் அபூர்வமான முத்துக்களை எடுத்துக்கொண்டு என்னோடு வா. குதிரைகள் தயாராயிருக்கின்றன. பின்னால் ஆகவேண்டிய காரியங்களை பழனிக்குப்போனபின் ஆலோசித்துக் கொள்ளலாம்" என்று சொல்லித் துரிதப்படுத்தினான். வீரனும் அதற்கிணங்க, இருவரும் புறப்பட்டு, குதிரையேறி வேகமாய்ச் சென்று மேல் திசையை நோக்கி ஓடினார்கள்.

இவர்கள் வெளியேறினதற்குக் கால் நாழிகைக்குப் பின், பாண்டியனுடைய ஆஸ்தான மண்டபத்திற் கெதிரிலுள்ள கோபுரத்தில் கட்டியிருந்த பெரிய மணி அடிக்கத் துவக்கிற்று. கோட்டைவாயில்களைக் காப்போர், மணிச் சத்தம் கேட்டு, "ஏதோ இன்று வாயிலடைக்க உத்தரவாகிறதே" என ஆச்சரியப்பட்டவர்களாய், கதவுகளைத் தாக்கிப் பூட்டினார்கள். மதில்களின் மேலுள்ள சாமக்காரர் சத்தம் செய்தார்கள். கொத்தளங்களிலிருந்து பேரிகைகள் தொனித்தன.

தப்பியோடினவர்கள் சோழவந்தானுக்குப் போய் இளைப்பாறி, மறுபடியும் ஓடி, மறுநாளில் பழனி சேர்ந்தார்கள். அங்கு தாமதித்து ஆலோசனை செய்தார்கள். வீரபாண்டியன் சில குதிரை வீரரைத் துணைகொண்டு, டில்லிக்குப்போய், சுல்தான் அல்லாவுதீனிடம் சகாயம் தேடி, பாண்டிய சிம்மாசனத்தைக் கைப்பற்ற முயலவேண்டுமென்றும், பெருமாள் நாட்டிலேயே மறைந்திருந்து, சிற்றரசரையும் சேனாபதிகளையும் வசப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். அப்படியே, வீரபாண்டியன் சில அபூர்வமான முத்துக்களையும் மணிகளையும் சுல்தானுக்குக் காணிக்கையாக எடுத்துக்கொண்டு டில்லிக்குப் பயணமா

னன். பெருமாள் நாட்டிலேயே மறைந்து திரிந்து, பாண்டியன் செய்த அக்கிரமத்தை எல்லாருக்கும் தெரிவித்து கக்ஷி உண்டாக்கிக்கொண்டிருந்தான். பிரபுக்களிலும், சிற்றரசரிலும், சேனபதிகளிலும் பலர் அவனுக்கு உதவி புரிவதாக வாக்குப்பண்ணினர்கள்.

பாண்டியனுடைய கட்டளையைப் பெற்ற மந்திரியானவன், வைகைதாண்டி பட்டணத்திற்குள் வந்தவுடனே, ஆஸ்தானமணி அடித்துக் கோட்டை வாசல்களைப் பூட்டவும், வீரபாண்டியனையும் பெருமாளையும் பிடித்துக் காராக்கிரகம் சேர்க்கவும் உத்தரவு செய்தான். அவ்விருவரும் தப்பிப்போனது தெரிந்தவுடனே, இருநூறு குதிரை வீரரை அனுப்பிப் பல திசையிலும் தேடும்படி செய்தான். அதுவும் விருதாவாயிற்று. அதினல் மிகுந்த கலக்கமடைந்தான்.

அதிகாலையில் மந்திரி பாண்டியன் சமுகத்திற்குச் சென்று, நடந்தவற்றை அறிவித்தான். "மிஞ்சிப்போன காரியத்தைச் சிந்திப்பதில் பயனில்லை. இனி அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளைக் கண்டுபிடித்து, நடக்கவேண்டிய வழியைப் பார்" என்றான் பாண்டியன்.

யமுனதேவியின் சரீரம் அவ்விரவிலேயே எல்லா மரியாதைகளோடும் தகனிக்கப்பட்டது.

குண்டகையன் அரசன் கட்டளையின்படியே மறுநாள் விடியற்காலையில் மதுரை விட்டுப் புறப்பட்டு, தன்னிடமிருந்த ஏராளமான திரவியத்தை மூன்று வண்டில்களில் ஏற்றிக்கொண்டு, மாறுவேடத்தோடு, மூஷிக நாட்டிற்குப் போகப் பயணமானன். அவன் செங்கோட்டைக்கு வந்து, இனிப் பயமில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில், அவனை இனமறிந்த ஒருவன் அங்குள்ள மற்றவர்களுக்குத் தெரிவித்தான். குண்டகையன் அபகரித்துச் சென்ற ஒரு பெண்ணின் உறவினர் அதைக் கேள்விப்பட்டு வந்து, அவனைச் சூழ்ந்துகொண்டு, தடியால் அடித்துக் கொன்றுபோட்டார்கள். அவனுடைய திரவியத்தை அங்கு கூடிவந்தவர்கள் சூறையிட்டுச் சென்றார்கள்.

இதற்கப்புறம், சுந்தரபாண்டியன் இராஜ்ய காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்தான். வெகுகாலமாக அஜாக்கிரதையா யிருந்துவிட்டபடியால், தேசத்தில் நுழைந்துப் போயிருந்த கேடுகளை அகற்றுவது அசாத்தியமாய்க் கண்டது. அவன் மிகுந்த தீக்ஷண்ய புத்தி உடையவனாயிருந்ததனால், கொஞ்சக் காலத்திற்குள்ளாகவே தன் அரசாங்கத்தின் உண்மையான நிலைமையை அறிந்துகொண்டான். அமைச்சரிலும், சிற்றரசரிலும் வீரபாண்டியனுக்குச் சார்பாயிருந்தவர்கள் இன்னார் என்று தெரிந்து கொண்டான்; பிரதான உத்தியோகஸ்தருடைய உண்மையான தன்மையையும் கண்டு கொண்டான்; எல்லாவற்றையும் சீர்படுத்த காலமும் பணமும் தேவை என்றறிந்தான். சன்னஞ் சன்னமாகக் காரியாதிகளை நோக்கிக் கொண்டுவந்தான்.

குலசேகரன் மதுரைக்குச் சென்ற காலத்தில் அரசாங்க நிலைமை இவ்வாறிருந்தது.

---

13. அங்காரகன்.

கீர்த்திவர்மர் பேட்டைக்குப்போய்த் தேடிவிட்டுவந்த அன்று பகலெல்லாம், குலசேகரன் தனக்கு மதுரையில் அறிமுகமான சிலரைக் கண்டு பயணம் சொல்லுவதிலும் தந்தையாருக்காகச் சில அரிய நூல்களையும், தாயாருக்காக ஒரு சேலையையும், பொன்னூரிலுள்ள தன் சிநேகிதருக்காக சில ஆயுதங்களையும் கொள்ளுவதிலும் கழித்தான். மேலும் கடைவீதியைச் சுற்றிக்கொண்டிருந்தபடியால், கீர்த்திவர்மரும் அவருடைய வேலைக்காரரும் தேடின நேரத்தில் இவர்களைக் காணக் கிடைக்கவில்லை. அந்திப்பொழுதில் அவர்கள் தங்குமிடத்திற்குத் திரும்பிவந்து, பயணத்திற்கு அவசியமான ஒழுங்குகளைச் செய்துகொண்டிருக்கும் போது, ஒருவன் வந்து, கீர்த்திவர்மர் தேடிவிட்டுப்போனதைத் தெரிவித்தான். குலசேகரன் அதைக்கேட்டு "நாம் கல்யாணிக்குச் சொன்னபடி, நேற்றிரவில் ஒரு தடவை

அவர்கள் வீட்டிற்குப் போய்வந்தாயிற்று. இனிமேல் அங்கு செல்வது சரியல்ல. ஏதோ நாம் சொற்ப உபகாரம் செய்ததற்காக அந்த வீட்டாரெல்லாரும் நம்மைத் துதித்தியம் செய்வார்கள். அதைக்கேட்க எனக்கு விருப்பமில்லை. ஒருவேளை ஏதாகிலும் சன்மானம் செய்யவும் விரும்புவார்கள். அதைப் பெற்றுக்கொள்வது நல்லொழுக்கமல்ல. மறுத்தாலும் அவ்வீட்டார் மனம் வருந்துவார்கள். கல்யாணியின் முகத்தை இன்னொருதரம் பார்க்க மெத்த ஆசையாகவே இருக்கிறது. என்றாலும் போவது சரியல்ல. நாளைக் காலையிலே நந்திக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துத் தீர்த்துவிட்டு வெளியேறிவிடுவதே நலம்" என்று தீர்மானித்தான். நாளைக்கு நடப்பதை அறிய வல்லார் யார்?

உஷ்ண காலமாயிருந்தபடியால் நித்திரைவருவது கஷ்டமாயிருந்தது. ஆகையால் மதுரைப்பட்டணத்தைக் கொஞ்ச நேரம் சுற்றிவரலாம் என்று எண்ணி, வேலாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியேபோய், தெருக்கள் வழியாக மெதுவாய் நடந்துகொண்டிருந்தான் நம் கதாநாயகன்.

அதே சமயத்தில், வெகுகாலமாய் நகர பரிசோதனைக்காக இரவில் வெளியே செல்லும் வழக்கத்தை விட்டிருந்த பாண்டியன், முந்தின இரவில் ரணவீரனுடைய ஆட்கள் செய்த அக்கிரமத்தை நினைத்து, அரண்மனையை விட்டு இரண்டு சேவகர் பின்தொடர, பட்டணத்துக் காவலின் சிரத்தையைப் பரீக்ஷிக்குமாறு வெளியே சென்றான்.

அந்த இரவில்தானே, அங்காரகன் எனப்பட்ட ஒரு யானை, மதவெறிகொண்டு, சங்கிலிகளை அறுத்தெறிந்து, மாவுத்தரில் ஒருவனைக் கொன்று போட்டு, தெருவழியாகச் செல்ல ஆரம்பித்தது. அது ஒன்பது முழ உயரமுள்ள பர்வதாகாரமான ஒரு பெரிய மிருகம். நறுக்கப்பட்டு தங்கப் பூண்கள் கட்டியிருந்த அதின் பெரிய கொம்புகள் ஒவ்வொன்றும் இரண்டுமுழ நீளமாயிருந்தது. போகிற வழியிலுள்ள மரங்களையும் செடிகளையும் உதைத்தும், கிழித்தும், பிடுங்கி எறிந்தும், கடைகளைத் தாக்கி உடைத்து,

பண்டம் பாடிகளை வாரித் தெருவிலிறைத்தும், ஓடியும், சாடியும், இந்த மதுராபுரிக்கு நானே அரசன் என்றதுபோல உறுமியும், பலவாறான அழிம்புகளைச் செய்துகொண்டு நடந்தது. நள்ளிருளாதலால் தெருக்களில் ஜனப்புழக்கம் இல்லாதிருந்தது. அங்கங்கே போய்க்கொண்டிருந்த யாரோ சிலரும்கூட யானையின் குரல்கேட்டு ஓடிப் பதுங்கிக்கொண்டார்கள்.

இப்படி, மட்டில்லாத கர்வத்தோடு அலக்ஷியமாய் நடந்துவரும் கஜேந்திரன், ஒரு இடுக்கமான தெருவின் வழியாகச் செல்லும்போது, நரேந்திரனாகிய சுந்தரபாண்டியனைச் சந்தித்தான். அவ்வீதி வெகு ஒடுக்கமாயிருந்தபடியால், எதிர்ப்பட்டவன் திரும்பி ஓடிப்போனாலன்றி யானைக்குத் தப்புவது கூடியதாயில்லை.

பாண்டியனுக்குத் துணையாக வந்தசேவகர் இருவரும் மதகரியின் ஆரவாரத்தைக் கேட்கவும், பயங்கொண்டு திரும்பி ஓடிப்போனார்கள். ஒரு மிருகத்திற்குப் பயந்து முதுகுகாட்டித் திரும்புதல் வீரனுக்கு அழகல்ல என்றெண்ணிய அரசன், ஈட்டியைக் கையிற் பிடித்துக்கொண்டு, நின்ற இடம்விட்டுப் பெயராமல், சத்தமிட்டு யானையை அதட்டினான். தன்னை எதிர்த்து நின்ற அரசனைக் காணவும், யானை அகங்காரங்கொண்டு, "என்னை எதிர்க்க நீ எம்மாத்திரம்? இப்பட்டணத்திற் கதிகாரி நானா நீயோ என்பதை இந்த இடத்திலேயே பார்த்துவிடுவோம்" எனக் கூறுவதுபோல, நகர முழுவதும் கிடுகிடாய்க்கும்படி ஒரு பெருந்தொனி செய்துகொண்டு, முன்னே பாய்ந்தது. காலபாசம்போல இருபக்கமும் வீசிக்கொண்டிருந்த கஜத்தின் துதிக்கைக்கு விலகி அதின் பின்னே செல்ல முயன்றான் பாண்டியன். அது கூடாததாயிற்று. ஆகவே சமீபத்தில் நெருங்கவும், தன்னைப் பிடிக்க வீசிய துதிக்கையில் ஈட்டிகொண்டு சரவேகமாகக் குத்தினான். ஈட்டியால் உண்டான காயங்களைக் கொஞ்சமென்கிலும் கவனிக்காமல், பெருமாவானது ஒரே வீச்சாய்ப் பாண்டியனுடைய இடுப்பைத் தன் சுண்டத்தால் சுற்றி, ஆகுவை அலவன் தூக்குவதைப்போலத் தூக்கி, ஆகாசத்தில் உயர்த்தித் தரையில் மோதச் சித்தமாயிற்று அவ்வித ஆபத்தின் மத்

நியினும், அரசன் அனுவளவும் மனந்தளராமல், பிடித்த சுட்டியை விடாமல் ஓயாது தனக்கெதிர்ப்பட்ட இடத்தி லெல்லாம குத்திக்கொண்டேயிருந்தான்.

அச்சமயத்தில் அத்தெருவில் வந்த குலசேகரன், மனு ஷனுக்கும் மிருகத்திற்கும் நடந்து கொண்டிருந்த அபூர்வ மான இப்போராட்டத்தைக் கண்டு வியப்படைந்தான். மதகரியோடு சண்டையிட்ட அம்மனிதனுடைய வீரத் தைக்கான அவனுடைய மனம் ஆனந்தமடைந்தது. அரை நிமிஷம் இவ்வாறு நின்றுவிட்டு, சிங்கம்போல கர்ச்சித்துப் பாய்ந்து, வேலாயுதத்தை ஓங்கி, கஜேந்திரனுடைய கபா லப்பொறியை நோக்கித் தன் இருகைபலனும் கொண்டு குத்தினன். அக்குத்தானது குறிதவறி, யானையின் இடக்கண்ணில் பட்டு அதின் மூளைவரையும் ஊடுருவிச்செ ன்றது. ஆயுதமும் திரும்ப எடுக்கக்கூடாதபடி சிக்கிக் கொண்டது. உடனே குலசேகரன் பயத்தின் மேலேறக் கருதி, அதின் கால்களுக்கிடையில் நுழைந்து பின் பக்கத் திற்கு ஓடினன்.

திடீரென இராமபாணம்போல தன் கண்ணில் பட்ட குத்தால் சித்தங்கலங்கிய தந்தி, தான்பிடித்திருந்த அரசனை உதறிவிட்டு, கண்ணிலிருந்த வேலைத் துதிக்கையால் பற் றிக்கொண்டு முன்னே பாய்ந்து ஓடிற்று. பின்னே செ ன்று அதின் வாலைப்பிடித்து ஏறுவதற்கு முயன்றுகொ ண்டிருந்த குலசேகரன் நழுவிக் கீழே விழுந்தான். அவன் எழும்புமுன் யானை சற்று தூரம் சென்று விட்டது. தெ ருவில் எறியப்பட்ட பாண்டியன் உருண்டு ஒருபக்கத்தில் ஒதுங்கி அதின் கால்களுக்குத் தப்பினன்.

குலசேகரன் குதித்தெழுந்தோடி, பாண்டியனைப் பிடித்துத் தூக்கிக் குலுக்கி, அவனுக்கு யாதொரு சேத மும் நேரிடாதது கண்டு திருப்தியடைந்து, " உன்னைப் போன்ற பராக்கிரமசாலியை நாம் கண்டதேயில்லை. நான் நின்று பேசச் சமயமில்லை. அந்த யானை என் வேலாயுதத் தைக் கொண்டுபோயிற்று. அதைக் கைப்பற்றப் போகி

றேன். நீ மெல்ல மெல்ல உன் வீடு போய்ச்சேர்" என்று சொல்லிவிட்டு யானை சென்ற வழியைத் தொடர்ந்து போனான்.

பாண்டியன் பதில் ஒன்றும் சொல்லாமல், அவன் போவதைப் பார்த்துக்கொண்டே நின்று, "உள்ளபடியே சுத்த வீரரான மனுஷர் இக்காலத்திலும் இருக்கிறதாகவே தெரிகிறது. இவன் பேச்சிலிருந்து, இவன் தென்பாண்டி நாட்டான் என விளங்குகிறது, என் குலத்தானாகவே இருக்கவேண்டும். தென்னாட்டுச் சிற்றரசருக்குள் தான் இவ்வித ரூப லக்ஷணங்களுள்ள சிலர் காணப்படுகிறார்கள். என் முன்னோருடைய உருவம் சரியாய் இவனில் அமைந்திருக்கிறது. பாண்டிய வம்சத்தில் இக்காலத்தில் பெரும்பாலும் ஸ்திரீ லக்ஷணமே புருஷருடைய முகத்திலும் காணப்படுகிறது. பாங்கும் பராக்கிரமும் தோன்றித்திகழும் சரீரத்தைக் காண்பது அருமையாகிவிட்டது. இவன் யாரோ? நானே அறியலாம். யானை என்னைப்பிடித்துக் கட்டினதாலுண்டான வேதனையைப் பார்க்கிலும், இவன் என்னைப் பிடித்துக் குலுக்கினதாலுண்டான வேதனை அதிகமாயிருக்கிறது. அவன் சொன்னபடியே அரண்மனைக்கு நடப்போம்" என்று நினைத்துக்கொண்டு, நடந்தான்.

அரசன் அரண்மனை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், ஓடிப்போன சேவகர் இருவரும் எதிர்ப்பட்டு அவனைக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். பாண்டியன் அவர்களுடைய வாய்ப்பிறப்பறிய விரும்பி "நீங்கள் எங்குசென்றீர்கள்?" என வினவினான். "மகாராஜாவை யானை எதிர்த்தது கண்டு நாங்கள் அடுத்த தெருவழியாகச் சுற்றிவந்து அதின் பின்னாலிருந்து தாக்கினோம். நாங்கள் வெட்டின வெட்டுகளினால் அது ஓடிப்போயிற்று.. வெகுதூரம் துரத்திக்கொண்டுபோய் விட்டுவருகிறோம்" என்றார்கள் அச்சூரப்புலிகளிருவரும். அரசன் அதைக்கேட்டு "நீங்கள் வெகு தைரியசாலிகள். நல்ல காரியம் செய்தீர்கள். உங்களுடைய வீரச் செய்கைக்குத் தகுந்த சன்மானம் செய்யவேண்டும்" என்று வேடிக்கையாக வார்த்தையாடிக் கொண்டே நடந்து, அரண்மனை வாயிலைக் கிட்ட

வும், அங்கிருந்த தலையாரியை அழைத்து, அச்சேவகர் இருவரையும் காவல்செய்யும்படி ஆஞ்ஞாபித்தான். கொலைபாதகத்திற்கு மரணதண்டனை விதிப்பது தேசச் சட்டமாயிருந்தபடியால், அச்சேவகர் தங்களுக்குற்ற ஆபத்தை நினைத்துக் கண்ணீர் சிந்திக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்றார்கள்.

குலசேகரன் விடியற்காலமளவும் தேடித்திரிந்தும் இருட்டான அந்த இரவில், யானையைக் கண்டுபிடிக்கக்கூடவில்லை. ஆகையால் விசாரத்தோடு பேட்டைக்கு வந்து சேர்ந்து, படுக்கைக்குப் போகாமல் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான்.

தன் எஜமான் நித்திரை செய்யாமல் விசாரத்தோடிருந்ததைக் கவனித்த நீலன், மெதுவாக "எஜமானுக்கு உடல் வருத்தம் போலிருக்கிறது" என்றான். "வருத்தமன்று. போனவிடத்தில் ஒரு யானையைக் குத்தினேன். அது என் வேலைக் கொண்டோடிவிட்டது. ஐயன் அதை வெகு அருமையாய் வைத்திருந்தார். நாம் புறப்படும் நேரத்தில் இந்தத் துன்பம் நேரிட்டிருக்கிறது. எப்படியானாலும் மறுபடியும் போய் அதைத் தேடித்தான் பார்க்கவேண்டும்" என்றான் குலசேகரன்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்ததை நந்தி கேட்டான்.

ஓடிப்போன யானை, தன் உயிரை வாட்டிக்கொண்டிருந்த அக்கொடிய வேலாயுதத்தை நீக்கும் வகையறியாது மரங்களிலும் சுவர்களிலும் சேர்த்துத் தேய்த்து, அதினால் அதிகரித்த நோவைச் சகிக்கமாட்டாமல், பிரளயமாய்க் கண்ணீர் வடித்துக்கொண்டு, தன் மதமெல்லாம் அடங்கி, ஒரு குளத்தில் போய்விழுந்து கதறிக்கொண்டே கிடந்து, விடியற்காலத்தில் செத்துப்போயிற்று. தேடிப்போன மாவுத்தர்கள் அது செத்துக் கிடந்த இடத்தைக் கண்டு, மகா கஷ்டத்தோடு அதின் கண்ணிலிருந்த வேலாயுதத்தைப் பிடுங்கி எடுத்துக்கொண்டுவந்து தங்கள் மேலதிகாரிக்கு அறிவித்தார்கள். அதிகாரி அவ்வேலைக் கையில் எடுத்துக்

கொண்டு, அதிகாலையில் போய் அரச சமூகத்தில் தெரிவித்தான்.

உடனே பாண்டியன், "பொன்னூர்ப் பாண்டியன் என்ற விலாசம் பதிந்த ஒரு வேலாயுதத்திற் குரியவனைக் கண்டுபிடித்துத் தெரிவிப்பவருக்கு சன்மானம் செய்யப்படும். அவனுடைய வயது இருபத்தொன்று அல்லது சற்று அதிகமாயிருக்கலாம். பலமான சரீரத்தை உடையவன். தென்பாண்டி நாட்டான். அரசருடைய யானை ஒன்று அவனால் கொல்லப்பட்டிருக்கிறது" என்று பறை சாற்றுவிக்கவும், அவன் அகப்பட்டவுடனே தெரிவிக்கவும் வேண்டுமெனக் கட்டளையிட்டான்.

காலையிலே எழுந்து வழக்கம்போல கடைவீதிக்குப் போன நந்தி, இந்த விளம்பரத்தைக் கேட்கவும் மிகமகிழ்ச்சியடைந்தான். நம்முடைய சிகையைப் பிடித்துத் தூக்கி ஆட்டின அந்தப் போக்கிரிக்குப் புத்திகற்பிக்க இதுவே தருணம் என்று எண்ணி, உடனே ஓடி அதிகாரியிடம் தெரிவித்தான்.

நந்தி சொன்னதைக் கேட்ட அதிகாரி அச்சணமே ஒரு தலையாரியையும், ஆறு சேவகரையும் பேட்டைக்கு அனுப்பிக் குலசேகரனைப் பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். சேவகர் நந்தியுடன் சென்று, அவன் காட்டக் குலசேகரனை இனமறிந்து, அரச உத்தரவை அவனுக்குத் தெரிவித்து அவனைச் சிறையாக்கினார்கள். நம் கதாநாயகனுக்குக் கண்கள் சிவந்தன, புஜங்கள் துடித்தன. விநாடிப்பொழுதில் இந்தச் சேவகர் அனைவரையும் யமபுரம் அனுப்பிவிட்டு தப்பிப்போய் விடலாமா என்ற எண்ணம் ஜனித்தது. மறு விநாடியில், அவ்வாறு செய்தல் புத்தியீனம் என உணர்ந்து, யாதும் பேசாமல் சிறைச்சாலைக்குப் போகப் புறப்பட்டான்.

அவ்வேளையில் வெளியே சென்றிருந்த நீலன் இவர்கள் பேட்டையை விட்டுவரும் வழியில் எதிர்ப்பட்டான். தன் எஜமானைப் பக்கத்திற்கு இருவராக நாலு சேவகர் பிடித்

துக்கொண்டு போவதையும், மற்றச் சேவகரும் தலையாரியும், நந்தியோடும் திரளான ஜனங்களோடும் கூட்டமாகப் போவதையும் காணவும், அவன் தன்னையே மறந்துவிட்டான். கண்ணிமைக்கும் நேரத்திற்குள்ளாகக் குலசேகரனைப் பிடித்திருந்த சேவகரில் இருவர் நீலனுடைய முஷ்டியால் தாக்குண்டு தரையில் விழுந்தார்கள். இதைக் கண்ட குலசேகரன் "ஆகா! இந்த மடையன் காரியத்தைக் கெடுத்துப்போடுவான்" என்று எண்ணி, தன்னைப் பிடித்திருந்த மற்றச் சேவகரை உதறிப்போட்டு ஓடி, கூட்டத்தின் மத்தியில் நின்று தன் கைக்கும் காலுக்கும் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் உதைத்தும் குத்தியும் வீழ்த்திக் கொண்டிருந்த நீலன் முதுகில் ஒரு அறை அறைந்து, அவன் செவியில் "அடே! உன் புத்தியைக் கடன்கொடுத்துவிட்டாயா? இதுதானா என்னைக் காப்பதற்கு வழி? உடனே ஓடிப்போய் ஒளித்துக்கொள். எனக்கு யாதொரு மோசமும் நேரிடாது. அப்படி நேரிட்டாலும் அதைப் பொன்னூருக்குத் தெரிவிக்க நீயன்றி வேறு யார் உண்டு?" எனவும், நீலன் புத்தி தெளிந்து, அக்கூட்டத்தை விட்டோடிப்போனான். சேவகர் அவனைப்பிடிக்க முயன்றும் கூடவில்லை.

குலசேகரன் சிறைச்சாலை சேரவும், அதிகாரி அவன் அகப்பட்ட செய்தியைப் பாண்டியனுக்குத் தெரிவித்தான்.

நீலன் மறைவாகச் சிறைச்சாலையின் அருகில் சென்று பல ஆலோசனைகளை எண்ணிக்கொண்டிருந்தான். "எது எவ்வாறாயினும் சரியே. நான் எஜமானைவிட்டு உயிருடன் பொன்னூருக்குப் போவதில்லை. அவருக்குக் கெடுதி நேரிடும் பக்ஷத்தில், என் பேர் இந்தப்பட்டணத்தில் நிற்கும்படி குறைந்தபக்ஷம் நூறுபேரையாவது நான் கொல்லுவது உறுதி. தவிர, இன்று பொழுதுபடுமுன் நான் நந்தியைப்பிடித்துக் கோழிக்குஞ்சை நசுக்குவதுபோல நசுக்காவிடில் என் பேர் நீலனல்ல, ஆகட்டும், பார்க்கலாம். இந்த அரசன் அநியாயக்காரன் என்று கேள்வி. அவன் என் எஜமானுக்கு ஏதாவது கெடுதி செய்வதாயிருந்தால் நீலன் அதற்குப் பதில் என்ன செய்வான் என்பதை இந்தப் பட்ட

ளை முழுவதும் இன்றைக்கே அறியும்படி செய்கிறேன்" என்று சொல்லி நெஞ்சில் குத்திக்கொண்டு, ஒரு மதிலின் மறைவில் உட்கார்ந்திருந்தான்.

---

14. பாண்டியன் சபை.

குலசேகரன் பிடிபட்டானெனப் பாண்டியன் அறிந்தவுடனே, மந்திரியை அழைத்து "நாம் சபை கூட்டிக் கொலுவிருந்து அநேக ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகையால், மறுபடியும் அந்த வழக்கத்தை ஆரம்பிக்க விரும்புகிறேன். இன்று வெகு ரம்மியமான ஒருவிஷயம் நமது கவனத்திற்கு வந்திருப்பதால், அதைச் சபைமுன் விஜாரிக்கவேண்டும் என்று நிர்மானித்திருக்கிறேன். ஆதலால், தாமதமின்றி கொலுக்கூட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்" என்று ஆஞ்ஞாபித்தான்.

அவ்வாறே மந்திரி விளம்பரம் செய்து, சமஸ்த ஒழுங்குகளையும் செய்து முடித்தான். பட்டணத்திலுள்ள பிரபலஸ்தரெல்லாரும் ஆஸ்தானமண்டபத்தில் வந்து கூடினார்கள். பிரதான அதிபதிகளும், தளகர்த்தரும் வந்து சேர்ந்தார்கள்.

மகா விஸ்தாரமான அவ்வாஸ்தான மண்டபம் மரத்தால் கட்டப்பட்டுக் கல்லால் தளமிடப்பட்டிருந்தது. முப்பதுமுழ உயரமும் எட்டுமுழச்சுற்றளவுமுள்ள பெரிய மரத்தூண்கள் அழகாய்க் கடையப்பட்டு, விசித்திர விநோதமான வேலைப்பாடுகள் அமைந்து, கூரையைத் தாங்கி நின்றன. கூரையின் உட்புறமும் தூண்களும் பொன்முலாம் பூசப்பட்டிருந்தன. பளிப்படுத்தப்பட்ட விசாலமான கருங்கற்பீடத்தின்மேல் பாண்டியனுடைய பொற்சிம்மாசனமிருந்தது. மண்டபம் முழுவதும் ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. வெள்ளித் தண்டுகளின்மேல் ஏற்றி வைக்கப்

பட்டிருந்த பொற்கலசங்களில் சுவாசனை கமழும் தூபம் புகைந்து கொண்டிருந்தது, மந்திரி முதலான பிரதான உத்தியோகஸ்தரும், தளகர்த்தரும், பிரபுக்களும், தத்தமக்கு நியமிக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள். மண்டபம் மூன்று பக்கம் திறப்பாயிருந்தபடியால், அதைச் சுற்றிலுமிருந்த விஸ்தாரமான முற்றத்தில் ஏராளமான ஜனங்கள் நின்று பார்க்கக்கூடியதாயிருந்தது. சேனாவீரர் ஆயுதபாணிகளாய் ஆஸ்தானச் சாவடியைச் சூழ்ந்து காவலாய் நின்றார்கள். கட்டியக்காரர் பொற்றண்டங்களைப் பிடித்துக்கொண்டு குறிக்கப்பட்ட இடங்களில் நின்றார்கள்.

பேரிகைகள் முழங்க, மெய்காவலர் முன்னும் பின்னும் செல்ல, குடைபிடிப்போரும், சாமரை வீசுவோரும், தாம்பூலம் ஏந்துவோரும் சூழ்ந்துவர, கட்டியக்காரர் விருதுகளை உரத்துக் கூற, சுந்தரபாண்டியன் வெகு ஆடம்பரமாய் அம்மண்டபத்தில் பிரவேசித்தான். அரசன் உள்ளே வரவும் சபையோரெல்லாரும் ஆசனம் விட்டெழுந்து நின்று தலைவணங்கி நமஸ்கரித்தார்கள். அவையோருக்கு ஆசிகூறி அரசன் அரியணைமீதமர்ந்தான். அரையில் வெண்பட்டுடுத்து, கால்களிலும், கைகளிலும் இரத்தினம் பதிந்த தங்கக் காப்புகளையும், விரல்களனைத்திலும் விலைபெற்ற மோதிரங்களையும், கழுத்தில் நவமணிமாலைகளையும் இடுப்பில் வஜ்ஜிரம் பிரகாசிக்கும் பொற்சரிகைக் கச்சையையும், தலையில் ஒளியே மயமாய் இலங்கும் கிரீடத்தையும், பாதங்களில் பொற்பாதரக்ஷைகளையும் தரித்தவனாய் வீற்றிருந்தான் செழியன். பெருந்துவாரங்கள் இடப்பட்டிருந்த அவன் செவிகளில் வயிரக் கடுக்கன்கள் மின்னிக் கொண்டிருந்தன. வலக் கையில் வைடூரியங்கள் பதிந்த பொற் செங்கோலும், இடக் கையில் நூற்றெட்டுப் பெரிய முத்துக்கள் கோத்த ஜெபமாலையும், தோளில் பூணூலும் விளங்கிக் கொண்டிருந்தன.

எல்லோரும் அமரவும், பாண்டியன் பேசத்தொடங்கி "சபையோரே! அநேக நாட்களுக்குப்பின் இன்று உங்களெல்லாரையும் ஒன்றாய்க் காண்பது எமக்கு வெகு ரம்மியமாயிருக்கிறது. இன்று இச்சபைமுன் விளம்பப்பட வே

ண்டிய விஷயம் உங்களெல்லாருக்கும் மகிழ்ச்சியைக்கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அது அசாதாரணமான ஒரு காரியமாயிருப்பதால், அதை நியாயாதிபதிகளிடம் அனுப்பாமல், நாமே விஜாரிக்கவேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறோம்" என்று கூறிவிட்டு, விஜாரிக்கப்படவேண்டியவர்களை உள்ளே கொண்டு வரும்படி கட்டளையிட்டான். அந்தப்படியே அவர்கள் கொண்டுவரப்பட்டு, குறிக்கப்பட்ட இடங்களில் நின்றார்கள். விஜாரணை ஆரம்பமாயிற்று.

பாண்டியன் (நந்தியைப் பார்த்து).—நமது விளம்பரத்தின்படி அங்காரகன் என்னும் நமது யானையைக் கொன்றவனைக் கண்டுபிடித்தவன் நீதானா?

நந்தி.—அடியேன்தான்.

பாண்டியன்.—இதோ நிற்பவன்தானா அவன்?

நந்தி.—ஆம், மகாராஜாவே!

பாண்டியன்.—அவன் உனக்கு எப்படித் தெரியும்?

நந்தி.—இவன் என்னிடம் மூன்று மாசக் காலமாகத் தங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதால் அறிவேன்.

பாண்டியன்.—நந்தி! உன்னிடம் தங்கியிருக்கும் ஒருவனை நீ மனதாரக் காட்டிக் கொடுக்கவேண்டுமானால், உனக்கு அவன்மேல் விரோதமிருக்கவேண்டும். எல்லாரும் அப்படிச் செய்யமாட்டார்கள். ஆகையால் இவனை நீ காட்டிக் கொடுப்பதற்கு நேரிட்ட காரணமென்ன?

நந்தி.—மகாராஜாவே! அடியேன் எளியவன். பிரயாணிகளுக்குச் சாப்பாடுபோட்டு அதினால் வரும் சொற்பலாபத்தைக் கொண்டு பிழைக்கிறவன். என்னிடம் தங்கும் பிரயாணிகளை என் கண்ணைப்போல அருமையாய்க் காப்பாற்றுவது என் வழக்கம். ஆனால் அரச விசுவாசம் மாத்திரம் என் மனதைவிட்டு ஒரு காலத்திலும் நீங்காது. ஆகையால் தேவரீருடைய யானையைக் கொன்றவனை அறிந்திருந்தும், சமூகத்திற்குத் தெரியாதிருப்

பது பெரிய தோஷம் என்று எண்ணி இவன் பேரை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க நேரிட்டது. இவனிடம் எனக்கு யாதொரு விரோதமு மில்லை.

பாண்டியன்.—நந்தி மகா நல்லவன். இவனைப் போன்ற பத்துப் பேர் இந்தப் பட்டணத்தி லிருந்தால் அக்கிரமமே நடக்காது. நந்திக்குத் தகுந்த மரியாதை செய்யவேண்டும். நந்தி! நமது யானையை இவன் கொன்றது உனக்கு எப்படித் தெரிந்தது?

நந்தி.—அடியேன் அரச பக்தியோடு சதா இருந்துகொண்டிருப்பதால், தேவரீருடைய பகிமைக்குக் குறைவுண்டாக்கக்கூடிய போக்கிரிகளின்பேரில் சர்வதா கண்ணோக்கமாகவே இருப்பது வழக்கம். அப்பிரகாரமே இவனுடைய யோக்கியதையைக் குறித்துச் சந்தேகப்பட்ட அடியேன், இன்று விடியற்காலத்தில் ஒற்றுக்கேட்டுக் கொண்டிருக்க இவன் தான் நடப்பித்த துஷ்டத்தனத்தைக் குறித்துத் தன் வேலைக்காரனோடு பேசிக்கொண்டிருக்கக் கேட்டேன்.

பாண்டியன்.—அப்படியா! இவன் தான் செய்த அக்கிரமத்தைக் குறித்து மேன்மை பாராட்டிக் கொண்டானோ? இதற்குமுன் ஏதாவது துஷ்டத்தனங்களை நடப்பித்திருக்கிறானா?

நந்தி.—மகாராஜாவே! இவனைப்போன்ற துஷ்டனை நான் கண்டதேயில்லை. உலகத்தாருக்கு இம்சை செய்வதே இவனுடைய வேலை. இவனும் இவனுடைய வேலைக்காரனுமாக என்னிடம் மூன்றுமாசக் காலமாகத் தங்கிவருகிறார்கள். இவர்களுக்கு யாதொரு தொழிலும் இல்லை. நாலு பேருக்கு இடக்கூடிய சாப்பாட்டை இவர்கள் இருவரும் சாப்பிட்டு விடுகிறார்கள். இவனுடைய வேலைக்காரன் மகா பொல்லாதவன். பேட்டையிலுள்ளவர்களெல்லாரையும் தன் அடிமைகளைப்போல் நடத்துகிறான். இவனோ, ஒருவரிடமும் வார்த்தையாடுவதில்லை. ஆயுதமும் கையுமாய்த் திரிந்துகொண்டிருப்பதே இவனுடைய

பொழுது போக்கு. இவனைக் காண்போர் எல்லாரும் பயந்து நடுங்குகிறார்கள். எத்தனை பழி செய்தவனோ, கடவுளுக்கே தெரியும். பத்து நாளுக்கு முன், இவனுடைய வேலைக்காரன் சாப்பாட்டிற்காகச் செல்லவேண்டிய பணத்தைத் தர மறுத்தபடியால், அடியேன் இவனிடம் கேட்க நேரிட்டது. அதற்காக இவன் ஒரு கையால் அடியேனுடைய சிகையைப் பிடித்துத் தூக்கிச் சுழற்றி, ஆகாசத்தில் ஆட வைத்துக் கீழே எறிந்தான். சிவ! சிவ! நான்பட்ட அவஸ்தையை என்னென்று சொல்ல! நேற்றையவரையும் தலைநோய் விட்டில்லை. இந்தப் பத்துநாளும் பணம் கொடுக்காமலே இருவரும் சாப்பிட்டு வருகிறார்கள். ஒரு புலியினிடத்தில் அகப்பட்ட ஆட்டுக்குட்டியைப்போல அடியேன் இவன் கையில் அகப்பட்டுத் தவிக்கிறேன். இவர்கள் ஒரு கள்ளர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகத் தோன்றுகிறது. நான் ஒரு அஹிம்சையை அநுசரிப்பவன். எனக்கு யாராகிலும் ஒரு தீங்கு செய்தால் அதை நான் பாராட்டுவதே யில்லை. தேவரீருடைய கட்டளைக்குப் பயந்து இதைத் தெரிவித்தேன்.

பாண்டியன்.—அவ்வளவு கொடியவனா இவன்? நாம் இவனை விசாரித்துத் தகுந்த தீர்ப்பிடுவோம். சுமார் இரண்டு பொதி கனமுள்ளதாயிருக்கும் உன் சரீரத்தை, ஒரு கையால் தூக்கக் கூடியவன் இந்தப் பட்டணத்தில் உண்டு என்று நான் எண்ணினதில்லை. இப்படிப்பட்டவன் அக்கிரமம் செய்யப்புகுந்தால் உலகமே அழிந்துபோய் விடும்.

பாண்டியன் இங்ஙனம் புகலவும், சபையோர் குலசேகரனை நோக்கி, அவனுடைய அவையவங்களின் விசேஷ அமைப்பைக் கண்டு வியப்புற்றார்கள்.

பாண்டியன் குலசேகரனை நோக்கி, மிகக் கோபித்த பாவனையோடு, "நீதானா நம்முடைய யானையைக்கொன்றவன்? உன்னுடைய துணிவென்ன! நீ இப்பொழுதே நியாமான காரணம் சொல்லாவிடில் உன் சிரசு துணிக்கப்படும். என்ன சொல்லுகிறாய்?" என்றான்.

குலசேகரனுடைய காதில் இம்மொழி ஏற, ஒரு நாளும் தாற்றுக்கோல் பட்டறியாத இளங்காளை, குத்துண்டவுடனே எப்படித் துடிக்குமோ, அதுபோல துடித்து, கண்கள் சிவக்கப் பாண்டியனையும் அச்சபை அனைத்தையும் அலக்ஷியமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, "அரசனே! என் வாய்மொழியைக் கேட்குமுன் என்னைக் கடிந்து கொள்வது நியாயமா? அரசனைக் கனம் பண்ணவேண்டும் என்றும், அரச உத்தரவை மீறக்கூடாது என்றும் என் இளவயது முதல் என் பிதா போதித்திருக்கிறார். அப்படியல்லாதிருந்தால் உமது சேவகர் என்னைக் கொண்டுவந்திருக்கமாட்டார்கள். நீதி பிசகாமல் என்னை விசாரிக்க உமக்கு மனமில்லாமிருந்தால், நான் போக விடைதாரும். அதற்கப்புறம் உமது சேவகர் என்னைப் பிடித்துக் கொள்ளட்டும்" என அம்மண்டபம் முழுவதும் அதிரும்படி கூறினான்.

அதைக்கேட்ட சபையோர் அவன் துணிகரத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். சேனாபதிகளும் சேவகரும் அவன் ஓடிப்போகும் விஷயத்தில் பிடிப்பதற்காக ஆயத்தமானார்கள். பாண்டியனுடைய மனது மகிழ்ச்சியடைந்தது.

பாண்டியன்.—சபையோரே! இவன் பட்டிக்காட்டானாகத் தோன்றுகிறான். அரச சபையின் ஒழுக்கம் இவனுக்குத் தெரியாது. ஆகையால் நாம் இவனை க்ஷமித்து, இவனுடைய அறிவுக்குத் தகுந்தவாறே வினவவேண்டும். என்று சொல்லிவிட்டு, குலசேகரனை நோக்கி,

பாண்டியன்.—உன்பேரில் சாட்டப்படும் குற்றத்தைக் கேட்டாயல்லவா? அதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?

குலசேகரன்.—நேற்றிரவில் ஒரு யானை ஒரு மனிதனை துதிக்கையால் கட்டிப் பிடித்து ஆகாசத்தில் உயர்த்தினதைக் கண்டேன். காணவும், நான் ஓடி என் வேலாயுதத்தால் அந்த யானையைக் குத்தினேன். அக்குத்துப் பட்டவுடனே அது அம்மனிதனைப் போட்டுவிட்டு ஓடிப்

போயிற்று. யானை செத்துப்போனதை அறியேன். நான் குத்தினதினால் அது செத்துப்போனாலுங்கூட, ஒரு ராஜிவனைக் கொல்ல எத்தனித்த மிருகத்தைக் கொல்லுவது குற்றமென்று நான் எண்ணவில்லை.

பாண்டியன்.—அப்படியானால், நீ ரக்ஷித்த மனுஷன் எங்கே?

குலசேகரன்.—எனக்குத் தெரியாது. அவனுக்கு ஆபத்து நீங்கினவுடனே, நான் யானையைத் தொடர்ந்து போய்விட்டபடியால், அவனைக் கவனிக்கவில்லை.

பாண்டியன்.—ஓடிப்போய்விட்ட யானையை நீ தொடர்ந்துபோக வேண்டியதென்ன? அதை மறுபடியும் குத்த வேண்டும் என்றுதானே?

குலசேகரன்.—அப்படியன்று. நான் குத்தின வேலாயுதம் அதின் உடலிலேயே சிக்கிக்கொண்டபடியால் ஆயுதத்தை மீட்டுக்கொண்டு வருவதற்காகச் சென்றேன்.

பாண்டியன்.—ஓகோ! இது நல்ல கதை! நீ சொல்லுவதிலிருந்து, நீ வறுமையடைந்தவனாகவே தெரிகிறது. அப்படியிருக்க, நீ ரக்ஷித்த மனிதனிடமிருந்து ஏதாகிலும் பிரதி உபகாரம் பெறவேண்டும் என்று கருதாமல், இரண்டு பணம்கூடப் பெறாத ஒரு வேலாயுதத்திற்காக நீ மதயானையைத் தொடர்ந்து போனதாகச் சொல்லுவதை யார் நம்பக்கூடும்?

குலசேகரன்.—அரசனே! அந்த வேலாயுதம் சாமானியமானதல்ல; எங்கள் குடும்பத்தில் நெடுங்காலமாக இருப்பது. என் தகப்பனார் அதை மிக அருமையாக வைத்திருந்தார். ஆதலால், என் உயிரையும் எண்ணாமல் அதைக் கைப்பற்றும்படி யானையைத் தொடர்ந்து போனேன். இருட்டாயிருந்தபடியால் கண்டுபிடிக்கக் கூடவில்லை. மேலும், ஒரு அற்ப உபகாரம் செய்ததற்காக பிரதி உபகாரத்தை எதிர் பார்ப்பது நல் ஒழுக்கமல்லவே.

பாண்டியன்.—சபையோரே! இவன் சொல்லுவது நம் பக்கூடாத காரியமாயிருக்கிறது. இவனை நன்ருய் அறிந்தவனுகிய நந்தி தெரிவித்த விஷயங்களிலிருந்து, இவன் வெகு முரடன் என்று ஏற்படுகிறது. இவன் இச்சபையின் முன் நடந்துகொண்ட விதமும் அதை உறுதிப்படுத்துகிறது. அங்காரகன் எனும் யானை நேற்றிரவில் மதம் கொண்டு சேஷ்டை செய்ததைக் கண்ட நமது சேவகர் இருவர், அதைத் துரத்திக்கொண்டுபோய் வெகு தூரத்தில் விட்டு வந்ததாக நம்மிடம் தெரிவித்திருக்கிருர்கள். ஒரு மதயானைக்கு முன் நின்று அதை வேலாயுதத்தால் குத்தினதாக இவன் சொல்லும் கதை நிஜமாகத் தோன்றவில்லை. யானை சும்மா நின்ற இடத்தில் இவன் அதைக்கண்டு நிஷ்காரணமாக அதின் கண்ணில் குத்திக் கொன்றுபோட்டான் என்றே நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது. என்ருலும், இவன் சொன்ன இரண்டு விஷயங்களை நிரூபிப்பதாயிருந்தால் இவனை விடுதலை செய்யலாம். எவை என்ருல்: முதலாவது, உயிரினும் அருமையாக இவன் மதிப்பதாகச் சொல்லும் இவனுடைய வேலாயுதத்தின் மகிமையைக் காண்பிக்கவேண்டும்; இரண்டாவது, இவன் யானையின் கையினின்று மீட்டதாகச் சொல்லும் மனுஷனைக் காண்பிக்கவேண்டும். உங்களுடைய அபிப்பிராயமென்ன?

என்று பாண்டியன் கேட்கவும், சபையோர் எல்லாரும் அரசன் சொன்னதை ஆமோதித்தார்கள். நந்தியும், "பயல் அகப்பட்டான்" என்று சொல்லிக் களிப்படைந்தான்.

குலசேகரன்.—அரசனே! நானும் உமது குலத்தில் பிறந்தவன்தான். க்ஷத்திரியனுக்கு உயிர் ஒரு பொருட்டல்ல என்பது நீர் அறிந்த விஷயமே. என்ருலும் ஒரு தேசத்தில் ஒருவன் அநியாயத் தீர்ப்படைந்து மரிப்பது அத்தேசத்தின் அரசனுக்குக் கெடுதிவிளைவிக்கும் என்று நீதி நூல்கள் புகல்வதால், பாண்டியவம்சத்தின் மேன்மையைக் கருதி, நீர் கேட்ட வற்றிற்குப் பதில் அளிக்கிறேன்.

முதலாவது, என்னுடைய வேலாயுதத்தைக் குறித்துச் சொல்லுகிறேன். அதை உண்டாக்குவதற்கு உபயோகித்திருக்கும் உலோகம் இக்காலத்தில் கிடைக்கமாட்டாது. அதில் ஒரு நாளும் துருப்பற்றுவதில்லை. கல்லில் குத்தின போதிலும் அதின் முனை சிதைவதில்லை. அந்த வேலாயுதம் இங்கிருந்தால், அதை இச் சபையோர் எல்லாரும் பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

எனவும், அரசன், தன் சமீபத்தில் அவ்வேலை வைத்துக்கொண்டு நின்ற ஒரு சேவகனை விளித்து, அதைக் கொண்டுபோய்த் தளகர்த்தர் முதலானோருக்குக் காண்பிக்கும்படி சொன்னான். அவர்கள் அதைப்பார்த்து வியப்படைந்தார்கள். சேனாதிபதியாகிய செண்பக வர்மன் எழுந்து, அரசனை வணங்கி, "ஆண்டவனே! இது அபூர்வமான ஆயுதமாகவே காணப்படுகிறது. இந்த இளைஞன் சொல்வதுபோல, இதைக் கல்லில் குத்திப் பரீக்ஷிக்க உத்தரவாக வேண்டும்" என்றான். அரசன் உத்தரவு கொடுக்கவும், செண்பகவர்மன் சபையோருக்கு முன்னே வந்து நின்று, அவ்வேலாயுதத்தைக் கீழ் நோக்கிப் பிடித்து, தன் முழுபலமும் கொண்டு கற்றரையில் குத்தினான். அவ்வாறு குத்தின வேலானது கணீரெனப் பேரோசை செய்து சினங்கொண்டது போலத் துள்ளி, அவன் கையை விட்டுக் கிளம்பி மேலே சென்று தரையில் விழுந்தது. விழுந்த வேலை எடுத்துப் பார்க்க, அதில் கொஞ்சமும் சேதம் உண்டாகாதிருந்ததைக் கண்டு எல்லாரும் ஆச்சரிய மடைந்தார்கள்.

பாண்டியன் தன் ஆயுத சாலைக்கு ஒரு சேவகனை அனுப்பி இரண்டு வேலாயுதங்களை வருவித்து, அவற்றைக் குலசேகரனிடம் கொடுத்து, பரீக்ஷிக்கச் சொன்னான். அவன் கைக்கொன்றாக அவ்விரண்டையும் பிடித்துக் கொண்டு தரையில் குத்த, ஒன்று ஒடிந்தது மற்றது சிதைந்தது.

பாண்டியன்.—சபையோரே! இவனுடைய ஆயுதத்தைக் குறித்து இவன் சொன்னது உண்மையே. அதற்கு இணையான ஒரு வேல் நமது சயன மாளிகையில் இருக்

கிறது. ஒரு காலத்தில் நமது முன்னோரில் ஒருவருக்கு, ஒரு முனிவர் கொடுத்த பல ஆயுதங்களுள் இதைப் போன்ற ஒரு வேலாயுதமும் உண்டு. இக்காலத்தில் உலோகங்களைப் பக்குவப்படுத்தும் பூர்வீக வித்தை மறைந்து போய்விட்டது. என்று சொல்லி, தன் சயன மாளிகைக்கு ஆள் அனுப்பி அவ்வேலை வரவழைத்தான். அதுவும் குலசேகரனுடைய வேலும் ஒன்று போலவே யிருக்கக்கண்டு சபையோர் வியப்படைந்தார்கள்

அப்புறம் பாண்டியன் குலசேகரனை நோக்கி, "ஒரு காரியம் ரூபகாரமாகிவிட்டது. அடுத்த காரியம் எப்படி? என்றான்.

குலசேகரன்.—அரசனே! இந்தப்பட்டணம் லக்ஷக்கணக்கான ஜனங்கள் நிறைந்து ததும்பிக்கொண்டிருக்கிறது. அவர்களுக்குள் அந்த மனுஷனைத் தேடிக் கண்டுபிடிப்பது அசாத்தியமான காரியம். எனக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று பாண்டியன் விரும்பும் பக்ஷத்தில், நான் சொல்லும் குறிப்பின்படி சேவகரை அனுப்பித் தேடுவதாயிருந்தால் அவனைக் கண்டுபிடிப்பது அரிதன்று. நானோ இவ்விடத்திற்கு அந்நியனாயிருக்கிறேன். மதுரையில் குடியாயிருப்பவர்களிலும் கூட சிலரே எனக்கு அறிமுகம். இங்கு அநுதினமும் வந்து போய்க் கொண்டிருக்கும் திரள் ஜனங்களைப் பேர்ப்பேராய் அறிந்து கொள்வது ஒருவருக்கும் கூடிய தன்று. நான் அவனுடைய ஊர், பேர், முதலியவற்றை விஜாரிக்கவுமில்லை.

பாண்டியன்.—நீ சொல்லுவது நியாயமே. அவனைப்பற்றிய குறிப்புகளைத் தெரிவி, கேட்போம்.

குலசேகரன்.—அவன் அபூர்வமான தைரியசாலி. மதயானை முற்பட்ட காலத்தில், ஒரு மிருகத்திற்கு அஞ்சிப் பின் வாங்குவது வீரனுக்கு அழகல்ல என்று எண்ணினவன்போல, முகமுகமாய் அதை எதிர்த்தான்.

இங்குள்ள வேறொருவரும் அவனைப் போலிருப்பதாகத் தோன்றவில்லை. அவன் அரசருக்கு மிக்க நெருங்கிய இனத்தானாயிருக்கவேண்டும் என்று அநுமானிக்கிறேன்.

எனவும், சுந்தரபாண்டியன், "சபையோரே! இனி நாம் உண்மையை மறைக்க நிமித்தமில்லை. அங்காரகன் கையில் அகப்பட்டு உயிர் போகும் தருவாயிலிருக்கும்போது இவனால் ரக்ஷிக்கப்பட்ட மனிதன் நாமே. நேற்றிரவில் இரண்டு சேவகரைத் துணைகொண்டு நகர பரிசோதனைக்காகச் செல்லும் வழியில் இந்த ஆபத்து நேரிட்டது. சேவகர் இருவரும் பயந்து ஓடிவிட்டார்கள். இது காலபரியந்தம் யாதொரு மனுஷனுக்கும் பயப்படாத நாம், கேவலம் ஒரு மிருகத்திற்குப் பயந்து பின் வாங்குதல் ஈனம் என்று எண்ணி, மிருகத்தின் கைக்கு அகப்படாமல் அதின் பின்புறத்தை அடைந்து, முதுகின்மேல் ஏறிவிட்டால், கையிலிருந்த ஈட்டியைக்கொண்டு, குத்தவேண்டிய இடத்தில் குத்தி அதின் மதத்தை அடங்கச் செய்து விடலாம் என்ற கருத்தோடு, நின்றவிடத்திலேயே நின்றோம். அத்தெருவானது மிக இடுக்கமாயிருந்தது. இருபக்கமும் வீசிக் கொண்டிருந்த யானையின் துதிக்கையைத் தப்பித்துக்கொள்வது கூடாததாயிற்று. ஆகவே அதின் கையில் சிக்க நேரிட்டுவிட்டது. அச்சமயத்தில் இவன் தேவாதீனமாக அங்கு வந்து திடீரென வேல்கொண்டு அதின் கண்ணில் குத்தவும், அம் மிருகத்தின் உடலெல்லாம் அதிர அது நம்மை உதறிவிட்டு ஓடிப்போயிற்று. நாம் பூமிவிட்டெழுமுன் இவன் ஓடி வந்து நம்மைப் பிடித்துத் தூக்கி ஒரு சிறு குழந்தையைக் குலுக்குவதுபோலக் குலுக்கி, வீடுபோய்ச் சேரும்படி சொல்லிவிட்டுச் சென்றான். இவனைப்போன்ற வீரமும், பெருந்தகைமையும் உள்ளவர்கள் அரிதாகையால் இவனை நீங்கள் யாவரும் அறிந்துகொள்ளும்படி இச்சபை முன் கொண்டுவரத் தீர்மானித்தோம். இவனுடைய உண்மையான குணங்கள் வெளியாகும் பொருட்டே இம்மட்டாக ஒன்றும் அறியாததுபோல நடித்தோம்." என்று சொல்லி, சிம்மாசனம் விட்டிறங்கி வந்து, குலசேகரன் கரத்தைப்பற்றி அழைத்துக்கொண்டு

போய் அவனுக்கு ஆசனமளித்து, தன் கழுத்திலிருந்த ஒரு ரத்தின மாலையை எடுத்து, அவன் கழுத்தில்தரித்தான்.

யாவரும் அமர்ந்தவுடனே, பாண்டியன் குலசேகரனை நோக்கி, "இச்சபையிலுள்ளோர் உன்னுடைய பூர்வோத்திராதி விஷயங்களை அறிந்து கொள்ள விரும்புவார்கள். ஆதலால் அவற்றை எல்லாரும் அறியும்படி தெரிவி" எனவும், குலசேகரன் எழுந்து, தன் முன்னோர் காலமுதல் நாளது பரியந்தம் நிகழ்ந்த தன் குடும்பத்தைக் குறித்த முக்கிய சம்பவங்களைச் சுருக்கமாய்த் தெரிவித்தான்.

பாண்டியன் அவ்வரலாற்றைக் கவனமாய்க் கேட்டு "சபையோரே! இவனுடைய உயிரை எண்ணாமல் இவன் நமது உயிரைக் காத்தபடியால் நாம் எவ்வளவுதூரம் இவனுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பது உங்களெல்லாருக்கும் தெளிவாயிருக்கும். அரசனுடைய உயிரைக் காக்கவேண்டியது பிரஜைகளின் கடமையாயிருப்பதால், இதற்காக நாம் இவனுக்குப் பிரதி உபகாரம் செய்யப்போவதில்லை. தகுதியான பிரதி உபகாரம் செய்வதும் நம்மால் கூடியதல்ல. எனினும், இவனுடைய வீரத்தையும் பெருந்தகைமையையும், கூரிய புத்தியையும், நாம் சலாகித்து இவனை நம்முண்டையில் எப்போதும் வைத்துக்கொள்ள விரும்புகிறோம். இனி இவன் நமது அரண்மனையிலேயே வாசம் செய்யவேண்டும். இவனுடைய அவசரங்களுக்குத் தேவையான பணத்தை நமது பொக்கிஷசாலையில் பெற்றுக் கொள்ளக்கடவன்" என்றான். சபையோர் அரசனுடைய தீர்மானத்தைப் புகழ்ந்தார்கள்.

அப்புறம் அரசன் மந்திரியைப் பார்த்து, "நீ பொக்கிஷசாலையிலிருந்து ஐந்து லக்ஷம் பொன் எடுத்து பொன்னூரிலிருக்கும் இவனுடைய பிதாவாகிய காரியாருக்கு அனுப்பி, 'அரசசேவகத்தில் அவருடைய வேலாயுதம் ஒரு இரவு உபயோகப்பட்டதற்காக, இது பாண்டியனால் கொடுக்கப்பட்ட வாடகை' என்று தெரிவி" எனக் கட்டளையிட்டான்.

நந்திக்கும் தகுந்த வெகுமானம் கிடைத்தது. அரச விசாரத்தின்படி, குலசேகரனைக் காட்டிக் கொடுத்ததற்காக, அவனுக்கு நூறு பொன் வெகுமதி அளித்து, அவனுடைய கள்ளத் தனத்திற்காக ஐம்பது அடியும் கொடுத்து மதுரையை விட்டுத் துரத்தும்படி பாண்டியன் தீர்த்தான். சேவகர் பிடித்திழுக்க நந்தி அழுது கூத்தாடிக் கொண்டு போன காட்சி சபையோரை மகிழ்வித்தது.

இவ்வாறு அன்று அரச சபை வெகு ஆனந்தமாய் நிறைவேறிற்று. மேன்மக்களுக்குள் பாண்டியனைக் குறித்த மதிப்பு அதிகரித்தது.

நடந்த யாவற்றையும் சபையிலிருந்து ஆச்சரியத் தோடு கவனித்துக் கொண்டிருந்த கீர்த்திவர்மர், தமது மருமகன் இன்னானென்றறிந்து, குலசேகரன் வெளியே வரவும், ஓடிவந்து அவனைத் தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டார். அவரை இனமறியாத குலசேகரன் பிரமித்து, "இதென்ன? மதுரையிலுள்ள தலைப்பாகைகளில் இந்த வித்தையும் ஒருவகையோ? பாண்டியன் நமக்குச் சன்மானம் செய்ததுகண்டு நம்மை ஏமாற்றிப் பணம் பறிக்கப் பார்க்கிறீரோ?" என்று சந்தேகித்து, தூரத்தில் விலகி நின்று, "நீர் யார்? என்னைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விடவேண்டிய காரணமென்ன?" என வுறுக்கிக்கேட்டான். அதற்கவர், "நான் தான் கீர்த்தி வர்மன். உமது தாயின் தமையன்" என்றார். அதைக்கேட்டுக் குலசேகரன் "இவர் பொய்சொல்லி நம்மோடு உறவு கொண்டாட எத்தனிக்கிறார்போலத் தெரிகிறது. இவருக்கு இடம் கொடுக்கலாகாது" என்றெண்ணி, "நன்றாய்ச் சொன்னீர்! முன்னமே என் மாமனாரைப் பற்றிய விபரத்தை எல்லாம் அறிந்துகொண்டு வந்து என்னை ஏமாற்றக்கூடாதா? கீர்த்திவர்மர் என்ற மாமனார் ஒருவர் இதுவரையும் எனக்கு இல்லை. உமது தலையும் நரைத்து விட்டது. இனி இந்தத் தொழில் வேண்டாம். போய்விடும்" என்று சினந்து கூறினான். கீர்த்திவர்மர் கொஞ்ச நேரம் திகைத்து நின்று, அப்புறம், "நீர்

சந்தேகப்படுவது இயல்பே. என்பேர் "பிர்மாறன்" என்பார்கள். அரசாங்க உத்தியோகத்திற்கு வந்த காலத்தில், மற்றநேகர் செய்கிறதுபோல, நானும் பேரை மாற்றி வைத்துக்கொண்டேன். வேண்டுமானால் காரியாருக்குக் கடிதம் எழுதித் தெரிந்துகொள்ளும். நீர் கோபித்துக்கொண்டாலும் உண்மை விடப்போகிறதில்லை. என்னோடு வீட்டிற்கு வாரும். உம்முடைய பாட்டியார் உமது பேரில் ஒரே சிந்தனையாயிருக்கிறாள்" என்றார். இதைக் கேட்டவுடன் குலசேகரன், "ஆகா! நாம் ஆலோசிக்காமல் கடுமொழி புகன்றோம். இவருடைய முகச்சாயல் வெகுதூரம் என் தாயாருடைய முகத்தை ஒத்திருக்கிறது. இவர் சொல்லுவது உண்மையாகவே இருக்கவேண்டும். அப்படியானால் இது தேவையக்கனமான விஷயமே" என்று எண்ணி, வெட்கமடைந்து, பாண்டியனுடைய அநுமதி பெற்றுக்கொண்டு இரண்டொருநாளில் அவருடைய வீட்டிற்கு வருவதாகச் சொன்னான். கீர்த்திவர்மரும் மிகுந்த திருப்தியோடு தமில்லம் சென்றார்.

தான் எண்ணியிருந்ததற்கு மாறாக, குலசேகரனைப் பாண்டியன் கனப்படுத்தியதைக் காணவும், நீலன் தன்னையே மறந்து கூத்தாடினான். ஆஸ்தான மண்டபத்தைச் சுற்றி நின்ற யாவருக்கும் தான் பொன்னூர்ப் பாண்டியனுடைய சேவகன் என்பதை விளம்பரம் செய்தான்.

அன்றே பேட்டையை விட்டு, அரச அரண்மனையில் அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த இடத்தில் குடிபுகுந்தார்கள். குலசேகரனுக்குப் பணிவிடை செய்யும்படி பாண்டியன் அனுப்பியிருந்த வேலைக்காரரின்மேல் அதிகாரம் செலுத்துவதும், தன் எஜமானுடைய கீர்த்தியைப் பிரகடனம் செய்வதுமே நீலனுடைய வேலையாயிற்று. அவனுடைய உடல் பூரித்தது. முன்னே தினமொன்றிற்கு இரண்டு காசு வெற்றிலை மெல்லுபவன் இப்போ ஒரு பணத்து வெற்றிலைகூடப் பற்றாதென்று கண்டான். முன்னே சட்சமத்திலிருந்த குரல் இப்போ காந்தாரம் வரையும் உயர்ந்து விட்டது. இரண்டு வேளை ஸ்நானமும், துவையல் வேஷ்டிகளும், ருசிகரமான சாப்பாடும் இன்றியமை

யாதனை என்று கண்டான். நீலன் இரண்டு நாளுக்குள் இவ்வளவு மாறுதல் அடைந்ததைக் கடைக்கண்ணால் கவனித்த குலசேகரன், பட்டணவாசம் நீலனுக்கு ஆகாது என்று நிச்சயித்தான்.

15. தலைவியைப் பிரிதல்.

மருமகனை விட்டு தம் வீட்டிற்குச் சென்ற கீர்த்திவர்மர், அரச சபையில் நடந்த யாவற்றையும் தமது தாயாருக்குத் தெரிவித்தார். கிழவியும் கல்யாணியும் அடைந்த மகிழ்ச்சியையும் வியப்பையும் விவரிக்க முடியாது. மூன்றாம் நாளில், மருமகன் வருகையை எதிர்பார்த்து, கீர்த்திவர்மர் தமது வீட்டில் விருந்து நடத்த ஒழுங்கு பண்ணினார். மிகச் சிக்கனமாகச் செலவு செய்யும் வழக்கமுடையவராயிருந்ததால், மதுரையிலுள்ள பந்துக்களிலும் கூட அதிக நெருக்கமானவர்களையன்றி வேறொருவரையும் அவர் விருந்துக்கு அழைக்கவில்லை. அப்படியிருந்தும் சுமார் நூறு பேருக்கு விருந்து செய்ய நேரிட்டது.

தான் சொல்லியிருந்தபடியே, குறித்த நாளில் குலசேகரன் நீலன் சகிதம் மாமனார் வீட்டை அடைந்தான். வந்திருந்த பந்துக்களெல்லாரும் அவனைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். பல பல முறைகளைச் செப்பிக்கொண்டு அவனருகில் வந்து யோக க்ஷேமம் விஜாரித்தார்கள். பந்துக்களில் ஒருவரையும் அதுகாறும் கண்டறியாத குலசேகரனுக்கு அவர்களைச் சந்தித்தது ஒரு புதிய அநுபவமாகவே யிருந்தது. பெரிய தந்தைகளும், சிறிய தந்தைகளும், அண்ணன்மாரும், தம்பிமாரும், மாமன்மாரும், மைத்துனரும், பெரியன்னைகளும், சிற்றன்னைகளும், மாமிமாரும், மதனிமாரும், கொழுந்திமாரும், பாட்டன் பாட்டிமாருமாகக் கூடிச்சேர்ந்தவர்களெல்லாரும், தத்தம் இயற்கையின்படி அவனோடு வார்த்தையாடினார்கள். மைத்துனன்மார் அருகில் வந்து அவனுடைய புஜங்களைப்பிடித்

னுப் பார்த்தார்கள். பலகேலியான சிறு வார்த்தைகளைச் சொல்லி அவனைச் சிரிக்கச்செய்தார்கள். கொழுந்திமார் அவனை நகத்தால் கிள்ளிவிட்டு ஓடிமறைந்தார்கள். குலசேகரனுக்கு அவர்களோடு விநோதமாய் வார்த்தையாடக் கூடிய பழக்கம் இல்லாதபடியால், அவர்கள் செய்த விளையாட்டுகளைப் பார்த்துப் புன்சிரிப்போடு சும்மா இருந்தான். பந்துக்கள் யாவரும், கல்யாணிக்குத் தகுந்தமாப்பிள்ளை இவனே என்று ஏகவாக்காய்ச் சொன்னார்கள். இனத்தார் எல்லாரும் போற்ற, பாட்டியார் முத்தமிட, கல்யாணி கடைக் கண்ணோக்க, மைத்துனிகளும், மைத்துனரும், கூடிக்குலாவ, அன்றைப் பொழுது நம் கதாநாயகனுக்கு வெகு சிக்கிரமாகவே சென்றுவிட்டது. ஓர் இரவிற்குள்ளாக முளைத்து வளரும் காளான்கள்போல இவர்களெல்லாரும் எனக்கு எங்கிருந்து அகப்பட்டார்கள் என ஆச்சரியப்பட்டான். குலசேகரன். கல்யாணி கூச்சப்பட்டுப் பிறகட்டில் மறைந்துகொண்டாள். அங்கு வந்திருந்த ஸ்திரீகளில் அவளுக்கு மதனிமுறையாயுள்ள சிலர் அவளைப் பலவந்தமாகப் பிடித்துச் சிங்காரித்து, உட்காரவைத்து புஷ்பங்களை எறிந்து, கலியாணப்பாட்டுகள் பாடிக் கேலி செய்து பொழுது போக்கினார்கள். கட்டாயமாய் அவளை இழுத்து வந்து குலசேகரனைக் காண்பித்து "மாப்பிள்ளையைப் பார்த்துக்கொண்டாயா?" என்று கேட்டு யாவரையும் நகைக்கச் செய்தார்கள்.

விருந்து முடியவும், எல்லாரும் ஓரிடத்தில் உட்கார்ந்து குடும்ப காரியங்களைப் பேசினார்கள். கீர்த்திவர்மர் தமக்கு இனி மதுரையில் இருக்க விருப்பமில்லையென்றும், உத்தியோகத்தைவிட்டு நீங்கி ஊருக்குப் போய்விடவே கருதியிருப்பதாகவும் சொன்னார். பந்துக்களில் பலர் தெற்கேயிருந்து வந்து மதுரையில் தங்கியிருந்தவர்களாகவே யிருந்தார்கள். அவர்களும் தத்தம் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டுப்போக யோஜனையா யிருப்பதாகத் தெரிவித்தார்கள். கிழவி உடனே தன்னையும் தன் பேர்த்தியையும் ஊருக்கு அனுப்பிவிடவேண்டுமென்று கேட்டாள் ஆகவே, மறுநாளில் பொன்னூருக்குப் பணம் கொண்டு போகும் சேவகரோடு ஸ்திரீகள் இருவரும் சென்று, அவ்

வழியாக முத்தூருக்குப் போகவும், நீலன் அவர்களுக்கு வழித்துணையாகச் செல்லவும், கீர்த்திவர்மர் மதுரையிலு ள்ள தமது ஏராளமான ஆஸ்தியை விற்றுவிட்டு, கடனு கக் கொடுத்திருந்த பணங்களையும் சேகரித்துக் கொண்டு உத்தியோகத்தைவிட்டு, எல்லாக் காரியமும் ஆனவுடனே வூருக்குப் போவதென்றும் தீர்மானித்தார்கள். குலசேக ரன் அரச கட்டளையின்படி மதுரையிலேயே இருக்கவேண் டியதாயிற்று.

பந்துக்கள் யாவரும் ஏகமனதாய், பழைய கிளை விட் டுப் போகாதபடி, கல்யாணியை குலசேகரனுக்கே மணம் செய்து கொடுக்கவேண்டு மென்று சொன்னார்கள். அத ற்கு அவர், "காரியாருடைய மனம் எப்படியோ? அதை அறியுமுன் நாம் பேசுவதில் பயனில்லை. எனக்கு அந்தச் சம்பந்தம் விருப்பமே. என்றாலும், மாப்பிள்ளை வீட்டார் முறைப்படி வந்து பெண் கேட்குமுன் நான் பெண்கொடுப் பேன் என்று சொல்லுவது நமது குலத்தில் வழக்க மில்லையே. எல்லாம் தெற்கே போனபின் பார்த்துக் கொள்ளலாம்" என்றார்.

நீலன் தமது குடும்பத்திற்குச் செய்த சகாயத்திற் காக, கீர்த்திவர்மர் அவனுக்கு விலைபெற்ற வஸ்திரங்களை யும், ஒரு ஜோடி பொற்கடுக்கன்களையும், கனத்த பொற் காப்புகளையும், பரிசாக அளித்த தோடு, முன்னூறுபொ ன்னும் கொடுத்தார். கீர்த்திவர்மர் கடின நெஞ்சராயிருந் தும், அவசரமான காரியத்திற்கு மனம் கோணாமலே செலவிடுகிறார் என்று பந்துக்கள் யாவரும் சொல்லிக்கொ ண்டார்கள். அரையில் கலிங்கத்துச் சரிகை வேஷ்டியும், தோளில் பட்டுச் சோமனும், கைகளில் தங்கக்காப்புகளும் காதுகளில் கடுக்கன்களும் ஏறினவுடனே நீலனுடைய கால்கள் தரையில் நிற்கச் சம்மதிக்கவேயில்லை.

அன்று ஸ்திரீ புருஷர்களான அநேகர் அங்கு சூழ்ந் திருந்தபடியால் குலசேகரனும் கல்யாணியும் தனிமையில் சம்பாஷிக்கச் சமயம் கிடைக்கவில்லை. மறுநாள் உதயத்தில் அவள் புறப்பட வேண்டியதா யிருந்ததால், சில வார்த்தை

களாகிலும் அவளோடு பேசவேண்டும் என்று அவன் விரும்பியும் கூடாதே போயிற்று. அதையால், மற்றவர்களிடம் வழியனுப்பிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அன்று இரவில் தன் தகப்பனருக்கும் தாயாருக்கும் கடிதங்களெழுதினான். பொன்னூருக்கு அனுப்பவென்று தான் வாங்கி வைத்திருந்த பொருட்களைப் பார்வையிட்டு, "இவை மூன்றுநாளுக்குமுன் நான் இருந்த நிலைமைக்குத் தகுந்தபடி வாங்கினவை. இவைகளையே நீலன் கொண்டு போய்க் கொடுக்கட்டும். இன்றைக்கு நான் கடைவீதிக்குப் போனால் பதினாயிரம் பொன்செலவிட எண்ணினாலும் தடுப்பார் ஒருவருமில்லை. அன்றைக்கு நான் ஒவ்வொரு காசுக்காகவும் வியாபாரிகளோடு வாக்குவாதம் செய்து அவற்றை வாங்கினேன். ஆதலால் அவைகளே என் அன்பை உண்மையாய்க் குறிப்பிடுகிறவைகளா யிருக்கின்றன. வறுமையும் செல்வமும் எவ்வளவு சடுதியில் வருகின்றன!" என்று நினைத்தவனாய் நீலனிடம் அவற்றைக் கொடுத்தான். கொடுத்து, நீலனைப்பார்த்து "நீ என் தாய் தந்தையரை ஜாக்கிரதையாகப் பார்த்துவரவேண்டும். அவர்களுக்கு ஏதாவது துன்பம் நேரிட்டால் உடனே எனக்குத் தெரிவிக்கவேண்டும். இவ்விடத்தில் எனக்குப் போதுமான வேலைக்காரர் இருப்பதால் நீ இனி இங்கே அவசரமில்லை" என்றான். எஜமானை விட்டுப்பிரிவது நீலனுக்கு விசாரமாகவேயிருந்தது. விடியற்காலத்தில் குலசேகரன் வழிவிட்டனுப்பும்போது, நீலன் "கோ" வென்று அழுது கொண்டேபோனான்.

கீர்த்திவர்மர் தமது மைத்துனருக்கு ஒரு கடிதம் எழுதி நீலன் கையில் கொடுத்தனுப்பினார்.

குலசேகரனை விட்டுப் பிரிந்து தெற்கே போவது கல்யாணிக்கு வெகு துக்கமாயிருந்தது. "இங்கு தனித்திருக்கும் என் பிராணநாதருக்கு என்ன விபத்து நேரிடுமோ? மையிட்ட கண்மடவார் மலிந்த மதுராபுரியில், மங்கையரின் மாய்கைக்குள்ளாகாமல் இவர் எங்ஙனம் தப்புவாரோ? என்னை மறந்துவிடுவாரோ? வெகுநாள் இருந்து விடுவா

ரோ?" என்பனபோன்ற இயற்கையான பல சிந்தனைகளில் ஆழ்ந்து, துயிலின்றி யவ்விரவைக் கடத்தாள்.

கிலன் விடியற்காலத்தில் சித்திரவர்மர் வீட்டிற்குச் செல்லாமல், குலசேகரன் குதிரை ஏறி, இன்னமும் ஒருதடவையாகிலும் அவளுடைய முகத்தைக் காணவேண்டும் என்று ஆசைகொண்டு பட்டணத்திற்கு வெளியே சென்று, தெற்கே போகும் பெரும்பாதை பக்கத்தில் காத்திருந்தான். சிறிது நேரத்தில, சிவிகைகளும், பணம் ஏற்றிய குதிரைகளும், அவைகளை ஓட்டிக்கொண்டு வந்த ஐம்பது சேவகர்களும், தன்னைநோக்கிவரக் கண்டான். சிவிகைகள் சமீபிக்கவும், கிட்டப்போய் தன் பாட்டியாரை நமஸ்கரித்துவிட்டு, பக்கத்திலேயே போய்க்கொண்டிருந்தான். "பேசுவதற்கோ யாதொன்றும் தெரியவில்லை. கிழவி பக்கத்தில இல்லாவிடில் ஏதாவது பிதற்றலாம்" என எண்ணமிட்டுக்கொண்டே, பாட்டியார் கேட்டவற்றிற்குச் சுருக்கம் சுருக்கமாய் மறுமொழி சொல்லிக்கொண்டு போனான்.

இவ்வாறு ஒரு நாழிகை வழிதூரம் சென்றும், ஒருவரை ஒருவர் பார்ப்பதும் முகத்தைத் திருப்புவதுமாக இருந்ததேயன்றி, வார்த்தை ஒன்றும் வெளிப்படவில்லை. நேரமானதைக் கவனித்துக் குலசேகரன் துணிந்து, "கல்யாணி! போய் வருகிறாயா?" என்றான். "நல்லது. நான் போவதாகத் தீர்மானமேயன்றி, வருவதாகத் தீர்மானிக்கவில்லையே," என்று வேடிக்கையாகச் சொன்னது அவளுடைய வாய். கண்ணோ, "உம்மைப் பிரிந்து எங்ஙனம் உய்வேன்?" என்றது. சற்றுநேரம் சும்மா இருந்தபின் "சரிதான். நீ வராவிட்டால் நானே வந்து விடுகிறேன். அது கிடக்கட்டும். உன்னை ஞாபகம் செய்து கொள்ள ஏதாவது கொடு" என்றான் குலசேகரன். "ஆகா! யாருடைய பொருளையாவது கொள்ளையடிக்க வேண்டும் என்பதுதான் சதா சிந்தனைபோல் காண்கிறது. மாட்டேனென்றால் பலாத்காரமாய்ப் பறித்துக் கொள்வதும் கூடியதே. ஆகையால் நானே தந்து விடுகிறேன்," என்று சொல்லிக்கொண்டே, தன் கழுத்திலிருந்த முத்தாரத்தைக் கழற்றிக் கொடுக்கக் கையை நீட்டினாள். அவன் அதைப்பெற்,

யக்கொள்ளும்படி கையை நீந்த, "இதென்ன கடகமா கையிலணிய? இது கழுத்தில் தரிக்கிற வஸ்து என்று தெரியவில்லையோ?" என்றாள் கல்யாணி. குலசேகரன் குதிரை விட்டிறங்கிச் சிவிகைக்குள் தலையை நீட்ட, அவள் ஆரத்தை அவனுடைய கழுத்தில் அணிந்து "போதுமா?" என்று கேட்டாள். அவனைத் தொட்டதினால் அவளுடைய உடல் கூச்சமடைந்தது. முகம் சிவந்தது. அவளுடைய கண்கள் "உம்மை மாலையிட்ட கரத்தால் ஜன்மாந்தரத்திலும் இன்னொருவனைத் தொடேன். இது உறுதி" யென விளம்பிற்று. அவளுடைய கையின் ஸ்பரிசத்தால் குலசேகரனுக்கு ஒருவிதப் புதிய உணர்வு உண்டாயிற்று. தன் பலம் எல்லாம் நீங்கினது போலவும், மனம் ஆனந்தமயமாக மாறினது போலவுமான ஒரு அனுபவம் ஒரு விநாடி நேரம் வந்து மறைந்தது. மறு விநாடியில் தெளிவடைந்து, தனக்குப் பாண்டியன் கொடுத்திருந்த விலைமதிக்கக்கூடாத நவரத்தின மாலையை மடியிலிருந்து எடுத்து, "கல்யாணி! நீ என் மைத்துனி என்பதை மறந்து உன்னுடைய முத்துமாலையை அபகரித்துவிட்டேன். உன் கழுத்து வெறுமையாயிருப்பது நன்றாயில்லை. ஆகையால் இந்தப் பவளமாலையை யாகிலும் தரித்துக்கொள்" என்று விநோதமாய் வார்த்தையாடிக்கொண்டு சமீபிக்க, அவள் "அத்தானிடத்தில் எதையாகிலும் பெற்றுக்கொள்ளுவதென்றால் பயமாகவே இருக்கிறது. யாரிடத்தில் கொள்ளையிட்ட பொருளோ?" எனச் சொல்லிக்கொண்டே புளகாங்கிதமுற்றவளாய், தலைவணங்கி அவனால் மாலையிடப் பெற்றாள்.

இவர்கள் செய்த காரியம் ஒழுக்க விரோதம் எனக் கிழவி எண்ணினாள்; எனினும் அவர்கள்மேல் வைத்த ஆர்வத்தால் கடுமொழி கூற நாவெழாமல் "ஈஸ்வரி! இவர்களுடைய குற்றம் பொறுத்து, அதி சீக்கிரத்தில் விவாகத்தால் இவர்களை ஒன்று சேர்ப்பாய்" என மனதில் வேண்டினாள்.

அப்புறம் குலசேகரன் நீலனைப்பார்த்து "நீலா! நான் பாண்டியனுடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு சீக்

கிரத்திலேயே வந்துவிடுவேன் என்று என்பெற்றோருக்குத் தெரிவி. வழியிலே ஸ்திரீகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டு, எல்லாரிடமும் வழியனுப்பியபின் மதுரைக்குத் திரும்பினான்.

அவனை எட்டிப் பார்த்துக்கொண்டே சென்ற கல்யாணி, அவன் கண் மறையவும், துக்கம் மேலிட்டு, "தேரையும் காணோம், திசைகளும் மறைந்தன" என வனத்தில் விடப்பட்ட சீதாபிராட்டியார் புலம்பினதுபோல உள்ளத்தில் புலம்பி, கண்ணீர் விட்டாள். கன்னியரின் மனப் பாங்கறிந்த முதியவள், அவளுக்குப் பல நன் மொழிகளைச் சொல்லித் தேற்றினாள்.

சிவிகைகள் மறைந்துவிட்டன. குலசேகரன் ஆயாசமடைந்தான். அதுவரையும் விசாரத்தை உள்ளபடி அறியாதிருந்த அவனுடைய மனம் மிகுந்த துக்கத்துக்குள்ளாயிற்று. "அவள் போனது என் கண்களிலுள்ள ஒளி போய்விட்டது போலிருக்கிறது. இனி என்று காண்பேன்? எங்கும் நிறைந்த பரம்பொருளே! கல்யாணியைக் காப்பது நின் பொறுப்பு" எனச் சொல்லிக்கொண்டு அரண்மனைபோய்ச் சேர்ந்தான்.

அன்று காலையில், குலசேகரனைத் துணைகொண்டு கோயிலுக்குப் போக எண்ணியிருந்த பாண்டியன், அவனைக் காணாதபடியால் தானே சென்று பூஜையை முடித்துவிட்டுத் திரும்பி, வழக்கப்பிரகாரம் மந்திரியோடு அரசாங்க விஷயங்களை நடத்திக்கொண்டிருந்தான். அரசன் தன்னை அழைத்தனுப்பினதைக் குலசேகரன் அறியவும், தீவிரமாகப் பாண்டியனிருந்த இடத்தைத் தேடிச் சென்றான். மந்திரிக்குச் செலவு கொடுத்தனுப்பிவிட்டு, பாண்டியன் எழுந்து குலசேகரனை அழைத்துக்கொண்டு, சிரமம் தீர்த்துக் கொள்ளும்படி, சமீபத்திலிருந்த ஒரு சிறிய நந்தவனத்தில் பிரவேசித்தான்.

அங்கு உலாவிக்கொண்டே, "குலசேகரா! இன்று அதிகாலையில் எங்கு சென்றாய்?" எனக் கேட்டான். அதற்குக் குலசேகரன் பதிற்சொல்லக் கூச்சமடைந்து நிற்க,

பாண்டியன் "நீ சொல்லாவிட்டாலும், உன் கழுத்திலிருக்கும் ஆரம் சொல்லுகிறது. இப்போதே தலைவியைப் பிரிந்து வந்தாயென உன் முகம் சொல்லுகிறது. உண்மை தானே?" என்றான். குலசேகரன் அரசனுடைய புத்திக் கூர்மையை வியந்துகொண்டு, தனக்கும் கல்யாணிக்குமிடையில் உண்டான நட்பைக் குறித்துச் சுருக்கமாயத் தெரிவித்தான்.

பாண்டியன் அதைக் கேட்டுத் தலையை அசைத்துக் கொண்டு, "காதல் விஷயத்தில் எனக்கும் சிறிது அனுபவமுண்டு. அது இயல்பாக இளம்பிராயத்தில் எல்லாருக்கும் உண்டாவது தான். தலைவனும் தலைவியும் மனமொத்து அடையும் உண்மையான காதல் வெகு அபூர்வம். பெரும்பாலும் காதல் என்பது ஒருதலைப் பக்ஷமாகவேயிருக்கும். பரஸ்பரமான மெய்க்காதல் அதில் சம்பந்தப்பட்டவர்களுடைய வாழ்க்கையைப் புனிதமாக்கி, மேன்மைப்படுத்தும் இயல்பை உடையது. அது அஷ்ட ஐஸ்வரியங்களினும் மேலாகக் கருதக் கூடிய உயர்வுடையது. அது கடவுளால் அருளப்படுகிறவர்களுக்கன்றி எல்லாருக்கும் லபிக்காது. நெருங்கிய பந்துக்களுக்கிடையில் காதல் உண்டாவது மிக அருமை. முறையைப் பற்றிச் செய்யப்படும் சம்பந்தங்கள் பெரும்பாலும் லௌகிக வசதிகளைக் கருதியே நடப்பவை. ஆத்துமாவின் மெய்யான குணமாகிய அன்பினின்று ஜெனிப்பதாகிய மெய்க்காதல் அவ்வித விவாகங்களில் அரிது. நீயும் அவளும் சிறுபிராயமுதல் ஒருவரை ஒருவர் அறிந்து பழகியிருந்தால் உங்களுக்கிடையில் சகோதரபாவமான அன்பு உண்டாயிருக்குமேயன்றி, உண்மையான காதல் உண்டாகியிருக்காது என்று எண்ணுகிறேன். காதல் எனபது சாதாரண அன்பினும் மேற்பட்ட ஒருகாரியம். அது காமத்தில் ஜெனிப்பதல்ல. அதின் உயர்வை உணர்த்தும் பொருட்டே, நமது மதகோட்பாடுகளில் ஈஸ்வரனை தேவி சகிதமாக உருப்படுத்தி வணங்குதல் உசிதம் என்று ஏற்பட்டிருக்கிறதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். கடவுளுக்கு அன்பே பிரதான லக்ஷணமென்றும் அந்த லக்ஷணம் திருப்திப்படுவதற்கு ஒரு இலக்காகவே தேவியை அவருடைய பக்கத்தில் காட்

டப்பட்டிருக்கிறதென்றும், தேவியின் அம்பினுலேயே கன்வரன் பூர்ணமடைகிருன் என்றும் கொள்ளலாம். நீ சொன்னவற்றிலிருந்து, அவளை நீ காதலிப்பதைப் பார்க்கிலும், அவள் உன்னிடம் அதிகக் காதலுள்ளவளாயிருக்கிருள் என்று எனக்குத் தோன்றுகிறது. அவள் அசாதாரணமான புத்திசாலியாகத் தெரிகிறது. தன் மனதின் விருப்பங்களை வெளியே காட்டாதபடி வெகுவாய் மறைக்கக்கூடிய சாமர்த்தியம் அவளிடத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. உங்களிருவரையும் வெகுநாள் பிரித்து வைக்க நான் விரும்பவில்லை. கொஞ்சநாள் என்னேடிரு. அப்புறம் உன்னை ஊருக்கு அனுப்பிவிடுவேன்" என்றுன். அதைக் கேட்கவும் குலசேகரனுடைய முகம் மலர்ந்தது. அரசனுக்கு மனமார்ந்த நன்றி கூறினுன்.

அதற்குப் பாண்டியன், "ஊருக்குப் போகலாம் என்றவுடனே உன்மனம், எவ்வளவு சந்தோஷமடைந்தது பார்த்தாயா? காதல் இளைஞரை வெகுபாடு படுத்துவது உண்மை. வாலிபத்தில் நானும் உன்னைப்போலவே ஒரு பெண்ணை உள்ளமனதோடு காதலித்தேன். அவளும் என்னிடம் அளவில்லாத அன்புடையவளாயிருந்தாள். குல வித்தியாசத்திஞல் நாங்கள் கூடி வாழ்வது கூடாததாயிற்று. அந்தச் சரித்திரத்தை நான் ஒருவருக்கும் என் வாயால் சொன்னதில்லை. நீயும் நானிருந்த நிலைமையில் இருப்பதால் அதை உனக்குச் சுருக்கமாய்த் தெரிவிக்கிறேன்.

எங்கள் குடும்பத்திற்கு அநேக தலைமுறைகளாகப் புரோகிதராயிருந்த விப்பிர வம்சத்தாரில், ஆனந்தசாஸ்திரி என்ற முதியவர் என் பிதாவின் காலத்தில் எங்களுக்குக் குருவாயிருந்தார். அவர் ஐம்பது பிராயம் வரைக்கும் கல்யாணம் ஆகாதவராயிருந்து, அதற்கப்புறம் விவாக நிலைமையில் பிரவேசித்தார். அதின் பலனுக இரண்டு பெண் குழந்தைகள் உண்டானுர்கள். அவர்கள் சிறுவராயிருக்கும்போதே அவருடைய மனைவி காலம் சென்றுவிட்டமையால், குழந்தைகளை வளர்க்கவேண்டிய பொறுப்பு சாஸ்திரியார்மேல் விழுந்தது. அவர் அப்பெண்களை வெகு

பக்ஷமாய் வளர்த்து, இளவயதிலேயே அவர்களுக்கு இரு மொழிகளையும், மற்றக் கல்விகளையும், போதித்தார்.

மூத்தவளாகிய காவேரிக்கு பத்தாவது வயதில் கல்யாணம் செய்வித்தார். மூன்றுவருடம் கழித்த பின் அவள் தன் புருஷன் வீட்டிற்குப்போய், தலைப்பேறு சமையத்தில் இறந்துவிட்டாள்.

இளையவளாகிய மாதவியை விட்டுப் பிரிவது சாஸ்திரியாருக்கு வருத்தமாயிருந்தபடியால், அவளுடைய கல்யாணம் கடந்துகொண்டேவந்தது.

அப்படியிருக்கும் காலத்தில் என் தந்தையார் எனக்கு வடமொழி பயிற்றுவிக்க விரும்பி, சாஸ்திரியாரிடம் தெரிவிக்க, அவரும் இணங்கி எனக்குக் கற்பிக்கச் சம்மதித்தார்.

குறித்த நாளில் நான் சாஸ்திரியாருடைய வீட்டிற்குப் போனபோது, மாதவியைக் கண்டேன். அப்பொழுது அவளுக்குப் பன்னிரண்டு பிராயம். எனக்கு வயது பதினாறு. அவள் மிகுந்த ரூபவதியாயிருந்தாள். அவளுடைய பேச்சு இனிய மெல்லிய தொனியோடு வெளிப்படும். அவளுடைய நடை மனோகரமாயிருக்கும். அவளுடைய உடலினின்று இன்பமான வாசனையுண்டாக்கிக் கொண்டிருக்கும். என்னைக் காணவும், அச்சமடைந்த ஒரு மான் கன்றைப் போல என்னை நோக்கினாள்.

கபடமறியாத சுத்த நெஞ்சையுடைய சாஸ்திரியார் அவளை அழைத்து, என்னை அறிமுகம் செய்து வைத்தார். அது முதல் நான் பிரதிதினமும் சாஸ்திரியார் வீட்டிற்குச் சென்று பாடம் படித்துக்கொண்டு வந்தேன். மாதவியும் என்னோடு உட்கார்ந்து தனக்கு ஒப்புவிக்கப்பட்ட பாடங்களைக் கற்றுக்கொண்டிருப்பாள். வடமொழியில் அவள் மிகுந்த பாண்டித்தியம் அடைந்திருந்தபடியால் நான் அவளுடைய உதவியை அடிக்கடி தேடும்படி நேரிட்டது.

ஒரு மாதத்திற்குள்ளாகவே எங்களுக்குள் நெருங்கிய சிநேகம் உண்டாகிவிட்டது. நான் என் உள்ளத்தில் உள்ளவற்றை எல்லாம் அவளிடம் சொல்லுவேன். அவளும் யாதொன்றையும் மறைக்காமல் என்னோடு தாராளமாய் வார்த்தை யாடுவாள். என்னுடைய கல்வியின் விருத்தியை விட, நான் மாதவியிடம் வைத்த காதலின் விருத்தி அதிகமாயிருந்தது. ஒவ்வொருநாளும் நாங்கள் பிரியவேண்டிய நேரம் வரவும், அது எங்களுக்குத் துன்பகரமாகவே யிருந்தது. சாஸ்திரியார் வெளியே செல்லும் காலங்களில், நாங்கள் வெகு ஆனந்தமாயிருப்போம். கண்கட்டி விளையாடுவதும், சாஸ்திரியார் வீட்டுக் கொல்லையிலுள்ள செடிகளுக்கூடே உட்கார்ந்து வார்த்தையாடுவதும் எங்களுக்கு மிக மகிழ்ச்சியாயிருக்கும். பாவத்தை அறியாத பரஸ்பர அன்பு அப்போது எங்களை ஆண்டு கொண்டிருந்தது.

இவ்வாறு ஒரு வருடம் செல்ல, ஒருநாள் சாஸ்திரியார் என்னைப் பார்த்து "பாண்டியா! மாதவிக்குக் குழந்தைப் பருவம் கடந்துபோய்விட்டது. இனி நீ அவளோடு விளையாடுவது நல்லதல்ல" என்றார். அவர்சொன்னது என்மனதில் ஒரு புதிய உணர்வை உண்டாக்கிற்று. "இனி நான் அவளை எந்த ரீதியில் கருதலாம்?" என்ற ஒரு சந்தேகம் ஜனித்தது. மாதவியும் மற்றவர்கள் எதிரில் என்னோடு பேசுவதை நிறுத்த வேண்டியதாயிற்று. இவ்வித தடை எங்களுடைய காதலைப் பலப்படுத்தக் காரணமாயிற்று. ஆதலால் நாங்கள் ஊரிலுள்ளோருக்குத் தெரியாமலே சந்திக்கும்படியாயிற்று. அவ்வித இரகசிய சந்திப்புகளுக்கு அவசரமான கடிதங்கள், அடையாளங்கள், கண் ஜாடைகள், கைச் சைகைகள், முதலான உபகரணங்களை ஒருவரும் எங்களுக்குப் போதிக்காமலே நாங்கள் அறிந்து உபயோகித்தோம். அக்காலத்தின் அனுபவங்களை நான் விவரிக்கப்புகுந்தால் நேரம் செல்லும். ஆ! அந்த நாட்கள் எங்கு சென்றன? அப்போது நாங்கள் இவ்வுலகத்தைவிட்டு சுவர்க்கத்தில் வாசம் செய்ததுபோலவே இருந்தது. எங்கள் மனதில் பாவச் சிந்தனைகள் உண்டாகவேயில்லை.

ஒருநாள் சாஸ்திரியார் வெளியே போயிருக்கும் நேரத்தில், நான் அவர் வீட்டின் கொல்லை மதிலைத்தாண்டி உட்பிரவேசித்தேன். பூக் கொய்துகொண்டிருந்த மாதவி என்னை வழக்கப்படி வரவேற்றாள். ஒரு செடியின் கீழ் உட்கார்ந்து சம்பாஷித்தோம். மாதவி கால்நீட்டித் தரையில் உட்கார்ந்து தான் கொய்திருந்த பூக்களை மாலையாகக் கோத்துக் கொண்டிருந்தாள். நான் அவளுடைய மடியில் தலைவைத்துத் தரையில் படுத்திருந்தேன். அவளுடைய வாயினின்றும் கீத கோவிந்தத்திலுள்ள இனிய சுலோகங்கள் மெல்லிய இராகத்தில் வெளிப்பட்டு என்மனதைப் பரவசமாக்கிக்கொண்டிருந்தன.

இந்த நிலைமையில், கொல்லை வாயிற் கதவிலிருந்த ஒரு சந்தின் வழியாக, அடுத்த வீட்டிலுள்ள ஒரு விதவை எங்களைக் கண்டாள். அவள் மனதில் உண்டானது சந்தேகமோ, அல்லவெனில் அழுக்காறுதானோ அறிகிலேன். நடந்ததைப் பத்தாகப் பெருக்கிப் பிரஸ்தாபித்தாள். அத்தெருவிலிருந்த விதவைகளெல்லாரும் கூடிப் பேச அது மெத்தச் சிரேஷ்டமான காரியமாயிற்று. சாஸ்திரியாரும் கேள்விப்பட்டு விசனத்தில் ஆழ்ந்தார். தன் வீட்டிற்கு வரவேண்டாம் என்று என்னைத்தடுக்க அவருக்குத் தைரியமில்லை. ஆதலால் மாதவியை வேறொரு வீட்டுக்கு அனுப்பிவிட்டார். மறுநாள் நான் அவருடைய வீட்டுக்குச் சென்றபோது அங்கு மாதவி இல்லை என்று அறிந்துகொண்டேன். அதன் காரணம் எனக்குபுலப்படவில்லை.

பாடம் முடியவும், நான் எழுந்து, சுவடிகளைக் கட்டிக் கொண்டு, அரண்மனைக்குத் திரும்பி வருகிற வழியில், ஒரு சிறுவன் எதிர்ப்பட்டு, ஒரு இலையில் சுருட்டிவைக்கப் பட்டிருந்த ஏதோ ஒன்றை என்னிடம் கொடுத்துவிட்டு ஓடிப்போனான். அதனுள் ஒரு ஓலைச்சுருள் இருந்தது. அதை விரித்துப் பார்க்க, அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

சுந்தரா,

அடுத்த வீட்டுக் காந்திமதி அப்பா விடத்தில் பொய் சொன்னாள். அவர் அதை நம்பிக்கொண்டு, நான்

இனி உன்னைப் பார்க்கக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லி, என்னை இராமசாஸ்திரியார் வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார். உன்னைக்காணாதது எனக்கு மிகுந்த துக்கமாயிருக்கிறது.

இந்தக் கடிதத்தைப் பார்க்கவும் மாதவி. என்மனம் பதைத்தது. நான் திரும்பி, இராமசாஸ்திரி வீட்டைக்கிட்டி, கதவைத் தட்டினேன். ஒரு கிழவி கதவைத் திறந்து "என்னவேண்டும்?" என்று கேட்டாள். "மாதவியைப் பார்க்கவேண்டும்" என்றேன். "மாதவியிடம் உனக்கு என்ன? இங்கே வரவேண்டாம்" என்றாள். எனக்குக் கோபம் வந்துவிட்டது. கிழவியைப் பிடித்து ஒரு புறம் தள்ளிவிட்டு உள்ளே ஓடினேன். இதற்குள்ளாக என் சத்தம் கேட்டு மாதவி எதிரே வரவும், நான் அவளை அணைத்து, கண்ணீர் படிந்திருந்த அவளுடைய கன்னங்களைத் துடைத்து, காரியத்தை விசாரித்தேன். அவள் என் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதபடியே, நடந்தவற்றைச் சொல்லிக் கொண்டிருக்கையில், கிழவி போட்ட சத்தத்தினால் அண்டை அயல்களிலுள்ள அநேகர் வந்து கூடிவிட்டார்கள். அனந்த சாஸ்திரியாரும் வந்து சேர்ந்தார். அவர் வந்து எங்கள் இருவரையும் பிரித்துவிட்டு, துக்கம் ததும்பிய குரலோடு எங்களுக்குப் பல நீதிகளை உபதேசிக்க ஆரம்பித்தார். அவர் சொன்னதில் ஒன்றும் என்மனதில் பதியவில்லை. நான் கோபித்துக்கொண்டு அவரைப் பார்த்து, "சாஸ்திரியாரே நீர் என்ன சொன்னாலும் சரிதான். நான் மாதவியையே கல்யாணம் செய்யப்போகிறேன். நீர் சம்மதிக்காவிட்டால் அவளை பலாத்காரமாகக் கொண்டுபோய்விடுவேன்" என்று சொல்லித் திரும்பும்போது, மாதவி ஓடிவந்து என்னைத் தழுவிக்கொண்டு "சந்திரா! இனி என்னை நீ உயிரோடு சந்திக்கமாட்டாய்" என்று சொல்லி என்னை முத்தமிட்டாள். பின் நடக்கப்போவதை ஞானதிருஷ்டியால் அறிந்து அவ்வாறு சொன்னாள் என்று எண்ணுகிறேன். நான் அவளுக்கு இரண்டொருவார்த்தைகளில் தைரியம் சொல்லிவிட்டு, அரண்மனைக்குச் சென்றேன்.

. நான் திரும்பிவந்த சிறிது நேரத்திற்குள், சாஸ்திரியாரும் வேறு சில பிராமணரும் என் பிதாவினிடம்போய் முறையிட்டார்கள். அவர் சாஸ்திரியாருக்கு ஐயாயிரம் பொன் கொடுத்து, மாதவியை அழைத்துக்கொண்டு அன்றைக்கே புறப்பட்டு, தூரதேசம் சென்று, விவாகம் முடித்துக்கொடுத்துவிட்டு திரும்பிவரவேண்டும் என்று உத்தரவு செய்தார்.

இவர்கள் செய்த ஏற்பாட்டை அறியாத நான், என் சிநேகிதரில் சிலரோடு கலந்துபேசி, அன்று இரவில் இராம சாஸ்திரியாருடைய வீட்டுக்குச் சென்று, மாதவியை அழைத்துப்போய், என் சிற்றன்னைக்குச் சொந்தமாயிருந்த ஒரு கிராமத்தில் சேர்த்துவிட வேண்டுமென நிச்சயித்துக்கொண்டேன். அப்படியே அர்த்த ராத்திரிக்கு மேல் நாங்கள் சாஸ்திரியார் வீட்டை அணுகவும், அத்தெருவில் எனக்குச் சிநேகிதனாயிருந்த கிருஷ்ணன் என்பவன் எங்களைக் கண்டான். அவன் என்னிடம் வந்து மெதுவாக "பாண்டியா! மாதவியையா தேடுகிறாய்? மத்தியானத்தில் சாஸ்திரியார் பாண்டியர் சமுகத்திற்குப் போய் வந்தார். உடனே பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பொழுதடையும் நேரத்தில், வேறே மூன்று பேரோடுகூட மாதவியை அழைத்துக்கொண்டு மேற்கே பயணமானார். குடகுக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன். இன்னமும் சோழவந்தான் சேர்ந்திருக்கமாட்டார்கள்." என்றான்.

எனவும், நான் என் தோழரோடு குதிரை ஏறி அவர்கள் சென்ற மார்க்கத்தைப்பிடித்து வேகமாய்ப் போனேன். மறுநாட் பொழுது விடியும் சமயத்தில் சோழவந்தானுக்குச் சமீபத்தில், வைகையின் தென் கரையில் போய்ச் சேர்ந்தோம். மாரிகால மாதலால் வைகை கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுதுதான் ஒரு படவு, ஆட்களை ஏற்றிக்கொண்டு, கரையை விட்டுச் சுமார் இருபது முழ தூரம் சென்றதைக் கண்டேன். நான் குதிரையை விட்டிறங்கிக் கரையை அணுகவும், என்னென்று சொல்வேன்!, மாதவி படகிலிருந்து என்னைக் கண்டு

விட்டாள். "சுந்தரா!" எனக் கூவிக் கொண்டெழுந்து இருகரங்களையும் என்னை நோக்கி நீட்டினவள் நிலை தடுமாறி ஆற்றில் விழுந்து விட்டாள். ஒரு விநாடிப் பொழுதுதான் நான் அவள் முகத்தைக் காணக்கிடைத்தது. அவள் விழவும் நான் யாதொன்றும் யோசிக்காமல் தண்ணீரில் குதித்து விட்டேன். அப்புறம் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. என் சிநேகிதர் சொல்லத்தான் கேள்விப்பட்டேன். நாங்கள் விழுந்த இடம் ஒரு பெரிய நீர்ச்சுழியா யிருந்தபடியால், நாங்கள் விழுந்தபின் மேலே வராமலே போய்விட்டோமாம். அரை நாழிகைவழி தூரத்திற்கப்பால் எங்கள் உடல்களைக் கண்டுபிடித்தார்களாம். நாங்கள் ஒருவரை யொருவர் பலமாய்த் தழுவிக்கொண் டிருந்தோமாம். எங்களைக் கரையேற்று முன்னதாகவே மாதவி மரித்துவிட்டாளாம். நான் அவர்கள் செய்த பக்குவங்களினால் உயிர் அடைந்தேனாம்.

சில நாள் நான் அறிவில்லாதவனாய்ப் படுக்கையிலிருந்தேன். உணர்வு வரவும், சென்று போனவைகள் ஞாபகத்திற்கு வர, குழந்தைபோல அழுதுகொண்டிருந்தேன். என் பிதாவின்மேல் எனக்கு மிகுந்த வெறுப்பு உண்டாயிற்று.

நான் பெலனடைந்து எழுந்த அன்றைக்கு மிகுந்த கோபத்தோடு என் பிதாவைத் தேடிச் சென்றேன். ஆஸ்தான மண்டபத்தில் பிரபுக்கள் சூழ அவர் அம்பலம் செய்து கொண்டிருந்தார். ஒருநாளும் அவரோடு முகமுகமாய் வார்த்தையாடி அறியாத நான், அன்று பித்தன்போல அவர் எதிரில் சென்று, என் வாயில் வந்தபடி அவரைத் தூஷித்தேன். அவர் புன்னகைசெய்து கொண்டு, என்னைக்காவல் செய்யும்படி சேவகருக்குக் கட்டளையிட்டார். அப்படியே சில காலம் சிறைவாசம் செய்தேன்.

என் கோபிப்பு ஆறினபின் நான் துக்கத்தினால் பிரமைகொண்டவன்போல் இருந்தேன். பலர் வந்து எனக்கு நல்லாலோசனைகளைச் சொன்னார்கள். சிலவினர் என்னைச்

சிற்றின்ப வழியில் திருப்ப அதுவே சமயம் என்றறிந்து என்னைப் பலவிதமாய் மயக்கினார்கள். மாதவியை மறப்பதற்கு அதுவே நல்ல மார்க்கமாகக் காணப்பட்டது. ஆகவே மானம், ஒழுக்கம் என்பவற்றை மறந்து, அநேகாகதியாய்ச் சிற்றின்பப் பாதாளத்தில் விழுந்து கெட்டேன். சமஸ்த ஜனங்களும் என்னைத் தூற்ற நடந்தேன் அநேக பழிகளும் செய்துவிட்டேன், மாதவியை நான் மணந்திருந்தால், சன்மார்க்க நெறி தவறாமல், என் முன்னோரில் அநேகரைப்போல ஏகபத்னி விரதத்தைக் கைக்கொண்டவனாய் இருந்திருக்கலாம். ஆயிரத்தொரு மனைவியர் இருந்தும் அவர்களில் ஒருத்தியையும் நான் காதலிக்கவுமில்லை, மாதவியின் சொரூபம் என் நெஞ்சை விட்டு இதுவரையிலும் அகலவுமில்லை" என்றான்.

பாண்டியன் சொன்னவைகள் குலசேகரனுக்குப் புதுமையாயிருந்தன. துன்மார்க்கனான இந்த அரசனுடைய உள்ளத்திலும் கூட மெய் அன்பு இருக்கிறதென்று தெரிந்து ஆச்சரியப்பட்டான்.

தெற்கே புறப்பட்டுப்போன கூட்டத்தார், பொன்னூருக்கு இருகாதவழி தூரத்தில் வந்தவுடனே அங்கு தாமதித்து, நீலனை முன்னால் அனுப்பித் தங்கள் வருகையைக் காரியாருக்குத் தெரிவித்தார்கள். நீலன் வேகமாகச் சென்று கோட்டை வீட்டையடைந்தான். வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்த காரியார், யாரோ ஒருவன் வேகமாகத் தம்மை நோக்கி ஓடிவருவதைக் கண்டு, எட்டிப்பார்த்தார். நீலன் அணிந்திருந்த ஆபரணங்கள் அவனுடைய ரூபத்தை மாற்றியிருந்தபடியால், சமீபத்தில் வரும் வரைக்கும் அவனைத் தெரிந்துகொள்ளக் கூடவில்லை. அருகில் வரவும் இனமறிந்து, "அப்பா! வந்தாயா?" என்று கேட்டார். நீலன் அவர் பாதத்தில் விழுந்து வணங்கி எழுந்து, "எஜமான் மதுரையில் சுகமே இருக்கிறார். பாண்டியர் கட்டாயமாய் அவரை அரண்மனையில் நிறுத்திக்கொண்டார். சீக்கிரம் வருவதாகச் சொன்னார். இதோ அவர் தந்த கடிதம்" என்று சொல்லி, மடியிலிருந்து இரண்டு கடிதங்களை எடுத்துக் கொடுத்தான். அவர் அவற்

றை வாங்கி, "பகவானுடைய கிருபை" என்று சொல்லிக்கொண்டு, விரித்துப் படிக்க ஆரம்பித்தார்.

இதற்குள்ளாக பார்வதி, நீலனுடைய சத்தம் கேட்டு வெளியே வந்து, அவன் தனியே நின்றதைக்கண்டு கலங்கி "அப்பா! வா. என்மகன் எங்கே?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள். நீலன் பார்வதியை வணங்கி எழுந்து, "எஜமான் சுகமேயிருக்கிறார்" எனவும், பார்வதி அவனை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்று "எங்கே இருக்கிறான்? ஏன் வரவில்லை? எப்போ வருவான்? மெலிந்திருக்கிறானோ? கறுத்திருக்கிறானோ?" என்ற இவைபோன்ற அனந்தம் கேள்விகளைக் கேட்க, அவைகளுக்கெல்லாம் தன் மனதில் வந்தபடியே நீலன் பதிலளித்தான். தன் எஜமானுடைய சரீர நிலைமையையும், பராக்கிரமச் செயல்களையும், நீலன் வர்ணித்ததிலிருந்து நாம் கிரகித்தால் அவன் சொன்னது குலசேகரனைப்பற்றியல்ல, கும்பகர்ணனைப்பற்றியே என்று சந்தேகிக்கவேண்டிவரும். அவ்வளவும் சொல்லிவிட்டு, தாயார் கையில் கொடுக்கும்படி குலசேகரன் கொடுத்திருந்த கடிதத்தைக் கொடுத்தான்.

பார்வதி தன் மகன் அனுப்பிய கடிதத்தை அருமையோடு திறந்து படிக்கவும் அவளுக்குத் திகைப்புண்டாகிவிட்டது. கண்களில் நீர் பெருகிற்று. சற்று பொறுத்து, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, எழுந்து, கைகூப்பி "ஈஸ்வரி! உன் உள்ளம் குளிர்ந்ததோ? எங்கள் தரித்திரத்தையெல்லாம் ஒரு நிமிஷத்தில் நீக்கினாய். முப்பது வருஷம் நான் காணாதிருக்க என் தாயும் என்னைத்தேடிவரச் செய்தாய். என் பிள்ளையையும் கொண்டுவந்து சேர்" என்றாள்.

வெளித் திண்ணையில் உட்கார்ந்து கடிதங்களைப் படிக்க ஆரம்பித்த காரியார், முதலாவது கைக்குவந்த தமது மைத்துனருடைய ஓலையை விரித்துப் படித்துவிட்டு, "மாறனுக்கு ஞானம் வர இவ்வளவு காலம் ஆயிற்று. அரச சேவகம் இப்போதுதான் புளித்தது. நான் அவனை வெறுக்கவில்லை. அவனும் அவன் பந்துக்களும்தான் என்

வீட்டை ஒதுக்கி வைத்துவிட்டார்கள். என் மாமியார் முதலாய் என் வீட்டிற்கு வரக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். இப்போதாவது புத்திவந்ததே, அதுபோதும். அந்திய காலத்தில் எல்லாரும் ஐக்கியமாய் இருப்பதுதான் நலம்'' என்று சொல்லிக்கொண்டு, குலசேகரனுடைய கடிதத்தை விரித்துப்படித்தார்'' அதை வாசிக்க வாசிக்க அவருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இலகுவில் சலனமடையாத அவருடைய மனம் அசைவுற்றது. கடவுளை மனதில் எண்ணித் துதித்தார். துதித்து விட்டுப் பார்வதியை அழைத்து, கடிதங்களிலுள்ள விசேஷங்களையெல்லாம் தெரிவித்தார். அவளும் நீலன் சொன்னவற்றைச் சொல்லி, குலசேகரன் தனக்கு எழுதிய கடிதத்தை அவருக்குக் கொடுத்தாள். அதில் கல்யாணியைக் குறித்து விஸ்தாரமாய் எழுதியிருந்தான். அவள் பேரில் அவனுக்கு இருந்த காதலைக்குறித்து எழுதாவிட்டாலும், காரியார் தமது புத்திரனுடைய நோக்கத்தை அறிந்து கொண்டார். ''திருவுளச்சித்தம் எப்படியிருக்குமோ, அப்படியே ஆகட்டும். அதை அப்புறம் யோசிக்கலாம்,'' என்று சொல்லிவிட்டு வேலையாட்களை விளித்து, வருகிற விருந்தினருக்கு வேண்டியவைகளைப் பார்க்கும்படி அனுப்பினர்.

இதற்குள்ளாக நீலன் தன் பெற்றோரைக் கண்டு, அவர்களால் மிகப்பாராட்டப்பட்டு, விசேஷ உடையும் பொன்னாபரணங்களும் விளங்க வெகு கம்பீரமாய் அங்குமிங்கும் சுற்றி நடந்து, கோட்டை வீட்டிற்கு ஒரு ஜோடிப்பாகத் தோன்றிக் கொண்டிருந்தான்.

காரியார் வீட்டுச் செய்தி ஊருக்குள் பரவினவுடனே அவ்வூர்க் குடிகளெல்லாரும், நான் முந்தியா, நீ முந்தியா என வந்து கூடி பல பல வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். அநேக காலமாக அடைத்துக் கிடந்த அறைகளெல்லாம் திறந்து சுத்தமாக்கப் பட்டன. அவ்வூர் ஜனங்களுக்கெல்லாம் அன்றிரவு அன்னமிடவேண்டும் எனக்காரியார் தெரிவித்திருந்தபடியால், ஏராளமான அரிசி, காய்கறி, கடைச்சரக்குகளைக் கொண்டுவந்து ஆகவேண்டிய வேலைகளைச் செய்தார்கள். மூலைகளில் அடுக்கிக்கிடந்த பிரமாண்ட

மான சமையல் பாத்திரங்களை எடுத்துத் தூக்கி, பெரிய அடுப்புகளைக் கட்டி, பாகவேலையை ஆரம்பித்தார்கள். பனை ஓலைகளையும் மட்டைகளையும் கொண்டுவந்து, குதிரைகள் நிற்பதற்கான கொட்டில்களை ஒரு முகூர்த்த காலத்திற்குள்ளாக கட்டி முடித்தார்கள்.

சிவிகைகள் வந்திறங்கினவுடனே, பார்வதி ஓடித் தன் தாயைக் கட்டிக்கொண்டு கண்ணீர் சிந்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். கல்யாணி, மாமியாரையும், வழியிலே நின்ற மாமனாரையும் வணங்கி விட்டு உள்ளே சென்றாள். பணம் கொண்டுவந்த சேவகர், காரியாரை வணங்கி மந்திரி அனுப்பிய நிருபத்தையும், பொன்னையும் ஒப்புவித்தார்கள் வெகு நாளாக ஒரு செப்புச் சல்லியின் வாசனைமுதலாய் அறியாமல் காலியாய்க் கிடந்த பொக்கிஷப் பெட்டிகளில் பாண்டியன் அனுப்பின பொன் நிறைந்தது.

அன்று இரவெல்லாம் ஜனங்கள் வந்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள். பொன்னூர்க் கிராமத்து நாவிதரும், சாம்பாரும் முழக்கிய வாத்தியங்களின் தொனியும், ஆடல்பாடல்களும், சந்தைபோலிரையும் ஜனங்களின் அமளியும், தீவட்டிகளின் வெளிச்சமுமாக அவ்விரவு அங்குள்ளோருக்கெல்லாம் ஆனந்தமாயிருந்தது. இவர்களுக்கு மத்தியில் நீலன் இருந்துகொண்டு, பலபட்டணங்களைச் சுற்றி வந்ததில் தான் அடைந்த அநுபவங்களையும், தன் எஜமானும் தானுமாகச் சேர்ந்து நடப்பித்த வீரச் செயல்களையும், ஒன்று பத்தாகப் பெருக்கிச் சொல்லி எல்லாரையும் வியக்கச் செய்தான். பட்டணவாசிகளைப்போல பேசி நடித்து அவர்களை மகிழ்வித்தான். குலசேகரன் கொடுத்தனுப்பியிருந்த ஆயுதங்களை அவனுடைய தோழருக்குக் கொடுத்தான். அவர்களுக்கு அது மெத்தத் திருப்தியைக் கொடுத்தது.

வந்தவர்களெல்லாரையும் காரியார் தகுந்த விதமாய் உபசரித்தார். காரியாருக்கு வாழ்வு வந்தது தங்களுக்கே வந்ததாக எண்ணிக் களித்தார்கள் அக்கிராமத்தார் எல்லாரும். மூன்றாம் நாளில் மதுரைக்குத் திரும்பிய சேவகருக்கு போதுமான பொன் கொடுத்தனுப்பினார்.

முத்தூருக்குப் போகவேண்டிய உறவினரை, கீர்த்திவர்மர் வருமட்டாக, தங்களோடேயே இருக்கவேண்டுமென்று காரியாரும் பார்வதியும் கேட்டுக்கொண்டார்கள். அவர்களும் சம்மதித்துத் தங்கிவிட்டார்கள்.

மறு நாளில் காரியார் பார்வதியைத் தனியே அழைத்து, "உன் அண்ணன் பெண் அழகாகவே இருக்கிறாள். குலசேகரன் இவளைப்பார்த்து மயங்கினது ஒரு விசேஷமல்ல. அவளுடைய முகத்தைப் பார்த்தால் மிகுந்த புத்திசாலி போலவே தோன்றுகிறாள். என்றாலும் நீ, உன் அண்ணன் மகள் என்ற பாரபக்ஷமின்றி, அவளை நன்றாய்க் கவனித்துவா. நமக்கோ ஒரே பிள்ளை. தகாத பெண்ணைக் கட்டிக்கொண்டு அவன் சங்கடப்படலாகாது. இந்தப் பெண், பேச்சிலும் வழக்க பழக்கங்களிலும் சுத்தமானவளா? வேலைக்காரரைச் சாந்தமாகவும் ஞானமாகவும் நடத்தக்கூடியவளா? ஸ்திரிகளுக்குரிய ஒழுக்கத்தையும் கடமைகளையும் உணர்ந்தவளா? கல்வியறிவுள்ளவளா? சுறுசுறுப்புள்ளவளா? சுகதேகியா? இவைகளையெல்லாம் கவனித்துப்பார். உன் அண்ணன் மகா லோபி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இவளிடத்தில் அந்தக் குணம் உண்டோ என்றும் பார்" என்று சொல்லியனுப்பினார்.

தேச காலம் கவனித்து நடக்க அறிந்திருந்த கல்யாணிக்கு, மாமியார் தன்னைக் கவனிப்பார் என்பது நன்றாய்த் தெரியும். கல்யாணி இயல்பில் மிகுந்த நற்குணசாலியாயிருந்தாள். ஆனால் வேளாவேளைகளில் விநோதமாய்ப்பேசி பக்கத்திலுள்ளவர்களை நகைக்கச் செய்வாள். அது குற்றமல்லாவிடினும், மாமியார் கேட்டால் வெறுப்படைவார் என்று எண்ணி, வாயை அடக்கி, பார்ப்போரெல்லோரும் இவள் சீதாதேவியின் அவதாரமே என்று மதிக்கும்படி நடந்தாள். மாமனாருக்கும் மாமியாருக்கும் அவள்மேல் அத்தியந்த பிரியமாயிற்று. அவள் தங்கள் வீட்டில் பிரவேசித்தது லக்ஷ்மி பிரவேசித்தது போலாயிற்று என்று எண்ணி மகிழ்ந்தார்கள். இளம் பெண்ணின் காற் சிலம்பொலி அநேக காலமாகக் கேளாமல்

நிசப்தமாயிருந்த அவர்களுடைய வீட்டில், அவள் அன்னம் போல நடந்து திரியும் சத்தத்தைக் கேட்பது காரியாருக்கும் பார்வதிக்கும் வெகு திருப்தியாயிருந்தது.

வீட்டின் முற்றங்களில் புஷ்பச் செடிகளை நட்டாள். நடைகளிலும் கூடங்களிலும் விதவித கோலங்களிட்டு அலங்கரித்தாள். முதியோருடைய நாவுக்கு ருசியாயிருக்கக்கூடிய பல பாக வகைகளைச் செய்து கொடுத்தாள். பூஜை நேரத்தில் தேவார தோத்திரங்களை இனிமையாய்ப் பாடினாள். ஏவலாட்கள் வீட்டுச் சிறுமிகளுக்குச் சுத்தமாயிருக்கவேண்டிய விதத்தைக் கற்பித்தாள். வேலை ஒழிந்த நேரங்களில் மாமியாரும் பாட்டியாரும் கேட்க பல சரித்திரங்களை வாசித்தாள். விடியற்காலம் எழுந்திருந்து இரவில் நேரம் சென்று படுக்கைக்குப் போகுமட்டாக எப்போதும் யாதாமொரு வேலையைச் செய்துகொண்டே இருந்தாள். யாசகருக்கு வெகுதாராளமாகப் பிச்சையிட்டாள். எல்லாரிடத்திலும் சுருக்கமாகவும் அன்பாகவும் வார்த்தையாடினாள். கல்யாணி பிரவேசித்தது முதல் அந்த வீடு எப்போதும் மங்களகரமாகவே இருந்தது. வந்து போகும் ஆட்கள் அதிகரித்தனர். காரியாருக்கு இருபது தலைமுறை தாண்டிய வழியிலுள்ள பந்துக்கள் முதலாய் முறை செப்பிக்கொண்டு வந்து அவர் வீட்டில் உபசரணை பெற்றுப் போனார்கள்.

கையில் பணம் வரவும் காரியார் தமது வீட்டைப் பழுது பார்த்துக் கட்டி, தோட்டத்தையும் தடாகத்தையும் கொட்டில்களையும் புதுப்பித்து, பசுக்களையும் காளைகளையும் வாங்கி, வேண்டிய ஏவலரையும் சம்பாதித்து, ஒருவாறு சீர் தோன்றும்படி செய்தார்.

கீர்த்திவர்மர், சிலநாட்களில தமது காரியாதிகளை முடித்துக்கொண்டு, மதுரையைவிட்டுத் தெற்கே புறப்பட்டார். அவருடைய தாயாரும் குமாரத்தியும் பொன்னூரிலிருந்ததால், தமது பண்டம் பாடிகளை வேறு வழியாய் முத்தூருக்கு அனுப்பிவிட்டு, அவர் பொன்னூருக்கு வந்தார். காரியார் மைத்துனரைக் கண்டு மனமகிழ்ந்து நல்

வரவு கூறினார். குலசேகரன் இல்லாத ஒரு குறையே யன்றி அக் குடும்பத்தாருடைய மனதில் வேறு யாதொரு குறையும் அன்று தோன்றவில்லை. அநேக காரியங்களைக் குறித்துப் பேசி ஆனந்தமடைந்தார்கள்.

பல பேச்சுகளின் மத்தியில் பார்வதி தன் தமையனாரிடத்தில் தன் மகனுக்குப் பெண் தரவேண்டும் என்று கேட்டாள். "அந்தானுக்குப் பிரியமிருந்தால் எனக்குத் தடையில்லை" என்றார் கீர்த்திவர்மர். அச் சமயத்தில் அங்கு வந்த காரியார் அந்த வார்த்தையைக் கேட்டு, தன் மைத்துனரைப் பார்த்து "மாமா! நீ சொன்னது சரி. பெண்ணைப்பற்றிய காரியம் முழுவதும் என் பொறுப்பில் தானிருக்கிறது. பெண்ணை நீ கொடுப்பது நாங்கள் கொள்ளுவது என்ற கேள்வி எங்கே இருக்கிறது? என் வீட்டில் பிரவேசித்த பெண்ணை வெளியே கொண்டுபோக நீயும் உன் பந்துக்கள் எல்லாரும் சேர்ந்து வந்தாலும் முடியுமா? காரியைப்பற்றி உனக்கு முன்னமே தெரியும். உன் மருமகனை இப்போ அறிந்திருப்பாய். ஆகையால் இனி பெண் உன்னுடையது என்கிற எண்ணத்தை விட்டுவிடு" என்று விளையாட்டாய்ச் சொன்னார். எல்லாருக்கும் திருப்தியாயிற்று. மறு அறையில் நின்ற கல்யாணியும் கேட்டு மகிழ்ச்சியடைந்தாள்.

மாப்பிள்ளை வீட்டில் வைத்துப் பெண்ணுக்கு நிச்சயார்த்தம் செய்தல் முறையாகாததலால், எல்லாரும் ஒரு மிக்க முத்தூருக்குப் புறப்படத் தீர்மானித்தார்கள். அங்கு சென்றதும், பந்துக்களுக்கெல்லாம் ஓலை யனுப்பி வரவழைத்து, சடங்கை நிறைவேற்றினார்கள். சாரியார் பழைய வழக்கத்தை அநுசரித்து, பெண்ணுக்குக் கொடுக்கவேண்டிய பல பொருட்களோடு, கீர்த்திவர்மருக்கு முப்பதாயிரம் பொன் பரிசமாகக் கொடுத்தார். குலசேகரன் வந்தபின் முகூர்த்தத்தைக் குறித்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தார்கள்.

நிச்சயார்த்தம் முடியவும் காரியாரும் பார்வதியும் பொன்னூருக்குத் திரும்பினார்கள். கல்யாணி தங்களோடில்லாதது அவர்களுக்கு மிக வெறுமையாய்க் காணப்பட்டது.

மகனுடைய வரவை எதிர்பார்த்து ஆவலாய்க் காத்திருந்தார்கள்.

காரியாருக்கு வந்த வாழ்வைக் குறித்து அத்திசையிலுள்ளோர் யாவரும் வியப்பாய்ப் பேசிக்கொண்டார்கள்.

---

16. வினைப் பயன் முற்றுதல்.

வீரபாண்டியன் வடக்கே சென்று, ஆதியில் பாண்டவர் வாழ்ந்த இந்திரப் பிரஸ்தம் என்று சொல்லப்படும் டில்லிமாநகரத்தை அடைந்தான்.

அக்காலத்தில் டில்லியில் அரசு செலுத்திய அல்லாவுதீன் என்பவன் மகா ரணதீரன்; ஆனால் பழிக்கு அஞ்சாத பாதகன். தனக்குப் பெரிய தகப்பனாரும், தன் மனைவியின் பிதாவும் ஆகிய ஜலாலுதீன் என்ற அரசனை வஞ்சகமாய்க் கொலைசெய்து அவருடைய சிம்மாசனத்தை அபகரித்த காதகன். அரச யோக்கியதை இன்னது என்பதை உணராமல், குடிகளைக் கொள்ளையிடுவதே ராஜரீகத்தின் மகிமை என்று எண்ணிய மூடன். பரத கண்ட முழுவதிலுமுள்ள புராதன ராஜ்யங்களில் அநேகத்தை நிஷ்காரணமாக அழித்து நாசம் செய்த கேடன்.

வீரபாண்டியன் இந்த நராந்தகனுடைய சமுகத்தை அடைந்து தான் கொண்டுவந்திருந்த காணிக்கைகளைப் படைத்து, வணங்கி, தன் முறைப்பாட்டைத் தெரிவித்து, தனக்கு உதவி செய்வதாயிருந்தால் அளவிறந்த பொன்னையும், இந்த ஜகத்தில் எங்கும் கிடைக்கக்கூடாத நவமணிகளையும் கொடுப்பதாகச் சொன்னான். இதைக் கேட்கவும் அல்லாவுதீனுக்குப் பேரானந்தம் உண்டாயிற்று. நாடுகளில் இன்னமும் கொள்ளையிடப்படாமல் மீந்திருந்தது தமிழ் வேந்தர் பூமி மாத்திரமே யாகையால், அதை

யும் பராமுக்கச் சமயம் வாய்த்ததற்காக மகிழ்ந்து, வீர பாண்டியனுக்குத் தைரியம் சொல்லி, அக்காலத்தில் ஆந்திர தேசத்தைக் கொள்ளையிட்டுக் கொண்டிருந்த தன் தளகர்த்தனுகிய மாலிக்காபருக்கு ஒரு தாக்கீது எழுதிக்கொடுத்து அனுப்பினான்.

வடக்கில் இந்தப் பிரசண்டமாருதம் திரண்டுகொண்டிருக்க, இங்கே உள்நாட்டில், பெரிய வட விருக்ஷத்தை அழிக்கும் வேர்ப்பூச்சிபோல, பாண்டியசேனையின் பலத்தை பெருமாள் அரித்துக்கொண் டிருந்தான். பாண்டியனுடைய நூராகிருதமான நடவடிக்கைகளைக் குறித்து வெறுப்புற்றிருந்த பல பிரபுக்களும் சேனுபதிகளும், சிற்றரசரும், வீரபாண்டியனுக்குத் துணைசெய்வதாக வாக்குக் கொடுத்தார்கள். இராஜ்ய வருமானம் வீண் விஷயங்களில் செலவாகிக்கொண் டிருந்தபடியால், யுத்த தளவாடங்கள் காலாகாலங்களில் சரிபார்க்கப்படாமலும் சேவகருக்குச் செல்லாகவேண்டிய சம்பளம் கிரமமாய்க் கொடுக்கப்படாமலுமிருந்தன. போர்ச்சேவகருடைய அப்பியாசங்கள் ஒழுங்காய் நடத்தப்படா திருந்தபடியால், அவர்களில் அநேகர் தோற்றத்தில் மாத்திரம் வீரராய் விளங்கினர்கள். குலசேகர பாண்டியர் காலத்தில் சேர்க்கப்பட்ட அநேக லக்ஷம் சேனைகளில் மீதியாயிருந்த எண்பதாயிரம் போர் வீரரும் கூட இத்தனை சீர்கேடடைந் திருந்தபடியால், யுத்தம் என்பதைப் பாண்டியன் கனவிலும் கருதக்கூடா திருந்தது.

தமிழ் நாட்டைக் கொள்ளையிட்டு, வீரபாண்டியனைச் சிம்மாசனத்தில் ஏற்றி, கப்பம் கட்டும்படி செய்துவிட்டுத் திரும்பவேண்டும் என அல்லாவுதீன் கொடுத்த கட்டளையைச் சிரமேற்கொண்ட மாலிக்காபர், படையெடுக்க வேண்டிய விதத்தையும், பாண்டிய சேனைகளின் பலத்தையும், கிடைக்கக் கூடிய கொள்ளைப் பொருளின் மதிப்பையும் குறித்து வீரபாண்டியனிடம் திட்டமாய் விசாரித்தான். சேனை வெகுவாய்ச் சீர்குலைந்திருந்தபடியால் பாண்டியன் யுத்தத்திற்கு வருவான் என்பதே சந்தேகமென்றும், ஒரு கால் அவன் துணிந்து போருக்கு வந்தாலும், அவனுடைய சேனைகள் வடக்கத்தியப் படைகளைக் கண்டவுடனே

முதுகு காட்டி ஓடிப்போவும் என்றும், மதுரையிலுள்ள வியாபாரிகளிடத்திலும் கட்டாரிடத்திலும் அளவிடமுடியாத பொன் இருக்கிறதென்றும், வேறு ஒருவரும் அறியாத ஒரு இடத்தில் தன் முன்னோர் சேகரித்து வைத்த விலைமதியாத பெரிய வைரங்கள் இருப்பது தனக்குத் தெரியும் என்றும் சொல்லி மாலிக்காபரை மகிழச் செய்தான் வீரபாண்டியன். எல்லா விபரங்களையும் அறிந்துகொண்டு மாலிக்காபர் பாண்டியனுக்கு பின் வருமாறு ஒரு கடிதம் எழுதி ஒரு தூதன் மூலமாய் அனுப்பினான்.

பாண்டியநாட்டு அதிபதியாகிய சுந்தர பாண்டியனுக்கு,

மாட்சிமை தங்கிய சுல்தான் அல்லாவுதீனுடைய பிரதம தளகர்த்தனான மாலிக்காபர் அறிவிப்பது என்னவென்றால்,

நீ ஏறியிருக்கும் சிம்மாசனம் உன்னுடையதல்லவென்றும், அது வீரபாண்டியனுக்கே உரியதென்றும் மாட்சிமை தங்கிய சுல்தானுடைய சமுகத்திற்குத் தெரியவந்திருப்பதால், நீ இந்தத் தாக்கீது கண்டவுடனே, சிம்மாசனத்தை விட்டு இறங்கி, ராஜரீகத்தை வீரபாண்டியனுக்கு ஒப்புவித்துவிட்டு, சொல்லவேண்டிய வழக்கு ஏதாகிலும் உண்டானால் அதை மாட்சிமை தங்கிய சுல்தானுடைய சந்நிதானத்தில் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமென்று சந்நிதியிலிருந்து கட்டளை பிறந்திருக்கிறது.

இந்தக் கட்டளையை நீ அசட்டை செய்யும் பக்ஷத்தில் பரராஜகேசரியாகிய எனது எஜமானருடைய சித்தத்தைப் பலாத்காரமாய் நிறைவேற்றுவது எனது கடமையாகும்.

இற்றைக்கு முப்பது நாளுக்குள்ளாக இந்தத் தாக்கீதுக்குப் பதில் தெரிவிக்கவேண்டியது.

மாலிக்காபர்.

இந்தக் கடிதத்தைக் கொண்டுவந்த தூதன் பாண்டிய னுடைய அஸ்தானத்தை யடைந்து, துவாரபாலகர் மூல மாகத் தான் வரவைத் தெரிவித்தான். மந்திரி பிரதானி கள் சகிதம் தேசவிசாரணை நடத்திக் கொண்டிருந்த அரசனிடத்தில் மந்திரி இச்செய்தியைத் தெரிவிக்கவும் வந்தவன் அல்லாவுதீனைச் சார்ந்தவனாகவே இருக்கவேண் டும் என்று பாண்டியன் அநுமானித்துக்கொண்டு, மந்தி ரியையும் சேனாபதியையும் தவிர மற்ற யாவரையும் அவ் விடம்விட் டகலும்படி கட்டளையிட்டான். பிரதானிகள் யாவரும் சென்றுவிடவும், "டில்லி சுல்தான் அல்லாவு தீனுடைய பிரதம தளகர்த்தனாகிய மாலிக்காபருடைய சேவகன் திருவடி தரிசனைக்காக வாசலில் காத்திருக்கிறான்" என்று கட்டியக்காரன் கூற "உள்ளே வரச்சொல்" என்று பாண்டியன் சொல்ல, தூதன் பாண்டியன் சமுகத்தை யடைந்து, தலைவணங்காமலே நின்று, கட்டியக்காரனி டம் தான் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்து, "உன் அரசனிடம்கொடு" என்றான்.

அவன் அவமரியாதையாய் நடந்து கொண்டதை சேனா பதி கவனித்து, கண்கள் சிவக்க, "பாண்டியேசா! இந்த மிலேச்சனைச் சமுகத்தை விட்டுத் துரத்த உத்தரவாக வேண்டும்" என்றான். அதற்குப் பாண்டியன்; "சென் பகவர்மா! இவ்வித ஆசாரங்களை நானும் முற்காலத்தில் கவனித்தவன் தான். இப்போது முறைமைபற்றி நான் அவற்றை அநுசரிப்பதேயன்றி, வேறு காரணத்தாலன்று. இவன் ஒரு வீரன். தன் எஜமானையன்றி வேறொருவருக் கும் தலைவணங்குவதில்லை என்ற உறுதிகொண்டவனாகக் காணப்படுகிறான். ஆதலால் அவனைச் சன்மானிக்கவேண் டியதேயன்றி துவேஷித்தல் கூடாது." என்று கூறிவிட்டு மந்திரியைப் பார்த்து "அந்தக் கடிதத்தை வாங்கி விரித் துப் படி" என்று சொல்லவும், மந்திரி அப்படியே அதை வாங்கிப் பாண்டியன் கேட்கும்படி வாசித்தான். வாசித்து முடியவும், அரசன் தூதனை நோக்கி, "இதற்கு நாளைக்குப் பதில் சொல்லுவோம். அதுவரையும் நம்முடைய பிர தம மந்திரியார் உமக்கு ஆகவேண்டிய சம்ரக்ஷணையைக்

கவனிப்பார்" எனவும், மந்திரி அவனை அழைத்துச் சென்று தகுந்த மரியாதையோடு அதிதிசாலைக்குக் கொண்டுபோய், வேண்டிய உபசாரங்களைச் செய்யும்படி உத்தியோகஸ்தரை நியமித்துவிட்டுத் திரும்பினான்.

அப்புறம், இருவரும் கடிதத்தின் விஷயத்தை ஆலோசித்தார்கள். சேனாபதியும், மந்திரியும், பாண்டியசேனையின் நிலைமையை அரசனுக்கு எடுத்துச் சொல்லி, யுத்தம் செய்வது கூடாதெனவும், எவ்விதத்திலாகிலும் சமாதானம் செய்து கொள்ளுவதே நலம் எனவும் தெரிவித்தார்கள். தேசத்திற்கு அதிக நஷ்டம் வராமலும், அரசனுக்கு அவகீர்த்தி நேரிடாமலும் எவ்வாறு சமாதானம் செய்யலாம், என்று பாண்டியன் கேட்க, அதற்குத் தகுந்த உத்தரவு சொல்ல அவர்களுக்குக் கூடவில்லை. ஆகையால் அரசன் தன் சித்தத்தை பிந்தித் தெரிவிப்பதாகச்சொல்லி, அவ்விருவரையும் அனுப்பிவிட்டு, சிந்தனை மிகுந்தவனாக வெகுநேரம் உட்கார்ந்திருந்தான்.

குலசேகரனிடத்தில் பழகினதிலிருந்து, அவனுடைய புத்திக்கூர்மையை அறிந்திருந்தானாதலால், அடிக்கடி அவனோடு தனித்து வார்த்தையாடுவது அரசனுக்கு விருப்பமாயிருந்தது. அன்று ஆலோசனை செய்த விஷயம் அதிகப் பெரிதாயிருந்த போதிலும் அதைக் குலசேகரனுக்குத் தெரிவித்து, பிரபஞ்ச தந்திரங்களால் கறைப்படாதிருந்த அவனுடைய நேர்மையான மனதில் தோன்றும் அபிப்பிராயத்தை அறியவேண்டுமென்று கருதி, சேவகனை அனுப்பி அவனை வரவழைத்தான்.

குலசேகரன் வரவும், மாலிக்காபருடைய கடிதத்தைக் காண்பித்து, அதற்கு என்ன பதில் சொல்லலாம் என்று அரசன் கேட்டான். குலசேகரன் கொஞ்சநேரம் ஆலோசித்து விட்டு, "மகாராஜாவே! நமது சேனைகளின் பலமும், அவனுடைய சேனைகளின் பலமும் இன்னவை என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் கேள்விப்பட்டமட்டில், இந்த மாலிக்காபர் மகா அயோக்கியன் என்று தெரிகிறது. இந்தக் கடிதத்தின் தன்மையும் அதை உறு

திப்படுத்துகிறது. அப்படிப்பட்டவனைச் சமமாகப் பாவித்து நடத்துதல் நல்ல குலத்தில் உதித்த அரசருக்குத் தகுதியல்ல. உயிர் இருக்குமளவும் மானத்தை இழக்காமல் இருப்பதே நலம். அவனை யுத்தத்தில் ஜெயிப்பது நமக்குக் கூடாதிருப்பினும், நம்மால் ஆனவரையும் அவனை எதிர்த்துப் போராடி, ரண ரங்கத்தில் வாளும் கையுமாய்ச் சாவதே உத்தம க்ஷத்திரியருக்கு அழகு. இழிந்தவர்களுக்குப் பயந்து, தலைகுனிந்து, கப்பம்கட்டி வாழும் வாழ்க்கையினும், வீர சொர்க்க வாழ்வே எல்லாவிதத்தாலும் மேலானதென நான் அபிப்பிராயப்படுகிறேன்." என்றான்.

அதைக் கேட்ட வழுதி, "குலசேகரா! என் மனதில் பட்டதையே நீயும் சொன்னாய். மந்திரியும், சேனாபதியும் சமாதானம் செய்து கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆதலால் இன்னொருவருடைய ஆலோசனையையும் கேட்போம். இன்று பொழுது படவும், நீ இரண்டு குதிரைகளோடு போய், பட்டணத்திற்கு மேற்கேயிருக்கும் குளத்தண்டையில் ஆயத்தமாயிரு" என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டான்.

இராத்திரியில் இருவரும் குதிரையேறி மேற்கே சென்று, நாக மலையை அடுத்துள்ள காட்டில் பிரவேசித்தார்கள். அக்காட்டின் மத்தியிலுள்ள ஒரு நீரோடையின் அருகில் ஒரு குடிசை இருந்தது. அதற்கு வெளியே நின்ற ஒரு மரத்தடியில் போட்டிருந்த கல்லின்மேல் ஒரு வயோதிபன் படுத்திருந்தான். இவர்களிருவரையும் காணவும், அவன் எழுந்து, கவனித்துப் பார்த்து, அரசனை இனமறிந்து, தரையில் விழுந்து வணங்கி விட்டு, ஓடி, குடிசையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். சிறிது நேரத்தில், பஞ்சுபோல் வெளுத்த மயிரும், காயாஷ உடையும் தரித்த ஒரு பெரியவர் குடிசை வாயிலில் காணப்பட்டார். அவர் சற்றுநேரம் அப்படியே நின்று, ஒன்றும் சொல்லாமலே கையால் சைகை செய்துவிட்டு உள்ளே சென்றார். பாண்டியன் அவர் பின்னே சென்று குடிசையில் பிரவேசித்தான். அங்கு ஒரு மண் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. மூங்கிலால் செய்

யப்பட்ட ஒரு அறையின் மேல் பல நூல்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. தரையில் மான்தோல்கள் விரிக்கப்பட்டுக்கிடந்தன. ஒரு மூலையில் சில சிறிய மண்பாண்டங்கள் இருந்தன. இவையன்றி வேறொரு பொருளும் அங்கு காணப்படவில்லை.

பெரியவர் ஒரு மான்தோலைக் காண்பித்து "உட்காரு" என்று சொல்லிவிட்டு, தூரத்தில் ஒதுங்கி நின்றார். பாண்டியன் உட்காராமல் நின்றுகொண்டேயிருந்தான்.

"உலகாளும் வேந்தனுக்கு இந்தத் துறவியிடம் என்னவேலை?" என்று கசப்புடன் கேட்டார் பெரியவர். அதற்குப் பாண்டியன், "தாத்தா! நான் பல தடவைகளில் உமக்கு மனநோவுண்டாகச் செய்தது நிஜமே. என்னுடைய புத்தியீனத்தினால் அப்படி நேர்ந்தது. நீரோ, நான் வருந்திக்கேட்டும் என் பிழை பொறுக்காமல் என்னைவிட்டுப் போய்விட்டீர். நீர் போகுமுன் நான் எவ்வளவு மூடனாயிருந்தேனோ, அதிலும் அதிக மூடனானேன் நீர் போனபின். இப்போது என் ராஜ்யபாரத்தின் அஸ்திபாரங்கள் எல்லாம் குலுங்குகின்றன. மாலிக்காபருடைய சேனை துங்கபத்திரையைத் தாண்டி இருபது நாள் பயண தூரத்தில் இருக்கிறது. இரண்டு லக்ஷம் குதிரைச் சேனையோடு வருகிறான். என் உயிருக்காக நான் பயப்படவில்லை. என் காவலுக்குள் இருக்கும் நாட்டிற்காகவும் என் முன்னோருடைய கீர்த்திக்காகவுமே சஞ்சலப்படுகிறேன். மந்திரியும் சேனாபதியும் சமாதானம் செய்துகொள்ளச் சொல்லுகிறார்கள். ஆனால், எவ்விதமாகச் சமாதானம் செய்துகொள்ளலாம் என்று சொல்ல அறியார்கள். தாத்தா! உமது ஆலோசனையைச் சொல்லும்" என்றான்.

எனவும், "ஏ பாண்டியா! ஆலோசனையை நாடியோ வந்தாய்? நன்று! நன்று! உன்னிடம் நான் மந்திரியாயிருந்த பதினைந்து வருடங்களில் என் ஆலோசனையைக் கேட்டு நீ ஒரு பொழுதாவது நடந்ததுண்டா? நீ உன் தந்தையைக் கொலை செய்வித்த பாதகன் என்று நான் அறிந்திருந்தும், பாண்டிய வம்சத்தின் மகிமையைக் காக்கவேண்டும்

என்று எண்ணி, உன்னிடம் உத்தியோகம் செய்யச் சம்மதித்தேன். நீ செய்திருக்கும் அக்கிரமங்களுக்கு ஒரு அளவுண்டா? பஞ்சமா பாதகா! உன்னைக் கண்ணால் பார்ப்பதும்கூடப் பாவமே" என்று மகா உக்கிரத்தோடு சொல்லிவிட்டு, வெளியே ஓட எத்தனித்தார் பெரியவர்.

பாண்டியன் முன் சென்று அவரைத் தழுவிப் பிடித்து, "என்ன கோபம்! நான் என் தந்தையினும் மேலாக நேசித்திருந்தது இவரைத்தானா! இப்படியும் மாறுமா உமது மனம்! என் தாயார் இறந்தபின் என்னை வளர்த்துக் காப்பாற்றினது யார்? நீரும் உமது பத்தினியாருமன்றோ? என் பிதா சோழ நாட்டின்மேல் படையெடுத்துச் சென்ற காலத்தில் சந்திரவல்லி அனுப்பிய கொலையாளரின் கைக்கு நீக்கி என்னைக் காத்தது நீரல்லவா? ஏன் என்னை அவ்வாறு பாராட்டினீர்? நான் பாதகன் என்பது நிஜமே. ஆனால் உலகமெல்லாம் என்னை வெறுத்தாலும், சத்தியசேனர் என்னை வெறுத்துவிடுவார் என்று நான் ஒருபோதும் நம்பேன். இளமையில் என்மேல் எவ்வளவு அன்பாயிருந்தீர்! உமது தோளின்மேல் ஏறி எத்தனைதடவை உம்மை உதைத்திருப்பேன்? திரும்பி என் முகத்தைப் பாரும். இந்த முகத்தில் எத்தனை தடவை முத்தமிட்டிருப்பீர்? ஏன் வெளியே ஓடுகிறீர்? இராஜ்யம் போனால் போகட்டும். இவ்வளவு தூரம் உம்மைத் தேடி வந்துவிட்டேன்; கொஞ்ச நாழிகை என்னுடன் அன்பாய்ச் சம்பாஷியும்; ஆலோசனை சொல்ல விருப்பமில்லாவிடில் அப்படியே ஆகட்டும். உம்மைக் கோபப்படுத்த எனக்கு மனதில்லை" என்று பாண்டியன் சொல்லிவருகையில், பழைய ஞாபகங்கள் நெஞ்சில் வெள்ளம்போல் வந்து நிறைய, சத்தியசேனர் கண்ணீர் விட்டழுதார்.

அழுது, "அப்பா! உன்மேல் வைத்த பாசத்தை மறக்கவேண்டும் என்று கருதியே, ஊரை விட்டுக் காட்டை அடைந்தேன். மறப்பதோ கூடாததாயிற்று. எனக்குச் சந்ததியில்லை, உன்னையே மகன் என்று பாவித்திருந்தேன். விதியை வெல்ல யாராலாகும்? போனதெல்லாம் போகட்டும், உட்காருவோம். உனக்கு என்ன சங்கடம் நேரிட்டது? விவரமாய்ச் சொல்" என்றார்.

இருவரும் உட்காரவும், பாண்டியன் எல்லாவற்றை யும் விவரமாய்ச் சொல்லி, மாலிக்காபர் அனுப்பிய கடிதத் தையும் காண்பித்தான். முதியவர் கொஞ்ச நேரம் ஆலோ சித்துவிட்டு, பின்வருமாறு கூறினர் :—

"பாண்டியா! முகமதியரைக் குறித்த விவரம் உன் மந்திரிக்கும் தளகர்த்தனுக்கும் தெரியாது. அவர்களுள் அநேக ஜாதியாருண்டு. அரபி, பாரசிகம் முதலான சில தேசங்களில் அவர்கள் வெகுகாலமாக வாழ்ந்து மிகுந்த நாகரிக மடைந்திருக்கிறார்கள். மகா மேன்மை பெற்ற அரசரும், பிரபல சாஸ்திரிகளும் அவர்களுக்குள் உண்டு. அவர்கள் நம்மைப்போலவே பாவ புண்ணியங்களைக் கவனி த்து நடப்பார்கள்.

தற்காலத்தில் டில்லியில் ஆளும் ஜாதியார் அப்படிப் பட்டவர்கள் அல்லர். இவர்கள் ஆதியில் காந்தார தேசத்து மலைக்காடுகளில் திரிந்துகொண்டிருந்த குறும்பர். டில்லி யில் முன் ஆண்ட முகமதிய அரசர் காலத்தில், இவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து, அரச சேவகத்தில் அமர்ந்து, சமையம் பார்த்துச் சிம்மாசனத்தையும் கவர்ந்துகொண் டார்கள்.

இவர்களுடைய அரசனே, உலகத்திற்கே ஒரு கொள்ளை நோயைப்போல் வந்தவன். ஒவ்வொரு நாளும் அவன் செய்துவரும் பழிகளுக்குக் கணக்கில்லை. சன்மார் க்க ஒழுக்கம் என்பதை உணராதவன். இவ்வளவு நீசனுன இவன் தானே ஒரு மதத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்றும் பிரயத்தனம் செய்தான்.

மாலிக்காபர் என்பவன், அல்லாவுதீனுடைய தளகர்த் தன் ஒருவனால் விலைக்குக் கொள்ளப்பட்ட அடிமை. நபும்சகன், தர்ம தர்மம் அறியாதவன், ஈரமில்லாத கன் னெஞ்சன், வலு என்ற ஒன்றைமாத்திரம் மதிப்பான். விந்திய பர்வதம் முதல் துவார சமுத்திரம் வரையும் அவன் கொள்ளையிடாத ஊர் கிடையாது; மகா நீசராகிய அவன் படைவீரரால் இம்சிக்கப்படாத புருஷர் கிடையாது, அவ

மானமடையாத ஸ்திரீகள் கிடையாது. "சூரியச் சந்திராதிகள் உள்ள வரைக்கும்" என்று அவன் ஒரு உடன்படிக்கை செய்தால், "நான் என் சேனைகளை சித்தமாக்கும் வரைக்கும்" என்பதே பொருள். அவன் சமாதானத்திற்கு ஒப்புக்கொண்டாலும், அவனுடைய நிபந்தனைகள் நீ சம்மதிக்கக் கூடாதவைகளாகவே இருக்கும். உன் நாட்டிலுள்ள பொன்னில் ஒரு பொட்டு முதலாய் விடாதபடி கொள்ளையிடுவான். அது போதாதென்று உன்மேல் தண்டத்தையும் சுமத்துவான். அம்மட்டோடு நில்லான். மறு வருடத்தில் ஏதாவது ஒரு போலி நியாயத்தைச் சொல்லிக் கொண்டு வந்து மறுபடியும் நாட்டைக் கொள்ளையிடுவதில் தவறான். வாரங்கல் அரசனை உயிரோடு கட்டிவைத்துத் தோல் உரித்தவனல்லவா அவன்! இதையெல்லாம் அறியாமல் உன் மந்திரி சமாதானம் செய்துகொள்ளச் சொன்னான். பாண்டியா! அது ஒருகாலத்திலும் உதவாது."

"அப்படியானால் என்ன செய்யச் சொல்லுகிறீர்? எனக்கோ இராஜரீகம் கசந்துபோய்விட்டது. என் நிமித்தமாக நாடு நாசமடைவானேன்? வீரனுக்கு நான் மகா அநியாயத்தைச் செய்துவிட்டேன். அதற்குப் பரிகாரமாக அவனே பட்டம் ஆளட்டும். நான் வனத்திற்குச் சென்றுவிடுகிறேன். யமுனை இறந்த அன்றுமுதல் நான் துறவறத்தையே அனுட்டித்து வருகிறேன். சிற்றின்பத்தில் எனக்கு ஆசையில்லை" என்றான் பாண்டியன்.

"நன்றாய்ச் சொன்னாய்! சந்திரகுல திலகங்களான ஆயிரம் பாண்டியர் வீற்றிருந் தாண்ட சிம்மாசனத்தில் ஒரு அநுலோமனோ ஏறவேண்டும்! பாண்டிய அரசைப் பெற வீரனுக்கு உரிமையுமில்லை, யோக்கியதையுமில்லை. உன் பிதா அந்திய காலத்தில் மதி மயங்கி, அவனுக்குப் பட்டம் சூட்ட விரும்பினார். என்றாலும் அவனுக்கு அபிஷேகம் பண்ண நாடு சம்மதிக்காது. நீயோ அவசரப்பட்டு, புத்தியீனமாய் நடந்து, பிதாவைக் கொன்றவன் என்ற பேரைச் சம்பாதித்தாய். வீரனுக்கு அரச லக்ஷணம் கொஞ்சமென்கிலும் இருக்குமாகில், அவன் மிலேச்சருடைய உதவியைத் தேடிப் போயிருக்கமாட்டான். உங்கள் சம்பந்திகளான

சோழனிடம் சகாயம் கேட்டிருக்கலாம். ஆனால் சுத்த அரச வமிசத்தாரில் யாரும் அவனைச் சிம்மாசனத்தில் ஏற்ற ஒப்புக்கொள்ளார்கள். அவனுடைய பிறப்பிலுள்ள தோஷத்தைக் கவனிக்காவிட்டாலும், ஒரு அரசனுக்கு வேண்டிய ஞானம், சௌரியம், பெருந்தகைமை என்ற இவைகளாகிலும் அவனிடம் உண்டோ என்று பார்த்தால், கொஞ்சமும் இல்லையே. அல்லாவுதீனிடம் துணை வேண்டுவதால் நாட்டுக்கு வரக்கூடிய நிலைமையை உணராமல், தன் பழி தீர்த்துக்கொள்ளுதல் என்ற ஒன்றையே பெரிதாக எண்ணினவன் அரச பதவிக்கு அருகனாவானா? ஒருகால், நீ வேண்டுமென்றே வீரனுக்கு உன் பட்டத்தைக் கொடுத்துவிட்டபோதிலும், உன் நாடு அழிக்கப்படாமல் தப்பிவிடும் என்று கனவிலும் நினைக்கவேண்டாம். இரத்த வாசனை கண்ட துஷ்ட மிருகத்தைப்போல, நாட்டின் சாரத்தை எல்லாம் உறிஞ்சிவிட்டே போவான் மாலிக்காபர்," என்றார் பெரியவர்.

"அப்படியானால் உம்முடைய ஆலோசனை என்ன?" என்று கேட்டான் பாண்டியன்.

"வீரபாண்டியன் ஓடிப்போனவுடனே, நீ ஜாக்கிரதைப் பட்டிருந்தால், சோழனையும், குறுநில மன்னரையும் சேர்த்து யுத்தத்திற்கு வேண்டிய முயற்சியைச் செய்திருக்கலாம். உன் பிதாவினிடத்தில் நான் மந்திரியாய் அமருமுன், சேனாபதியாயிருந்தது உனக்குத் தெரியும். அக்காலத்தில் வட தேசத்தாருடைய போர் முறைகளை ஆராய்ந்தேன். அவர்கள் சரீர பலம் மிகுந்தவர்களாயிருந்தாலும், யுத்த சாஸ்திர அறிவில் மிகக் குறைவானவர்களே. உன்னிடம் ஐம்பதினாயிரம் குதிரை வீரரும், ஐம்பதினாயிரம் காலாட்களும் இருக்கும் பக்ஷத்தில், நீயே வடக்கே சென்று மாலிக்காபரை முறியடித்து, அவனை விந்தியகிரிக்கு அப்பால் ஓட்டிவிடலாம். அதுவரையிலுமுள்ள நாடுகளெல்லாம் அரசில்லாமல் கிடப்பதால், நீயே மகா சக்கிரவர்த்தியாகவும் ஆகலாம். உன் கர்மம் அதற்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை. இன்னமும் கொஞ்சக்காலத்திற்குள் யாராகிலும் ஒரு அரசன் திராவிட பூமியில் தோன்றி விந்திய பர்வதம் வரையிலும் உள்ள நாடுகளையெல்லாம் கீழடக்கி

ஆளுவாய் என்று எனக்குத் திட்டமாய்த் தெரிகிறது. அதையெல்லாம் இப்போது சிந்தித்து என்ன பிரயோஜனம்?

உனக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இந்த முரீக்கன் நாட்டைக் கைப்பற்றி ஆளும் நோக்கமுடையவனல்லன். கொள்ளை என்பதுதான் அவனுடைய கருத்து. டில்லியிலிருந்து இருநூறு காதவழி தூரமான இவ்விடத்தில் அவனுடைய சேனைகள் நெடுநாள் உயிருடன் இருக்க முடியாது. ஆகையால் கிடைக்கும் பொருளைக் கைப்பற்றிக் கொண்டு திரும்பிவிடும் நோக்கமாகவே வருகிறான். இவ்விடத்தில் ஒன்றும் அகப்படாதென்று கண்டால் வெகுநாள் தாமதிக்காமல் வந்தவழியே போய்விடுவான்.

ஆதலால் உன் நாட்டைக் காப்பாற்ற நீ விரும்பினால், வெள்ளாறு முதல் வைப்பாறு வரையுமுள்ள ஊர்களில் வாசம் பண்ணும் குடிகளெல்லாரும், மலை நாட்டிற்கு வலசை வாங்கிப் போகவேண்டும் என்று விளம்பரம் செய். உன் நாட்டைச் சேர்ந்த மலைகளிலே, அவர்கள் எவ்வளவு காலத்திற்கும் குறைவில்லாமல் குடியிருக்கக்கூடிய கிராமங்களிருக்கின்றன. மனுஷருக்கும் மிருக ஜீவன்களுக்கும் வேண்டிய ஆகாரமும் அங்கு ஏராளமாய் உண்டு. சத்துருக்கள் அங்கே பிரவேசித்து நாசம் செய்ய முடியாது. நாடும், மலையும், பாலையும், குறிஞ்சியும், நெய்தலும், ஆறும், கடலும், ஒருங்கமைந்த உன் நாட்டைப்போல் இயற்கை அமைப்பில் விசேஷித்த நாடு இவ்வுலகில் வேறெங்குண்டு? சத்துருக்கள் நாட்டை விட்டுப் போகும் வரைக்கும் குடிகள் மறைந்திருக்கட்டும். அவர்கள் திரும்பக் குடியேற வரும் காலத்தில், அவர்களுக்குச் செய்யவேண்டிய உதவி இன்னதென்றும், கடமை வாங்காமல் சில வருஷம் அரசாங்கத்தை நடத்தவேண்டிய வழி இன்னதென்றும் நான் உனக்கு அப்புறம் தெரிவிப்பேன்.. நீயும் எவ்விடத்திலாகிலும் மறைந்திரு. நீ நம்பக்கூடிய சேனைகளைச் சிறிய பகுதிகளாகப் பிரித்து, வடக்கத்தியப் படைகளின்மேல் அகஸ்மாத்தாய் விழுந்து, அவர்களுக்குப் பயமுண்டாகும்படி செய். எவ்விடத்திலிருந்து மோசம் வருமோ என்று அவர்கள் சதா பயந்துகொண்டிருக்கச் செய்வாயாகில், அவர்கள் வெகு

சீக்கிரமாகவே உன் நாட்டை விட்டுப் போய்விடுவார்கள். உன் விளம்பரத்தை மீறி நாட்டில் இருக்கக் கூடியவர்கள் விரனுடைய பக்ஷத்தாரே. மாலிக்காபர் அவர்களை இம்சித்து, அவர்களிடம் கிடைக்கக்கூடியதைப் பறித்துக்கொண்டுபோவான். அதற்கப்புறம் நீ வந்து இராஜ்யத்தைச் சீர்ப்படுத்திக்கொள்ளலாம். இதுவன்றி வேறு ஆலோசனையில்லை" என்றார் சத்தியசேனர்.

"தாத்தா! நீர் பேசுவதைக் கேட்டு என் மனம் சந்தோஷமடைகிறது. உம்முடைய ஆலோசனையின் மகிமையாலல்லவா என் தந்தையார் சேர சோழ தேசங்களை வெகு சுளுவாக ஜெயித்தார். நீர் சொல்லுவது சரி. குடிகளெல்லாரையும் மலைகளுக்குப் போகும்படி உத்தரவு செய்துவிடுகிறேன். ஆனால் நானும் போய் ஒளித்துக்கொள்ளுவதென்றால், அது என் மனதிற்குப் பொருந்தவில்லை. அவ்விதம் அநேக அரசர் செய்திருந்தும், அது எனக்கு விருப்பமில்லை. இதுவரையும் நான் பெற்றிருக்கும் அபகீர்த்தி போரும், சத்துருக்களுக்குப் பயந்து ஓடிப்போனேன் என்ற அவமானமும் ஏற்படும். கணக்கில்லாத பாவங்களைச் செய்த இவ்வுடல், எதிராளிகளின் ஆயுதத்திற்கு இலக்காகிப் போர்க்களத்தில் மடிவதே சரி. நான் இறந்துவிட்டால் என் தம்பிமாரில் ஒருவன் பட்டம் ஆளலாம். முன்னமே உம்முடைய ஆலோசனையை மதியாமல் நான் வீணாய்க் கெட்டேன். நல்லோர் எல்லாரும் என்னை விட்டு நீங்கிக் கொண்டார்கள். திரும்ப வரக்கூடாத காலத்தைப் பற்றி இனிச் சிந்திப்பதில் பயனில்லை. நான் சண்டைசெய்து சாகப்போகிறேன். இதுவே தீர்மானம். நீர் எனக்குச் செய்யக்கூடிய உபகாரம் ஒன்றுண்டு. எனக்கும் என் தம்பிமாருக்கும் சந்தானமில்லை. எங்களுக்குப் பின் பாண்டிய சிம்மாசனம் ஏறக் கூடிய உரிமை உள்ளவர்கள் ஒருவரும் இல்லை. விதிவசத்தால் நாங்கள் யாவரும் மரிக்க நேரிட்டால், என் சிம்மாசனத்தையும் கிரீடாதிகளையும், சத்துருக்களுடைய கைகளில் அகப்படாதபடி காக்கவேண்டும் என்ற இந்த ஒரு காரியத்தை உம்மிடம் கேட்டுக் கொள்ளுகிறேன். போய் வருகிறேன்" என்று சொல்லி, பாண்டியன் எழுந்து வெளியே வந்தான்.

அவன் கொஞ்சதூரம் நடக்கவும், பெரியவர் ஓடிவந்து அவனைத் தழுவிக்கொண்டு, "பாண்டியா! நீ இப்படிச் சொல்லுவாய் என்று முன்னமே எனக்குத் தெரியும். என் சொல்லைத் தட்டாதே. உனக்குப் பின் உன் தம்பிமார் இருக்கச் சம்மதியார்கள். பாண்டிய வம்சம் வேர் அற்றுப் போய்விடுமே! நீ மரிப்பதினால் நாட்டுக்கு ஒரு நன்மையும் வராது. நான் சொல்லுகிறபடி செய். பின்னால் நான் வந்து உன் இராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்துகிறேன்" என்று அழுகையோடு சொன்னார்.

அதற்குப் பாண்டியன் "விசனப்படாதீர். பத்து வருஷம் ஆளுகை செய்தேன். என்னால் அநேகருக்குத் துன்பம் விளைந்ததேயன்றி நன்மை ஒருவருக்கும் உண்டா கவில்லை. என் பேரோ, மகா நிந்தை யடைந்திருக்கிறது. ஆதலால், சத்துருக்களுக்கு முதுகு காட்டாதவன் என்ற ஒரு கீர்த்தியையாகிலும் நான் சம்பாதிக்கவேண்டும் என்று ஆவலாயிருக்கிறேன், ஆதலால் தடை செய்யாதீர்." என்று சொல்லி அவரை அன்பாய் அணைத்துவிட்டுப் பிரிந்து வேக மாய்ச் சென்றான்.

சத்தியசேனர் துன்பக்கடலில் ஆழ்ந்தவராய் அவன் சென்ற வழியைப் பார்த்தபடியே நின்றார்.

---

17. காலனை எதிர்பார்த்தல்.

அவ்விரவிலேயே பாண்டியன் மந்திரியையும் சேனாபதியையும் வரவழைத்து தன் தீர்மானத்தை அறிவித்தான். அவ்விருவரும் மிகுந்த திகைப்படைந்தார்கள். அரசனோ வெகு பிடிவாதக்காரன். ஒன்றைத் தீர்மானித்துவிட்டால் அப்புறம் அதை மாற்றமாட்டான். ஆகையால் அவ்விருவரும், எதிர் நியாயம் சொல்லமாட்டாமல், அரச கட்டளைப் பிரகாரம் நடக்கச் சித்தமாயிருப்பதாகத் தெரிவித்தார்கள்.

பாண்டியன் மந்திரியைப் பார்த்து, "மாலீக்காபர் ஒரு அரசனல்லன். நான் அவனுக்குக் கடிதம் அனுப்புதல் ஒழுக்க விரோதமாகும். நீயே ஒரு பதில் எழுதி அவனு டைய தூதன் மூலமாய் அனுப்பிவிடு. உடனே யுத்தத்தி ற்கு வேண்டிய ஆயத்தங்களை ஆரம்பிக்கவேண்டும். நமது பொக்கிஷ சாலையில் பணமில்லை. ஆகலால், அரச சின்னங் களைத் தவிர, நமது பொக்கிஷ சாலையிலும், அரண்மனையி லும் இருக்கும், விலைபெற்ற வஸ்துக்களையெல்லாம் வியா பாரிகளிடம் விற்றுவிடு. அரண்மனையிலுள்ள பொற் பாத் திரங்களையும், பொன்னால் செய்யப்பட்ட மஞ்சங்கள் ஆசன ங்கள், முதலிய எல்லாச் சாமான்களையும் அக்கசாலைக்கு அனுப்பி உருக்கி நாணயமாக்கிவிடு. சேனைகளுக்கும் நா ட்டு உத்தியோகஸ்தருக்கும் நூறு கோடி பொன்னுக்கு மேலாகக் கொடுக்கவேண்டிய திருக்கிறது. அதில் யாதொ ன்றையும் பாக்கியாக வைக்காமல் கொடுத்துத் தீர்த்துவிடு. பாண்டியன் கொடுக்கவேண்டிய கடன் என்ற வார்த்தை இந்த ராஜ்யத்தில் கேட்கப்படக் கூடாது. மாலீக்காபர் படையெடுத்து வருவதைக் குறித்து நாடெங்கும் பறை சாற்றுவித்து, நமது சேனைகளுக்கு உதவியாயிருக்கவேண் டிய தொழிலாளரைத் தவிர, மற்றெல்லாக் குடிகளும் ஊர் களைவிட்டு, தத்தம் கட்டுமுட்டுகளையும், ஆடுமாடுகளையும் சேர்த்துக்கொண்டு மலைநாட்டிற்கு ஓடிப்போகச்சொல். மலைநாட்டிலுள்ள கிராமங்களுக்குச் செய்தியனுப்பி, அங்கு போகும் குடிகளுக்குக் கூடிய உதவிசெய்யும்படி ஏற்பாடு பண்ணு. சேனுபதிக்கு வேண்டிய உதவியெல்லாம் குறை வற நடக்கும்படி பார்த்துக்கொள். அன்றாடகம் ஆன காரி யத்தைக் குறித்து நமக்குஅறிவி" என்றுகட்டளையிட்டான்.

சேனுபதியைப் பார்த்து, "சேனைகளில் நான் கொடு க்கும் குறிப்பில் உள்ளவைகள் மாத்திரமே நாம் நம்பக்கூடிய வை. இவற்றில் நாட்டுக் காவலுக்கு வேண்டியவைகளை நீக்கி,மற்றவைகளின் தொகையைக் கணக்கிட்டால், குதி ரைச்சேனை பன்னிராயிரமும்,காலாட்கள் பதினையாயிரமும். வில் வீரர் நாலாயிரமும், யானைப் படை ஐந்நூறும், மாத்

திரமே நமக்கு உபயோகப்படக் கூடியவை. இந்தச் சேனை யைக்கொண்டு சத்துருக்களை எதிர்க்கவேண்டிய வழியைச் சொல்லு" என்றான் பாண்டியன்.

அதைக் கேட்ட சேனாதிபதி கலங்கி, "மகாராஜனே! நான் யுத்த வித்தையைச் சாஸ்திர ரீதியாகக் கற்றவனேயன்றி, ஒருகாலத்திலும் யுத்தம் செய்தவனல்லன். பரம்பரையாக உத்தியோகம் பண்ணும் முறையில், என் தகப்பனாருக்குப்பின் நான் சேனாதிபதியாக அமர்ந்தது தேவரீருக்குத் தெரியும். உபய சேனைகளின் தாரதம்மியம், யானைக்கும் பூனைக்கும்போ லிருக்கின்றது. இதில் நான் ஆலோசனை சொல்லுவது எப்படி? சமுகத்துச் சித்தம் எதுவோ அதை நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான்.

பாண்டியன் அதைக்கேட்டு, "உன் தந்தை இப்போ திருந்தால், அவர் ஏதாவது ஒரு வழியைச் சொல்லுவார். அந்த வழிப்படி நடந்தால் ஜெயம் தவறாது. அவ்வித தளகர்த்தர் எனக்குக் கிடைக்காதபடியால், நானே உனக்கு யுத்தக் கிரமத்தைப் போதிக்கவேண்டியதா யிருக்கிறது. அப்படியே ஆகட்டும்.

முதலாவது நீ செய்யவேண்டிய காரியம், வலசை வாங்கி ஓடிப்போகும் ஜனங்களுக்கு வழியிலே துன்பம் நேராதபடி காக்கவேண்டியது. ஆதலால் பெரும் பாதைகளிலும், கணவாய்களிலும் காவல் செய்யும்பொருட்டு போர் வீரரை அனுப்பு. என் தம்பிமாருக்கும், நமது பக்ஷத்திலுள்ள சிற்றரசருக்கும், தாணையங்களில் நான் குறிப்பிடும் இடங்களுக்கும் உடனே செய்தி அனுப்பி, சித்தமாக இருக்கும் போர்வீரரோடு புறப்பட்டு வரச்சொல்லு.

மூவாயிரம் குதிரைச் சேவகரைப் பவுஞ்சுகளாகப் பிரித்து நாலு திசைகளுக்கும் அனுப்பி, வடக்கில் காவேரி முதல், தெற்கே வைப்பாறு வரையுமுள்ள பிரதேசமனைத்திலுமிருக்கும் ஊர்களை நெருப்பிட்டுக் கொளுத்தவும், பயிர் பச்சைகளை அழிக்கவும், குளங்களிலுள்ள நீரை வடியச் செய்து, மற்ற நீர் நிலைகளைத் தூர்த்துப்போடவும் உத்தரவு செய்.

தைரியசாலிகளான சேர்வைகாரரைத் தெரிந்தெடுத்து அவர்கள் ஒவ்வொருவரிடமும் சில குதிரைவீரரை ஒப்புவித்து, வடதிசையில் உள்ள குன்றுகளிலும், காடுகளிலும் மறைந்திருக்கவும், வடக்கத்தியச் சேனைகள் இரவில் பாளையம் இறங்கும் இடத்தில் திடீரென்று பிரவேசித்து, கூடாரங்களை நெருப்பிட்டுக் கொளுத்தியும், குதிரைகளையும் ஆட்களையும் கொன்றும் காயப்படுத்தியும், இவ்வாறாக சத்துருக்களுக்குப் பயம் உண்டாக்கவேண்டும் என்று கட்டளையிடு.

யுத்த தளவாடங்களைப் பழுதுபார். மாலீக்காபருடைய சேனை முழுவதும் குதிரைப் படையாயிருப்பதால், இந்த யுத்தத்தில் காலாட்கள் உபயோகிக்கக்கூடியது நீண்ட கணைகளையுடைய வேலாயுதங்களே. ஆதலால் வேலாயுதங்களுக்கு எட்டுமுழ நீளமான கைப்பிடிகளைச் செய்வி. வெளியூர்களிலிருந்துவரும் சேனைகள் தங்குவதற்கான வசதிகளைச் செய். மதுரைக் கோட்டை முற்றுக்கைக்கு நிற்கமாட்டாது. ஆகையால் நாம் வெளியிலே செய்யும் சண்டையிலேதான் முடிவு காணவேண்டும். நீடித்த யுத்தம் செய்ய நமக்கு சக்தியில்லை. ஆதலால் பத்து நாளுக்கு வேண்டிய ஆகார பதார்த்தங்களைச் சேகரித்தால் போதும். வடக்கே காத வழிதூரத்தில் இரண்டு பறம்புகளுக்கு மத்தியிலிருக்கும் வெளி யுத்தத்திற்கு வசதியான இடமாயிருக்கிறது. அதில் நான் காண்பிக்கிறபடி நீளமான குழிகளை இரகசியமாக வெட்டிவை. இவ்வளவு காரியமும், மாலீக்காபர் காவேரி தாண்டு முன்னதாக முடிவாகவேண்டும்" என்று கட்டளைக் கொடுத்தனுப்பினான்.

அரச கட்டளையின் பிரகாரமே வெகு துரிதமாகக் காரியாதிகள் நடந்தன. நாட்டை விட்டு குடிகள் நாலா திசைகளுக்கும் ஓடிப்போனார்கள். செல்வம் பொழிந்துகொண்டிருந்த சீமை பத்து நாட்களுக்குள்ளாகக் கரிக்காடாகிவிட்டது. பட்டணங்கள் வெறுமையாயின.

நாடெங்குமுள்ள பிரதான தேவாலயங்களையெல்லாம் பூட்டிப் போடவும், அவைகளைச் சேர்ந்த திரவியங்களை மறைத்துவிடவும் அரசன் கட்டளையிட்டான். மீனாக்ஷி

சுந்தரேசருடைய ஆலயத்திலுள்ள சுவர்ண விக்கிரகங்களையும், விலைமதிக்க வொண்ணாத ஆபரணங்களையும், நாஞ்சி நாட்டுச் சிற்றரசனுக்கு அனுப்பி, சத்துருக்கள் நாட்டை விட்டுப் போகும்வரைக்கும் அத்திரவியங்களை அவ்விடத்தில் வைத்துக் காக்கவேண்டும் என்று திருமுகம் அனுப்பினன்.

வீரபாண்டியனுக்குச் சார்பாயிருந்த சேனபதிகளும் சிற்றரசரும் தங்கள் சூழ்ச்சி வெளியானது கண்டு, பயந்து, தலைகாட்டாமல் மறைந்துகொண்டார்கள்.

அரசனுடைய கட்டளையின் பிரகாரம், மந்திரி மாலிக்காபருக்கு பின் வருமாறு ஒரு கடிதம் எழுதினன்:—

டில்லி அல்லாவுதீனுக்கு அடிமையான மாலிக்காபருக்குத் தெரிவிப்பது.

தூதன் மூலமாக நீ அனுப்பிய ஒரு குற்சிதச் சீட்டைப் பார்வையிட்டேன். அரசருக்கு உரிய ஒழுக்கம் இன்னது என்பதை நீ உணர்ந்திருந்தாயாகில், பாண்டியேசருடைய பொற்பாத கமலங்களுக்கு, அவ்வித விஷயத்தை அனுப்பியிருக்கமாட்டாய்.

இந்த இராஜ்யம் அல்லாவுதீனுக்குக் கீழ்ப்பட்டதல்லவென்றறிவாயாக.

வீரபாண்டியன் என்பவன், எமது நாட்டுக் குடிகளிலொருவனுதலால், அவனைப்பற்றிய வழக்கில், நீயாகிலும் உன் எஜமானுகிலும் தலையிடுவதற்கு எவ்வித நியாயமுமில்லை.

நீ இந்த நாட்டுக்குள் பிரவேசிக்கும் பக்ஷத்தில், உன் அகங்காரம் அழியும்படி செய்வது எமது கடமையாகும்.

வசந்தசேனன்.

பாண்டியதேச மந்திரி.

இந்தக் கடிதம் மாலிக்காபருடைய தூதன் மூலமாக அனுப்பப்பட்டது.

இவ்வாறு, யுத்தத்திற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துகொண்டிருக்கையில், பாண்டியன் ஒருநாட் காலையில் எழுந்து, உயர்ந்த மதில்களுக்கு மத்தியில் பெரிய பட்டணம்போல விளங்கிக்கொண்டிருந்த தன் அந்தப்புரத்தில் பிரவேசித்தான். ஆயிரத்தொரு மனைவியரும் அவரவருக்குரிய பரிஜனங்களுமாக அங்கு வசித்தவர்களின் தொகை பதினாயிரத்திற்கு மேற்பட்டதா யிருந்தது.

ஒவ்வொரு மனைவிக்கும் பிரத்தியேகமான மாளிகை யிருந்தது. அந்த மாளிகைகள் சுற்றிலும் அழகாய் விளங்க, மத்தியில் விஸ்தாரமான ஒரு சிங்கார வனமிருந்தது. அவ்வனத்தில், விதம் விதமான விருக்ஷங்களும், செடிகளும், பூண்டுகளும் ஒழுங்காய் நடப்பட்டிருந்தன அங்கங்கே உட்காருவதற்கான மேடைகளும், உல்லாசமாய் உலாவுவதற்கான பளிங்கு பதித்த பாதைகளும், களை தீர்த்துக் கொள்ளும் கொடி வீடுகளும், நடைக் காவணங்களும், சோலையடர்ந்த செய் குன்றங்களும், பலர் கூடியிருந்து ஆனந்திக்கும் மண்டபங்களும், மரங்களின்மேல் பாடிக்கொண்டிருக்கும் குயில்களும், ஓடித் திரிந்து ஆடி மகிழும் மயில்களும், பரந்த தெண்ணீர்த் தடாகங்களும், அவைகளில் விரிந்த தாமரை மலர்களும், அவைகளுக் கூடே சஞ்சரித்துக்கொண்டிருந்த அன்னங்களும், மருதோன்றி வேலிகளுக்கிடையில் பயிராக்கப்பட்டிருந்த நறுமலர்க் காக்களும், அவைகளில் மலர்ந்த பூக்களும், அவைகளுக்கூடே பலநிறப் பட்டாடைகள் உடுத்து உலவும் வல்லியரும், அன்னத்தைப் பழித்த நடையும், உடுக்கையைப் பழித்த இடையும் உடைய மெல்லியரும், இடைவிடாது தொனித்துக்கொண்டிருந்த இன்னிசை யோசையும், எப்போதும் வீசிய இளங்காற்றும் அமைந்த அவ்வனமானது இந்திர லோகத்தை ஒத்தே விளங்கிற்று.

இராஜ ஸ்திரிகளுக்கு வேண்டிய எல்லாவித வசதிகளும் அப்பெண்களுக்குக் கிடைத்திருந்தன. மஞ்சன சாலைகளில் நீராடுவோரும், தோட்டங்களில் பூக் கொய்வோரும், நீண்ட கேசங்களை உலரச் செய்வோரும், சங்கீதம் பழகுவோரும், நடனம் செய்வோரும், பந்தடிப்போரும்,

பலவித விளையாட்டுகளில் நேரம் போக்குவோரும், நூல்களைப் பயில்வோரும், படுத்துத் துயில்வோரும், நடப்போரும், இருப்போரும், ஓடுவோரும், ஆடுவோரும், சிரிப்போரும், அழுவோரும், சண்டை யிடுவோரும், கூடி மகிழ்வோரும், கிள்ளைகளோடு பேசுவோரும், செடிகளைப் பேணுவோரும், ஆக அப்பெண்கள் பொழுது போக்குதல் எவ்விதம் என்ற ஒரு கவலையையே கொண்டு அவ்விடத்தில் வசித்தனர்.

அநேக நாளாக அந்தப்புரத்தின் திசையை நோக்காதிருந்த மதிகுல வேந்தன், சிங்கார வனத்தை அடைந்து, சங்கீத மண்டபத்தில் பிரவேசித்தார் எனக் கேள்வியுற்ற ஸ்திரீகளெல்லாரும், குதூகலித்து, ஓடி, தந்தம் சுந்தர உடம்புகளைச் சிங்காரிக்க ஆரம்பித்தனர். சிந்தை மிகுந்தவனாய் அங்குற்ற சுந்தர பாண்டியன், தன் காதற்கிழத்தியரான ஆயிரம் பேரையும் ஒருங்குசேர ஆஞ்ஞாபித்தான். அதைக்கேட்ட அரிவையர் அனைவரும் கலங்கி, "இன்று பாண்டியேசருக்கு நேர்ந்த துன்பம் என்னவோ? திருமுக மண்டலம் திகழொளி குன்றித் தோன்றுகின்றதே; கனக மேனி கறுத்திருக்கின்றதே; வதனாரவிந்தத்தில் வரிகள் பதிந்திருக்கின்றனவே; சுந்தர நயனங்கள் சோர்படைந்தனவே; மந்தகாசம் போய் முகத்தில் மனக்கவலை காணப்படுகின்றதே; உடல்தான் நொந்ததோ, உள்ளத்தின் நோய் தானோ?" எனத் திகைத்தனர்.

அங்ஙனம், ஒரு சூரியனைச் சூழ ஆயிரம் சந்திரர்கள் பிரகாசித்ததுபோல வந்து குழுமி நின்ற அக்கூட்டத்தை நோக்கி, பாண்டியன், "வனிதா மணிகளே! என் மதியீனத்தால் மயங்கி, நான் உங்கள்பால் பெரிய தோஷத்தைச் செய்தேன். காமாந்தகாரத்தால் மருண்டு உங்களைப் பலாத்காரமாகக் கொண்டுவந்து அநுபவித்தேன். இந்தக் கருமத்தைத் தொலைக்கும் வழியறியாமல், நான் அனல் வாய்ப்பட்ட மெழுகுபோல் உருகிக்கொண்டிருக்கும் சமையத்தில், எனக்கு வந்தெட்டிய ஒரு செய்தியைக்கொண்டு, இனி காலதாமதம் செய்யாமல், உங்களுக்குச் செய்யக்கூடிய பரிகாரத்தை உடனே செய்யவேண்டும் எனத் தீர்மா

விக்து இங்குற்றேன். வடக்கிலிருந்து கரையில்லாத வெள்ளம்போல சத்துருக்கள் வருகிறார்கள். இன்னமும் சில காலில் என் இராஜ்யம் நாசமாகிவிடும் என்று காண்கிறது. நாடழியப் பார்த்திருந்து நான் உயிர் வாழேன். ஆதலால் உங்கள் ஒவ்வொருவருடைய மன விருப்பம் இன்னது என்று தெரிவித்தால், என்னால் கூடியவரையிலும், அதை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறேன். யார் யாருக்குத் தக்கம் பந்து ஜனங்களிடம் போய்ச் சேர விருப்பமோ, தெரிவியுங்கள். வேண்டிய பொருள் தந்து அனுப்பி விடுவேன். மதுராபுரி நீங்கள் வசிக்கக்கூடிய இடமல்ல" என்றுரைத்தான்.

அதைக் கேட்ட பெண்கள் யாவரும், ஒருவரோடொருவர் பேசி ஆலோசிக்கத் தொடங்கினார்கள். முடிவில், பாண்டியனைப் பார்த்து,

"அரசரேறே! திருமாலை நிகர்த்த தேவரீருக்குப் பாரியைகளாய் அமையும் பாக்கியம் பெற்றது எங்கள் தவப் பயனேயன்றி வேறல்ல. எந்த வழியாய் நாங்கள் இந்த அந்தப்புரத்தை அடைந்திருந்த போதிலும், இங்குற்றபின் தேவரீரைத் தவிர எங்களுக்கு வேறு யாதொரு ஆசையும் இல்லா தொழிந்தது. இனி உம்மைப் பிரிவோமென்பது கூடாத காரியம். வெளியே செல்லுவோமாகில் உலகோர் எங்களைப் பழிப்பார்கள். உம்மையும் நிந்திப்பார்கள். பாண்டியேசனை ஒருவர் தூற்றக் கேட்டு உயிர் வாழ்வதிலும், மரிப்பதே எங்களுக்கு உத்தமம். ஆகையால் எங்கள்மேல் சந்தேகம் கொள்ளாமல், ஆயிரம் பேராகிய நாங்கள் அனைவரும், பட்ட மஹிஷியோடு கூட ஏக சரீரமானவர்களாகவே பாவித்து எங்களை ஆட்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். இதுவே முடிவான எங்கள் தீர்மானம்" என்றார்கள்.

பாண்டியன் பலவாறுசச் சொல்லியும் அவர்களில் ஒருத்தியாகிலும் அவனை விட்டுப்போகச் சம்மதிக்காதபடியால், அப்பெண்களின் பக்தியை வியந்துகொண்டு, மனநோவோடு அந்தப்புரத்தின் மாக்ஷிமையை ஒருதரம் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போனான்.

18. சித்தர் செப்பிய செய்தி.

முந்திய அத்தியாயத்தில் சொல்லப்பட்ட காரியங்கள் நடந்து சில நாட்கள் சென்றபின், ஓர் இரவில், வழக்கம் போல அரசன் நித்திரைக்குச் சென்றான். நானு சிந்தனைகளினால் அவனுடைய உறக்கம் பங்கப்பட்டபடியால், அரைத் தூக்கமாகவே தூங்கிக்கொண்டிருந்தான்.

மூன்றாம் ஜாமத்தில், யாரோ ஒரு முதியவர், அவன் பாதத்தருகில் உட்கார்ந்திருக்கக் கண்டு, எழுந்து கண்களைத் துடைத்துப் பார்த்தும், அந்த உருவம் அசையாதிருந்தபடியால், ஆச்சரியமடைந்து, இது சொப்பனம்தானோ என்று எண்ணிக்கொண்டு, "நீர் யார்? எவ்விதமாகக் காவலைத் தாண்டி உள்ளே வந்தீர்?" என்று கேட்டான். அதற்கு அவர் "சுந்தர பாண்டியா! நீ காண்பது சொப்பனமல்ல, உண்மையே; நான் வாசல் வழியாக வரவில்லை" என்றார். எனவும், பாண்டியன் எழுந்து "சுவாமீ! அப்படியானால் நீர் ஒரு சித்தரா யிருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அவரை வணங்கினான். பெரியவர் அவனைத் தூக்கி ஆசீர்வதித்து உட்காரச் சொல்லி, "தமிழ் நாடனே! நான் அகத்தியனுருடைய மாணவருள் ஒருவன். என் பெயர் கடேந்திரன் என்பார்கள். என் குருவானவர் ஒரு காரியமாக என்னை உன்னிடம் அனுப்பினார்" என்றார்.

பாண்டியன்:—சுவாமீ! அது என்ன காரியம் என்று அருளிச் செய்யவேண்டும். என் குலத்திற்குக் கடவுள் போல இருக்கும் கும்ப முனிவர் எங்களைக் கடாக்ஷித்து ஆயிரம் வருடங்களுக்கு மேலாகிவிட்டதே. இப்போது மறுபடியும் அவருடைய திருவுளம் உவந்து என்பால் கிருபை கொண்டதின் காரணமென்ன? அவருக்கு என்னால் ஆகவேண்டியதென்ன? என் உயிர் வேண்டுமானாலும் படைக்கச் சித்தமா யிருக்கிறேன்.

சித்தர்:—பாண்டியா! என் குருவுக்கு உன்னுடைய பொருள் ஒன்றும் தேவையில்லை. உன் முன்னோரிடம் அவர் வைத்து வைத்த நிதி ஒன்று உண்டு. அதைப் பொதிகைக்கு அனுப்பிவிட வேண்டும் என்று தெரிவிக்கச் சொன்னார்.

பாண்டியன்:—சுவாமீ! நீர் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. அகத்தியனார் என் முன்னோரிடம் எதையாகிலும் கொடுத்து வைத்ததாக நான் இதுவரையும் கேள்விப்பட்டதில்லை. அரசு சின்னங்களாகிய சிம்மாசனத்தையும் கிரீடாதிகளையும் தவிர என் குடும்பத்தில் பரம்பரையாக இறங்கிவந்த வஸ்து ஒன்றும் என்னிடமில்லையே. அது பொன்னா யிருக்குமாகில், தற்சமயத்தில் நான் அதைத் திரும்பக் கொடுக்கக் கூடாத நிலைமையில் இருக்கிறேனே. என் கையில் ஒன்றுமில்லாதிருக்கும் தருணத்தில் என்னைச் சோதிக்கவா இவ்விதம் சொன்னீர்?

சித்தர்:—நீ அறியாய் என்பது உண்மையே, ஆனால் வீரபாண்டியன் அறிந்திருக்கிறான். அரசாளும் நிருபன், தனக்குப் பின் பட்டத்திற்கு வரப்போகிறவனிடத்தில், ஆணை வாங்கிக்கொண்டு, இந்த நிதியைக் குறித்துச் சொல்லி வைப்பது உன் வம்சத்தில் வழக்கம். அப்படியே உன் தந்தையும் தனக்குப் பின் வீரபாண்டியன் ஆளுவான் என்று எண்ணி அவனுக்கு இந்த மர்மத்தைத் தெரிவித்தான். வீரபாண்டியனோ உன்மேல் கொண்ட பகையினால், ஆணையை மீறி, டில்லிக்கு அரசனாயிருக்கும் அல்லாவுதீனுக்கு இதைத் தெரிவித்து விட்டான். அல்லாவுதீன் இந்த அபூர்வமான பொருளுக்கு ஆசைப்பட்டே உன் நாட்டின்மேல் தன் படைகளை ஏவியிருக்கிறான். இனிமேல் அந்தப் பொருள் பத்திரப்பட்டிருக்கமாட்டாது. அதிலுள்ள ஒவ்வொரு வஜ்ஜிர உண்டைக்காகவும், அரசர்கள் ஒருவரோ டொருவர் யுத்தம் செய்யவும், பலபேர் உயிர் துறக்கவும் நேரிடும். அதைக் கைப்பற்றும் ஒருவராகிலும் வாழ்வடையமாட்டார்கள். அவைகளினித்தம் கணக்கில்லாத களவுகளும், கொலைகளும் விரோதங்களும், உண்டாகும். முனிவருக்கு அவற்றால் பிரயோஜனமில்லா

விட்டாலும், ஜெகதீசன் படைத்த அருமையான வஸ்துக்களை வீணே அழித்து விடுதல் குற்றமாகையால், அவற்றைச் சத்திய யுகம் திரும்ப வருமளவும் தாமே வைத்திருக்கவேண்டும் என்று கருதி, தம்மிடம் அனுப்பி விடவேண்டும் என்று தெரிவிக்கச் சொன்னார். இவற்றைப்போன்ற விலைமதிக்கப்படாத பொருட்கள் அவர் இருக்கும் இடத்தில் அளவில்லாமல் உண்டு. இக்கால மனுஷர் அவற்றை அநுபவிக்க அருகரல்லர். அவைகளோடு இவற்றையும் சேமித்து வைக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து.

பாண்டியன்.—ஸ்வாமீ! நீர் சொல்லுவது நான் கேள்விப்படாத விஷயமாயிருக்கிறது. இந்தப் பொருள் எவ்விடத்தில் இருக்கிறது? இது என் முன்னோரிடம் வைத்து வைக்கப்பட்ட வரலாறு என்ன? எல்லாவற்றையும் எனக்குத் தெளிவாக அநுக்கிரகிக்க வேண்டும்.

சித்தர்.—பாண்டியனே! கேள். உன் பூமியில் நாற்பத்தொன்பது நாடுகளைக் கடல் கொள்ளு முன்னதாக, உன் முன்னோர் தென் மதுரையில் ஆண்டுவந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறாயல்லவா? அந்த நாடுகளில் ஒன்றில் விளைந்தது போன்ற நவமணிகள் இக்கால உலகத்தில் விளைவதில்லை.

அக்காலத்தில் வடிம்பலம்பநின்ற பாண்டியன் என்றொருவன் இருந்தானல்லவா? அவன் அளவற்ற ஐசுவரியமும், பெருந்தகைமையும் ஒருங்கமைந்த அரசனாயிருந்தான். அவன் ஒரு நாள் வியாதிப்பட்டிருக்க, அவனைப் பார்க்கும்படியாக அகத்தியனார் அவனுடைய அரமனைக்குச் சென்றார். அவர் சென்ற சமயம் அர்த்தராத்திரியாயிருந்தது. அவர் பாண்டியனுக்குச் செய்யவேண்டிய சிகிச்சையைச் செய்து கொண்டிருக்கும்போது, விஸ்தாரமான அந்த சயன மாளிகையின் குடைபோன்ற கூரையின் உட்புறத்தில், நீல வர்ணமிட்டு, ஆகாசம்போல பாவனை தோன்றச் செய்து அதில் சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் குறிப்பிடும்படி பெரிதும் சிறிதுமான நவ

ரத்தினங்களைப் பதித்திருந்ததையும், அவற்றின் ஒளி இனிமையாய்ப் பிரகாசித்து, அவ்வீடு முழுவதையும் வெளிச்சமாக்கிக் கொண்டிருந்ததையும் வியப்புடன் நோக்கினார். சற்றுநேரம் அவைகளை நோக்கி "உயிரற்ற இக்கற்களில் கடவுள் எவ்வளவு மகிமையை அமைத்து வைத்திருக்கிறார்" எனச் சிந்தித்துவிட்டு அப்புறம் வேறு காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்.

படுக்கையிலிருந்து, முனிவருடைய பார்வையைக் கண்ட பாண்டியன், அவர் புறப்படும் நேரத்தில், "சுவாமீ ஒரு சிறிய காணிக்கை இருக்கிறது. மனமுவந்து அங்கீகரிக்கவேண்டும்" என்றான். அவனுடைய மனதை அறிந்த முனிவர், "பாண்டியா! என் உள்ளம் ஒரு நிமிஷ நேரம் இந்தக் கற்களில் சென்று லயித்ததை நீ கவனித்து, அவை அனைத்தையும் எனக்குக் காணிக்கையாய்ப் படைக்கிறேன் என்கிறாய். அரசனாகிய உனக்கு அவைகள் பிரயோஜனமாகுமேயன்றி என்னைப்போன்ற துறவிக்கு அவைகளால் என்ன பயன்? உன் அன்பை நான் மெச்சுகிறேன். கற்கள் உன்னிடமே இருக்கட்டும்" என்றார். அதற்குப் பாண்டியன் "சுவாமீ! ஒருவருக்குப் படைக்க நேர்ந்துவிட்ட பொருளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல் கூடாதே. ஆதலால் இதை நீர் பெற்றுக்கொண்டுதான் போகவேண்டும். இதோ சேவகர் மூலமாகப் பொதிகைக்கு அனுப்பிவிடுகிறேன்," என்று வருந்தி வேண்ட, முனிவர் "அப்படியானால் அவைகளை எடுத்து உன்பொக்கிஷ சாலையில் பத்திரப்படுத்திவை. வேண்டும்போது நான் செய்தி அனுப்புவேன். பொதிகைக்கு நீ ஒரு நாள் வந்து என் இருப்பிடத்தைப் பார்க்கவேண்டும். உன் மனம் என்னென்ன விரும்புமோ அவற்றையெல்லாம் கொடுக்கக் கூடிய சக்தியை கடவுள் எனக்கு அளித்திருக்கிறார்" என்று சொல்லிச் சென்றார்.

முனிவர் போய்விட்டவுடனே, பாண்டியன் தன் சயனமாளிகையில் பதிப்பிக்கப்பட்டிருந்த இரத்தினங்களையெல்லாம் எடுத்து, பத்துப் பெட்டகங்களில் அடைத்து முத்திரையிட்டு வைத்தான். அவனுடைய பொக்கிஷ சா

லயில் அவைகளைப்பார்க்கிலும் மேன்மையான மணிகள் ஏராளமாய் இருந்தபடியால், முனிவருக்குக் கொடுத்த பொருள் அவனுக்கு ஒரு பெரிதாகத் தோன்றவில்லை.

சில நாட்சென்றபின், முனிவர் சொல்லியிருந்தபடியே பாண்டியன் தன் பரிவாரங்களோடு புறப்பட்டுப் பொதிகையைப் பார்த்துவரச் சென்றான். அவன் மலையமலைத் தொடரின் சமீபத்தில் வரவும், அங்கு ஒரு பெரிய விமானம் இருப்பதைக்கண்டு, அதில் ஒருவரும் இல்லாதிருந்ததால் ஆச்சரியமடைந்து அதைச் சுற்றிப்பார்க்கும்போது அதில் அலங்காரத்திற்காக இயற்றப்பட்டிருந்த சிலைகள் பலவற்றுள் ஒன்றின் கையில் ஒரு ஓலை இருக்கப் பார்த்து, அதை எடுத்துப் படித்தான். அதில் "பாண்டியனே! உன்னையும் உன் பரிவாரத்தையும் எதிர்கொண்டழைக்கும்படி இந்த விமானத்தை அனுப்பியிருக்கிறேன். நீங்கள் யாவரும் அதில் ஏறினவுடனே அது கிளம்பி ககனமார்க்கமாய் என்னிருப்பிடம் வந்து சேரும். அகத்தியன்" என்று எழுதியிருந்தது. அப்படியே ஆயிரம் சேவகரும் தானுமாக அவ்விமானத்தில் ஏறிப் பயணமானார்கள். அது ஆகாயவழியாகச் சென்று ஏகதலைப் பொதிகையின் சிகரத்திற்குச் சமீபமாயுள்ள ஒரு பள்ளத்தாக்கில் போய் இறங்கிற்று.

அவர்கள் இறங்கிய இடம் வர்ணிக்க முடியாத சிங்காரமான ஒரு பட்டணமாயிருக்கக் கண்டார்கள். அங்கு உறைந்தவர்கள் ஒளி வீசும் சரீரங்களுடைய இமையோர் போல் காணப்பட்டார்கள். அரசனுடைய வருகையை எதிர் பார்த்திருந்த அநேக சேவகர், ஓடிவந்து எல்லா வித ஆடம்பரத்தோடும் அவனை அழைத்து ஒரு சுவர்ண மாளிகைக்குக் கொண்டுபோனார்கள். அங்கு கீதவாத்தியங்கள், ஒலித்துக்கொண்டிருந்தன. ஆயிரம் நரம்புள்ள யாழ் வாசிப்போர் அவன் மனதை மயங்கச்செய்தார்கள். அகத்தியனார் வாயிலில் நின்று அவனை அருமையாய் வரவேற்றார். அவர் பாண்டியனைப்பார்த்து "அரசனே! நான் உன் வம்சத்தின்மேல் மிகுந்த அன்பு கொண்டவனாயிருக்கிறேன். நீயும் என்மேல் ஆர்வம் உள்ளவன்

என்பதை அறிவேன். ஆகலால் என்னை வேருகப் பாராட்டாமல், இது உன் சொந்த வீடு என்று பாவித்துக்கொள். உன்மனதில் நினைப்பதெல்லாம் குறைவில்லாமல் இங்கு கிடைக்கும்" என்ருர். அடுத்த நிமிஷத்தில் முனிபத்தினி தோன்றி அரசனை அருமையாய் விசாரித்தாள்.

அரசன் மனதில் என்னென்ன விரும்பினுனே அதுவெல்லாம் நடந்தது. அன்று சாயங்காலம் முனிவர் அவனை அழைத்துக்கொண்டு தம் பொக்கிஷசாலைக்குச் சென்ருர். பாதாளலோகம் எனத்தகும் ஒரு குகையில் பிரவேசித்தார்கள். வச்சிரமே தூண்களாகவும் தரையாகவும் கூரையாகவும் அமைந்த ஒரு மகா மண்டபத்தில், மரகதமுதலான பலவித மணிகளால் செய்யப்பட்ட பிரமாண்டமான உருவங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. இவை இன்னவைதான் என்று நிதானிக்கக்கூடாத ஏராளமான அரிய பொருட்கள் அம்மண்டபத்தில் கிரமப்படி வைக்கப்பட்டிருந்தன. அப்புறம் பளிங்கினுல் செய்யப்பட்டஒரு பெரிய மாளிகையைக் காண்பித்தார். அதில் உலகத்தில் உண்டான உத்தம சாஸ்திர நூல்கள் எல்லாம் இருந்தன. பொன்னுல் செய்யப்பட்ட வீடுகளில் ஆகார பதார்த்தங்கள் அளவில்லாமல் இருந்தன. அவர்கள் நடந்து சென்றதூரம் அநேக நாழிகை வழியிருக்கும். இன்னமும் போகப்போக அவ்விடத்தின் விநோதங்கள் முடிவில்லாதனவாயிருந்தன. அரசனுடைய விருப்பப்படி வெளியே திரும்பிவரவும், பாண்டியன், "சுவாமீ! இத்தனை மகிமையுள்ள இடத்திற்குக் கர்த்தனுயிருக்கும் தேவரீருக்கு, நான் ஒன்றைக் கொடுப்பேன் என்று சொன்னது மதியீனமே. என் பிழையை மன்னிக்கவேண்டும்" என்று வேண்டினுன்.

மூன்று நாள் மட்டாக எண்ணற் கரிய போக போக்கியங்களை அனுபவித்துக் கொண்டிருந்த பாண்டியன் முனிவரிடம் பயணம் சொல்லிக்கொண்டு தன் ஊருக்குப் புறப்படும்போது, முனிவர் அவனை நோக்கி "வேந்தனே! இப்போது நீ நிற்கும் இடம் ஒரு பட்டணத்தின் மத்தியல்லவா? இதோ பார்" என்று கூறி, கையால் ஒரு சைகை செய்ய. ஒரு விநாடியில் அவர்கள் நின்றது ஒரு ஆரண்யத்

தின் மத்தியிலுள்ள ஒரு பாறையாயிருக்கக் கண்டு பாண்டியன் திகைத்தான். முனிவர் அவனை நோக்கி, "பாண்டியா! உலகம் இதுபோன்ற மாயாதோற்றமே. நான் மாயாசக்தியால் உன்னை மூன்று நாளளவும் மகிழ்வித்தேன். உண்மையில் இங்கே பட்டணமுமில்லை, உத்தியாவனங்களுமில்லை, சுரருமில்லை, நரருமில்லை, பல போகங்களுமில்லை. அப்படியே பகவான் சில காலத்திற்கென்று தமது மாயாசக்தியால் சமஸ்த வஸ்துக்களையும் படைத்து வைத்திருக்கிறார். ஆதலால் அவற்றின் உண்மையான தன்மையை உணர்ந்து நடப்பவனே ஞானி. எல்லாம் மாயமாய்த்தோன்றி மாயமாய் மறையும் என்பதனால் வஸ்துக்களின் உபயோகம் இல்லாதொழிவதில்லை. ஒவ்வொரு வஸ்துவையும் கடவுள் என்ன பிரயோஜனத்தைக் கருதித் தோன்றுவித்திருக்கிறாரோ அந்தப் பிரயோஜனத்தை அறிவது உலகோருக்கு அத்தியாவசியம். என்றார்.

பாண்டியன் அவரிடம் வழியனுப்பிக்கொண்டு திரும்பும்போது, முனிவர் அவனைத்தடுத்து, "பாண்டியா! நான் உன் வீட்டிற்கு வரும்போதெல்லாம் யாதாகிலும் ஒரு பொருளை எனக்குக் கொடுத்தா லன்றி உன்மனம் திருப்திப்படுகிறதில்லை. ஆதலால் நீ என்னிடம் எதாவது ஒரு அரிய பொருளைக் கேட்டுப் பெற்றுக்கொள். உனக்கு ஒன்றும் கொடுக்காமல் உன்னை வழிவிட்டனுப்புவது எனக்குச் சம்மதமில்லை" என்றார்.

அதற்குப் பாண்டியன் "சுவாமி! என் நாட்டில் பொன் அரிதாயிருக்கிறது. ஆதலால், குடிகள் பண்டமாற்றுச்செய்தே எல்லா வியாபாரமும் நடத்தவேண்டியதாயிருக்கிறது. பொன் சாதாரணமாய் வழங்கினால் வியாபாரத்திற்கு அநுகூலமாயிருக்கும். ஆதலால் அந்த உலோகம் கிடைக்கக்கூடிய இடத்தைத் தெரிவித்தால் போதும். தேவரீருடைய கிருபையினால் எனக்கு வேறு யாதொரு குறையும் இல்லை" என்றான். அதைக்கேட்டு முனிவர் "பாண்டியா! நீ கேட்ட வஸ்து அத்தனை நன்மை பயக்கக்கூடியதல்ல. என்றாலும் தருகிறேன். உன் பூமியில்

பொன் ஏராளமாய் விளையும் இடங்கள் இல்லை. ஆதலால் ஒரு முறையைத் தெரிவிக்கிறேன். அதை இரகசியமாய் வைத்திருந்து வேண்டிய அளவு பொன்னைமாத்திரம் செய்துகொள். இந்த ரகசியம் வெளியானல், பொன்னின் மதிப்புக் குறைந்துவிடு மாதலால், அது நாணயத்திற்கு உண்மையாகமாகாது போய்விடும்." என்று சொல்லி, உலோகங்களை மாற்றும் வித்தையை உபதேசித்தார். பாண்டியன் முனிவருக்கு நன்றிகூறி, வணங்கிவிட்டு, திரும்பிப் போனன்.

அகத்தியனர் அருளிய வித்தையின்படியே, வேண்டிய மட்டும் பொன்னை உண்டாக்கி உபயோகித்துக்கொள்வது பூர்வபாண்டியருடைய வழக்கமாயிருந்தது. அக்காலத்தில் அவர்கள் குடிகளிடம் பகுதி வாங்கினதில்லை. பொன் செய்யும் முறை பட்டத்துக்கு உரியவன் ஒருவனுக்கு மாத்திரம் கர்ணபரம்பரையாய்த் தெரிவிக்கப்பட்டது.

அதற்குப் பின், தென்மதுரையைக் கடல் கொண்டதால், கவாடபுரத்திற்கும், கவாடபுரத்தையும் கடல் கொண்டதால் கொற்கைக்கும், உன் முன்னேர் வரும்படி நேரிட்டது. அப்படி அவர்கள் ஓடி வருங்காலத்தில், தங்கள் பொருளை யெல்லாம் இழந்துவிட்டாலும், வடிம்பலம்ப நின்ற பாண்டியன் அகத்தியனருக்குப் படைத்த பொருளை மாத்திரம் வெகு பத்திரமாய்க் காத்துக்கொண்டு வந்தார்கள். கொற்கைவிட்டு, குலசேகர பாண்டியன் காலத்தில் பழ மதுரைக்கும், அதன் பின் இந்த மதுரைக்கும் பாண்டியராஜதானி மாற்றப்பட்டபோதும், அந்தப் பொக்கிஷம் கூடவே கொண்டுவரப்பட்டு, பாண்டிய பொக்கிஷ சாலையில் பத்திரமாய் வைக்கப்பட்டது.

இப்படி நடந்துவரும் காலத்தில், சுகுணபாண்டியன் என்பவன் பட்டத்திற்கு வந்தான். அவன் நிதானம் அறியாதவன். துறவறத்தை நாடினவன். ஐசுவரியத்தின் நியாயமான உபயோகத்தை அறிந்தவனல்லன். ஒருநாள் அவன் பொக்கிஷ சாலையைப் பார்க்கப்போய், அவ்விடத்தில், அளவில்லாத பொன்னும், விலையில்லாத மணிகளும்,

வலம்புரிச் சங்குகள் முதலான அரிய வஸ்துக்களும், நிறைந்திருக்கக் கண்டு, நின்று ஆலோசனை செய்தான்.

"முன்னோர் சம்பாதித்த பொருளை அநுபவிப்பதானும், இலகுவாகப் பொன்னைச் செய்து கொள்வதாலும், மனுஷருக்குத் தாமச குணம் விருத்தியாகி, அவர்கள் கெட்டுப்போக ஏதுவாகும். ஆகையால், பொன் செய்யும் விதத்தை இனி ஒருவருக்கும் தெரிவிக்கக்கூடாது. அகத்தியனுடைய பொருளைத் தவிர இவ்விடத்தில் இருக்கும் மற்ற திரவியங்கள் அனைத்தையும் அழித்துப் போடுவதே நியாயம். இவற்றை எரித்துச் சாம்பலாக்கக்கூடிய மருந்துகள் இவ்விடத்திலேயே இருப்பதால் நமது நோக்கம் தடையின்றி நிறைவேறிவிடும். என் பின்வரும் அரசர்கள் தங்கள் புத்தியைக்கொண்டு அரசாங்கத்தை நடத்தி அதினால் வரும் பாவபுண்ணியங்களை அனுபவிக்கட்டும்" என்று தீர்மானித்தான். அந்தப் பிரகாரமே அவன் முனிவருடைய நிதியை எடுத்து வேறிடத்தில் க்ஷேமித்து விட்டு, பாண்டிய மன்னர் அநேக காலமாகச் சேகரித்து வைத்திருந்த அளவிறந்த திரவியத்தின்மேல் சில மருந்துகளைத் தெளித்து நெருப்பிட்டுச் சாம்பலாக்கினான்.

சுகுணபாண்டியன் ஆலோசிக்காமல் செய்த இச்செய்கையினால், அவனுக்குப் பின் வந்த பாண்டியர்கள் தாழ்வடைய நேர்ட்டது. குடிகளிடத்தில் கடமை வாங்கவும், அதினால் வரும் ஊதியம் பற்றாதென்று, முத்து முதலான பொருட்களை அயல்தேசங்களுக்கு அனுப்பி விற்று, பொன்னைச் சம்பாதிக்கவும் நேர்ந்தது. இவர்களுடைய இழிந்த தன்மையைக் கண்ட என் குருநாதரும் பாண்டிய வம்சத்தின்மேல் தாம் வைத்திருந்த கிருபையை விலக்கிக்கொண்டார். அவருடைய நிதி மாத்திரம் சுகுணபாண்டியன் வைத்த இடத்தில் இன்றையவரைக்கும் இருக்கிறது" என்று முனிவர் ஆதியோடந்தமாய்த் தெரிவித்தார்.

பாண்டியன்:—சுவாமீ! நீர் சொன்ன விசேஷங்கள் மகா ஆச்சரியகரமாயிருக்கின்றன. இனி அந்நிதி இருக்கும் இடத்தைத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

சித்தர்:—இந்த சயன மாளிகைக்கு நூறு முழ தூரத்திற்குத் தெற்கில், அந்தப்புரத்தைப் பிரிக்கிற உயர்ந்த மதில் இருக்கிறதல்லவா? அம்மதிலின் ஓரமாய் அநேக கற்சிலைகள் நாட்டப்பட்டிருக்கின்றன. அச்சிலைகளுக்குள் ஒரு அநுமான் சிலை உண்டு. அதின் தோள்களின்மேல் ஏறி அழுத்தினால், அது தரையில் மறைந்துவிடும். அது நின்ற இடத்தில் ஒரு வாயில் காணப்படும். அதில் பிரவேசித்துப் படிகள் வழியாய் இறங்கினால், பத்தாவது படியில் மிதிக்கவும் அநுமான் சிலை முன் நின்ற இடத்தை அடைந்துவிடும். இருபத்தாறாவது படியின் கீழ் சுவக் காட்டில் பொதியப்பட்ட ஒரு திறவுகோல் இருக்கும். அதுவே முனிவருடைய பொக்கிஷ அறையைத் திறப்பது. ஐம்பதாவது படியிலிருந்து இரண்டு வழிகள் பிரிந்து செல்லும், அவற்றில் இடபக்கமாய்ப் போகும் வழியாய்ச் சென்றால், நூறு முழ தூரத்தில் ஒரு நாற்சந்தியில் கொண்டுபோய் விடும். அந்த நாலு பாதைகளில், வேற்குறியிட்ட வழியைப் பிடித்து ஐம்பது முழதூரம் சென்றால் ஒரு கிணற்றண்டை போய்ச் சேரும். அங்கிருந்து பல வழிகள் பிரிந்து போகும், அவற்றைக் கவனிக்காமல், அக் கிணற்றில் இறங்கி, பதினோராவது படியை நீக்கினால் அதின்கீழ் ஒரு குகை காணப்படும். அதனுள் தான் ஒரு சிறிய அறையில் முனிவருடைய பெட்டிகள் இருக்கின்றன. வழியைக் கவனமாய்ப் பார்த்துச் செல்லவேண்டும், அல்லாவிடில் மோசம் நேரிடும். அநேக வூர்களுக்கு இரகசியமாகச் செல்லக்கூடிய மார்க்கங்களை உன் முன்னோர் உண்டு பண்ணினார்கள். அவைகளை இக்காலத்தார் தெரிந்துக்கொள்ளவில்லை.

பாண்டியன்.—சுவாமீ! தாம் தெரிவித்த எல்லாவற்றையும் ஞாபகம் செய்து கொண்டேன். அகத்தியனாருடைய பொருளை எவ்விடத்திற்கு அனுப்பவேண்டும் என்பதை மாத்திரம் தெரிவிக்கவேண்டும்.

சித்தர்.—பொதிகையின் அடிவாரத்தில், தாம்பிரவருணி உற்பத்தியாகும் இடத்தில் ஒரு பெரிய பாறை உண்டு.

அவ்விடத்திற்கு அனுப்பும்படி சொன்னார். நான் உனக்குச் சொல்லவேண்டியது அவ்வளவு தான்.

இவ்வாறு சொல்லி முனிவர் எழும்பவும், பாண்டியனும் எழுந்து, "சுவாமீ! உமது பிரியப்படியே ஆகட்டும். ஆனால் தேவரீர் எனக்கு ஒரு ஆசிர்வாத வசனம் சொல்லாமல் போவது மகா துக்கமாயிருக்கிறது" என்றான். எனவும், முனிவர் "பாண்டியா! இம்மைக் கடுத்த யாதொரு ஆசிர்வாதமும் உனக்கு இனிமேல் பிரயோஜனப்படா. அநேக பாவங்களைச் செய்து, அவற்றின் பலனை நீ அனுபவிக்க வேண்டியவனானாய். என்றாலும், உன் கர்மத்தைக் குறித்து நீ உண்மையான பச்சாதாபமடைந்திருப்பதால், மறுமையில் வாழ்வடைவாய்" என்று சொல்லி மறைந்து விட்டார். அவர் சொன்ன வார்த்தையினால் பாண்டியனுடைய மனதினின்று ஒரு பெரும் பாரம் நீங்கினது போலாயிற்று.

அவர் போய்விடவும், பாண்டியன் வெளியே வந்து, காவலர் விழிப்பாய்க் காத்துக் கொண்டிருந்ததைப் பார்த்து, "முனிவர்களுடைய சக்தியை என்னென்று சொல்ல!" என்று சொல்லிக்கொண்டு திரும்பவும் படுக்கைக்குப்போய், நித்திரையில்லாமலே நேரத்தைப் போக்கினான்.

விடியற் காலத்தில் பாண்டியன் வழக்கம்போல எழுந்து, ஸ்நானம் பூஜை முதலியவற்றை முடித்து விட்டு, உலாவுவதுபோல, காவலர் அறியாமலே, தெற்கு மதிலை அணுகி, அங்குள்ள சிலைகளைக் கவனித்துக் கொண்டு செல்லும்போது, முனிவர் சொன்னபடியே ஒரு அநுமன் சிலையிருக்கக் கண்டான். அதின் தோள்கள் தேய்வடைந்திருந்ததைக் காணவும், முனிவர் சொன்னது உண்மையாய் இருக்கவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டான் உடனே அவ்விடம் விட்டு அரண்மனைக்குத் திரும்பி, ஒரு சேவகனை அனுப்பி குலசேகரனை அழைப்பித்தான்.

குலசேகன் வரவும், அரசன் அவனைத் தனியிடம் கொண்டு சென்று, இரவில் நடந்த காரியத்தைத் தெரிவித்து

உடனே இரகசியமாய்ச் சில பந்தங்கள் சம்பாதித்துக் கொண்டு வரும்படி அனுப்பினான். எல்லாம் ஆயத்தமானவுடனே, அங்கிருந்த சேவகரை வெளியே அனுப்பிவிட்டு, இருவரும் சிலையை அணுகினார்கள். நெடுநாளாக அது அசைக்கப்படாதிருந்ததால் அதைத் தரையில் அழுந்தச் செய்தல் கஷ்டமாகவே யிருந்தது. அதை இருவருமாகப் பலங்கொண்டு அழுந்தச் செய்யவும், முனிவர் சொன்னபடியே ஒரு வாசல் காணப்பட்டது. படிகளின் வழியாக இறங்கி, பந்தங்களைப் பிடித்துக்கொண்டு, சித்தர் தெரிவித்த அடையாளங்களின்படியே சென்று, கிணற்றில் இறங்கி, குகையையும் கண்டு, அதில் பிரவேசித்தார்கள். அக்குகையில் வெண் மணல் பரப்பியிருந்தது. அதன் வழியாக நடந்து இருபது முழுதூரம் செல்லவும் ஒரு பழைய செப்புக்கதவு காணப்பட்டது. தாங்கள் வரும் வழியில் எடுத்துக்கொண்டு வந்த வெண்கலத் திறவுகோலால் அந்தக் கதவைத் திறந்து, நாற்சதுரமான ஒரு அறையில் பிரவேசித்தார்கள்.

அவ்வறையின் மத்தியில், ஒவ்வொன்று இரண்டு முழ நீளமும், ஒரு முழக் கனதியுமான பத்துப் பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகள் பலமான மரப் பலகைகளால் செய்யப்பட்டு, தாமிரத் தகட்டால் பொதியப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றை இருவரும் கூடித் தூக்கித் தரையில் வைத்துப் பரிசோதித்தார்கள். அப் பெட்டியானது ஒரு வெள்ளிச் சங்கிலியால் நாற்புறமும் பலமாய்க் கட்டப்பட்டிருந்தது. சங்கிலியை முடியிட்டிருந்த இடத்தில் உருக்கிவார்த்திருந்த ஈயத்தின்மேல், மங்கிப் போயிருந்த ஒரு முத்திரையைக் கண்டார்கள். அதைச் சற்றுநேரம் கவனித்தபின் பாண்டியன் "ஆ! என்ன ஆச்சரியம்! வடிம்பலம்ப நின்ற பாண்டியன் பேர் இதில் பழந்தமிழ் எழுத்தில் பதிந்திருக்கிறதே! அவன் போய் எத்தனை ஆயிரம் வருடங்கள் ஆயின! கண்ணால் கண்டாலன்றி யார் இதை நம்பக்கூடும்! இவ்வளவு காலமாக இந்தப் பொருளை பக்தியோடு காத்து வந்த என் முன்னோரின் பெருந்தகைமையை நான் என்னென்பேன்! அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நான் என்ன மகா நீசன் என்றே

சொல்லவேண்டும். இந்தப் பொருள் இருப்பது எனக்குத் தெரிந்திருந்தால், நான் தப்பாமல் இதை விற்று வீணுகச் செலவிட்டிருப்பேன. உலகஜூசை நீங்கிய பின் நான் இதைக் காணக்கிடைத்தது கடவுளுடைய கிருபையே" என்றான்.

அப்புறம் அரசன் குலசேகரனைப் பார்த்து, "இந்தப் பெட்டிகள் ஒரு காலத்திலும் திறக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது இவைகளை முனிவருக்கு அனுப்ப வேண்டிய காலம் வந்து விட்டது. இவற்றைத் திறந்து பார்த்து மறுபடியும் முத்திரித்து அனுப்புவது கிரமம். ஆதலால் பெட்டிகளெல்லாவற்றையும் திற" என்றான். அப்படியே குலசேகரன் தன் ஈட்டியால் முத்திரையை உடைத்து, கட்டுகளை அவிழ்த்து, பெட்டிகளைத் திறந்து வைத்தான்.

பெட்டிகளின் உட்புறம் பதனிடப்பட்ட தோலால் மறைக்கப்பட்டிருந்தது. தோலை நீக்கிப் பார்க்க, உள்ளே பஞ்சில் பொதியப்பட்டிருந்த அநேக உண்டைகள் தெரிந்தன. பஞ்சை அகற்றவும் அதனுள்ளிருந்த இரத்தினங்கள் பிரகாசிக்க ஆரம்பித்தன. பெரிய உண்டைகள் இருந்த ஒரு பெட்டியை முக்கியமாய்க் கவனித்தார்கள். அதில் ஒரு பூசுணிக்காயளவு பெரிய ஒரு வைரமிருந்தது. அதனின்று உண்டான இளநீல ஒளியால் அவ்வறை முழுவதும் பிரகாசமாயிற்று. அப்படியே பச்சையும், நீலமும், சிவப்பும், கறுப்பும், ஊதாவும், மஞ்சளுமான அநேக நிறங்களையுடைய உண்டைகள் சிறிதும் பெரிதுமாக அந்தப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்றாகிலும் ஒளி வீசாமலில்லை. அப்பெட்டிகளிலிருந்து அவைகள் பிரகாசித்தது, உலையில் உருக்கி எரிந்து கொண்டிருக்கும் செம்பொன்னின் ஒளியை நிகர்த்ததாயிருந்தது. இருவரும் வெகு நேரம் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

பாண்டியன் வாய்திறந்து "குலசேகரா! முனிவர் சொன்னது முற்றிலும் சத்தியமே. அநேக அபூர்வ வஸ்துக்களை என் கண்கள் கண்டிருக்கின்றன. ஆனால் இவை

களில் உள்ள ஒரு பிரிய மணியைப்போல் ஒளிவீசும் யாதொரு ரத்தினத்தையும் நான் இதுவரையிலும் கண்ட தில்லை. என் கிரீடத்திலுள்ள சில கற்கள் மாத்திரம் இவைகளின் வகையைச் சேர்ந்ததாயிருக்கலாம் என்று என்றுகிறேன். இவைகள் தற்கால உலகில் விளைவ தில்லை என்று அவர் சொன்னதும் நிஜமே. இவைகள் முற்றிலும் வேறு ஜாதியான மணிகளாகவே காணப்படு கின்றன. மனுமக்கள் இவற்றைப் பார்க்க அருகர் அல் லர் என்பதும் உண்மையே. உலகில் இந்த ரத்தினங்கள் வழங்குமாகில், அதினால் அளவிறந்த பாவமே விளையும். நாம் இவற்றை இருந்தபடியே வைத்துக்கட்டி முத்திரிப் போம்" என்றான். அப்படியே பெட்டிகளெல்லாவற்றை யும் திரும்பக் கட்டி சுந்தரபாண்டியனுடை மோதிரத் தால் முத்திரையிட்டார்கள்.

இருவரும் திரும்பி வெளியே வரவும், பாண்டியன், "குலசேகரா! இந்தப் பொருள் முனிவரிடம் போய்ச் சேரவேண்டும். இதைக் கொண்டு போவதற்கு நீயே தகுந்தவன். என் முன்னோர் இவ்வளவு காலமாய்க் காப் பாற்றி வைத்த பொருள், அதற்கு உடையவர் கையில் சென்று சேராமல், என் காலத்தில் பறிபோயிற்றானால், நான் மறுமையில் வாழ்வடையேன். ஆதலால் இன்று இரவில் நான் அனுப்பும் நாற்பது சேவகரோடு நீ இந்தப் பத்துப் பெட்டிகளையும் ஐந்து யானைகளின்மேல் ஏற்றிக் கொண்டுபோய் அகத்தியரிடம் சேர்த்துவிடு. பெட்டிகளில் என்ன இருக்கின்றன என்பதை ஒருவருக்கும் தெரிவிக்க வேண்டாம். திரளான ஜனங்கள் தங்கள் தட்டுமுட்டு களோடு சத்துருக்களுக்குப் பயந்து மதுரையை விட்டு ஓடிப்போய்க் கொண்டிருப்பதால், உங்களை ஒருவரும் கவ னிக்கார்கள். பொழுது படவும் புறப்பட ஆயத்தமாயிரு" என்றான்.

அதற்குக் குலசேகரன் "அரசனே! வரப்போகிற சண்டையில் நான் உமது பக்கத்தில் நின்று, மட்டில்லாமல் புகழப்படுகிற வடதேசத்து வீரரின் சௌரியத்தைப் பார்க்க வேண்டும் என்று வெகுவாய் ஆசித்திருந்தேன். இந்

தப் பொக்கிஷத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்க வேறு யாராகிலும் கிடைக்குமானால் நலமாயிருக்குமே" என்று வெகு விசனத்தோடு சொன்னான்.

பாண்டியன் அவனுக்குப் பிரதியுத்தரமாக, "குலசேகரா! இந்த யுத்தத்தில் நான் தப்புவேன் என்று எண்ணவில்லை. இதைக் கருதியே நான் எல்லாக் காரியத்தையும் ஒழுங்கு கொண்டு வருகிறேன். நீ என் அருகில் இருந்தால் நீயும் சாவது தவறாது. உன் உயிர் என் உயிரினும் அதிக விலை பெற்றது. நான் இறந்தால் என் மரணத்தை நினைந்து வருந்த தந்தைதாயில்லை, மக்களுமில்லை, மனமொத்த மனைவியுமில்லை. நீ இறந்தால், உன் தந்தையும் தாயும் சஞ்சலத்தோடு மரிப்பார்கள். உன் காதலி படும் துயரத்தை யார் கண்டு சகிக்கக்கூடும். ஆதலால் நீ என்னோடு அமர்க்களத்திற்கு வர நான் ஒரு காலத்திலும் அனுமதி தரமாட்டேன்.

மேலும், நீ செய்யப் போகிற காரியமும் இலகுவானதல்ல. கொதிகையைப் பற்றிய பல கதைகள் சொல்லப்படுவதால், பயமின்றி அங்கு சொல்லக் கூடியவர்கள் வெகு சிலரே. ஆகையால் நீ தான் அவ்விடத்திற்குப் போகவேண்டும். வேறு வார்த்தை வேண்டாம்" என்று சொல்லிப் போய்விட்டான்.

குலசேகரன் மிகுந்த விசாரத்தோடு, போய், பயணத்திற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்தான். ஐந்து யானைகளின்மேல் பெட்டிகளை ஏற்றிக்கொண்டு நாற்பதுபேர் சேவகர் சூழ அன்றிரவில் தெற்கே பயணமானான்.

புறப்படும் சமயத்தில், பாண்டியன் வந்து, அவனைத் தழுவிக்கொண்டு "குலசேகரா! நீ எனக்கு மெத்த அருமையானவன். இந்த யுத்தத்தில் நான் ஒருகால் வெற்றி கொண்டால், உனக்குச் செய்தி அனுப்புவேன். நீ பொதிகையில் ஆகவேண்டியவற்றை முடித்து விட்டு உன் விவாகத்திற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய். உன் கல்யாணத்தை நான் கூட இருந்து பார்க்கக் கூடாததற்காக

வருந்துகிறேன். உன் தந்தையையும், கீர்த்திவர்மனையும் நான் அன்பாய் விசாரித்ததாகச் சொல்லு. அகத்தியனை நான் வணங்கினதாகச் சொல்லு" என்று சொல்லி, தன் ஆபரணங்களில் சிலவற்றைக் கொடுத்து, வழி விட்டான்.

குலசேகரன் சாஷ்டாங்கமாக விழுந்து, "பாண்டியேசா! உம்மைக் குறித்துத் தீமையே யன்றி, நன்மையான யாதொன்றையும் நான் கேள்விபடாதிருந்தும், என் தந்தை சொன்ன ஒரு வார்த்தையி னிமித்தம் உம்மிடம் சேவகம் செய்தேன். உம்மை அறிந்த பின், உமது மேல் எனக்கு மிகுந்த பற்றுண்டாகிவிட்டது. உம்மை விட்டுப் பிரிய என்மனம் வருந்துகிறது. இனி உம்மைக் காண்பது சந்தேகம் எனக்கேட்டு நான் சஞ்சலமடைகிறேன். உமது கட்டளைக்குக் கீழடங்கியே போகிறேன்" என்று சொல்லி மிகுந்த துக்கத்தோடு புறப்பட்டுப் போனான்.

அவன் போனபின் பாண்டியன், "இவன் அபூர்வமான சற்குணம் அமைந்த இளைஞன். இவனுக்கு நம்மால் கூடிய நன்மையை உடனே செய்யவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு, குலசேகரனுக்கு அவனுடைய முன்னோர் இழந்துபோன சிற்றரசை தத்தம் செய்து கொடுத்ததாகப் பட்டயம் எழுதுவித்து, அஞ்சற்காரர் மூலமாக இடை நாட்டு மந்திரிக்கு அனுப்பி குலசேகரன் பொதிகையிலிருந்து பொன்னூருக்குத் திரும்பி வருவதை அறிந்து, எதிர் கொண்டழைத்து, சிற்றரச ஸ்தானத்தில் நியமிக்கவேண்டும் என்றும், பாண்டிய பொக்கிஷ சாலையிலிருந்து பத்து லக்ஷம் பொன் அவனுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

---

19. சுந்தரபாண்டியன் சுவர்க்கமடைதல்.

மதுரையிலிருந்து திரும்பிய தூதன், பாலாற்றைத் தாண்டவும், அவ்விடத்தில் பாளயம் இறங்கியிருந்த மாலிக்காபரைச் சந்தித்து, பாண்டிய மந்திரி விடுத்த நிருபத்தை அவனுக் களித்தான். சேனபதி அதை வாங்கிப் பார்த்து, அளவில்லாத கோபம் கொண்டவனய், "அப்படியாச்சுதா! இந்தப் பாண்டியப் பூச்சியை இதோ என் சுண்டுவிரலால் நசுக்கிவிடுகிறேன். என்னை யார் என்றெண்ணினன் அந்த மூடன்? பத்து நாளுக்குள் அவன் சிரசை வாங்கி டில்லிக் கனுப்பாவிட்டால் நான் என் மீசையை எடுத்து விடுகிறேன்" என்று சபதம் செய்து உடனே டேராக்க்களைப் பெயர்த்துக் கொண்டு தெற்கே புறப்படவேண்டும் என சேனை அனைத்திற்கும் கட்டளை அனுப்பினன்.

இந்தச் சேனசமுத்திரம் புரண்டு தென்னட்டின் மேல் வரும் செய்தியைக் கேள்விப்பட்ட சோழன், பீதியடைந்து, காணிக்கையோடு மாலிக்காபருக்கு எதிர் சென்று வணங்கினன். மூர்க்கனகிய அவ்வன்ணகன், சோழன் படைத்த காணிக்கையைப் பெற்றுக்கொண்டது மன்றி, அவனுடைய நாடு முழுவதையும் கொள்ளையிட்டு, வருஷா வருஷம் ஒரு கோடி பொன் தண்டம் கொடுக்க வேண்டும் என்று ஆஞ்ஞாபித்தான். சோழன் இந்த அவமானத்தைச் சகிக்கமாட்டாமல் வாளை ஊன்றி அதின்மேல் விழுந்து இறந்தான்.

பெற்ற வெற்றிகளினலும், கிடைத்த கொள்ளைப் பொருளின் திரளினலும் மட்டில்லாத மமதை கொண்டிருந்த மாலிக்காபர், காவேரிதாண்டித் தெற்கே வரவும், வேவுகாரர் எதிர்ப்பட்டு, வணங்கி "எதிரில்லாத சிங்கமே! தமிழ் வேந்தன் செய்த சூழ்ச்சியைக் கேட்டீரா? பாண்டியநாடு முழுவதையும் நெருப்பிட்டழித்துக் கரிக்காடா

க்கிவிட்டான். குளங்களையும் கிணறுகளையும் தூர்த்துப் போட்டான். பச்சை இலை யென்பதைக் காண்பது அரிதா யிருக்கிறது. குடிகளெல்லாரும் மலைகளுக்கும் பறம்பு களுக்கும் ஓடிப் போய்விட்டார்கள்" என்று அறிவித்தார் கள்.

இந்தச் செய்திகேட்டு மாலிக்காபர் இன்னமும் அதிக மாகக் கோபித்து, இரவு பகலாகப் பிரயாணம் பண்ணி மது ரையை அடையவேண்டுமெனத் தன் தளகர்த்தருக்குத் தாக்கீது கொடுத்தான். வழியிலே தண்ணீரில்லாமை யாலும், கொடிய வெயிலினாலும், மிருக ஜீவன்களுக்கு இரை கிடைக்காமையாலும், இரவில் பாண்டியன் அனுப் பிய குதிரைவீரர் செய்த துன்பத்தாலும் சேனைகள் வெகு பாடடைந்தன.

மாலிக்காபர் காவேரி தாண்டினான் என்று கேள்விப் படவும், பாண்டியன் தன் சேனைகளை நடத்திக்கொண்டு மதுரையைவிட்டுப் புறப்பட்டான். தான் குறித்த இடத் திற்கு வந்தவுடனே, காலாட்களையும், வில்வீரரையும், உத விப் படைகளையும், அவ்விடத்தில் இருக்கும்படி செய்து விட்டு, ஆயிரம் குதிரை வீரரை முன்னே அனுப்பி, சத்துரு சேனையைச் சந்தித்து, யுத்தம் செய்வதுபோல பாவனை செய்து, சிறிது நேரத்தில் முறிந்தோடுவதாகக் காண்பித்துத் திரும்பி, தான் நியமித்திருந்த இடத்திற்கு வரவேண்டுமெனக் கட்டளையிட்டனுப்பினான்.

இந்தக் குதிரைப் படையைக் காணவும், வீரபாண்டி யன் தெரிவித்திருந்த குறிப்பைக்கொண்டு, தமிழ்ச் சேனை யின் பெரும் பாகம் இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று மாலிக்காபர் எண்ணி, அலக்ஷியமாகவே சண்டை கொடுத்தான். பாண்டியன் சேனை கால்நாழிகை கூட நின்று சண்டை செய்யாமல் பயந்தோடுவதுபோல தெற் கே திரும்பவும், மாலிக்காபர் சந்தோஷித்து, "இந்தப் படையைக் கொண்டுதான் சுந்தரபாண்டியன் என்னோடு அமர்புரியத் துணிந்தானோ? வெகு அழகாயிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டு, முப்பதாயிரம் குதிரை வீரரை

அனுப்பி, ஓடிப்போகும் படையைத் தொடர்ந்துபோய், ஒருவனையும் தப்பவிடாமல் கொல்லவேண்டும் என்று உத்தரவு செய்தான். அப்படியே வடக்கத்தியப்படை மகா வேகமாக அச்சிறிய சேனையைத் துரத்திக்கொண்டு தெற்கே சென்றது.

ஒரு குன்றின்மேல் நின்று, தான் எதிர்பார்த்திருந்த படியே சத்துருவின் சேனை தான் குறித்த இடத்திற்கு வருவதைப் பாண்டியன் கண்டு, "நான் உயிர்விடுமுன் இந்த மிலேச்சனுடைய கர்வத்தைக் குலைப்பதற்கு ஒரு சமயம் வாய்த்தது" என்று களிப்படைந்து, கீழே இறங்கி வந்து பேரிகைகளை முழக்கி, படைகளைக் குறிக்கப்பட்ட இடங்களில் சித்தமாக வைத்தான். காலாட்களில் பதினாயிரம் பேர் குழிகளில் மறைந்திருந்தார்கள். வில் வீரர் அங்கங்கேயுள்ள மேடுகளில் நின்றார்கள். யானைப் படை நாலு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, தூரத்தில் பறம்புகளுக்கிடையிலுள்ள பள்ளத்தாக்குகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மீதியான குதிரை வீரரும் காலாட்களும் உதவிச் சேனையாகப் பாசறையிலிருந்தார்கள்.

வடக்கிலிருந்து ஓடிவரும் குதிரை வீரர் பாசறை சென்று சற்று நேரம் இளைப்பாறவும், மீதியாயிருந்த குதிரை வீரர் காலாட்களுக்கு உதவியாக வரவும் வேண்டும் என்று பாண்டியன் திட்டம் செய்திருந்தான்.

சேனைகள் கிட்டினவுடனே பாண்டியன் தன் படைகளுக்கு ஒரு செய்தி அனுப்பினான். "பாண்டிய வீரரே! சத்துருக்கள் இதோ வந்துவிட்டார்கள். ஜெயமோ அபஜெயமோ இந்த இடத்திலேயே கண்டுவிட வேண்டும். புறங்காட்டி இக்களத்தை விட்டு நாம் நீங்கப் போவதில்லை. பின்னுள்ளோர் நம்மைப் போற்றத்தக்கதாக நடந்து கொள்ளுங்கள்" என்று விளம்பரம் செய்தவுடனே, சங்கங்கள் பூரிக்க, மகா ஆரவாரத்தோடு எல்லோரும் சண்டைக்குச் சித்தமானார்கள்.

தங்கள் எதிரே காலாட்கள் மறைந்திருப்பது தெரியாதபடியால், வடக்கத்திப் படைகள் பாய்ந்து வரும்

போது, திடீரென ஆர்ப்பரித்துக்கொண்டு, வேலாயுதங்களைக் கையில் தாங்கி எழுந்து வழிமறித்த பிரளய சேனையைக்கண்டு கலக்கமுற்றார்கள். கலக்கம் தெளியுமுன் வேல்களால் குத்துண்டு அவர்களில் அநேக ஆயிரம் பேர் தரையில் உருண்டார்கள். குதிரைகள் வெருண்டு தாறுமாறாக ஓடின. அரை நாழிகை நேரத்திற்குள்ளாக எதிரியின் சேனையில் இருபதினாயிரம் பேர் விழுந்து விட்டார்கள். பின்னே இருந்து வந்த வீரர், இந்த ஆபத்தைக் கண்டு, உண்மையை அறியாமல், பயங்கொண்டு முதுகு காட்டி வடக்கே திரும்பினார்கள். உடனே பாண்டியன் தன் குதிரைப்படையை அவர்கள் மீது ஏவினான். வில் வீரர் சரமாரி பொழிந்தார்கள். இவ்வாறாக சத்துருக்களுடைய படையில் பெருத்த சங்காரம் உண்டாயிற்று. பாண்டிய சேனையில் உண்டான சேதம் அற்பமே.

பின்னேயிருந்து சாவகாசமாக வந்துகொண்டிருந்த மாலிக்காபருக்கு இச்செய்தி இடிவிழுந்தது போலிருந்தது. அவன் வெகு வேகமாய் வந்து, நடந்த ஆபத்தைப் பார்த்து விசனமுற்று, சேனைகளைப் பலவிதமாக வகுத்துப் போராடியும் பாண்டியனுடைய படையைப் பின்வாங்கச் செய்வது கூடியதாயில்லை.

“குதிரைச் சேனையைக்கொண்டு பாண்டியனை வெல்லுவது முடியாது. அவன் தன் படைகளை நடத்துகிற விதம் மகா விசேஷமாயிருக்கிறது. இவ்வித தளகர்த்தனை நான் இன்றுவரையும் கண்டதில்லை. இந்தப்புறம் புகளைச் சுற்றிவந்து பின் புறத்தில் தாக்குவோம் என்றால், வெகுதூரம் செல்லவேண்டியதாக இருக்கிறதுமன்றி, வழியில் அவன் என்னென்ன தந்திரம் செய்து வைத்திருக்கிறானோ தெரியவில்லை. இதுவரையிலும் அநேக வீரரை இழந்துவிட்டோம். இனி ஜாக்கிரதையாய் யுத்தத்தை நடத்தவேண்டும்” என்று ஆலோசித்து, மாலீக்காபர், தன் குதிரை வீரரில் முப்பதினாயிரம் பேரைக் காலாட்களாக உபயோகப்படுத்தி எதிர்த்தான். எதிர்க்கவும், சரீர பலத்தில் தென் நாட்டார் வட தேசத்தாருக்கு இணையாக மாட்டார்கள் என்ற உண்மை உடனே விளங்கிற்று.

நெருங்கிக் கை கலந்து சண்டை செய்யுமிடத்தில், பாண்டிய காலாட்கள் எதிர்ச் சேனைக்கு ஆற்ருமல் குவியல் குவியலாகப் பட்டு விழுந்தார்கள்.

இவ்வாறு வெற்றி எதிர்ப்பக்ஷம் திரும்பியதைப் பாண்டியன் அறிந்து, தன் சேனைகளுக்கு உதவி செய்யவேண்டி, ஒளித்து வைக்கப்பட்டிருந்த யானைப்படையை நானு பிரிவுகளாக்கி, எதிர்ச் சேனையின் பின்னணியத்தின்மேல் ஏவினன். வெறிகொண்ட யானைகள் வீறிட்டோடி, இருப் புலக்கைகளைத் துதிக்கைகளில் பற்றி வீசிக்கொண்டு, எதிர்ப்பட்ட எல்லாவற்றையும் அதம் செய்தன. அவற்றின்மேல் ஏறி நின்ற வில் வீரர் சரமாரி பொழிந்தார்கள். காயம்பட்ட கஜங்கள் கட்டுக்கடங்காமல் ஓடி, அந்தச் சேனு சமுத்திரத்தைக் கலக்கின. எதிர் பார்த்திராத இந்த ஆபத்தைக்கண்ட மாலிக்காபர், வில் வீரரைக்கொண்டு, யானைகளை வெருட்டி ஒடச்செய்து, தன் சேனைகளைக் காப்பாற்றப் பட்டபாடு மிகுதி.

மகா சமுத்திரம்போல புரண்டுவந்த அக் கூட்டம், உடைந்து சிதறி நின்றதைக் கண்ட பாண்டியன் தன் சேனுபதியைப் பார்த்து, "செண்பகவர்மா! நம்மிடம் பதினுயிரம் குதிரை வீரர் இருந்தால், இந்தப் படை முழுவதையும் இன்று பொழுதுபடுமுன் புறம் கண்டுவிடலாம். இச்சமயத்தில் சத்துருக்களுடைய பாசறையையும், யுத்த தளவாடங்களையும், அழித்து அவர்களைத் தமிழ் நாட்டின் மண்ணுக்கு இரையாக்கிவிடுவது எவ்வளவு சுலபம்! இன்று காலையில் ஆயுதம் எடுத்த நம் படை வீரரில் பாதிப்பேர் விண்ணுலகடைந்து விட்டார்கள். அநேகர் காயம்பட்டு விழுந்து விட்டார்கள். அஸ்தமனம் வரைக்கும் நம்முடைய சேனையின் நிலைமையை எதிராளி அறியாதபடி செய்துவிட்டால் அதுவே போதுமானது. அதற்குமேல் எதையும் எதிர்பார்க்க நமக்குப் பிராப்தி இல்லை" என்ருன். அப்படியே அன்று சாயந்தரம் வரையும் வெற்றி தோல்வியின்றி யுத்தம் நடந்து கொண்டேயிருந்தது. பாண்டியன் அனுப்பிய ஐஞ்ஞூறு யானை

களும் அநேக ஆயிரம் பேரை அதம் செய்து விழுந்து மடிந்தன.

உக்கிரம் யுத்தத்தில் முன்னின்று போராடுகிற பாண்டியனை, தூரத்தில் குதிரை மீதிருந்த வீரபாண்டியன் காணவும் அடங்காத வெகுளியோடு, "இதோ! உன் சிரசை என் வாளுக்கு இரையாக்கி விடுகிறேன் பார்" என்று சொல்லிக்கொண்டு ஓடிவந்தான். அவன் கூவியதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த வேந்தன், அவனைக் குளிர்ந்த பார்வையோடு நோக்கி, அவன் சமீபத்தில் வரவும், தன் பட்டயத்தால், அவன் ஓங்கிய பட்டயத்தை அலக்ஷியமாகவே அடித்து, அது வெகு தூரத்தில் போய்விழும்படி செய்தான். பட்டயமிழந்த வீரபாண்டியன் அதிக மூர்க்கம் கொண்டு, ஈட்டியை ஓங்கிப் பாண்டியன்மேல் பாய்ந்தான். அரசனோ வீரனுடைய சமர்த்தை நன்றாய் அறிந்தவனாதலால், அவன் ஓங்கிய கரத்தைத் தன் இடக்கையால் பிடித்து நசுக்க, ஈட்டி தரையில் விழுந்துபோயிற்று. இனி ஒன்றும் செய்வதற்கில்லாத வீரன், கோபத்தால் கண்ணீர் வடித்துக்கொண்டு "ஏ பாதகா! தந்தையைக் கொன்றாய், யமுனையையும் கொன்றாய், என் என்னைத் தப்பவிடுகிறாய்? என்னையும் கொன்றுவிடு" என்று உறக்கக் கூவினான். பாண்டியன் அதைக் கேட்டு "வீரா! நான் உனக்குப் பெரிய தீமையைச் செய்தது உண்மையே. அப்படியிருந்தும் நீ இந்த மிலேச்சனை நாட்டின்மேல் வரச்செய்த தோஷம் நான் செய்ததினும் மிகவும் பெரியதென்பதை அறிந்துகொள். நீ சாகுமளவும் இது உன் மனதை வாதிக்கும். போய்விடு. இதோ மெய்க்காவலர் ஓடி வருகிறார்கள். உன்னைக் கண்டால் தப்பவிடார்கள்" என்று சொல்லிவிட்டு அப்புறம் சென்றான். வீரபாண்டியனும் குதிரையை ஓட்டிக்கொண்டு திரும்பிப் போனான்.

அந்தி நேரத்தில் மாலிக்காபர் தானே படைவீரர் சூழப் போர்முனையை அடைந்தான். குதிரை மீதிருந்தபடியே, தன் சேனையின் எல்லாப் பக்கங்களிலும் சஞ்சரித்துக்கொண்டிருந்தான் பஞ்சவன். அன்று அவன் ஏறிய

குதிரைகளில் ஐந்து குதிரைகள் காயம்பட்டுச் செத்தன. தேகத்தில் பட்ட காயங்களினால் சேசாதிபாதம் செவே ரென்று விளங்க, பயம் என்பதை அறியாதவனாய், இவன் கண்ணனோ, அபிமன்னனோ எனக் கண்டோர் ஆச்சரியப் படுமாறு போராடிக் கொண்டிருந்த பாண்டியனை, மாலிக் காபர் கண்டு, "பாண்டியனை உயிரோடு பிடிக்கிறவனுக்கு பத்து லக்ஷம் பொன்" என்று பறையறைவித்தான். அதைக் கேட்டு அநேக வீரர் வந்து பாண்டியனை நெருங்கி னார்கள்.

மெய் காவலர் எல்லாரும் அதற்கு முன்னதாகவே சங்காரமடைந்து விட்டார்கள். கங்குல் மயங்கும் வேளை யில், பாண்டியனுடைய படைகள் பிரிந்து சிறிய கூட்டங் களாக நின்று போர் புரிய நேரிட்டது. சுந்தரபாண்டியனை அகஸ்மாத்தாய்ச் சத்துருக்கள் வந்து சூழ்ந்து கொண்டார் கள். அவன் ஏறியிருந்த குதிரை குத்துண்டு விழுந்து விட்டது. தரையில் குதித்த பாண்டியன், வாள்கொண்டு வீசித் தன் அருகில் ஒருவரும் அணுகாதவண்ணம் வெகு நேரமளவும் தடுத்துக்கொண்டிருந்தான். அவனைச் சூழ் ந்து நெருங்கிய வீரரில் அநேகர், யமபுரம் கண்டார்கள். என்றாலும் மேலும் மேலும் அநேகர் வந்து கூடியதால் அவன் தப்பித்துப் போகும் மார்க்கம் காணவில்லை.

இவ்வாறு பாண்டியன் அமர் புரியும் வேளையில், அவ னுடைய தலைச் சீராவின் அடையாளத்தைத் தூரத்திலி ருந்து கண்ட அவன் தம்பிமாரில் ஒருவன், வாயு வேகமாக ஓடி வந்தான். பீமசேனன் போன்ற ரூப லக்ஷணங்கள் கொண்ட அவனுக்கெதிரில் நிற்க யாதொருவராலும் கூட வில்லை. நிமிஷ நேரத்தில், பெருங்காற்றின் வாய்ப்பட்ட சணற்புலம்போல அவ்விடம் வெளியாயிற்று.

தன் முன்னே நிற்கும் இளையோனைப் பார்த்து பாண் டியன் விசனமடைந்து "தம்பி! நம்மில் மூவர் மத்திபா னத்திற்கு முன்னதாகவே இறந்து விட்டார்கள். நானும் பிழைக்கமாட்டேன். இந்த வம்சத்தை நிலைநாட்ட நீ ஒரு வனாவது இருக்கக்கூடாதா? உடனே தென்பாண்டிக்குப்

போ. ஆகவேண்டிய காரியத்திற்குச் சத்திய சேனனிடம் ஆலோசனை செய்துகொள்" என்றான். அதற்கு இளையோன் "நானு இராஜ்யம் ஆளவேண்டும்! இந்த வமிசம் இத்தனை ஆயிரம் வருடம் ஆண்டது போதாதா? நீங்கள் நாலுபேரும் போகிறபோது நான் ஒருவன் தரித்திருப்பதெப்படி? இந்தப் போர்க்களம் எனக்கு வெகு ஆனந்தமாயிருக்கிறது. சாவதற்கு இதைப்போல வேறொரு நல்ல சமயம் வாய்க்காது" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே எதிர்ச் சேனையிலிருந்து பாய்ந்த ஒரு வேல் அவன் நெஞ்சில் பட்டுப் பதிய, அவன் இடிமுழக்கம்போல் நகைத்துக்கொண்டு, "பாண்டியா! இதுவே சரி, நான் முன் சென்று காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி விழுந்திறந்தான். பாண்டியன் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஒரு தலையாரியை அழைத்துத் தன் தம்பியின் உடலை எடுத்துக்கொண்டு போகும்படி உத்தரவுசெய்தான்.

பொழுதுபட்டு வெகு நேரம் வரையிலும் யுத்தம் ஓயவில்லை. அன்று உபய பக்ஷத்திலுமுள்ள மகாவீரர்கள் நடப்பித்த அரிய செயல்களை வருணிக்கமுடியாது. பாண்டியன் நின்ற விடத்தில் பிணங்கள் மலைபோல் குவிந்தன. அவனுடைய கண்களில் ஒன்று போய்விட்டது. இடது கை ஒடிந்து தொங்கிற்று. உடலில் காயமடையாத இடமேயில்லை. அந்த நிலைமையிலும் கூட யாதொருவரும் அவனண்டை நெருங்கக் கூடாதபடி அவன் பயின்றிருந்த அரிய வாள்வித்தை அவனைக் காத்தது.

கடைசியாகப் புத்தி மயங்கி, நிலை தவறித் தரையில் சாய்ந்த காலத்திலும், அவனுடைய வலக்கரம் வாளைப் பிடித்தபடியே இருந்தது. உயிர் நீங்கும் நேரத்தில், கண் விழித்துப் புன்னகை செய்து "மாதவி!" என்று சொல்லி உடலை நீத்தான் சுந்தரபாண்டியன்.

காலாட்களில் இரண்டாயிரம் பேரும், குதிரை வீரரில் ஆயிரம் பேரும் மாத்திரம் பாண்டிய சேனையில் மீந்திருந்தார்கள். சேனாபதிகளிலும், மெய்காவலரிலும் ஒருவரும் தப்பவில்லை. எதிரியின் சேனையில் நாற்பதாயிரம்

பேர் உயிர் துறந்தார்கள். காயப்பட்டவர்களுக்கும், மாண்ட குதிரைகளுக்கும், அழிந்த தளவாடங்களுக்கும் கணக்கில்லை. முன்னிருட்கால மாதலால் சண்டையின் முடிவு என்ன என்று கண்டு கொள்ளக்கூடவில்லை. அன்றிரவில் மாலிக்காபர் வீரபாண்டியனை வெகுவாய்த் தூஷித்தான். பாண்டிய சேனையைப்பற்றிய உண்மையை அவன் தெரிவிக்கவில்லையென்றும், மாண்டுபோன போர் வீரருக்கும், மற்ற நஷ்டங்களுக்கும் அவனே ஈடு செலுத்தவேண்டும் என்றும் கடுகடுத்து மொழிந்தான். பாண்டியன் இறந்ததும், அவனுடைய சேனை அழிந்து போனதும் தெரியாதபடியால், மறுநாளில் இன்னமும் என்னமோசம் நேரிடப் போகிறதோ என்ற பயத்தை யுடையவனாய், அவன் பல யோசனைகளில் ஆழ்ந்திருந்தான். வடக்கேயிருந்து வெகு உற்சாகத்தோடு வந்த அவனுக்கு மிகுந்த சோர்புண்டாகி விட்டது. அவனுடைய படைத்தலைவரும் அப்படியே கலங்கியிருந்தார்கள்.

காயப்பட்டு விழுந்த கிடந்த வீரர் பெருமூச்செறிவதும், புலம்புவதும், ஜன்னி கொண்டவர்கள் பிதற்றுவதும் அடிபட்டு விழுந்த குதிரைகள் கதறுவதும், இவற்றினிடையில் நாய்களும் நரிகளும் புகுந்து ஊளையிடுவதுமாக அந்த யுத்தகளம் மகா பயங்கரமாயிருந்தது.

அர்த்தராவில், காயாஷம் தரித்த முதியவர் ஒருவர் ஒரு தீவட்டியைக் கையில் பிடித்துக்கொண்டு சில போர் வீரர் பின்தொடர அப்போர்க்களத்தில் பிரவேசித்து நடந்தார். சிறிது நேரம் தேடித் திரிந்த பின், அநேக பிணங்களுக்கு மத்தியில் கிடந்த பாண்டியனுடைய சரீரத்தைக் கண்டார். காணவும் அவ்வுடலைக் கட்டிக்கொண்டு, கரைகாணாத் துயரத்திலாழ்ந்து "பாண்டியா! ஐயோ! போயினையோ! என் கண் உன்னை இந்தக் கோலத்திலா காணவேண்டும். என்னைக் கண்டு மகிழ்ந்த கண்களோ இவை! என்னைப்பார்த்துச் சிரித்த வாயோ இது! என்னைத் தழுவி அணைத்த கைகளோ இவை! என் வார்த்தையைக் கேட்டாயில்லையே. ஊழ்வினை யாரைவிட்டது? நீ எத்தனை தோஷத்தைச் செய்தாலும், உன்னோடு பழகினவர்களில்

யார் உன்னை வெறுக்கக்கூடும்?" என்று புலம்பினார். அவர் யாரென்றால், பழைய மந்திரியாகிய சத்தியசேனரே அவர்.

பாண்டியனுடைய உடலை எடுத்து ஒரு சிவிகையிலே ற்றிச் சுமந்துகொண்டு வேகமாய்ப் பட்டணத்திற்குச் சென் றார்கள். அவர்கள் மதுரை சேருமுன்னதாகவே பாண்டி யன் இறந்துபோன செய்தி பரம்பி விட்டதால், அங்குள்ள பெரியோர் எல்லாரும் பெருங்கூட்டமாக ஆஸ்தான மண் டபத்தில் வந்து கூடியிருந்தார்கள். பாண்டியனுடைய சரீ ரம் வரவும் அவர்கள் யாவரும் அதைச் சமீபித்து, கண் ணீர் சிந்திப் புலம்பி, அதை வணங்கினார்கள். பட்டணத் திலிருந்த ஜனங்களெல்லாரும் அரண்மனை வாசல்களில் வந்து கூடி கடலொலிபோல் இரைந்து அழுதார்கள்.

எல்லாரும் பாண்டியனைப் பார்த்தபின், அவனை அந்தப் புரத்திற்கு எடுத்துக்கொண்டு போய் ஒரு உயர்ந்த பீடத் தின்மேல கிடத்தினார்கள். ஆயிரத்தொருவரான இராஜ ஸ்திரீகள் அந்தச் சரீரத்தைக் கட்டிக்கொண்டு புலம்பினார் கள். அரச பத்தினிகளின் விருப்பப்படியே சரமச் சடங்கு களை அந்தப்புரத்தின் மத்தியிலுள்ள சிங்காரவனத்தில் நடத்தத் தீர்மானித்தார்கள். அப்படியே, அவ்விடத்தை வெளியாக்கி, அளவில்லாத விறகுக் கட்டைகளைக்கொண்டு வந்து மலைபோல் அடுக்கி, அதின்மேல் சந்தனமரங்களையும் வாசனைச் சரக்குகளையும் பரப்பி, பதினாயிரம் குடம் எண் ணெய்யை வார்த்து அச்சிதை முழுவதையும் நனைத்தார் கள். அதின் உச்சியில் உண்டாக்கப்பட்ட சம பரப்பில் கம்பளங்களை விரித்து, அதின் மத்தியில் சத்தியசேனரு டைய உத்தரவின்படி, பாண்டிய சிம்மாசனத்தை வைத் தார்கள். அப்புறம் பிரேதத்தைப் பன்னீரில் குளிப்பாட்டி ஆடை ஆபரணாதிகளை அதற்கணிந்து, கிரீடத்தைத் தலை யில் தரித்து, கையில் செங்கோலையும் கொடுத்து அப்படி யே தூக்கி அச் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தார்கள். விடியற்காலத்தில் உண்டான நிலவொளியும், அநேக ஆயி ரம் தீவட்டிகளின் வெளிச்சமும் இரவைப் பகலாக்க, உன் னதமான அச்சிதையின்மேல் சிம்மாசனமீதுட்கார்ந்திரு ந்த அவ்வுடலின் மாட்சிமையை வருணிக்கமுடியாது.

பட்டமகிஷி முதலாக ஆயிரத்தொரு மனைவியரும், ஸ்நானம் செய்து சிங்காரித்துக் கொண்டு தலைவிரித்தவர்களாக அச்சிதையை வலம் வந்து, அதின்மேல் ஏறிப் பாண்டியனைச் சூழ்ந்து நின்றார்கள். புரோகிதர்கள் செய்ய வேண்டிய சடங்குகளை நிறைவேற்ற, வேதகோஷமும், சுற்றி நின்ற திரளான ஜனங்களின் ரோதன கோஷமும் சிதையின்மேல் நின்ற ஸ்திரீகளில் கீத கோஷமும், பல வித வாத்தியங்களின் நாதகோஷமும், திசைகளைச் செவிடுபடச் செய்ய, அக்கினி கொளுத்தப்பட்டு, சுவாலை ஆகாசத்தை அளாவி எரிந்தது.

இவ்விதமாய்க் கடைசிப் பாண்டியன் தன் மனைவியர் எல்லாரோடும் கூடத் தகனமாகி மறு உலகத்தில் பிரவேசித்தான். பாண்டிய சிம்மாசனமும் அரச சின்னங்களும் அவனோடு அழிந்தன. சிதையில் பற்றிய அக்கினியானது மட்டில்லாமல் பரவி, பெரும்பாலும் மரத்தினால் கட்டப்பட்டதாயிருந்த பாண்டிய அரண்மனையைத் தாவிப் பிடித்துக் கொண்டது. அவிக்கக்கூடாதபடி மூன்று நாளளவும் தீ எரிந்து கொண்டேயிருந்தது. ஆயிரம் பாண்டியர் வாழ்ந்திருந்த அந்த மகிமையான அரண்மனையும், அதைச் சேர்ந்த அந்தப்புரமும், மண்டபங்களும் எரிந்து சாம்பலாயின.

விடியற்காலத்தில் வேவுகாரர் சென்று, மாலிக்காபரிடம் நடந்தவற்றைத் தெரிவித்தார்கள். பாண்டியன் மரித்ததை அவர்கள் சொல்லவும், அவன் சற்று வருத்தமே அடைந்து "மகா வீரன். யுத்த வித்தையைத் தெளிவாய்க் கற்றவன். இன்னமும் ஒருநாள் யுத்தம் செய்யப் போதுமான சேனை அவனிடம் இருந்திருக்கும் பக்ஷத்தில் என்னையும் புறம் கண்டிருப்பான். கோழையரான தென்தேசத்தாருக்குள்ளும் சுத்தவீரர் உண்டு என்று இப்போது கண்டேன். படைகளின் மிகுதியைக்கொண்டு நான் அடைந்த வெற்றியினால் எனக்கு என்ன கீர்த்தி?" "என்றான்.

அளவில்லாத கொள்ளைப் பொருளை அடையலாம் என்று எதிர்பார்த்திருந்த மாலிக்காபர் பட்டணத்தில் பிரவேசிக்கவும், ஏமாற்றமடைந்தான். மதுரை மாநகரமானது ஆபரணங்களைக் களைந்து, வெண்ணுடை பூண்டிருக்கும் ஒரு கைம்பெண்ணை யொத்திருந்தது. சுமார் மூன்று நாழிகை தூரம் சுற்றளவுள்ள பாண்டிய அரண்மனை எரிந்து கொண்டிருந்தது. பிணங்களின் நாற்றம் திசையெங்கும் வியாபித்தது. பட்டணத்திலுள்ள வீடுகளில் அநேகம் நாசமாக்கப்பட்டுக் கிடந்தன. தெருக்கள் வெறுமையாயிருந்தன. வீரபாண்டியன்மேல் பற்றுதலுள்ள சிலரும் "இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன, வட தேசத்தாரும் நம்மைப்போல் மனுஷர் தானே. நம்மைத் தின்றுபோடுவார்கள்?" என இறுமாந்திருந்த சிலரும், "எவனையும் நம்முடைய புத்தியால் ஏமாற்றி விடலாம்" என்று கர்வித்திருந்த சிலரும் தவிர, மற்ற எல்லாக் குடிகளும் மதுரையைவிட்டுப் போய்விட்டார்கள். தங்கியிருந்தவர்கள் பட்ட அவஸ்தையையும் அவமானத்தையும் வருணிக்கமுடியாது.

தான் அல்லாவுதீனுக்கு அனுப்புவதாகச் சொல்லியிருந்த நவரத்தினப் பொக்கிஷம் காணாமல் போய்விட்டதை அறியவும், வீரபாண்டியன் வெகு கலக்கம் அடைந்தான். அவனே அதை மறைத்து வைத்திருப்பதாகப் பாவித்து மாலிக்காபர் அவனை மகா கொடூரமாய் நடத்தினான். என்ன செய்தும் லாபம் பெற வழி காணாதபடியால், மாலிக்காபர் மதுரையிலுள்ள கோயில்களைக் கொள்ளையிட எண்ணி, கட்டடங்களையும் சிலைகளையும் உடைத்து, தளத்தைப் பேர்த்துத் தோண்டிப் பார்த்தும் பிரயோஜனம் அடையவில்லை. இராமேஸ்வரத்து ஆலயத்தில் வெகு திரவியம் இருப்பதாகக் கேள்விப்பட்டு, முப்பதாயிரம் சேவகரோடு அங்கு சென்றான். அவ்விடத்திலும் ஒன்றும் அகப்படாமல் திரும்பி வரும் வழியில், பாலை நிலக் குடிகளால் அவனுடைய சேனைகள் பட்ட கஷ்டம் மிகுதி. அடர்ந்த முட்காடுகளுக்குள் மறைந்திருந்த மறவர், திடீரென வெளிப்பட்டு, பட்டப்பகல் நேரத்தில் முதலாய், குதிரைகளையும் பொருட்களையும் கொள்ளையிட்

டுப் போனார்கள். அவர்களைத் தொடர்ந்து போவதோ கூடாததாயிருந்தது. இந்தச் சங்கடங்களோடு, சேனைகளில் நோயும் பரவ ஆரம்பித்தது. தென் தேசத்து உஷ்ணத்தைச் சகிக்க அவர்களுக்குக் கூடவில்லை. ஜுரமும் வயிற்று நோய்களும் கண்டு அநேகர் மாண்டார்கள்.

இவ்வாறு கர்வபங்கமடைந்த மாலிக்காபர், "இது மகா மோசகரமான தேசமாயிருக்கிறது. இந்த நாட்டில் நாம் தங்கினால் சேனைகளோடு அழிவது தவறாது. மலைகளிலும் காடுகளிலும் போய்த் தங்கியிருக்கும் பாண்டிய போர்ச் சேவகர், சாகப்போகிற மிருகத்தைத் தின்னும்படி காத்துக் கொண்டிருக்கும் கழுகுகளைப்போல நம்மை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கஷ்ட நஷ்டமடைந்தும் நமக்குக் கிடைத்த பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஆகையால் ஏதாவது ஒரு ஒழுங்கு செய்துவிட்டுத் திரும்பிப்போய் விடுவதே புத்தி" என்று தீர்மானித்தான்.

அல்லாவுதீனுடைய கட்டளையின் பிரகாரம் வீரபாண்டியனைப் பேருக்கு அரசனாக்கி, அவன் செலுத்தவேண்டிய கப்பத்தை நியமித்து, அவனுக்கு உதவியாகவும், அவனை மேல் விஜாரிப்பதற்காகவும், பதினாயிரம் குதிரை வீரரோடு ஒரு சேனாபதியை மதுரையில் தாணையமாக வைத்துவிட்டு மாலிக்காபர் வடக்கே திரும்பிப் போய்விட்டான். அல்லாவுதீனும் தான் எதிர் பார்த்திருந்த திரவியம் கிடைக்காதபடியாலும், தன் சேனை மிகுந்த நஷ்டமடைந்தபடியாலும் மிகவும் கோபித்தும், வீரபாண்டியனை நிந்தித்தானே தவிர வேறொன்றும் செய்யும் வழிகாணவில்லை.

அரச பதவியை அடைந்தும் சுகமில்லானாய், அநுதினமும் அல்லாவுதீனுடைய சேனாபதியால் உண்டான அவமானங்களுக்கு உள்ளாகி, இழிந்த ஜாதியான் என்றும், அரசயோக்கியதை இல்லாதவனென்றும் எல்லாரும் தூற்ற, உன்மத்தன்போலத் தன் வாணாளைப் போக்கினான் வீரபாண்டியன்.

சுந்தரபாண்டியனோடு பூர்வ பாண்டிய வம்சம் நசித்த பின், நாட்டில் கால மழை தவறிவிட்டது. ஆதிகாலம் தொட்டு அரசருக்கு வெகு செல்வத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த முத்துச் சிப்பிகளும், காயல் கரையினின்றும் நீங்கி, பல கடல்களுக்கும் சிதறிப் போனபடியால், வியாபாரமும் கெட்டது. ஸரை ஆள உரிமை உள்ள பாண்டியன் இல்லாதபடியால் குறும்பருடைய துன்ப மதிகரிக்க, குடிகள் துயரடைய நேரிட்டது.

வீரபாண்டியனுக்குப் பின்வந்த அவனுடைய வமிசத்தார் வெகு காலம் மதுரையில் அரசராயிருந்தும், வீரம், மானம், என்ற புருஷ லக்ஷணங்கள் இன்றி, வெளியிலிருந்து படையெடுத்து வந்த எல்லாருக்கும் தலை வணங்கி, பாண்டியர் என்ற வெறும்பேரை மாத்திரம் உடையவர்களாயிருந்து அழிந்தார்கள்.

இ. பி. 1559-ம் வருஷத்தில் விஸ்வநாத நாயக்கர் கர்த்தாவாக ஆள ஆரம்பிக்கும் வரைக்கும் பாண்டிய நாடு மிகுந்த சீர் கேடடைந்து வந்தது. அதற்கப்புறம் தேசம் ஒருவித கிரமத்திற்குட் பட்டாலும், பூர்வ பாண்டியர் காலத்து நல் வாழ்வு திரும்ப வரவில்லை.

---

20. பதி சேருதல்.

அகத்தியனுடைய பொருளைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கச் சென்ற குலசேகரன், அதிவேகமாகவே பிரயாணம் செய்து, அம்பாசமுத்திரமும் பாவநாசமும் கடந்து மலைய மலைச்சாரலைச் சேர்ந்தான். அங்கிருந்து குறுங்காடுகளையும், பெருங்காடுகளையும் ஊடறுத்து வெகு சங்கடத்தோடு வழி நடந்து, கடைசியில், இப்பூதலம் புகழும் பொதிகையின் அடிவாரத்தை அடைந்து, மகா புனிதஸ்தலமாகிய பொருநையாற்றின் மூலத்தைக் கண்டான்

அங்கு, நாற்றிசையும் எல்லையில்லாமல் பரந்து வியாபித்திருந்த இருண்ட சோலைகளின் தோற்றமும், அவைகளின் மத்தியில் அங்கங்கே மேலோங்கி நின்ற கருங்கற் குன்றங்களின் தோற்றமும், ஆகாயத்தைப் பிரதிவிம்பித்துக் காட்டிய தெண்ணீர்க் கயங்களில், இந்திர வில்லின் வருணங்களையெல்லாம் உடலில் கொண்டு பிரகாசிக்கும் அழகிய மச்சங்களின் தோற்றமும், மேகங்களுக்கூடே மறைந்து மறைந்து வெளிப்பட்டு, தன் இயற்கையான குணத்தை ஒளித்துக், கண்டோர் சீதச் சந்திரனே இவன் என மயங்குமாறு துலங்கிய சூரியனின் குளிர்ந்த தோற்றமும், வானவில்லோடு கலந்த தூய்யமேகங்கள் திடீர் திடீரென வந்து மூடுவதும், கலைந்து நீங்குவதுமான விசித்திரத் தோற்றமும், ஒருங்கு பொருந்தி, மக்களின் மனதைப் பரவயப்படுத்தும் தன்மையை யுடையனவாயிருந்தன. அந்த ஸ்தலத்திற்குமேலே, உன்னதமாய் நின்ற பொதிகையானது, சதா மேகஞ் சூழ்ந்த சிரசையுடைமையால், பெரிய வெண்பாகையைத் தலையில் தரித்து, பச்சைப் போர்வையால் உடலை மூடிக்கொண்டிருக்கும் ஒரு மகா புருஷனைப்போல் விளங்கிற்று. அன்றியும், நீர் வீழ்ச்சிகளின் நாதமும், அடர்ந்த விருக்ஷங்களுக்கூடாக வீசும் காற்றின் பெருந்தொனியும், நதியினின்றுண்டாகி, அதின் இருகரைகளிலும் மலர்ந்து சோபித்துக் கொண்டிருந்த பலவித புஷ்பத்திரளின் நறுமணத்தைக் கவர்ந்து நாருக்கியும் மந்த மாருதத்தின் இனிய ஒலியும், வெருட்டுவாரின்றி யதேச்சையாய்த் திரியும் மிருகத் தொகுதிகளின் குரலும், நிலத்திலும், நீரிலும், மரங்களின்மேலும், ஆகாசத்தினிடத்தும், உல்லாசமாய் உலாவிக் கொண்டிருக்கும் பல நிறப் பக்ஷிகளின் இசையும், மதுவுண்டுகளித்த வண்டினங்களின் ரீங்காரமும், சதா கேட்டுக்கொண்டிருந்தது, மேள தாளங்களோடு அநுதாத்த உதாத்த சுரங்களில் பாடப்பட்ட சாமவேத மந்திரங்களை ஒத்திருந்தது. அவ்விடத்தில் மனுஷர் சஞ்சரித்ததான குறிப்புகள் காணப்படவில்லை.

குலசேகரன் நிர்மானுஷியமான அந்த இடத்தில் போய்ச்சேரவும், பாண்டியன் சொல்லியிருந்த குறிப்பின்

படியே அங்கு விசாலமான ஒருபாறை இருக்கக்கண்டு, பொதிகளை இறக்கி, அப்பாறையின்மேல் வைத்து, யானைகளையும் பாகரையும் போக அனுப்பிவிட்டு, காவலாளரோடு முனிவர் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தான். ஏகாந்தமான அவ்வனத்தில் பலதொனிகளும் எதிர்த்தொனிகளும் கேட்டுக் கொண்டிருந்தபடியால், அங்கிருப்பது சேவகருக்கு அச்சமாகவே யிருந்தது. பொதிகைமலையைக் குறித்துத் தங்கள் பாலப் பருவமுதலே பல பயங்கரமான கதைகளை அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். சில அரசர் தங்கள் பரிவாரங்களோடு கும்பமுனியைத் தேடிப் போனதாகவும், அவர்களைப் பூமி விழுங்கிப் போட்டதாகவும், வேட்டையாட அந்த மலையின் அடிவாரத்திற்குச் சென்றவர்களில் ஒருவராகிலும் திரும்ப வந்ததில்லை யென்றும், மனுஷரைத் தின்னும் கொடிய ராக்ஷதர் அந்தக் காட்டில் உறைவதாகவும், பேய்களின் வஞ்சகத்தால் அநேகர் மயங்கி நாசமாகிப் போனதாகவும் மாயா தோற்றங்கள் அவ்விடத்தில் வெகுவாய் உண்டென்றும், இவ்வாறான கதைகளை நாட்டிலுள்ளோர் யாவரும் சொல்லக் கேள்விப்பட்டிருந்தார்கள்.

இவர்களுடைய முகங்களைக் கவனித்துக் கொண்டிருந்த குலசேகரனுக்கும் சந்தேகம் ஜனித்தது. "இந்த வனத்தில் இருப்பவர்கள் எப்படிப் பட்டவர்களோ, அவர்கள் இந்தத் திரவியத்தைக் கொள்ளையிடக் கருதுவரோ, நமது சேவகர் சொற்பப் பேராயும், பயம் மிகுந்தவர்களாயும் இருக்கின்றனரே, நம்மைவிட்டு இவர்கள் ஓடிப்போவதும் கூடியதே, இந்தப் பொருளைக் கஷ்டத்தோடு இவ்வளவு தூரம் கொண்டுவந்தும், கடைசியில் சோரம்போக விட்டுவிட்டால் அழியாத அவமானம் நேரிடுமே, வெகு நேரமாகியும், நம்மை இங்குவரச் சொன்ன முனிவரையும் காணோமே" எனப் பலவாறு சிந்தனை செய்தான். நேரம் செல்லச் செல்ல அவனுடைய சந்தேகம் உறுதிகொண்டது. ஆதலால் சுற்றிலும் பார்த்து, அவர்கள் நின்ற பாறையின் மறு பக்கத்தில் மிக ஆழமான ஒரு கயம் இருப்பதைக் கண்டு "இதன் ஓரமாகப் பெட்டி

குலசேகரன் அவ்விடம் விட்டகன்று பொன்னூருக்குப் பயணமானான். பாண்டியன் அன்றிரவில் மரித்து விடுவான் என்று முனிவர் சொன்னது அவனுக்கு மிகுந்த விசாரத்தை உண்டாக்கிற்று. அரசனிடத்தில் காணப் பட்ட நற்குணங்களும், அவன் பாராட்டிய சிநேகமும், தனக்கு அறிவிக்காமலே பொன்னூர் அரசைத் தனக்கு அளித்த அவனுடைய பெருந்தகைமையும், நினைக்க நினைக்க அவனுடைய உள்ளத்தை வருத்த ஆரம்பித்தன. பாண்டிய அரசாட்சி அழியப்போவதைக் கேட்டுச் சஞ்சலமடைந்தான். மாயை வசப்பட்ட மனுமக்கள் மட்டில்லாத வாஞ்சையோடு தேடும் அரச வாழ்க்கையின் உண்மையான இதாகிதங்களைத் தான்கண்டறிந்தவாறு சிந்தனைசெய்தான். சொற்பக் காலத்திற்கு முன் பொன்னூர் விட்டுப் புறப் படும்போது தனக்கிருந்த அறிவிற்கும் இப்போது தனக் கிருக்கும் அறிவிற்குமுள்ள பெரிய பேதத்தைக் கவனித்து வியப்படைந்தான். பொதிகை விட்டுப் புறப்பட்ட மறு நாளில் ஊருக்குச் சமீபமாய் வந்து சேர்ந்தான்.

அரசனுடைய சித்தத்தைச் சிரமேற்கொண்ட மத்தியதேச மாகாணாதிபதி, பொன்னூர் அரசுக்குச் சேர்ந்த இருநூறு கிராமத்தாருக்கும் குலசேகர பாண்டியன் பட்டமடையப்போவதை விளம்பரம் செய்து, சகல ஆயத்தங்களோடும் கூட பாண்டியனுடைய வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். தென்னவன் எழுதிய திருமுகத்தின் பிரகாரமே பத்து லக்ஷம் பொன் காரியார் வசம் ஒப்புவிக்கப்பட்டது. அரச சேவகர் கோட்டை வீட்டைச் சுற்றிலும் காவலாய் நின்றார்கள். பாண்டியனை எதிர் கொள்ளுவதற்கு வேண்டிய எல்லாம் அதி சீக்கிரமாகத்தயார் செய்யப்பட்டன.

குலசேகரன் கிட்டியதை அறியவும், மாகாண மந்திரி இரண்டு நாழிகை தூரம் எதிர் கொண்டு சென்று, முன்னொரு காலத்தில் பாண்டியர்கள் ஆண்ட மனைப்படை வீடு எனப்படும் பழம்பதி யண்டையில் அவனைச் சந்தித்து, மிகுந்த உபசாரத்துடனே அரச கட்டளையை அவனுக்குத் தெரிவித்து, பட்டயத்தையும் அளித்து, விலையுயர்

ந்த ஆடை ஆபரணங்களை அவனுக்கணிந்து, யானையின் மேல் ஏற்றி வாத்தியங்கள் முழங்க, இருநூறு கிராமத்துப் பிரதிநிதிகளும் சூழ்ந்துவர, குடைகளும் பரிவட்டங்களும் ஆகாசத்தில் துலங்க, கட்டியக்காரர் முன்னோட, நல்லோர் பல்லாசிகள் கூற, அழைத்துவந்து பொன்னூரில் சேர்த்தான்.

வீட்டெதிரில் வரவும், யானை விட்டிறங்கி அங்கு எதிர் பார்த்து நின்ற தந்தை தாயரை வணங்கி, அவர்களால் தழுவப்பட்டு, மற்றப் பெரியோரெல்லாரையும் வணங்கி ஆசீர்வதிக்கப்பட்டு, கம்பீரமாகத் தன்னில்லம் புக்கான் பொன்னூர் நாடன். மாகாணாதிபதி பொன்னூர் நாட்டின் விஸ்தீரணம், வரவு, தன்மை முதலியவற்றையெல்லாம் சவிஸ்தாரமாகப் பாண்டியனுக்குத் தெரிவித்துச் செலவு பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடத்திற்குத் திரும்பிப்போனான். பாண்டியன் இறந்த செய்தி எங்கும் பரவியிருந்தபடியால், வறியோருக்குத் தர்மம் செய்ததொன்றே தவிர வேறொரு விசேஷமும் அன்று நடக்கவில்லை.

மகனைத் திரும்பக் கண்டதால் பார்வதிகொண்ட மகிழ்ச்சி கரை காணாததாயிருந்தது. கால் நடையாய்ப் போனவன் யானைமீது வருவான் என்று காரியார் சொல்லியிருந்தது நிஜமாயிற்று. ஏவலாட்கள் எல்லாரும் தலைகால் தெரியாமல் களித்திருந்தார்கள். நீலனும் அக்கிராமத்திலுள்ள வாலிபரெல்லாரும் கோட்டை வீட்டை விட்டு அகலாமல், பாண்டியனுடைய உத்தரவை நடப்பிக்கச் சித்தமாய்க் காத்திருந்தார்கள்.

அன்றிரவில் காரியார் தம் மகனோடு சாவகாசமாய்ச் சம்பாஷிக்க வாய்த்தது. அவன் அடைந்த அனுபவங்களையெல்லாம் தெரிவித்தான். சுந்திரபாண்டியனுக்கு வந்த முடிவையும், பாண்டிய வம்சத்திற்கு வந்த அழிவையும் குறித்து இருவரும் மிகுந்த துக்கத்தோடு பேசிக்கொண்டிருந்தார்கள். பூர்வ பாண்டியரின் மகிமையைப் பற்றிக் காரியார் அநேக காரியங்களை ஞாபகம் செய்து வருத்

தப்பட்டார். அப்புறம், சிற்றரசனுக குலசேகரன் செய்ய வேண்டிய கடமைகளை அவனுக்கு உணர்த்தினர். கால தாமதமின்றி மறுநாளிலேயே அவன் தன் கடமைகளைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

பாண்டியன் இறந்ததையும், சத்துருக்கள் நாட்டில் நுழைந்து விட்டதையும், வட திசையிலுள்ள சனங்கள் யாவரும் வலசை வாங்கிச் சென்றதையும் கேள்விப்பட்ட குடிகள் மிகுந்த கலக்க மடைந்திருந்தார்கள். குலசேகர னுடைய பராக்கிரமத்தைக் குறித்து அவர்கள் வெகுவாய்க் கேள்விப்பட்டிருந்தபடியால் அவன் தங்களுக்கு அரசனு னது ஒருவாறு தைரியம் அளித்தது.

பாண்டியனும் காலதாமதமின்றித் தன் நாட்டைக் காப்பாற்ற வேண்டியவழி வகைகளைத் தேடினன். ஆயு தங்களையும் குதிரைகளையும் சவதரித்தான். கிராமங் களிலுள்ள வாலிப ரெல்லாரையும் சேர்த்து அவர்களு க்கு யுத்த வித்தையைக் கற்பித்தான். ஊர்களைச் சுற்றி லும் காவலாக விஸ்தாரமான கள்ளி வேலிகளை உண்டு பண்ணினன். ஒவ்வொரு கிராமத்திலும் ஜாமக்காரரை நியமித்து, சத்துருக்கள் வருவதாயிருந்தால், பறையறை ந்து மற்ற ஊர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். நாலு இடங்களில் சிறிய கோட்டை களைக்கட்டி, அவைகள் ஒவ்வொன்றிலும் நூறு சேவகரைத் தாணையமாக வைத்தான். தன் வீட்டைச் சூழ முன் இரு ந்து விழுந்துபோன மதிலைத் திரும்ப எடுப்பித்து, அகழ் களைத்தோண்டி, கோட்டை வாயில்களையும் கொத்தளங்களை யும் பலமாய்க் கட்டி, ஐஞ்ஞூறு சேவகர் வாசம் பண்ணத் தக்க வீடுகளையும் உண்டாக்கினன். அவசர காலத்திற்கு உதவும்படி ஏராளமான தானியத்தை வாங்கி கோட்டைக் குள் சேர்த்து வைத்தான். போர் வீரர் சூழ எப்போதும் தன் நாடெங்கும் திரிந்து, குடிகளுக்குத் தைரியம் சொல்லி வந்தான். இவ்வாறு ஜாக்கிரதையா யிருந்துகொண்டபடி யால் சொள்ளையாடும்படி கூட்டம் கூட்டமாய்ப் புறப் பட்டுவரும் குறும்பர் அவனுடைய நாட்டில் பிரவேசிக்க வழியில்லாமற் போயிற்று. பதினுயிரம் பேர் படை யெ

டுத்து வந்தாலும் பொன்னூர்ப் பாண்டியனை ஜெயிக்க முடியாது என்ற வார்த்தை சுற்றிலும் பிரபல்யமா யிற்று. அதனால் வெளியிடங்களிலிருந்து அநேக ஜனங் கள் அவனுடைய நாட்டில் வந்து குடியேறினார்கள்.

கோட்டை வீடு முன்போல அரண்மனையாயிற்று. காரியாருக்குப் பெரிய பாண்டியர் என்றும், குலசேகர னுக்குச் சின்னப் பாண்டியர் என்றும் பேர் வழங்க ஆரம் பித்தது. ஆறுமாசங்களுக்குள்ளாகவே பொன்னூர் நாடு பழைய நாளிலுள்ள சீரைத் திரும்ப அடையத் துவக் கிற்று.

21. மங்களம்.

இக்கதையை இதுகாறும் பொறுமையுடன் படித்துக் கொண்டு வரும் காதலர் ஒருகால் எம்மேற் சினந்து "இதென்ன கதை? பாண்டியனைப் பற்றியும் அவன் ஆண் டழிந்ததைப் பற்றியும், காடுகளில் கிடக்கும் முனிகளைப் பற்றியும் நமக்கு ஆகவேண்டியதென்ன? காதலர் இரு வருக்கு மிடையில் நிகழ்ந்த சுகிர்த நிகழ்ச்சிகளைக் கூறாமல் காட்டை மேட்டை யெல்லாம் தழுவிப் பர்ட்டிகதை சொல்லுவதில் காரியமென்ன?" எனக் குறை கூறுவார் என்று அஞ்சி, இனி ஆலசியம் செய்யாமல், அவ்விருவரை யும் ஒன்று சேர்த்துவிட வேண்டிய மங்கள காரியத்தைக் கவனிப்போம்.

குலசேகரன் வீடு வந்து சேர்ந்த செய்தியை காரியார் முத்தூரிலிருந்த தமது மைத்துனருக்கு உடனே தெரிவித் தார். அந்தச் சமாச்சாரம் கீர்த்திவர்மர் வீட்டில் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கிற்று. மதுரையில் நடந்த மகத் தான கேட்டைக் குறித்துக் கேள்விப்பட்டு, குலசேகரனைப் பற்றிய செய்தி ஒன்றும் கிடைக்காதபடியால் துன்பக் கட லில் மூழ்கியிருந்த கல்யாணிக்கு, அவன் வந்து சேர்ந்

தான் என்ற சமாச்சாரம் புத்துயிர் அளித்தது. கீர்த்திவர்மரும் அவருடைய தாயாரும் அன்றே புறப்பட்டுப் பொன்னூருக்குப் போய் குலசேகரனைக் கண்டு சந்தோஷித்து அவ்விடத்தில் ஒருநாள் இருந்து திரும்பினார்கள். தமது மருமகனுக்குச் சிற்றரச பதவி கிடைத்தது கீர்த்திவர்மருக்கு மிகுந்த திருப்தியாயிருந்தது. தமது சகோதரியின் வீட்டிற்குத் திடீரென்று வந்த வாழ்வைப் பார்த்து வியப்படைந்தார். நாட்டிலுள்ள பெரியோர் எல்லாரும் குலசேகரனிடத்தில் வெகு வணக்கமாய் நடந்து கொண்டதை அவர் கவனித்து "நான் எவ்வளவு பணத்தைச் சம்பாதித்திருந்த போதிலும், இவ்வித கனம் எனக்கு இல்லை. இது அதிஷ்டவசமாகவே வருகிறதாகத் தோன்றுகிறது" என்று எண்ணிக் கொண்டார்.

கல்யாணியைக் கூடஅழைத்துச் செல்வது ஒழுக்க விரோதமாதலால், அவளை முத்தூரிலேயே விட்டுப் போனார்கள். தாயும் மகனும் திரும்பிவந்து தாங்கள் பொன்னூரில் கண்டதும் கேட்டதுமான விசேஷங்களைச் சொல்லக்கேட்டு கல்யாணி மகிழ்ந்தாள்.

குலசேகரனும் பெண்ணைப் பார்க்கப் போவது ஒழுக்கமல்ல என்று இருந்துவிட்டான். அவளைக் குறித்து விசாரிக்கவும் கூச்சப்பட்டான். காரியாரும் பார்வதியும் அநுதினமும் மருமகளைப் பற்றிப் பேசிக்கொள்வார்கள். தன் பெற்றோருக்கு அவள்மேல் மிகுந்த பிரியம் உண்டாயிருந்ததைக் கவனித்து குலசேகரன் சந்தோஷமடைந்தான்.

சிலநாட் சென்றபின் ஒருநாள் குலசேகரனுக்கு கல்யாணி எப்படியிருக்கிறாள் என்று அறிய வேண்டுமென்ற அவா உண்டாயிற்று. "கடவுள் எல்லாப் பாக்கியத்தையும் கொடுத்திருந்தாலும், தமது ஞானத்தின்படி, எனக்கு ஒரு குறையை வைத்தார். என் மனதின் இரகசியங்களைத் தாராளமாய் நான் சொல்லக்கூடிய ஒரு சிநேகிதன் எனக்கு இல்லை. அன்பனும், என் விஷயத்தில் பூரண அநுதாபமுள்ளவனும், என் வயதிற்கு ஒத்த

பருவமுள்ளவனும், ஞானவானுமான ஒரு சிநேகிதன் எனக்கு இதுவரையும் கிட்டாதே போனது ஒரு குறையே. இக்கிராமத்திலிருக்கும் இளைஞர் யாவரும், சிறு பிராயமுதலே என்னை எஜமான் என்ற ரீதியில் பாராட்டி வந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் என்மேல் மிகுந்த அன்புள்ளவர்களாயிருப்பினும், என் மனதில் தோன்றும் யாவற்றையும் நான் அவர்களில் ஒருவனிடமாகிலும் சொல்லக்கூடவில்லை. பந்துக்கள் வெகு காலமாக விலகிப்போய் விட்டபடியால், அவர்களிடத்து எனக்கு அன்பு உண்டாகவில்லை. இச்சமயத்தில் மனமொத்த பாங்கன் ஒருவனிருந்தால் அவனை அனுப்பி அவள் எப்படியிருக்கிறாள் என்று அறிந்துவரச் சொல்லலாம். வேறு வழியில்லாதபடியால் நீலனைத்தான் போய்வரச் சொல்லவேண்டும்" என்று ஆலோசித்து, நீலனை அழைத்து "நீ முத்தூருக்குப் போய் என் அம்மான் வீட்டில் எல்லாரும் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்துவா" என்று சொல்லியனுப்பினான். அப்படியே நீலன் பகட்டான ஆடையாபரணங்களணிந்துகொண்டு, குதிரையேறி முத்தூருக்குப் போனான்.

கீர்த்திவர்மருடைய வீடு ஒரு விஸ்தாரமான மாளிகையாயிருந்தது. அவருக்கு அநேக கிராமங்களைச் சேர்ந்த பூமிகள் சொந்தமாயிருந்தன. ஆயிரத்திற்கு மேலான பண்ணையாட்கள் அந்த நிலங்களைப் பயிர் செய்து விளைவில் வாரம் கொடுத்து வந்தார்கள். ஆண்களும் பெண்களுமாக அவருடைய வீட்டில் பணிசெய்தவர்கள் ஐம்பது பேருக்குமேலிருந்தார்கள். கீர்த்தி வர்மர் பொருளின் மேல் மிகுந்த ஆசை கொண்டவராயிருந்தபடியால் அவருடைய வேலைக்காரரும் பண்ணையாட்களும் எளிய நிலைமையிலேயே இருந்தார்கள். ஒருவரையும் அவர் தொட்டு இம்சிக்காவிடினும், அவர்களிடத்தில் வெகு கண்டிப்பாய் வேலை வாங்கி, கொடுக்கவேண்டிய கூலியை மனவருத்தத்தோடு கொடுப்பார். எனினும், ஒருவரையும் வஞ்சித்தறியார். அவர் இவ்வளவு கடினச் சித்தமுள்ளவராயிருந்தாலும், அவருடைய தாயாரும் புத்திரியும் மிகுந்த தயாள குணமுடையவர்களாயிருந்து ஏவலாட்களை அன்

பாய் நடத்தி வந்தபடியால் குடித்தனம் ஒருவாறு மேன்மை யாய் நடந்து வந்தது.

நீலன் வந்திறங்கின பிறைக் கண்ட முத்தூரார் ஆச் சரியத்தோடு வாயைத் திறந்துகொண்டு பார்த்து, "சேவ கம் செய்தால் பொன்னூர்ப் பாண்டியனிடம் செய்ய வே ண்டும்" என்று பேசிக்கொண்டார்கள். நீலன் வந்து கீர்த்தி வர்மரைக் கண்டு வணங்கி, பொன்னூர் விசேஷங் களைத் தெரிவித்தான். அவர் அவனை அன்பாய் விசாரித் தார்.

நீலன் வந்ததைக் கல்யாணி கேள்விப்பட்டு, வள்ளி யை அனுப்பி, அவனை அழைத்து வரச் சொன்னாள். நீலன் வந்து வணங்கவும், அவனை உபசரித்து, உட்காரச் சொல்லி, பொன்னூர்ச் சமாச்சாரங்களை விசாரித்தாள். கடைசியில் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"பாண்டியர் சௌக்கியந்தானா?

"பெரிய பாண்டியரா?"

"அதை முன்னமே கேட்டுவிட்டேனே. சின்னப் பாண்டியரைத்தான் விசாரிக்கிறேன்"

"சின்ன மகாராஜாவா? மெத்த மெலிவாயிருக்கிறார்"

"ஏனோ?"

"மனதில் ஏதோ விசாரம் போலிருக்கிறது"

"அப்படி என்ன விசாரம் நேரிட்டது?

"யாரோ ஒரு பெண்ணின்மேல் எண்ணமாக இருப் பதுபோல தோன்றுகிறது"

"அதற்காக விசாரமேன்? அரசனாயிருக்கிறவருக் குப் பெண்ணுக்குப் பஞ்சமா?"

"பொன்னூர் நாட்டில் ஆயிரம் பெண்கள் வேண்டுமானாலும் கிடைக்கும். அவருக்கு அவர்கள்மேல் நோக்கமில்லை. யாரையோ எங்கேயோ, எப்போதோ கண்டாராம். அதையே நினைத்துக் கொண்டிருக்கிறார்"

"அவளை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"அவ்வளவு தெரியாதா? ஒரு பாக்கியவதியின் பேர் செவியில் படும்போதெல்லாம் அவருடைய முகம் மலர்ச்சியடைகிறது. தீக்ஷண்யமான கோபத்தின் மத்தியிலும் அந்தத் திருநாம மந்திரத்தைக் கேட்டவுடனே கோபம் மாறிச் சாந்தமடைகிறார்"

"அப்படியா? அவள் இருக்கும் ஊர் எதுவோ?

"ஊரின் பெயர் தெரியாது. ஆனால் அது தென் திசையில் இருக்கிறது என்பது மாத்திரம் உண்மை. ஏனென்றால், "தெற்கே நோக்கும் போதெல்லாம் பாண்டியருடைய முகம் பிரகாசமடைய வேண்டிய காரணம் என்ன?" என்று நான் ஒரு நாள் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் "அடே! நமக்கு மங்கல திசை தற்சமயத்தில் வடக்கல்ல, தெற்கு" என்றார். ஆகலால் அவருடைய உள்ளத்தில் வாசம்பண்ணும் தேவியார் இருப்பது தெற்கில் என்று தெளிவாய் அறிந்தேன்"

"அப்படியா? அவளுடைய பேர் என்னவோ?

"சற்று மறதியாயிருக்கிறது. விவாகத்தைக் குறிக்கக்கூடிய ஒரு பெயர் அது"

"சரிதான். அந்தப் பெண் நான் அறிந்தவள்தான். அவள் மகா பொல்லாதவள். உன் எஜமான் அவளுடைய கையில் அகப்பட்டுக்கொண்டால் தப்பமாட்டார். ஆகையால் அவர் வெகு ஜாக்கிரதையாய் இருந்து கொள்ளவேண்டும் என்று சொல்லிவை" என்று சொல்லிச் சந்தோஷத்தோடு நீலனுக்கு ஐந்து பொன் வெகுமதி யளித்தாள்.

நீலன் திரும்பி வரவும், குலசேகரன் "முத்தூர் விசேஷ மென்னடா?" என்று கேட்டான்.

"எல்லாரும் சௌக்கியமாய் இருக்கிறார்கள்".

"வேறொன்று மில்லையா?"

"தேவியார் பாண்டியரைப் பார்க்கவேண்டுமாம்".

"என் பாட்டியாரா?"

"சின்னத் தேவியார்"

கல்யாணியுடைய தன்மையை அறிந்திருந்த குலசேகரன், நீலன் சொன்னது பொய்யென்று தெரிந்துகொண்டு, உண்மையை வெளிப்படுத்தும் பொருட்டு,

"அப்படியா காரியம்? அவள் கொஞ்சமும் ஒழுக்கமில்லாதவள்போல் காணப்படுகிறாளே, அப்படிப்பட்டவளை கல்யாணம் செய்வது சரியாகாதே" என, நீலன் கலக்கமடைந்து "நாமொன்று நினைக்க காரியம் வேறு விதமாய்த் திரும்புகிறது" என்று எண்ணி, "தேவியார் சொன்னது நன்றாய்க் கேட்கவில்லை பெரிய பாண்டியரைத் நான் வரச்சொன்னார் போலிருக்கிறது" என்றான்.

எனவும், குலசேகரன் மிகுந்த கோபம் அடைந்தவன் போல பாவித்துக்கொண்டு,

"என்னடா! அந்தச் சிறுமிக்கு அவ்வளவு கர்வமா, என் தந்தையை வா போ என்று சொல்ல? இப்போதே இவ்வளவு அவமரியாதை பாராட்டுகிறவள், விவாகம் ஆகிவிட்டால் என் பெற்றோரை எவ்வளவு பாடுபடுத்தக் காத்துக் கொண்டிருக்கிறாளோ. இந்த உலகத்தில் பெண்ணுக்கா குறைவு? வேறொருத்தியைப் பார்த்துக் கொள்ளலாம். இவள் நமக்கு உதவவே உதவாது" என்றான்.

இவ்வார்த்தை கேட்கவும் நீலனுக்கு கைகால்கள் நடுக்கமுற ஆரம்பித்தது. அருகில் நிற்க அஞ்சி, சற்று தூரத்தில் ஓடிப்போய் நின்று கொண்டு, கண்களில் நீரொழுக "தேவியார் ஒருவரையும் வரச்சொல்லவில்லை. தெரியாமல் சொல்லிவிட்டேன்" என்று குழந்தைபோல் அழுதான். குலசேகரனுக்குச் சிரிப்புண்டாகி விட்டது. சற்று நேரம் சிரித்துவிட்டு,

"அடே! கிட்ட வா. உன்னை நான் ஒன்றும் செய்யமாட்டேன். இப்போ உண்மையைச் சொல்லு. கல்யாணியைப் பார்த்தாயா?"

"ஆம் மகாராஜா பார்த்தேன்."

"எப்படி யிருக்கிறாள்?"

"முன்னிலும் பார்க்க அழகாயிருக்கிறார்."

"நீ என்ன சொன்னாய், அவள் என்ன சொன்னாள்?"

என, முத்தூரில் நடந்த சம்பாஷணை முழுவதையும் ஒன்றும் விடாமல் சொன்னான் நீலன். குலசேகரன் அதைச் சந்தோஷத்தோடு கேட்டு,

"நீலா! நீ அதிக முட்டாளல்ல. பொய் சொல்லுவதைக் கொஞ்சம் மட்டுப் படுத்திக்கொண்டாயானால் எந்தக் காரியத்திற்கும் உன்னை நம்பி அனுப்பலாம். அடுத்த விசை போய்வரும்போது, உன் இயற்கையின்படி ஏதாவது பொய் சொல்லத்தான் வேண்டும் என்ற கருத்துக் கொண்டாயானால், நான் நம்பக் கூடிய ஒரு கதையை உண்டுபண்ணிச் சொல்லு" என்றான்.

இப்படியே நீலன் நாலைந்து தடவை முத்தூருக்குப் போய், சமாச்சாரம் விசாரித்துக் கொண்டு, சன்மானமும் பெற்று வந்து, குலசேகரனையும் கல்யாணியையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தான்.

குலசேகரன் வீடுவந்து சேர்ந்து ஆறு மாசம் கழிந்த பின், விவாக முகூர்த்தத்தை நிச்சயிக்கும் பொருட்டு, காரியார் முத்தூருக்குச் சென்றார். பந்துக்களும் புரோகிதரும் வந்து கூடி முகூர்த்தத்தை நிச்சயித்தார்கள். பழைய முறையின்படியே விவாகச்சடங்கு பெண் வீட்டிலேயே நடக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

சம்பந்திகள் தனித்திருக்கும்போது கல்யாணச் செலவைக் குறித்துப் பின்வரும் சம்பாஷணை நடந்தது. கீர்த்திவர்மர் காரியாரைப் பார்த்து,

"அத்தான்! கல்யாணத்திற்குச் சுமார் எவ்வளவு பணம் வேண்டியதிருக்கும்?"

"ஒரு லக்ஷம் பொன்னில் முடிக்கலாம்."

கீர்த்திவர்மர் இதைக் கேட்டுத் திகைத்து,

"லக்ஷம் பொன்னா! பணத்தை அப்படி வீணாய்ச் செலவிடலாமா? சுருக்கத்தில் முடித்துக் கொண்டால் என்ன?"

"கல்யாணத்தில் வீண் செலவு செய்தல் மதியீனம் என்பதை நான் முற்றிலும் ஒப்புக் கொள்ளுகிறேன் ஆனால், எந்தக் காரியமும் தேசகால வர்த்தமானங்களைக் கவனித்துச் செய்யவேண்டும். உலகம் தலை மாறி நிற்கும் இந்தக் காலத்தில், குல விருத்தியின் படியும் ஸ்திதியின் படியும், நாட்டுக்குக் காவலாளராயிருக்கும் நாம், நாட்டின் வாழ்வை முக்கியமாய்க் கருதவேண்டியதா யிருக்கிறது. இக் காலத்தில் குடிகளுடைய அன்பும் ஆதரவும் நமக்கு மிகவும் தேவை. அப்படியே நம்முடைய அன்பும் ஆதரவும் குடிகளுக்குத் தேவை. குடிகளும் நாமும் ஒன்று சேருவதற்கு இது மெத்த நல்ல சமையம். அவர்கள் எல்லாரும் இந்தக் கல்யாணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மாமூலைச் சீர் திருத்தவேண்டும் என்றும், பணத்தைப் பாதுகாக்கவே

ண்டுமே என்றும், எண்ணுவதற்கு இது காலமல்ல. உனக்குக் கஷ்டமாகத் தெரிந்தால் சொல். நானே பணம் கொடுக்கிறேன். குலசேகரன் பட்டம் பெற்றதற்கு நாம் விருந்து நடத்தவில்லை. காரியுடைய மகனுக்குக் கல்யாணம் என்றால் நூறு பொன் முதலாய்ச் செல்லாது. பொன்னூர்ப் பாண்டியன் கல்யாணமானால் அதிகம் செல்லத்தான் செய்யும்"

"பணம் இருக்கிறது. என்றாலும், ஒரு லக்ஷம் பொன் என்றால் அதிகமாகவே தெரிகிறது. அவ்வளவு செல்ல அவசரமென்ன ?"

"தேசத்தின் நிலைமை நீ அறியாததல்ல ஜனங்கள் நாட்டில் இருப்பதா காட்டிற்கு போவதா என்ற ஸ்திதியில் இருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைக் கூடநின்று தாங்க நாம் இருக்கிறோம் என்ற ஒரு தைரியத்தை உண்டாக்கவேண்டும். ஆகலால் கல்யாணத்திற்கு வரும் ஜனங்களை யெல்லாம் அன்பாய் விசாரித்து, உபசரித்து, அவர்களுடைய நிலைமைக்குத் தகுந்தவாறு பொன்னோ, வஸ்திரமோ, தானியமோ கொடுத்து அனுப்ப வேண்டும். புறநாடுகளிலிருந்து அநேக ஜனங்கள் நம்முடைய நாட்டில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வீடுவாசல்கள் வேண்டும். ஆனால் பொன்னை எப்போதும் இலவசமாய்க் கொடுத்துக் கொண்டிருந்தால் குடிகளுடைய சுயமுயற்சி கெடுதற்கு ஏதுவாகும். ஆகலால் இப்படிப்பட்ட ஒரு சுப சமயத்தில் அவர்களுடைய அவசரங்களைக் கண்டு உதவி செய்தல் நாட்டிற்கு நன்மை பயக்கும்.

விருந்தின ரெல்லாருக்கும் மூன்று நாள் நல்ல விருந்தளிக்கவேண்டும். வரக்கூடிய சிற்றரசருக்கும், பிராமணருக்கும், வித்துவான்களுக்கும் செய்யவேண்டிய. உபசரணைகளைக் குறைவில்லாமல் செய்யவேண்டும். நம்முடைய பந்துக்களையும் நமது வீட்டை அண்டி

யிருக்கும் ஜனங்களையும் திருப்திப் படுத்தவேண்டும். வாத்தியம், வாகனம், விநோத வேடிக்கைகள், பந்தல் முதலான மற்றச் செலவுகளுமிருக்கின்றன. இவற்றை யெல்லாம் நிறைவேற்ற ஒரு லக்ஷம் பொன் பற்றுது என்பதே என் அபிப்பிராயம். நாட்டுக் குடிகளுக்குச் செய்யவேண்டிய உதவிக்காக நான் ஒரு லக்ஷம் பொன் பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கிறேன். பெண்ணும் மாப்பிள்ளையும் பொன்னூருக்கு வந்தவுடனே அவ்விடத் திலும் விருந்து நடத்தப் போகிறேன்"

"அத்தான்! நீர் எல்லாவற்றையும் வெகு சுலபமாய்ச் சொல்லிவிட்டீர். கஷ்டப்பட்டுச் சம்பாதித்தவனுக்கல்லவா பணத்தின் அருமை தெரியும். உம் முடைய வீட்டிற்கு வாழ்வு வெகு இலேசாக வந்து விட்டது. நானே நாற்பது வருடம் உழைத்து என் தந்தையார் வைத்துப்போன கடன்களைத் தீர்த்து, அதற்கு மேலாகக் கொஞ்சம் பணமும் சேர்த்து வைத் திருக்கிறேன். அதை ஒரு நாளில் ஊதிப் பறத்திவிடச் சொல்லுகிறீர். உலகம் உள்ளவரைக்கும் தரித்திரம் இல்லாமல் போகுமா? நாம் எவ்வளவு தானம் செய்து விட்டாலும் நாட்டிலுள்ள கஷ்டம் நீங்கிவிடுமா?"

"மாறு! என்ன உன்னைப் பிடித்த அஞ்ஞானம்! பணமானது கஷ்டப்பட்டாலும் படாவிட்டாலும் பகவானுடைய சித்தத்தின்படியே ஒருவனை வந்தடைகிறது. பகவான் கீதையில் சொல்லியிருக்கிறபடி நிஷ்காமிய கர்மம் செய்வதே க்ரமம். பலனைக் குறித்துச் சிந்தனை செய்தால் லோப குணம் மிகுந்துவிடும். நாம் செய்யும் முயற்சிகளின் பலனாக, வறுமையோ செல்வமோ எது வரினும் அதில் திருப்தியடைதலே மோக்ஷ சாதனமாகும். கடவுள் ஒருவனுக்கு செல்வத்தைக் கொடுத் திருந்தும், அவன் வறியோருக்கு இரங்காமலும், சுற்றம் தாங்காமலும் இருப்பானாகில், அவன் கடனாளியே யன்றி தனவந்தனல்லன். கடவுள் மனுஷருக்கு புத்தியும் பெலனும் சமயமும் வாய்க்கப் பண்ணும்போது செல்வம் வருகிறது. இவையில்லாக்கால் வறுமை வரு

கிறது. ஆதலால் "நான் சம்பாதிக்கிறேன்" என்று நீ ஒருவன் சொல்லுவது உண்மையன்று.

ஐம்பது லக்ஷம் பொன் பெறக்கூடிய உன் ஸ்தாவர ஆஸ்திகளைத் தவிர உன்னிடம் பணமாகவே நாற்பது லக்ஷம் பொன் இருப்பதாக இந்தத் தேசமெல்லாம் வதந்தியா யிருக்கிறது. கொள்ளைக்காரர் வந்தால் நல்ல வேட்டைதான். உன்னுடைய உழுத்தத் தனம் பிரசித்தியாயிருப்பதினால், உன் பண்ணையாட்களாகிலும், ஏவலாட்களாகிலும் மோசம் வரும் காலத்தில் உனக்கு உதவி செய்ய வரமாட்டார்கள் என்பது உனக்குத் தெரிந்தே யிருக்கும். நாம் வாழுங் காலத்தில் நம்மை அடுத்தோரும் நன்றாயிருக்கவேண்டும் என்று நாம் கருதவேண்டும். அப்படிச் செய்வோமானால் நமக்குத் தாழ்வு வரும்போது நமக்கும் யாராவது உதவி செய்வார்கள் என்று எதிர் பார்க்கலாம். நம் இருவருக்கும் வயோதிபம் வந்து விட்டது. இனி இருக்கப்போகிற நாள் எத்தனை ? சாகுமுன் கொஞ்சம் தர்மம் செய். உனக்கு ஏற்பட்டிருக்கும் கிருபணப் பட்டத்தைப் போக்குவதற்கு இதுவே நல்ல சமையம். நம்முடைய வீட்டில் கல்யாணம் நடந்து எவ்வளவோ நாள் ஆகிவிட்டது. அடுத்த கல்யாணத்தைப் பார்க்க நாமிருவரும் இருக்கமாட்டோம்.

நடக்கவேண்டிய பிரகாரம் மங்களகரமாக இந்தக் கல்யாணத்தை நடத்த உனக்கு மனமுமில்லாவிடில் இப்போதே சொல்லிவிடு. ஒரு பசுவும் எருதும் உனக்குக் கொடுத்துவிட்டு, ஆரிடமணம் என்று சொல்லி, பெண்ணைக் கொண்டுபோய்ப் பொன்னூரில் வைத்து சடங்கை நிறைவேற்றிக் கொள்ளுகிறேன். அவ்வளவு தான் நான் சொல்லவேண்டியது."

இந்தப் பிரசங்கத்தினிடையில், கொள்ளைக்காரரைக் குறித்துக் காரியார் சொன்ன ஒரு வார்த்தை மாத்திரம் கீர்த்திவர்மருடைய மனதில் பதிந்து திகில் உண்டாக்கிற்று. ஆதலால் வேறொன்றும் சொல்லாமல்,

"அத்தான் கோபிக்கவேண்டாம். நீர் கடந்த ஞானி. உம்முடைய இஷ்டம்போலவே ஆகட்டும். ஒரு லக்ஷ மல்ல, பத்து லக்ஷம் செலவிடவேண்டுமானாலும் சித்த மே. கல்யாணம் திருப்தியாய் நிறைவேறினால் சரிதான்" என்றார் கீர்த்திவர்மர்.

இரண்டு வீடுகளிலும் கல்யாணத்திற்கு வேண்டிய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. "பொன்னூர்ப் பாண்டியனுக்குக் கல்யாணமாம், நாட்டுக்கெல்லாம் விருந்தாம், பத்து லக்ஷம் பொன் செலவாகப் போகிறதாம்" என்று தேசமெங்கும் செய்தி பரவிற்று.

முகூர்த்த தினம் வந்தது. நாட்டிலுள்ள பிராமணரெல்லாரும் வந்து சேர்ந்தார்கள் குடி ஜனங்களும் பந்து மித்திரர்களும் திரளாய் வந்த கூடினார்கள். கல்யாணத்திற்குப் பதினைந்து நாளுக்கு முன்னதாகவே பொன்னூரால் விருந்து ஆரம்பித்துவிட்டது. தூர இடங்களிலிருந்து வந்த பந்துக்கள் கோட்டை வீட்டில் குடியாய் அமர்ந்து விட்டார்கள். தரித்திரப்பட்ட குடிகள் அரண்மனையில் சாப்பிட்டு அற்ப சொற்ப உதவி செய்து கொண்டு, கல்யாணத்திற்காகப் போட்டிருந்த கொட்டில்களில் ஆயிரக் கணக்காய்த் தங்கியிருந்தார்கள். வயிறார உண்டு திருப்தியடைந்திருந்த அவர்களுடைய முகங்களைப் பார்ப்பதே காரியாருக்கு ஆனந்தமாயிருந்தது. அவர்களில் ஒவ்வொருவரோடும் வார்த்தையாடி அவர்களுடைய துன்பங்களை அறிந்து கொள்ளுவதிலும், அவைகளுக்கு ஏற்ற பரிகாரம் செய்வதிலுமே காரியார் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தார்.

முத்தூரிலும் வந்து கூடின ஜனங்களுக்குக் கணக்கில்லை. சுற்றிலுமுள்ள நாடுகளின் சிற்றரசர் யாவரும் தத்தம் பரிவாரங்களோடு வந்து குழுமினார்கள். கீர்த்திவர்மர் மனம் சகித்துப் பணத்தைச் செலவிட்டார். பணப் பெட்டியிலிருந்து ஒவ்வொரு பொன்னையும் எடுக்கும் தோறும் அவருடைய விரலில் தேள் கொட்டினதுபோலிருந்தும், வெகு தைரியமாகவே அதைச் சகித்துக்கொண்டார்

கல்யாண விசேஷம் முடியும் வரையும், அவர் கர்ணனை யொத்தே விளங்கினார். அதினால் அத்திசையில் அவர் சமயம் கண்டு நியாயத்தோடு செலவு செய்பவர், என்ற நல்ல பேர் உண்டாயிற்று.

முகூர்த்த நாள் அதிகாலையில் குலசேகரன் தன் பந்து பரிவாரங்கள் சகிதம், மிகுந்த ஆடம்பரத்துடனே முத் தூரை அடைந்தான். கீர்த்திவர்மர் தமது ஊர் எல்லை வரையும் சென்று மருமகனை எதிர்கொண்டு மாலையிட்டு வரவேற்றார். அப்புறம் கல்யாணச் சடங்குகள் ஆரம்பித் தன. அவற்றை விவரிப்பது மிகையாதலால் விளக்காது விட்டோம்.

குறித்த முகூர்த்தத்தில் குலசேகரன் பா ணிக்கிரகணத் திருச்சடங்கின் மூலமாய்க் கல் யாணியை அடைந்தான்.

விருந்தும், வேடிக்கை விநோதங்களும், வித்வான் களுடைய பிரசங்கங்களும், பந்தய விளையாட்டுகளும், வாத்தியங்களும், பாடல்களும், மூன்று நாள் வரையும் நீடித்திருந்தன. பந்துக்களில் குறை கூறும் வழக்கமுள்ள சிலர் இருந்தாலும், அவர்கள் குலசேகரனுக்குப் பயப்பட்ட தினால் வாய் திறக்கவில்லை. முணுமுணுப்புப் பட்டர் என அந்த நாடெங்கும் பிரக்யாதி பெற்றிருந்த சுப்புப்பட்டர் மாத்திரம், தமது ஜென்ம வாசனையை அநுசரித்து, ஏதா வது குறைசொல்ல வேண்டும் என்று கருதி, வாய் நிறைய இட்ட தாம்பூலத்தின் எச்சிலைத் தரையில் உமிழுவதற்கு முதலாய்க் குனியக்கூடாமல், ஆகாசத்தைப் பார்த்தபடி யே நின்று கொண்டு "இப்போ சாப்பிட்ட போஜனத்தில் குழம்புக்குச் சற்று உப்புக் குறை" என்றார். அதைக் கேட்கவும், பொன்னூர்ப் பாண்டியர் வீட்டிற்குப் பூர்வ முதல் புரோகிதம் செய்துவந்த வம்சத்தவரான கிட்டுப் பட்டருக்கு மகா கோபம் உண்டாகிவிட்டது. "அடே சுப்பு! என்னடா, நீ எந்த இடத்திற்குப் போனாலும் ஏதாவது ஒரு குறை சொல்லாமல் வருகிறதில்லை. மூன்று நாள் பூர்த்தியாகச் சாப்பிட்டோம். ஒவ்வொரு நேரமும்

தக்ஷிணை. வஸ்திரதானம் வேறே. அவருக்கு ஒரு பசுவும் கொடுத்திருக்கிறான். இவ்வளவும் உனக்கு என்னவேண்டியிருக்கிறது? குளியமுடியாத வைக்கும் தின்றுவிட்டு நிற்கிறாயே. அந்தப் போஜனத்தில் குறை சொல்லலாமா? வாயை மூடிக்கொண்டிரு. உறத்துப் பேசினால் மரியாதை கெட்டுவிடும். குலசேகரன் செவியில் பட்டால் உன்னைப் பிராமணன் என்று கூடப் பார்க்காமல், உன் வாயில் உப்பைக் கொட்டி உலக்கையால் இடித்து உள்ளே தள்ளிப் போடுவான்" என்றார். இதைக் கேட்கவும் எல்லாரும் சிரித்தார்கள். சப்புப்பட்டரும் குலசேகரன் பேசைக் கேட்டுக் கலக்கமடைந்து, " என்ன ஓய் கிட்டுப்பட்டரே! இது உனக்கு தர்மமா? உப்பு சற்று குறைவாயிருந்ததைத் தெரிவித்தவுடனே பந்தி விஜாரிப்புக்காரர் அதை நிவர்த்தி செய்து விட்டார்கள், ஆதலால் ஒரு அணுவளவு குறைகூட இந்தக் கல்யாணத்தில் கிடையாது, இவ்வளவு சிறப்போடு கூடிய கல்யாணம் இந்த ஜகத்திலேயே கிடையாது, என்று சொல்லுவதற்கு வாயெடுத்தேன். அதற்குள் நீர் என்னென்னவோ சொல்லி என்னைக் கஷ்டத்தில் இழுத்துவிடப் பார்க்கிறீரே. பாண்டியருக்குப் புரோகிதராகிவிட்டபின் உம்முடைய புத்தி சரியான நிலைமையில் இல்லை ஓய். ஏதோ, எளியவன் பிழைப்பில் மண்ணைப் போட்டுவிடாதேயும்" என்றார்.

மூன்றாம் நாளில் சதிபதிகள் பொன்னூருக்குப் போகப் பல்லக்கேறினார்கள். அநேக நாட்களுக்குப் பின் அப்போதுதான் இருவரும் சம்பாஷித்துக்கொள்ள வாய்த்தது. கல்யாணி மணப் பெண்களுக்குரிய வழக்கப்படியே முகத்தை ஒருபுறம் சாய்த்துக் கொண்டிருந்தாள். குலசேகரன் அவளைப்பார்த்து,

" என் முகத்தைத் திரும்பிக் கொண்டாய்?" என்றான்.
" ஊர்தாண்டுவதற்குள் பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டால் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?"

என்று வேதனையாய்ச் சொன்னாள் கல்யாணி. குல சேகரன் சற்று நேரம் போகும் வரையும் சும்மா இருந்து விட்டு,

"பக்கம் வழியே தங்கையைக் காண்பித்து மைத்துனனைக் கட்டிக் கொடுப்பது வழக்கமல்லவா? அதினால்தான் பெண் அடையாளம் பார்க்கலாம் என்று கேட்டேன்" என்றான்.

"ஏமாறினால் அப்படியும் செய்வார்கள். அதற்கு மேலும் செய்வார்கள். சில வீடுகளில் ஆண்பிள்ளையைப் பெண் வேஷம் போட்டுக் கட்டிக் கொடுக்கிறார்களாம்."

என்று கல்யாணி சொல்ல இருவரும் நகைத்தார்கள். கொஞ்சநேரத்திற்குப் பின் குலசேகரன்,

"அது போகட்டும். உனக்கு என்பேரில் பிரியத்தாலா, அல்லது அம்மாளுடைய பிரியத்திற்காகத்தான் என்னை மணந்து கொண்டாயா?" என்றான்

அதைக்கேட்டுக் கல்யாணி சற்று நாணமுற்று,

"எனக்குச் சம்மதமில்லாவிட்டால் போகவிட்டு விடுவார்களா?" என்றாள்.

"நான் உன்னைத் துக்கமாட்டேன். சம்மதமில்லா விட்டால் இப்போதே தண்டிகையை விட்டு இறங்கிவிடலாம்" என்றான் குலசேகரன்.

"இது நல்ல நியாயம். பெண்பிள்ளை கீழே இறங்கி நடப்பதுதான் கௌரவமோ? தைரியமிருந்தால் தானே இறங்கி விடுகிறதுதானே" என்றாள் கல்யாணி.

நாயனார் சொன்னபடி கண் சம்மதத்தைத் தெரிவிக்கும்போது வாய்ச்சொல்லால் என்ன பயன்? குலசேகரனுக்குத் தண்டிகை விட்டிறங்கத் தைரியம் இல்லைதான். ஆதலால் வேறு வழியின்றிச் சிரித்துக் கொண்டான். இவ்வாறு சிறிது நேரம் செல்லவும் அவன்,

"நீ சாமர்த்தியமாய்ப் பேசக்கூடியவள் தான். நான் ஒன்று கேட்கிறேன். அதற்குப் பதில் சொல் பார்ப்போம். மதுரைக்குப் போகும் வழியில் நான் உன்னை முதல் தடவையாகக் கண்டபோது கை தூக்கி என்னைக் கும்பிட்டாயல்லவா? அப்போது என்னை என்ன முறையில் வைத்துக் கும்பிட்டாய்?" என்றான்.

"இரக்ஷிக்க வந்த தெய்வம் என்ற முறையில் தான்" என்றாள் கல்யாணி.

"கற்புள்ள மங்கையர்க்குக் கணவனே தெய்வம் என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்களே. அப்படியானால் நீ அப்போதே என்மேல் பிரியம் வைத்து, உன்னை மணக்கப்போகும் மாப்பிள்ளை என்று எண்ணித்தானே என்னைக் கும்பிட்டாய்?" என்றான் குலசேகரன்.

இந்த வார்த்தை செவியில் படவும், கல்யாணியின் முகம் செந்தாமரை மலர்போல் சிவந்தது, ஒருவேளை உண்மையைக் கிரகித்து விட்டாரோ என்று எண்ணி, கோபித்தவள் போலப் பாவித்து "ஸ்வாமிக்கு வாழ்க்கைப்படுவது நமது ஜாதியில் வழக்கமா?" எனப் பழித்துக் கூறி, முந்தானையால் முகத்தை மூடி, இருகரங்களையும் கண்களில் திணித்துக் கொண்டு விம்மி விம்மி அழுவதுபோல பாசாங்கு செய்தாள்.

குலசேகரன் இதைப் பார்த்து, வருத்தமடைந்து, "ஆஹா! இவளை நாம் மனமடியச் செய்துவிட்டோம். ஸ்திரீகளுடைய மனதை அறிவது வெகு கஷ்டமாகவே தோன்றுகிறது. இனி இவளை எப்படி ஆற்றலாம்? மணப்பெண் அழுது கொண்டு நம்முடைய வீட்டிற்குள் பிரவேசித்தால் கண்டோர் வேறாக நினைப்பார்களே" என்று சிந்தித்துக்கொண்டு, மெதுவாக, "கல்யாணி! அழாதே. நான் விளையாட்டாயல்லவோ சொன்னேன். கல்யாணப் பெண் அழக்கூடாது. உன்னை அழவைத்தேன் என்று கேள்விப்பட்டால் ஐயனும் அம்மையும் மெத்த வருத்தப்படுவார்கள். பார்ப்போர் எல்லாரும் தூற்றுவார்கள்.

'வேண்டாம்." எனப் பலவாறு சொல்லியும், அந்தக்கள்ள அழகை மிற்காதது கண்டு, சமீபத்தில் அணுகி அவனைத் தூக்கொண்டு, கைகளைக் கண்களிலிருந்து எடுத்து முகத் தைப்பார்க்க எத்தனிக்கும்போது, கல்யாணி கலகல வெ ன்று சிரித்தாள். குலசேகரன் தான் ஏமாற்றம் அடைந் ததை அறிந்து கூடவே சிரித்தான். இவ்வாறு இவர்கள் விநோதமாய் வார்த்தையாடி மகிழ்ந்து கொண்டே பொ ன்னூர் போய்ச் சேர்ந்தார்கள்.

பெண்ணும் மாப்பிள்ளையும் அரண்மனை எதிரில் வந்தி றங்கவும், வாத்திய கோஷத்தினிடையில் ஆலத்தி சுற்று தல் முதலிய மாமூலான மங்களக் கிரியைகள் நிறைவே றின. போஜனம் செய்து சிறிது இளைப்பாறினபின், அரண்மனை முன் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த விஸ் தாரமான பந்தலின் மத்தியில் போடப்பட்ட மணமேடை யில் தம்பதிகள் இருவரும் உட்கார்ந்து, சுமங்கிலிகளும் கன்னியரும் சூழ்ந்திருந்து வாழ்த்த, வந்தோரனைவருக்கும் காக்ஷி அளித்துக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயத்தில், மணமக்களுக்கு வாழ்த்துதலாக ஆயி ரம் கவிகளில் ஒரு வாழ்த்துப் பாமாலை பாடி, அந்த நூலைத் தமது கக்கத்தில் வைத்துக்கொண்டு, நல்லப்ப வாத்தியார் பந்தலில் நுழைந்தார். மணமேடையிலிருந்து இவருடைய வரவைக் கவனித்த குலசேகரன், அவருடைய கக்கத்திலிருந்த பெரிய ஏட்டுக் கட்டைக் கண்டவுடனே காரியத்தைக் கிரகித்துக்கொண்டு, "வாத்தியாருக்கு இடங் கொடுத்தால் வருஷம் ஒன்றானாலும் பாட்டு முடியாது. இன்றெல்லாம் கல்யாணியை எட்டிப்பார்க்கக்கூட விடார். ஆகையால் யாதாவது ஒரு புகல் சொல்லி ஏட்டை அவிழ்க் காதபடி செய்துவிட வேண்டும்" என்று தீர்மானித்தான். வாத்தியார் அருகிலடைந்து தம்பதிகளை ஆசிர்வதித்து, கக்கத்திலிருந்த கட்டை அவிழ்க்கும் போது, குல சேகரன்,

"அண்ணாவியாரே! அதென்ன ஏடு?"

"ஒரு சிறிய வாழ்த்துப்பாமாலை பாடியிருக்கிறேன்."

"அப்படியா? மெத்த சந்தோஷம். அது அரங்கேற்றப்பட்ட நூல்தானே?"

"கல்யாணத்திற்காக அவசரமாய்ப் பாடிவிட்டேன். இன்னமும் அரங்கேற்றச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை"

'அண்ணாவி! சற்று சமீபித்து வரவேண்டும்." என்று வாத்தியாரை அருகில் அழைத்துக் குலசேகரன் அவருடைய செவியில், "இங்கு வந்திருக்கிறவர்களில் வித்துவான்கள் சிலர் இருப்பதுபோலத் தெரிகிறது. அவர்கள் ஒருகால் இந்த நூலை வேறுமென்று கண்டனம் செய்வதும் கூடியதே. ஆகையால் இதை ஒரு வித்வ சபையின் முன்னிலையில் அரங்கேற்றுமுன் பகிரங்கப்படுத்துவது நலமாகத் தோன்றவில்லை. தற்சமயத்தில் நான் செய்யும் மரியாதையை அங்கீகரித்துப் போகும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நூலை அரங்கேற்ற வேண்டிய காரியத்தை அப்புறம கவனிக்கலாம்" என்றான்.

வாத்தியாருக்கு உடனே மனக் கலக்க முண்டாகிவிட்டது. தானே புகழேந்தியாகவும், கூடி வந்திருந்தவர்கள் எல்லாரும் ஒட்டக்கூத்தர்களாகவும் பாவித்து, அவிழ்த்த மூட்டையைத் தீவிரமாய்க் கட்டிவிட்டார்.

ஒரு பெரிய தாம்பாளத்தில் தாம்பூலாதிகளோடு வஸ்திரங்களும், முன்னூறு பொன்னும் வைக்கப்பட்டு வாத்தியாருக்குத் தானம் செய்யப்பட்டன. அவ்வளவு பொன்னை ஒரு நாளும் கண்ணால் பார்த்திராத வாத்தியாருடைய மனம் சஞ்சலமடைய, உடலெல்லாம் வெயர்வை ஓட, வெகு பதஷ்டத்தோடு சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு, மணமக்களுக்கு வாழ்த்துதல்கூடச் சொல்ல மறந்தவராய், வீட்டுக்குச் சென்றார் மாசில்லா மனத்தினராகிய நல்லப்பர்.

நாட்டுக் குடிகளெல்லாரும் தங்கள் வீட்டிலேயே கல்யாணம் வந்ததுபோலப் பாவித்து அந்த மணத்தைச் சிறப்பித்தார்கள். வந்த எல்லாருக்கும் தகுந்த மரியாதை செய்யப்பட்டது.

மணமக்களிருவரும் சமஸ்த ஜனங்களின் ஆசிர்வாதத்தோடும் அரண்மனையில் பிரவேசித்து, மறுமையிலடையப்போகும் பேரின்பத்திற்கு ஒரு அச்சாரமாக இருக்கும் பரஸ்பர அன்பாகிய பிரேம சாகரத்தில் இறங்கி இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். சுபம்.

நமது கதை இவ்வளவில் முடிந்து விட்டாலும், இதில் சம்பந்தப்பட்ட சில விஷயங்களைக் கூறுதல் பிழையாகாது.

கீர்த்திவர்மர் தமது மகளை விட்டுப்பிரிய மனமில்லாததாலும், கொள்ளைக்காரருக்குப் பயந்ததினாலும், தமது குடியிருப்பைக் காரியாரோடு வைத்துக்கொண்டு, காலாகாலங்களில் முத்தூருக்குப் போய்ச் சொத்துக்களை விஜாரித்து வந்தார். அவர் பெலவீன சரீரியாயிருந்தபடியால் நோய்ப்பட்டு மூன்று வருடத்திற்குள்ளாகவே காலம் சென்று விட்டார். அவர் வைத்துப் போன ஆஸ்தி அனைத்தும் கல்யாணியைச் சேர்ந்தது.

பாட்டியாரும் தன் மகன் இறந்த துக்கம் ஆற்ற மாட்டாமல் சீக்கிரத்திலேயே சென்று விட்டாள்.

காரியார் தமது காலத்தைத் திட்டமாய்வகுத்து தியானம், நூலாராய்ச்சி, தோட்டமுண்டாக்குதல், போஜனம், நித்திரை, என்ற பிரதான பகுதிகளுக்குள்ளடக்கி நாட் கழித்தார். முன்னிருந்து அழிந்துபோன சிங்காரவனத்தைத் திரும்ப உண்டாக்குவதில் வெகு நேரத்தைச் செல விட்டார். தேசத்திலுள்ள வித்துவான்களெல்லாரும் அவரைக் காலாகாலங்களில் வந்து கண்டு சன்மானம் பெற்றுப் போவார்கள். காரியாரை வணங்காதவர்கள் அந்த நாட்டில் ஒருவருமில்லை. வயதாக ஆக பார்வதியை விட்டு க்ஷணநேரமும் பிரியாதிருப்பதை விரும்பினார். வெள்ளையனும் வாலனும் அவரை நிழல்போல் பற்றிக் கொண்டிருந்தார்கள்.

நல்லப்ப வாத்தியார் தம்முடைய நூல்களை அரங்கேற்றுவதற்காக அவற்றைத் திருத்தி எழுதிக் கொண்டிருந்தார். திருத்தத் திருத்த அவைகள் வளர்ந்துகொண்டே போயின. அவருடைய வயதும் போய்க்கொண்டேயிருந்தது. இவ்வாறு நாட்செல்ல, அவருடைய கண்கள் மங்கலடைய ஆரம்பித்தன. அவருடைய சிரசில் நூல்களை அரங்கேற்ற வேண்டும் என்ற ஒரு சிந்தையே நின்றபடியால், அவைகளை எப்போதும் தமது கொல்லையில் நின்று பாடிக்கொண் டிருப்பார். அங்குள்ள மாடு கன்றுகளே வித்துவ சபையாய் அமைந்து சிரக்கம்பம் செய்து அவருடைய கல்வித் திறத்தை மெச்சிக்கொண்டன. அவருடைய குமாரர் முத்தப்ப வாத்தியார் பொன்னூர்ப் பாடசாலையை நடத்தி வருகிறார்.

ஒருகாதத்தில் குலசேகரன் விளையாட்டாய்ச் சொல்லியிருந்தபடியே, நீலன் அரண்மனை உக்கிராணக்காரனுய் நியமிக்கப்பட்டு, வெகு கம்பீரமாயிருக்கிறான். நாட்டில் அவன் செய்கிற அதிகாரத்திற்கு அளவில்லை. நீல கண்டர் என்று தனக்குப் பேர் வைத்துக் கொண்டான். அவனுடைய உடல் நெற்குதிர் போலப் பருத்து விட்டது. கல்யாணம் செய்து பெரிய குடும்பியா யிருக்கிறான்.

முத்தன் செட்டி பலபடியாகக் குலசேகரனை நலவு செய்து தன் கதவுக்குரிய கிரயத்தை ஒட்டிக்கிரட்டியாய் வாங்கிப் போட்டான்.

குலசேகரனுக்கு வாழ்வுண்டாக ஏதுவாயிருந்த வேலாயுதம், தங்கப் பூண்கள் கட்டப்பட்டு, தலையில் பட்டுக் குஞ்சம் துலங்க, அவனுடைய ஆயுதசாலையில் பிரதம ஸ்தானம் வகித்துக் கொண்டிருந்தது. பொன்னூர்ப் பாண்டியனுடைய கொடியில் ஒரு வேலாயுதக் குறி எழுதப்பட்டிருந்தது.

கீர்த்திவர்மர் வைத்துப் போன பணம் ஐம்பது லக்ஷம் பொன்னுக்கு மேற்பட்டதாயிருந்தது. அதை வீட்டில் குவித்து வைத்திருப்பது கலியாணிக்கு விருப்பமில்லை.

ஆகலால் குடிகளுக்குப் பிரயோஜன முண்டாகக் கூடிய எதாவது ஒரு வழியில் அதைச் செலவிடுவது நலம் என்று எண்ணித் தன் நாயகனிடம் தெரிவித்தாள். குலசேகரன் அதைத் தன் பெற்றோருக்குச் சொன்னான். மருமகளுடைய பெருந்தன்மையைக் கேள்விப்பட்டு காரியாரும் பார்வதியும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். நாலுபேரும் கூடி ஆலோசித்து, பத்து லக்ஷப் பொன்னைப் பொக்கிஷ வைப்பாக வைக்கவும், மீதியான பணத்தைக் கொண்டு காடாய்க்கிடந்த நிலங்களைத் திருத்தி குளங்களையும கிணறுகளையும் உண்டாக்கி, ஜனங்களைக் குடியேற்றி, அந்த நிலங்களிலிருந்து வரும் பலனைக் கொண்டு போர்ச் சேனைகளைப் போஷிக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அப்படிச் செய்தபடியால் சேனைகளுடைய சம்பளத்திற்காக குடிகளிடம் வரிவாங்க அவசியமில்லாதொழிந்தது. அதுவுமல்லாமல், குடிகளில் தரித்திரப்பட்டவர்களுக்கு ஏர்மாடுகளையும், பசுக்களையும் இலவசமாக வாங்கிக் கொடுத்து, பொன்னூர் நாடு முழுவதிலும் விவசாயத் தொழில் விருத்தியடையச் செய்தார்கள்.

அக்கிரமக்காரரைக் குலசேகர பாண்டியன் கொடூரமாய்த் தண்டித்தபடியால், சாதாரண ஜனங்கள் அவன் எதிரில் சென்று வார்த்தையாடப் பயப்பட்டார்கள். ஆதலால் கஷ்டப்பட்டவர்களெல்லாரும் கல்யாணி தேவியிடம் சென்று தங்கள் துன்பத்தைத் தெரிவித்துக்கொள்ளுவது வழக்கமாயிற்று. அவளுடைய முகதரிசனையே துன்பத்தைப் போக்கப் போதுமானது என்று பொன்னூர் நாட்டுக் குடிகள் சொல்லிக் கொள்வார்கள்.

இவ்வாறு குலசேகரன் தன் பத்தினி சகிதம் நெடுநாள் வாழ்ந்து, புத்திர பௌத்திரரையும் கண்டு, பாக்கியவானாயிருந்தான்.

முற்றிற்று.

சரித்திரக் குறிப்புகள்.

நீண்ட புகழ்கொண்ட பாண்டிய நாட்டின் புராதன சரித்திரத்தை கல்வியறிவுள்ள தமிழ்மக்கள் யாவரும் ஆராய்ம்படி தூண்டவேதே இக்கதை எழுதப்பட்டதின் பிரதான நோக்கமாம். அவ்வித ஆராய்ச்சியின்கண் விருப்புற்றோருக்கு, யாம் இங்கெடுத்தாண்டிருக்கும் சரித்திர மேற்கோள்களையும் அவற்றினின்று கிரகித்து உபயோகித்திருக்கும் ஐதீகங்களையும் சிறிது விளக்குதல் பிரயோஜனமாகும்.

1. இக்கதையின் காலமாகிய பதினாலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பாண்டியநாடு இருந்த நிலைமையை விவரிக்கும் ஆதாரங்களுள், கி. பி. 1293-ம் ஆண்டில் சீனத்திலிருந்து காயலுக்குவந்து, பாண்டிய பூமியில் கொஞ்சக்காலம் சஞ்சரித்து, அங்கிருந்து ஐரோப்பாவுக்குச்சென்ற மார்க்கோ போலோ எனும் இத்தாலியதேச வர்த்தகன் எழுதிய நூல் முக்கியமானது. நாட்டின் தன்மை, குடிகளின் வழக்கபழக்கங்கள், ஆட்சிமுறை, முதலியவற்றை அவன் கண்டறிந்தவாறு தெளிவாய் வரைந்திருக்கிறான்.

கி. பி. 1310-ம் ஆண்டில் வடக்கிலிருந்து மாலிக்காபர் படையெடுத்துவந்து மதுரையைக் கைப்பற்றியதைக் குறித்து, வசாப், அமீர்கொஸ்ரு எனும் இரு சரித்திர ஆசிரியர் எழுதியிருக்கிறார்கள்.

டெயிலர்துரை சேகரித்து வெளியிட்ட சில்லரைச் சரித்திர நூல்களிலும் அக்காலத்தைக் குறித்த பல விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

சில சாசனங்களும் பழைய நாணயங்களும், சிற்சில குறிப்புகளை வெளிப்படுத்துகின்றன. பல ஸ்தல புராணங்களிலும் அக்காலத்திய விவரங்கள் காணப்படுகின்றன.

2. மேற்குறித்த ஆதாரங்களில் உள்ள பேதாபேதங்களைச் சமரசப்படுத்திப் பார்க்கும்போது, அந்நாளின் அரசாங்க நிலைமையைக்குறித்துப் பின்வரும் சரித்திரம் துலங்குகிறது:—

கோச்சடையனென்றும், சுந்தர பாண்டியனென்றும், மாறுபேர்களை உடைய குலசேகரபாண்டியன், சேரசோழ நாடுகளை ஜெயித்துக் கீழடக்கி, நாற்பது வருடக்காலமாக ஆண்டுவரும் காலத்தில், அவனுடைய புத்திரனாகிய சுந்தர பாண்டியனால் கொல்லப்பட்டான். அதன்பின் சுந்தரபாண்டியனும் அவன் சகோதரனும் இராஜ்யத்தைப் பங்கிட்டு ஆண்டார்கள். அப்போது குலசேகர பாண்டியனுக்கு போகஸ்திரியினிடம் பிறந்த வீரபாண்டியன் என்பவன் சிம்மாசனத்தைக் கைப்பற்ற முயன்றான். அவனுக்கு குலசேகர பாண்டியனின் சகோதரி மகனான மானப்பெருமாள் என்றவன் உதவியாயிருந்தான். [இந்தப் பெருமாள் என்பவன் வேணாட்டு அரசன் என்பாருளர்]. இவ்விதம் பாண்டிய சிம்மாசனத்தைக் குறித்து ஒருவிவாதம் நேரிட்டதில், ஒருகக்ஷிக்குத் தலைவனானவன் டில்லிக்குச்சென்று சுல்தான் அல்லாவுதீனுடைய உதவியைக் கோரினான். அதுவே மாலிக்காபர் படையெடுத்துவரக் காரணமாயிற்று.

அதுமுதல் சுமார் நாற்பது வருடமளவும் முகமதிய தலைவர்கள் மதுரையில் அதிகாரம் செலுத்தினார்கள். பாண்டியன் அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தான்.

கி. பி. 1350-ம் ஆண்டளவில், மைசூரைச்சேர்ந்த கம்பண்ண உடையார் என்ற ஒரு சேனாபதி மதுரைக்குவந்து, முகமதியத் தலைவர்களை மேற்கொண்டு வெருட்டிவிட்டு, பாண்டியனுக்குத் துணைவனானான்.

கி. பி. 1336-ம் ஆண்டில் விஜயநகரத்து நரபதி சமஸ்தானம் ஸ்தாபகமாகி, கொஞ்சக்காலத்திற்குள்ளாகவே தக்ஷணாபத முழுவதையும் கீழடக்கிவிட்டது. மதுரையில் ஆண்ட பாண்டிய வம்சம் விஜயநகரத்திற்கு உள்ளடங்கி, கி. பி. 1555-ம் வருடம்வரைக்கும் இருந்துவந்தது. அதன்பின் அந்த வம்சம் மறைந்துபோயிற்று.

3. மாலிக்காபருடைய படையெழுச்சி விசேஷ சித்தியடையவில்லை என்பது கீழ்க்கண்ட காரணங்களால் அநுமானிக்கப்படும்.

(1) வடதிசையில் அவனால் அநேக ராஜ்யங்கள் கொள்ளையிடப்பட்டதைக்குறித்துக் கேள்விப்பட்டிருந்த பாண்டியன், கோவில்களைச்சேர்ந்த திரவியங்களை நாஞ்சிநாட்டிற்கு அனுப்பிப் பாதுகாத்ததாக ஒரு பழைய சரித்திர நூலில் குறிப்பிட்டிருக்கிறது. ஆகலால் நாட்டிலுள்ள திரவியம் மாலிக்காபருக்குக் கிடைக்கவில்லை என்றறியலாம்.

(2) நாட்டிலுள்ள குடிகள் ஒருகாலத்தில் ஏராளமாக வலசைவாங்கி மலைகளுக்கு ஓடிப்போனதாக இன்றளவும் மலைநாட்டார் சொல்லிவருகிறார்கள். முதுவர் முதலான சில மலைஜாதியார் தாங்கள் ஒருகாலத்தில் கீழ்நாட்டிலிருந்துவந்து தங்கிவிட்டதாகவே சொல்லுகிறார்கள். அவ்விதமாக அநேக குடிகள் மலைகளுக்கு அடைக்கலம் தேடிச் சென்ற சமையம் இந்தப் படையெழுச்சியின் காலமாகத் தானிருக்கவேண்டும்.

(3) முகமதிய அரசரின் சரித்திரத்தை விரிவாய் எழுதிவைத்திருக்கும் பிரபல ஆசிரியராகிய முகம்மது காசிம் பெரிஷ்டா என்பவர், மாலிக்காபர் செய்த யுத்தங்களையும், அவன் கொண்டுசென்ற கொள்ளை உடைமைகளையும் குறித்து விவரமாய்ச் சொல்லியிருந்தும், அவன் மதுரையைச் செயித்ததைச் சொல்லாமல் விட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கி. பி. 1293-ம் ஆண்டில், அதாவது இப்படையெழுச்சிக்குப் பதினேழு வருடங்களுக்குமுன், உலகத்தில் வெகுதூரம் பிரயாணம்செய்து, எண்ணிறந்த நாடுகளையும், சமஸ்தானங்களையும் கண்டிருந்தவனாகிய மார்க்கோ போலோ என்பவன், பாண்டிய நாட்டைக்குறித்து "The noblest and richest country in the world: உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் பார்க்க அதிக மேன்மையும் செல்வமும் பொருந்திய நாடு" என்று எழுதியிருக்க, அவ்வளவு ஐசுவரியமுள்ள நாட்டை மாலிக்காபர் கைப்பற்றி

யதைக்குறித்து, பிரக்கியாதிபெற்ற சரித்திர ஆசிரியராகிய பெரிஷ்டா சொல்லாதுவிட்டதற்கு, தகுந்த காரணமிருக்க வேண்டும். ஆதலால், நாம் அனுமானிக்கக்கூடியது: மாலிக்காபர் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்ததில் பெரிதும் பிரயோஜனம் அடையவில்லை என்பதும், கி. பி. 1600-ம் வருடத்தளவில் நூல் எழுதிய பெரிஷ்டா ஆராய்ந்த சரித்திர ஆதாரங்களில் இந்தப் படையெழுச்சியைக் குறித்து விவரித்தெழுதப்பட்டிருக்கவில்லை என்பதுமேயாம்.

4. அக்காலத்திலிருந்த பாண்டியன் தன் சகோதரன் மனைவியை அபகரித்த விஷயத்தை மார்க்கோப் போலோ எழுதியிருக்கிறான். பாண்டியனுக்கு ஆயிரம் மனைவிகள் இருந்ததாகவும், காயலில் ஆண்ட அவன் சகோதரனுக்கு முன்னூறு மனைவியர் இருந்ததாகவும் அவனே எழுதியிருக்கிறான். ஆதலால் அக்காலத்துப் பாண்டியர்கள் மட்டில்லாத சிற்றின்பப் பிரியராய் இருந்தார்கள் என்று விளங்கும்.

5. புறத்தேசங்களோடு நடந்த பலவித வியாபாரங்களைக்குறித்து மார்க்கோ போலோ விவரித்திருப்பதோடு, நாட்டு வழக்கங்களையும் தெளிவாய்க் குறித்திருக்கிறான். அரையில்மாத்திரம் வஸ்திரம்தரித்தல், ஆண்மக்கள் எல்லாரும் சாதாரணமாய் ஆயுதம் தரித்தல், இருபாலாரும் மிகுதியான ஆபரணங்களை அணிதல், சாணமிட்டு வீடுமெழுகுதல், கொசுவின் உபத்திரவம்போக்க கட்டில்களில் திரைகட்டுதல், முகமதியரைக்கொண்டு போஜனத்திற்காக ஆடு, கோழிகளை அறுத்தல், பாத்திரம் வாயில்படாமல் குடித்தல், பட்டணங்களில் வேசிகளின் மிகுதி, பன்னிரண்டு வயதுள்ள சிறுவர்முதலாய் வியாபாரம் செய்தல், முத்துச்சலாபம் செய்யும்விதம், அரசநீதி, கட்குடியரின் சாக்ஷியத்தை நீதிஸ்தலத்தில் ஒப்புக்கொள்ளாமை, அரசனுடைய மெய்காவலர் அவன் மரிக்கும்காலத்தில் கூடவே தற்கொலைசெய்து மரிக்கும் வழக்கம், முன்னுள்ள பாண்டியர் வைத்துப்போன திரவியத்தைப் பின்பட்டத்துக்கு வந்தோர் அனுபவியாமை, கோவில்கள், கோவில் மாடுகள், ஜெபமாலையோடு மந்திரம் ஜெபித்தல், ஸ்திரீகள் உடன்கட்டை ஏறுதல் முதலான